
மின்சாரக்கண்: விஞ்ஞானத்தின் புதிய சாதனை

# உலக உலா

ஜனவரி 1994



## ஜப்பான் VS சீனா



57

## ஆசியாவின் வல்லரசுப் போட்டி

SCR க்கு வெளியே எடுத்துச் செல்ல வேண்டாம்

# உலக உலா

## உலக விவகாரங்கள்

### ஆசியா


உலகின் கூரையில் அகதிகள் 07
ஆதிக்கச் சமநிலை 09
எதிர்க்கும் குரல்கள் 11
வடகொரியாவிலிருந்து வெளியேறல் 13


### சுற்றுச்சூழல்


யானைகளைப் பாதுகாக்கும் புதிய திட்டம் 51


### குற்றவியல்


54
...பூபத்து 57
59
61


...ட்பமும்


64
68
...குதல்? 77
02
03
06
81
நாசாவின் '' செய்! '' அல்லது '' மடி! '' 48



**உலக உலா**

உலகை வலம்வர விரும்புகிறீர்களா?
இன்றே நீங்களும்

'' உலக உலா '' வின் வாசகராகுங்கள்! மாதந்தோறும்
உங்கள் வீடுதேடி '' உலக உலா '' வந்து நிற்கும்.

பெயர்: ______________________

முகவரி: ______________________

______________________

______________________

அனுப்புபவர் கையொப்பம்

இன்றே... இப்பொழுதே... இவற்றை நிரப்பி அனுப்பித் தமிழீழத்தின் மிகத்தரமான சஞ்சிகையின் தனித்துவமான வாசகராகுங்கள்!



விலை ரூ100/-

உலக உலா
பல்துறைசார்
மாத இதழ்

உலா 6

ஆண்டுச் சந்தா:— ரூ,1080.00

06 மாதச் சந்தா:— ரூ. 540.00

நேரிலோ, மணிஓடர் மூலமா கவோ பணத்தைச் செலுத்தி உலக உலாவின் நிரந்தர வாசக ராகலாம்.

★ தபாலில் அனுப்பி வைக்கும் செலவு இலவசம்!

"உலக உலா,"
144, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

SCRக்கு வெளியே எடுத்துச் செல்லவேண்டாம்

# உலக உலா

## உலக விவகாரங்கள்

### ஆசியா


உலகின் கூரையில் அகதிகள் 07
ஆதிக்கச் சமநிலை 09
எதிர்க்கும் குரல்கள் 11
வடகொரியாவிலிருந்து வெளியேறல் 13
சீனாவின் உட்பக்கம் 16
ஆசியாவின் வல்லரசுப் போட்டி 18
கடந்த காலக் கைதிகள் 21
பாலஸ்தீனியர்களின் விடுதலை 23
பாதுகாப்பு யாருடைய பொறுப்பு? 25


### ஐரோப்பா


மிக அண்மைக்கால அச்சுறுத்தல் 27
ரஷ்யாவின் தலையீடு 29
நேட்டோவில் சேரப் போட்டி 31


### அமெரிக்கா


ஐ. நா. வால் முடியுமா? 34
ஆதாரமற்ற எச்சரிக்கை 36


### ஆபிரிக்கா


வெளிநாட்டவர் எதிர்கொள்ளும் ஆபத்து 37
மண்டேலாவின் படைவீரன் உருவாகிறான் 38
மண்டேலாவின் வாரிசு 40


### பொது அறிவுப் புதிர்


உலகை அறிந்து கொள்ளுங்கள்! 42


### வாணிகம்


''பிலிப்ஸ்'' நிறுவனத்தின் போட்டி 44


### விண்வெளி


நாசாவின் '' செய்! '' அல்லது '' மடி! '' 48


### சுற்றுச்சூழல்


யானைகளைப் பாதுகாக்கும் புதிய திட்டம் 51


### குற்றவியல்


போதைவஸ்து மன்னனின் முடிவு 54


### சமூகவியல்


சிறுபான்மையினரின் கலாசாரத்திற்கு ஆபத்து 57


### முகாமைத்துவம்


நேரப் பொறியிலிருந்து தப்புதல் 59


### விளையாட்டு


காற்பந்தாட்ட இறுதிப் போட்டி 61


### விஞ்ஞானமும், தொழில் நுட்பமும்


மின்சாரக்கண் 64


### உயிரின் வரலாறு


உயிரின் ஆரம்பம்? 68


### உளவியல்


கடினமான மேலாளரோடு எவ்வாறு பழகுதல்? 77


### பல்திணைப்பகுதி


செய்திச்சரம் 02
புதியன அறிமுகம் 03
பார்வைகள் 06
நேசப்பூக்கள் 81



விலை ரூ100/-

உலக உலா
பல்துறைசார்
மாத இதழ்

உலா 6

## சீனா

### எதிர்ப்பு அடக்கப்பட்டது

சீனாவிற் பிரசுரமான நூலொன்றில், தங்கள் மதத்தை அவதூறு செய்யும் படம் ஒன்று இருந்தாக, ஐந்து வாரகாலமாக எதிர்ப்பு இயக்கம் நடத்திய முஸ்லிம்களை அடக்க, மசூதியொன்றில் இருந்த கும்பலின் மீது சீனத் துருப்புக்கள் சுட்டதில் 9 பேர் கொல்லப்பட்டதாகவும், பலர்காயம் அடைந்ததாகவும், குவிங்காய் மாகாணத் தலைநகரில் இருந்து பயணிகள் சிலர் கூறியுள்ளனர், உத்தியோக பூர்வ செய்தித் தொடர்புச் சாதனங்களும், ஒழுங்கை நிலைநாட்டக் கடும் பலப்பிரயோகம் செய்யப்பட்டதாக அறிவித்தன.

### முதலீடுகள் பெருகுகின்றன.

சீனத் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளபடி, வெளிநாடுகளில் இருந்து வாக்களிக்கப்பட்டுள்ள முதலீடுகள், 1993 இல் 100 பில்லியன் அமெரிக்க டொலர் அளவை மீறி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் 1993 இன் முதல் 7 மாதங்களில் 83 பில்லியன் அமெரிக்க டொலர் அளவு முதலீடு செய்துள்ளனர். இது, முந்திய வருடத்தில் செய்யப்பட்ட முதலீட்டிலும் பார்க்க 171 வீதம் ஆகும்.

## வியட்நாம்

### அமெரிக்க வழக்கறிஞர் வெளியேற்றப்பட்டார்

சென்ற நவம்பர் 18 ஆம் திகதி, வியட்னாம் ''தேசியப் பாதுகாப்புக்'' காரணங்களுக்காக அமெரிக்க, வழக்கறிஞர் ஸ்டீபன் யங்கைத் தனது நாட்டிலிருந்து வெளியேற்றியது. ''தேசிய ஒருமைப்பாட்டிற்கும், சனநாயகத்தைக் கட்டியெழுப்புவதற்குமான இயக்கம்'' என்ற பெயரில், இன்னும் சரியாக அமைக்கப்படாத ஒரு கட்சியுடன் யங் தொடர்பு வைத்திருந்தார் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். அந்தக் கட்சி நவம்பர் 27 ஆந் திகதி ஹோசிமின் நகரில் ஒரு கலந்துரையாடற் கூட்டம் வைக்கத் திட்டமிட்டிருந்த வேளையிலேயே, இந்த நாடு கடத்தல் நடந்துள்ளது.

### "ஏஜன்ட் ஒறேஞ்" கோரிக்கை

அமெரிக்க வழக்கறிஞர் ஒருவரும், வியட்நாம் யுத்தத்தில் முன்பு படைவீரராக இருந்த தோமஸ் என்சைன் என்பவரும் இணைந்து, வியட்நாம் யுத்தத்தின் போது அமெரிக்கப் படையினர் வியட்நாமில் ''ஏஜன்ட் ஒறேஞ்'' என்னும் காடழிப்பு நச்சைப் பயன்படுத்தியதற்கு நட்டஈடு கோரி, அந்த நச்சுப் பாவனையாற் பாதிப்புற்ற வியட்நாமியர்களை, அமெரிக்காவில் வழக்குத் தொடரும்படி தூண்டியுள்ளனர். 1973 இற்கு முன்பு அமெரிக்கப் படையினர் ''ஏஜன்ட் ஒறேஞ்'' தெளித்ததால் ஏற்பட்ட பாதிப்புக்கள், பின் விளைவுகள் பற்றிச், சென்ற நவம்பர் மாதத்தில் நடந்த மாநாடு ஒன்றில் இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

## ஜப்பான்

### கட்டுப்பாடுகளைத் தளர்த்தும்படி ஆலோசனை கூறப்பட்டுள்ளது

ஜப்பானியப் பொருளாதாரத்தை மீண்டும் உயிரூட்டம் பெறச் செய்யக், கடுமையான கட்டுப்பாட்டுத்தளர்வுகள் செய்யப்படவேண்டுமென இது பற்றி விசாரணை செய்து ஆலோசனை கூற நியமிக்கப்பட்ட குழுவொன்று, ஜப்பானியப் பிரதமருக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

## தைவான்

### ஜெட் விமான உற்பத்தியொன்று நிறுத்தப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் எயரோஸ்பேஸ் நிறுவனத்துடன் தாய்வான் இணைந்து, பிராந்தியப் பாவனைக்கு என்று ஜெட்விமானங்கள் உற்பத்தி செய்ய இருந்த திட்டத்தைக் கைவிட்டு உள்ளதாகத், தாய்வானின் விமான உற்பத்தி நிறுவனத் தலைவர் ஏர்ல்ஹோ கூறியுள்ளார். இருந்தும், தாம் மேலும் முன்னேறிய இரண்டு இயந்திர ஜெட் ஒன்றை, இணைந்து உற்பத்தி செய்வதில் அக்கறை கொண்டிருப்பதாக அவர் மேலும் கூறினார்.

## கம்போடியா


### பார்வை மாற்றம்

தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கம்போடிய அரசில், கமர்ரூச் அணியினரைச் சேர்த்துக் கொள்வதே இல்லை என்று, முன்பு உரைத்த அரசர் நொறடோம் சிகானூக், சென்ற நவம்பர் 22 ஆம் திகதி தான், அந்தக் கெரில்லாக் குழுவினர் சரணடைந்தால், அவர்களுக்கும் அரசாங்கத்தில் முக்கிய பதவிகள் தருவதாகக் கூறினார். பீக்கிங்கில் சுகயீனமாகப் படுக்கையிற்கிடந்து கொண்டு இந்தச் செய்தியை வெளியிட்ட அரசர், தனது மகன் இளவரசர் நொறடோம் ரணறித் பிரதமராக உள்ள அரசில், கமர்ரூச்சின் ''ஏற்றுக் கொள்ளக்கூடிய'' பிரமுகர்களுக்குப் ''பல இணை அமைச்சர், இணைத் துணை அமைச்சர், அரசாங்கச் செயலர் பதவிகள்'' தருவதாகக்கூறினார். அதில்அவர் பொல்பொட், நூ ஒன்சியா, டா மொக் என்பவர்களைச் சேர்க்காத தலைவரான கியூ சம்பானைப் பற்றியது ஒன்றும் கூறவில்லை. அரசர் அடுத்த மே அல்லது ஜூன் வரை, தான் புற்றுநோய்ச் சிகிச்சையை முடித்துக் கொள்ள பீக்கிங்கில் தங்கியிருக்கப் போவதாக அறிவித்ததுடன், தான் இன்னும் பல ஆண்டுகள் வாழ விரும்புவதாகவும் கூறியுள்ளார்.

## சங்கீத ஒலிப்பெட்டி

(SPEAKER)

இதுவரை காலமும், செவ்வக, சதுர வடிவங்களில் அமைந்த ஒலிப் பெட்டிகளையே (Speakers) பார்த்திருப்பீர்கள். தற்போது கனன் (Canon) நிறுவனம் டோம் (Dome) வடிவமைப்பில், புதியவகை ஸ்ரீரியோ ஒலிப்பெட்டிகளை வடிவமைத்துள்ளது. இந்த ஒலிப் பெட்டி இருபாகங்கள் உள்ளதா




கும். கீழ்ப்பாகத்திலிருந்து கிளம்பும் ஒலி, தொப்பி போன்ற மேற்பாகத்தால் நாற்புறமும் சமனாகப் பரப்பப்படும். கேட்போருக்கு இதமான ஒலி இதில் வருமென இதன் தயாரிப்பாளர்கள் கூறுகிறார்கள். சாதாரண ஒலிப்பெட்டியிலும் பார்க்க, இவ்வடிவமைப்பின் மூலம் ஒலி தெளிவாக இருக்குமெனவும் கூறுகிறார்கள்.

## சுவரில் தொங்கும் ஃபாக்ஸ்

(FAX)


சுருக்கமாகக் கூறினால், இன்றைய உலகு செய்திகளைப் பரிமாறத் தொலைபேசியையும், ஆவணங்களை அனுப்ப பாக்ஸ் (Fax) சாதனத்தையும் பயன்படுத்துகின்றது. இரண்டும் சேர்ந்து அமைந்த பல கருவிகள் விற்பனைக்கு எப்போதோ வந்து விட்டன. ஆனால், தற்போதோ மிகவும் கைக்கடக்கமான, சுவரில் தொங்கவிடக்கூடிய புதிய வகை வெளிவந்துள்ளது. இதனை நிழற்பிரதி (Photostat)



எடுக்கவும், பதில் கூறும் சாதனமாகவும் (Answering machine) பயன் படுத்தலாம். உங்களுக்குத் தேவையான சகல தொலைபேசி இலக்கங்களையும் நினைவில் வைத்துக் கொள்ளக்கூடிய ஆற்றல் உள்ளது. இவ்வாறாகப் பல்தேவைகளைக் கருதி, இப்புதிய பாக்ஸ் சாதனத்தைச் சார்ப் (Sharp) நிறுவனம் தயாரித்து வெளியிட்டுள்ளது.

## நீரடிப்பார்வை

ஒலி அதிர்வு மூலம் நீருக்கடியில் மறைந்திருக்கும் பொருட்களைக் காட்டும் கைக்கடக்கமான கருவி இதோ சந்தைப்படுத்தப்பட்டுள்ளது. சுழியோடிகளுக்கு இது பேருதவியாக இருக்கும். நீருக்கடியிற் கிடக்கும் பெறுமதியான பொருட்கள், கப்பற் சிதைவுகள், பவளப்பாறைகள் போன்றவற்றை இதன் உதவியாற் கண்டு பிடிக்கலாம். சக சுழியோடி



களுடன் தொடர்பு கொள்ளவும், அவர்கள் எங்கிருக்கிறார்கள் என அறியவும் இதனைப் பயன்படுத்தலாம். 400 அடி ஆழம் வரை பயன்படும் இக்கருவி, நீர் உட்புகா வண்ணம் நன்கு வடிவமைக்கப்பட்ட இலத்திரனியற் சாதனமாகும். கிளாலிப் பயணத்தின் போது கைதவறிப்போன பொருட்களையும், இனிமேல் நாம் தேடிக்கண்டு பிடிக்கலாம்.

## உலகம் உங்கள் கையில்


சீக்கோ மணிக்கூடு தயாரிப்போர், புதிய தோர்கைக்கடிகாரம்ஒன்றைத் தயாரித்துள்ளனர். இது, மிகவும் முன்னேற்றகரமான கடிகாரம் ஆகும். இதனைக் கட்டியுள்ள வேறு நபர்களுடன் தொடர்பு கொள்ளவும், இதனைப் பயன்படுத்தலாம். பங்குச் சந்தை நிலவரங்கள், கால நிலைக்குறிப்புகள், விளையாட்டுச் செய்திகள் யாவும் இதன் மூலம்



அறியலாம். இது ஒரு வானொலிப் பெட்டி போன்றும் கடமையாற்றுகின்றது. அமெரிக்காவின் வட மேற்குப் பகுதியில் தற்போது இது பாவனைக்கு வந்துள்ளது. விரைவில் அமெரிக்கா முழுவதும் இவை பாவனைக்கு வந்துவிடும்.

## தீ எச்சரிக்கைக் கருவி

மேற்கு நாடுகளில் உயர் மாடிக் கட்டடங்களில் தீ விபத்து ஏற்படுவது சாதாரண நிகழ்ச்சியாகும். இங்கெல்லாம் முன்கூட்டியே எச்




சரிக்கும் கருவிகள் மிக அவசியம். ஓரளவுக்கு மிகுதியாகப்புகை தோன்றியவுடனேயே எச்சரிக்கை மணிகள் அடிக்கத் தொடங்கிவிடும். மக்கள் பாதுகாப்பாகச் செல்லஇது உதவும். இப்போது, கையில் எடுத்துச் செல்

லக்கூடிய தீ எச்சரிக்கைக் கருவி விற்பனைக்கு வந்துள்ளது. இது சிறிய மின் சூள் (Torch Light) போன்றது. புகையை அவ்தானித்தும், எச்சரிக்கை மணியடித்தும் பாவனையாளர்களை உசார்ப்படுத்திவிடும். இதில் வெளிச்ச வசதியும் உள்ளதால், இதன் உதவியுடனேயே கட்டடத்தை விட்டு வெளியேறி விடலாம். இதன் விலை: 45 அமெரிக்க டொலர் மட்டுமே.

## பேசும் கணணிக் கருவி

''சண்ணை மூடிக்கொண்டு கணக்குப் பார்ப்பான் என்று சொல்லுவார்கள் அல்லவா?'' அது இப்போது உண்மையாகிவிட்டது. இதோ ஒரு புதிய கணக்குப் பார்க்கும் கருவி(Calculator) விற்பனைக்கு வந்துவிட்டது. நீங்கள் கண்ணை மூடிக்கொண்டு இலக்க பட்டன்களை அமர்த்த வேண்டியது தான், விடையைக் கருவி உங்களுக்குச்சொல்லும். திரையிலும் காட்டும். அத்துடன் நாணயமாற்று விகிதங்களையும், நாணய நிலைகளையும் இது உங்களுக்குத் தரும். மேலும், பயன்படுத்துவோரின் வசதிக்கேற்ற முறையில், உலகின் எட்டு மொழிகளிலும் பதிலளிக்கக் கூடிய வகை



யில் இது செய்யப்பட்டுள்ளது. இம்மொழிகளினுள் ருஷிய, சீன, மற்றும் அராபிய மொழிகளும் அடங்கும். முழுவதுமாக ஆச்சரியப்பட வேண்டாம். .............. இன்னும் இருக்கிறது. நேரம் காட்டும் கருவியும், அலாரமும் இவற்றுள் இணைக்கப்பட்டுள்ளன. விடியற் காலையில் வணக்கம் சொல்லியும் உங்களை எழுப்பும்.

## சுப்பர் கார்

சுப்பர்கார் என்று வர்ணிக்கப்படும் அதிவேக கார் ஒன்றை, இங்கிலாந்தின் அஸ்ரன் மாட்டின் நிறுவனம் தயாரித்துள்ளது. இது, பூச்சியத்திலிருந்து 60 மைல் மணி வேகத்திற்கு 5½ செக்கனில் செல்லும் வல்லமையுடையது. இதன் உச்ச வேகம் 165 மை/மணி செல்லக்கூடியது. இக்காரிற் பொருத்தப்பட்டிருக்கும் இயந்திரம், இங்கிலாந்தின் ஜகுவார் (Jagvar) தொழிற்சாலையின் தயாரிப்பு ஆகும். ஆறு சிலின்டரும், 335 குதிரை வலுவும் உடைய இயந்திரமாகும். இதன் கியர் கையினாலும், இலத்திரனியற் கருவியாலும் போடக்கூடியது. அஸ்ரன் மாட்டின் டீ. பீ. 07 (Aston Martin D B 07) என்ற இந்தக்கார் இடது கையோட்டம், வலது கையோட்டம் என்று இரு வகையாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

## குளிர்பானக் காப்பு

சோடா போன்ற பானங்கள் கெட்டுப்போகாமல், அதாவது, அதன் காபன்நுரை போகாமற் பாதுகாக்கும் சிறிய கருவி விற்பனைக்கு வந்துள்ளது. இதனைச் சாதாரண சோடாப் போத்தல் அல்லது, மென்பானப் போத்தலிற் பொருத்தலாம். தேவையான அளவு பானத்தை இதனை அமுக்கி பெற்றுக்கொள்ளலாம். வீட்டுத் தேவைக்கும், வியாபாரஸ்தாபனங்களுக்கும் இது பேருதவியாக இருக்கும்.

## மீன் விளையாட்டு

கணனியில் விளையாடுவதற்கு, இதோ ஒரு புதிய விளையாட்டு வந்துள்ளது. பல்வேறு வகையான மீன் இனங்களைக், கணனித் திரையில் நீங்கள் உருவாக்கலாம். கடற்தாவரங்களையும், பவளப்பாறைகளையும் உங்கள் விருப்பிற்கேற்றவாறு உருவாக்கலாம். இந்த விளையாட்டில் ஈடுபடுவோரின் வல்லமைக்கேற்ப, அவைகளை வெவ்வேறு விதமாக இயக்க முடியும். மேலும், இந்த மீன்களுக்கிடையில் இனக்கலப்புச் செய்து, பல வர்ணங்களில், பல வடிவங்களிற் புதிய மீன்குஞ்சுகளை உருவாக்கச் செய்யலாம். இது பெரியோர்களும், சிறியோர்களும் விரும்பி விளையாடும் விளையாட்டாகும்.

## களை வெட்டும் கருவி

புற்களை, களைகளை, சிறுமரங்களை வெட்டக் கூடியவகையிற் புது வகையான முன்னேற்றகரமான கருவியொன்றை அமெரிக்க நிறுவனம் ஒன்று வடிவமைத்துள்ளது. இலாவகமாக ஒட்டுவதற்கேற்ப இதன் கைபிடிகளும், செலுத்திகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன், அதிர்வுகளைத் தாங்கக் கூடியவகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் இயந்திரம், எரிபொருளைச் சேமிக்கக்கூடிய வகையிலும், சூழலை மாசுபடுத்தாவண்ணமும் அமைக்கப் பட்டுள்ளதாக, அதன் தயாரிப்பாளர்கள் கூறுகின்றனர்.

## சலவையில் ஒரு புதுமை!

உங்கள் வீட்டில் நீங்களே துணி துவைப்பவர்களா? ஆமெனில்; அன்றாடம் துணிகள் துவைப்போருக்கு ஆறுதல் தரும் புதுச் சலவை இயந்திரம் இது! ''அமனா'' நிறுவனத்தின் அரிய கண்டுபிடிப்பு! இல்லத்தரசிகளின் வேலைச் சுமையைக் குறைக்கும் இச்சலவை இயந்திரம், வீடுகளைக் கவர்ச்சிகரமாக அலங்கரிக்கும் பொருளாகவும் உள்ளது. இதன் இடது பக்கத்தில் அமைந்திருக்கும் பெரியகதவு, துணிகளை மிக விரைவாகக் காயவைத்து விடுகின்றது. திறந்து மூடக் கூடிய நிலையிலுள்ள இக்கதவின் உட்புறம், காயவைக்கும் தட்டு ஒன்றை மிக வசதியாகப் பொருத்தலாம். துணி கிழிந்து விடுமோ, என்று நீங்கள் கவலைப்படவே வேண்டாம. மிக மெல்லிய துணிவகைகளைக் கூட, மிக நேர்த்தியாக, எந்தவிதக் கசங்கலும் இல்லாமற் துவைத்துக் காயவைக்கிறது

இச் சலவை இயந்திரம் தன் மூன்று கனஅடி அளவுத் தொட்டியில், ஒரே முறையில் அதிக துணிகளைச் சலவை செய்யலாம். இச் சலவை இயந்திரத்திற் பொருத்தப்பட்டுள்ள இரண்டு நிறுத்திகள் விசேஷ அம்சங்களாகும். இந் நிறுத்திகள் 52'' குறுக்காகவும் $1\frac{1}{2}$'' ஒடுக்கமாகவும் அமைந்தவை. ''அமனா'' நிறுவனத்தின் புதுமைத் தயாரிப்புக்களான உலர்த்தும் கருவியின் விலை 600 — 650 வரையிலான அமெரிக்க டொலராகும். துவைக்கும் கருவியின் விலை 700 — 750 வரையிலான அமெரிக்க டொலர். இந்த இரண்டு கருவிகளிலும் உள்ள தொட்டிகள் வல்லுருக்கினால் ஆனவை.

## மனிதனற்ற தன்னியக்க நீர்மூழ்கி

இதுவரை காலமும் மனிதனற்ற விமானம், விண்வெளிஓடம், வாகனம் எனப் பல வெளிவந்துள்ளன. ஆனால், இப்போது மனிதனற்ற நீர்மூழ்கி, கடற்படையினரின் பாவனைக்கென வந்துள்ளது. ''ஆந்தை'' (OWL) எனப் பெயர் சூட்டப்பட்ட இந்த நீர்மூழ்கி 10 அடி நீளமுடையது. 35 நொட்ஸ் வேகத்தில் செல்லக்கூடியது. இது நீரிலே 4 அடி மாத்திரம் தாழ்ந்து ஓடக்கூடியது. பல நூறு மைல்களுக்கு அப்பாலிருந்து கூட, ஒருவர் தொலைத் தொடர்புக் கட்டுப்பாட்டுச் சாதனத்தால் இதனை இயக்கலாம். இதனைக் கட்டுப்படுத்தும் தொலைத் தொடர்புச் சாதனத்தில் திரையொன்று உள்ளது. அத்திரையில் இலக்க உலகப் படம் (Digital World Map) மூலம், இதன் பாதையை நாம் அவதானிக்கலாம். இந்தச் சாதனம் உலக அடையாள முறைமை வாங்கி (Global Positioning System Receive) எனப்படும். இந்தச் சிறிய நீர்மூழ்கி பல நவீன தொழில்நுட்பச்சாதனங்களைக் கொண்டுள்ளது. இதற்கு முன், அல்லது, அருகில் பொருட்கள் வருமாயின், அதனை அறியும் கருவி, தூரத்திலிருந்தே கதைப்பதை ஒலிபரப்பக்கூடிய ஒலிபரப்பி, தேடொளி, ஆயுதங்கள் எனப் பலவாகும். தற்போது இதனைக் கடற் கண்ணிவெடிகளை அகற்றப் பயன்படுத்த உள்ளார்கள்.

## உயிர் காப்பாற்றும் பணியில் வேகமான வாகனம்

யுத்த காலத்திற் காயமடையும் போராளிகளை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டியது அவசியம். இதற்கு, வேகமாக ஓடக்கூடிய வாகனம் தேவை. அதே நேரம் காயமடைந்த போராளிக்குத் துன்பம் விளைவிக்காத வாகனமாகவும் இருக்க வேண்டும்.

இதற்காகவே, அமெரிக்க விமானப்படையினரின் விசேட உத்திகள் பகுதி ஆர் — 1 (R — 1) எனும் விசேட வாகனமொன்றைத் தயாரித்துள்ளது. இது முக்கோண வடிவமான அடிச்சட்டத்தை (Chassis) உடையது. இவ்வாகனம், மென்மையான ஸ்பிரிங்குகளால் ஆன சஸ்பென்சன்களையும் கொண்டது. அத்துடன் டயர்களின் காற்றுப்போனாலும் ஓடக்கூடியது. முகப்பு வெளிச்சம் இல்லாவிட்டாலும் மாற்று வெளிச்சம் உண்டு. எந்தக் கரடுமுரடான பாதையிலும் மிக வேகமாகச் செல்லக்கூடியது. ஆர்—1 எனும் இந்த வாகனத்தில் ஆறு 'காயமடைந்தவர்களைக் கிடத்தியபடியே கொண்டு போகலாம். கூடவே இரு வைத்தியர்களும், உபகரணங்களுடனும் பயணம் செய்யலாம். மொத்தமாக 2,600 இறாத்தல் நிறையைக் கொண்டிழுக்கக் கூடிய இயந்திரத்தைக் கொண்டுள்ளது. 240 இறாத்தல் நிறையுடைய காற்றூட்டப்பட்ட அறையினையும், 914 இறாத்தலுடைய இயந்திரத்தையும் கொண்டது. இந்த வாகனம் விமான உலோகத்தால் செய்யப்பட்டதால் கிளாலி, கிளிநொச்சிப் பாதையிலும் மிக வேகமாக ஓடக்கூடியது.

## இயந்திரப் பறவைகள்


பறக்கும் விமானங்களிற் சில காற்றினூடாக மெதுவாகவும், கட்டுப்பாட்டை இழக்காமலும் சாதாரணமாகப் பறக்கக்கூடியன. தற்போது, பிறிவிங் விமானக் கூட்டுத்தாபனத்தாரால் துள்ளும் இறக்கைகளைக் கொண்ட சிறிய விமானம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த இறகுகள் விமானத்தை வழிப்படுத்த, விமானத்தின் உடற்பகுதி சுயமாக வளைந்து கொடுப்பதால் வேகம் ஏற்படுகின்றது.

ஒரு விமானம்-ஸ்கோப்பியன் என அழைக்கப்படுகின்றது. (ஸ்கோப்பியன்-நட்டுவக்காலி) இதை, பேர்ட் றுட்டன் என்ற நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ளன. இதற்கு இரண்டு வால்கள் இருக்கின்றன. பறக்கும்போது இவை சமாந்தரமாக இருக்கும். மூக்குப் பகுதி மிகவும் நிமிர்ந்ததாக அமைக்கப்பட்டு இருக்கின்றது. இதனால், புறப்புலர் விமானத்தின் விசையை அதிகரிக்க இலகுவாக இருக்கின்றது.

## சத்தமின்றிப் பறக்கும் உலங்கு வானூர்தி

சத்தமின்றிப் பறந்து, உளவு பார்க்கும் புதிய உலங்கு வானூர்தியொன்று தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் எக்பீற்றர். இது மனிசன் இன்றிப் பறந்து செல்லக்கூடியது. சுமார் 200 இறாத்தல்நிறையுடன், 6 மணித்தியாலங்கள் இது வானில் நிற்கக்கூடியது. இதற்கு வால் பகுதியில் விசிறி தேவையில்லை. இதற்கு இரு பிரதானவிசிறிகள் உள்ளன. இவை இரண்டும் மெதுவாகச் சுற்றும்போது, இந்தஉலங்கு வானூர்தி வேகமாகச் செல்லும். ஒரு பிரதான விசிறியுள்ள உலங்கு வானூர்தியை விட, இது வேகமாகச்செல்லக் கூடியது. இந்த விசிறியிலுள்ள மின் கட்டுப்படுத்தியே, உலங்கு வானூர்தியைக் கட்டுப்படுத்துகின்றது. கைற்ரோலிக்கில் இயங்கும் இந்த விமானத்தை, அமெரிக்காவிலுள்ள காமன் வான் அண்டவெளிக் கூட்டுத்தாபனத்தார் தயாரித்துள்ளனர்.


பொப்பியுலர் மெக்கானிக்ஸ்,
ஓகஸ்ட், 1993.



# காதில் விழுந்தவை


★ ''எவ்வளவு அணுவாயுதப் போர்த் தலைவர்கள் நாட்டைவிட்டுப் போயுள்ளனர்?'' என்று, ரஷ்ய அணுசக்தி அமைச்சர் விக்டர் மிகைலோவினை பத்திரிகை நிருபர் ஒருவர் கேட்டபோது, ''அது ஒரு புதிர் தான்; எண்ணிக்கையைக் குறிப்பிட விரும்பவில்லை. அதனை அமெரிக்க உளவுத்துறையினர் பார்த்துக் கொள்ளுவார்கள்'' என்றார்.

★ ''டி கிளார்க் [வெள்ளையர்களின்] நலனில் மட்டுமே அக்கறையாக இருந்தால், அவரை அரசில் நாம் சேர்த்துக் கொள்ள மாட்டோம்.'' என, நெல்சன் மண்டேலா தனது ஆதரவாளர்கள் மத்தியிற் பேசும்போது கூறினார்.



★ ஜோர்தான் மன்னர் ஹுசைன், இஸ்ரேலியப் பிரதமர் யிற்சாக் ராபினைப் பகிரங்கமாகச் சந்தித்தபோது, ''உங்களுக்கு நல்லகாலம் பிறந்துள்ளது'' என்று கூறினார்.

★ சைப்பிரசிலுள்ள ஆடம்பர ஹோட்டலில் விருந்தாளியாகத் தங்கியிருந்த புருணை சுல்தான், ''உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்'' என்று கூறி, 170,000 அமெரிக்க டொலரை அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு அன்பளிப்பாக வழங்கி, ''இது எனது சிறிய அன்பளிப்பு'' என்று கூறினார்.



★ ''எனக்குப் பொதுநல உதவியில் வாழ விருப்பம் இல்லை . . . ஆனால், எனது கணவனுக்கோ தொழில் இல்லை. அவர் ஒரு தீவிரவாதி . . . எங்கிருந்து அவரால் பணம் சம்பாதிக்க முடியும்?''

—கனடாவில் அகதி அந்தஸ்துப் பெற்றுள்ள முகமது பரா அய்டிட்டின் இரண்டாவது மனைவி கூறியது.

## பூட்டான்

# உலகின் கூரை உச்சியில் அகதிகள்

கோல்ட்ஹாப் அகதி முகாமின்மீது சிறிது, சிறிதாக இருள் கவிகிறது. புற்களால் வேயப்பட்ட சிறு குடிசைகளிலிருந்து வெளியில் வந்த அகதிகள் சுற்றிவர உட்கார்ந்தபடி, இளைஞர்களின் உதைபந்தாட்டத்தினைப் பார்வையிட்டாலும், அவர்களின் சிந்தனைகள் தாங்கள் விட்டுவந்த தாயக மண் மீதுதான் உறைந்து கிடக்கின்றது. பவானி சங்கர் துங்காணாவும், வேறு சிலரும் நாலு பக்கமும் திறந்த கொட்டகை ஒன்றிற் கரடுமுரடான மர வாங்குகளில் அமர்ந்திருக்கிறார்கள். அங்கு, மண்ணெய் விளக்கொன்று மங்கலான ஒளியைத் தந்துகொண்டிருக்கிறது. அவர்கள் தங்களை நாடு கடத்தியது பற்றித்தான் உரையாடுகிறார்கள்.

துங்காணா இரண்டாண்டுகள் சிறைவாசம் செய்தவர். அவருக்குச் சொந்தமாயிருந்த மூன்று ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நிலம் அதிகாரிகளால் சுவீகரிக்கப்பட்டதோடு, அரசாங்கம் அவரைத் தனது குடிமகன் அல்ல என்று கைகழுவியும் விட்டது. ஓராண்டு கோல்ட்ஹாப் அகதி முகாமிலே கழித்த அவர், ''வாய்ப்புக் கிடைக்கும் அடுத்த கணமே, நான் எனது இடத்திற்குத் திரும்ப ஆயத்தமாக இருக்கிறேன். எனக்குச் சொந்தமானது அந்த நிலந்தான். நான் இங்கு தங்கியிருக்க விரும்பவில்லை'' என்றார்.

துங்காணாவும், அவரின் குழுவினருமாய் முகாமில் வாசம் செய்தவர்களான 85,000 பேர், பூட்டானிலிருந்து வேர் பறிக்கப்பட்டவர்களுள்ளே அடங்குவார்கள். இவர்கள், நேபாளத்தின் தென்கிழக்கு மூலையிலுள்ள எட்டு



பூட்டான் வெளியேற்றும் நேபாள இனத்தவர்

முகாம்களைச் சேர்ந்தவர்கள். மிகக் கொடுமையான வறுமையுடனும், கந்தலுடையுடனும் காட்சி தருகிறார்கள். ஒரு காலத்தில், அமைதியோடு கூடிய இமாலயத்தின் ஒரு சிறு அரசாக விளங்கிய பூட்டான், இவர்களின் தாயகம். அழகும், அறிவும் நிறைந்த அரசர் ஒருவரால் இவர்கள் ஆளப்பட்டு வந்தார்கள்.

**நேபாள இன அகதிகள், முகாங்களிலே திணிவுண்டு கிடக்கையில், பேச்சு வார்த்தைகள் இழுத்தடிக்கப் படுகின்றன.**

வெகு தொலைவில் இருந்தாலும், பூட்டான் மக்கள் தனித்து ஒதுக்கப்பட்டவர்களும் அல்லர். உலகின் இரண்டு மிகப் பெரிய வல்லரசுகளின் நடுவில், அவற்றின் செல்வாக்கிற்கு உட்பட்டு வாழ வேண்டிய புவியியல், அரசியல் விதிக்கு இவர்கள் உள்ளாகியிருந்தார்கள். இந்தியாவும், சீனாவும் தத்தம் எல்லைப் பிரதேசங்களைப் பாதுகாக்கும் முயற்சியை மேற்கொண்ட பொழுது, இந்தியா வளம் நிறைந்த பிரமபுத்திராப் பள்ளத்தாக்கைத் தக்க வைத்துக் கொள்ள, அப் பிரதேசத்தின் ஆதிக் குடிகளோடு இடைவிடாத சண்டைகளில் ஈடுபடலாயிற்று.

இரண்டு வருடங்களாக, இராஜதந்திர முயற்சி எதனையும் கடைப்பிடிக்காது ஓய்ந்து கிடந்தபின் பூட்டானும், நேபாளமும் 4, 7 ஒச்ரோபரில் காட்மண்டுவில், அமைச்சர் பட்டத்திலான பேச்சு வார்த்தைகளில் இறங்கின. அடிப்படை விடயங்களில் இரு நாடுகளும் பிரிவுபட்டிருந்த காரணத்தினால், ஓர் உடன்பாட்டிற்கு வருவதில் அக்கறை செலுத்தவில்லை. அது அவசரமானதாகவும் தோற்றவில்லை. இதனால், துங்காணாவும், அவரின் நாட்டினரும் இன்னும் பல வருடங்கள் தங்கள் முகாங்களில் அடைந்து கிடக்க வேண்டியது தான்.

நேபாளியச் சிறுபான்மையினரை இனச் சுத்திகரிப்புச் செய்வதற்கு முனைந்துள்ள பூட்டா

னிய மேலாண்மைக்குழுவின் நடவடிக்கைகளுக்குப் பலியானவர்கள் தாங்கள் என,இந்த அகதிகள் குறிப்பிடுவதைச் சரியானது என்று, வெளியாரான அரசியல் அவதானிகளும் ஏற்றுக்கொள்கிறார்கள். புத்த சமயத்தவரான பூட்டானியர் பேசும் மொழியானது, அயல் நாடான திபெத்தினது மொழியோடு நெருங்கிய தொடர்புடையது. நேபாளியப் பூட்டான்யரோ இந்துக்கள். நேபாளிய இனத்தைச் சேர்ந்த பூட்டானியரின் தொகை 600 000. இவர்கள், பூட்டானின் தாழ்நிலைப் பகுதிகளிற் பெரும்பாலும் வசித்து வருகிறார்கள். 1990 செப்ரெம்பரில், பூட்டானின் தேசிய மொழியான சோங்காவைப் பயன்படுத்தும் படியும், பூட்டானிய உடையையே அணியும் படியும் இவர்களைப் பலவந்தம் செய்து, இவர்களின் வாழிடங்களிலிருந்து பொலிஸார் கலைத்தார்கள்.

பூட்டானின் அரசரான யிஜிம் சிங்கே வாங்சக், அகதிகளிற் பெரும்பாலோர் பூட்டானியரேயல்லர் என்று சாதிக்க முற்பட்டுள்ளார். இவர்கள் இந்தியாவிலிருந்தோ, நேபாளத்திலிருந்தோ இலவச உணவு, இலவச உறையுள் என்பனவற்றாற் கவரப்பட்டு, அகதிகளாய் வந்தவர்களாம். முகாம் வாசிகள், ''ட்றோய் நகரத்தில் விடப்பட்ட மரக் குதிரையினுள் ஒளித்து வந்த படையாளிகள் போல,'' நேபாளத்தை அகண்ட நேபாளமாக மாற்றும் நோக்கத்தோடு,பூட்டானை அடிமைப்படுத்த வந்த வேடதாரிகள் என்பதும் அரசின் முடிபு. இவ்வாறும் நிகழலாம் என்பதற்கு, முன்பு தனியரசாயிருந்த சீக்கிமை இந்திய அரசுக் குட்படுத்தி, அசாமின் ஒரு பகுதியாக ஆக்கியுள்ளமை உதாரணமாகக் காட்டப்படுகிறது.

பூட்டானின் தலைநகரமான திம்புவிலிருந்து வெளிவரும் பிரசுரங்கள், அகண்ட நேபாள வாதிகளின் கிளர்ச்சியின் உச்ச நிலை 1980 இன் பிற் பகுதியில் உருவெடுத்து, அதனால் பூட்டானியரின் கொலைகளும், பயங்கரமும் தலையெடுத்த வரலாற்றினைப் பிரச்சாரம் செய்து வருகின்றன. இது தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. முன்னைய கூர்க்காப் படை வீரர்களை நேபாளம் அனுப்பி, அவர்கள் மூலம் அகதிகள் முகாங்களில் ஊடுருவலாளிகளுக்குப் பயிற்சி அளிப்பதாகப் பூட்டான் குற்றம் சாட்டி வருகிறது.

அகதிகள் யாவரும் நேபாள இனத்தினர் என்பதும், கடந்த மூன்று ஆண்டுகளில் பூட்டானிற் குடியேறியவர்கள் என்பதும் அங்கீகரிக்கப்படும் நிலையில், இந்தக் குழப்பங்கள் உண்டாகத் தொடங்கின. 1988 வாக்கில் திம்பு, தெற்குப் பூட்டானியரின் சனக் கணக்கெடுப்பில் இறங்கியதன் மூலம், எல்லைப் பிரதேசத்திற் குடியேறிய நேபாளியரின் விபரத்தை அறிய முயன்றது. ஆனால், இத்தகைய சுதந்திரமான வேறுபடுத்தும் முயற்சி மிகவும் கடினமானதாகும். வெளிநாடுகளிலிலிருந்து, தன் நாடு வருவோரின் தொகையைக் கட்டுப்படுத்துவதிலே, திம்பு மிகுந்த கரிசனை எடுத்து வருகிறது. ஒவ்வொரு வருடமும் 3,000 வெளிநாட்டுப் பயணிகளுக்கே விசா வழங்கப்படுகிறது. அவ்வாறு வரும் பயணிகளிலும், அதிகமானோர் பூட்டானின் வடபகுதியின் இயற்கைக் காட்சிகளையும், பௌத்த சமய நிறுவனங்களையும் பார்வையிடுவதிலேயே ஈடுபாடு கொள்கிறார்கள்.

இந்தக் கட்டுப்பாடுகளையும், தெற்குப் பூட்டானியர் தமது பிரதேசத்திற் கொண்டுள்ள ஈடுபாட்டையும், அனுபவத்தையும், அறிவையும் வைத்துக்கொண்டு பார்த்தால், பூட்டான் அரசாங்கத்தின் முடிவு ஐயத்திற்கிடமானதே. முகாங்களில் உள்ளவர்களில், அதிகமானவர்கள் அகதிகளே என்பதை மறுத்தல் இயலாது.

அகதி முகாம்களும் அடிப்படை வாழ்க்கை வசதிகளைக் கொண்டவையாயில்லை. அவை, குடியேறி வாழத் தகுதியற்ற பிரதேசத்தில் அமைந்துள்ளன. ஐக்கிய நாடுகளின் அகதிகள் விவகாரப் பொறுப்பாணையாளர் (யூ.என் எச்.சி.ஆர்) உணவுப்பங்கீடும், மருத்துவ உதவியும் வழங்கிய போதிலும், ஊட்டக் குறைவும், சுகாதாரச் சீர்கேடுகளும் மலிந்தே காணப்படுகின்றன. கொள்ளை நோய் ஏற்படக்கூடிய நிலையான ஆபத்திற்கு இடம் உண்டு. மூங்கில்களால் அமைத்துப், புல்வேய்ந்த குடிசைகளில் 16,500 மக்கள் வாழ்கிறார்கள். அண்மையிற் காடுதுப்புரவு செய்யப்பட்டுப் பிளாஸ்டிக் கூரைகளும் இடப்பட்டாலும், கழிப்பறைகள் அழிபாட்டிற்குள்ளாகி விட்டதால், சுகாதாரச் சீர்கேடுகள் அதிகரித்துள்ளன. மனிதக் கழிவுகள் பெருமளவு நிரம்பி, ஒரேஒரு குடிநீர்க் கிணற்றையும் பெரிதும் பாதித்துள்ளது. பயங்கரத் தொற்றுநோய்கள் ஏற்படலாம் என்ற அச்சம் நிலவுகிறது. யூ. என். எச். சி. ஆர் அதிகாரிகள் 1992 ஏப்ரல், யூலை மாதங்களில் அகதிகளின் வரவு உச்சக்கட்டத்தை அடைந்தது என்றும், இவ்வாறு வந்தவர்களில் 1,000 பேர்கள் வரை நேபாளத்திற்குள் சென்று விட்டனர் எனவும் கூறினார்கள். மிக அண்மைக் காலத்தில் பூட்டான் தனது கொள்கையில் மென்மையைக் கடைப்பிடிப்பது போலத் தோன்றுகின்றது. வழக்கமாக அகதிகள் வந்து குவியும் எல்லைப் புறத்தில்,யூ.என்.எச். சி ஆர் ஒரு வரவேற்பு நடுவத்தை அமைத்துப், புதியவர்கள் நுழைவதைப் பரிசீலனை செய்து, போதிய பொருத்தமான காரணங்காட்டி ஆதரவு கோருபவர்களை மாத்திரமே அனுமதிக்கிறது. இதன் பயனாக, அகதிகள் தொகை படிப்படியாகக் குறைந்து வருகிறது.

''நாங்கள் வெளியிட்டுள்ள அகதிகள் தெரிவுகாண் முறை யாவரும் நன்கு அறிந்ததே. எனவே இந்தத் தேர்வு முறையை நன்கு அறிந்தவர்கள் ஏற்றுக்கொள்ளப் படுகிறார்கள். இப்பொழுது சிக்கல் தீர்ந்து விட்டதாகவே தெரிகிறது'' என்று யூ. என். எச். சி. ஆர். அதிகாரிகள் கூறுகிறார்கள்.

பூட்டானும், நேபாளமும் அகதிகள் விடயமாக இரு பக்கமும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வினைக் காணவேண்டும் என்று, இந்தியா கடுமையான அழுத்தம் கொடுக்கின்றது. இரண்டு நாடுகளுமே நியூடெல்லியின் பக்கம் மிகுதியும் சார்ந்திருக்க வேண்டிய நிலையில் உள்ளன. நேபாளத்தில் ஆட்சி புரியும் இந்தியச் சார்பான நேபாளக் கொங்கிரசும், உடன்பாட்டு அடிப்படையில் பூட்டானும் வெளிநாட்டுக் கொள்கையில் இந்தியாவுடன் கலந்தாலோசிக்கின்றன. இருப்பினும் இரு பக்கத்தாரும் ஏற்கத்தக்க முடிவு ஏற்படுத்துவதில் சிரமம் உண்டு. இதனைக் களைய வேண்டுமானால் மூன்றாமவர் தலையீடு அவசியம் என்று இராஜதந்திரிகள் கருதுகின்றார்கள். ''மிகப் பெரும்பான்மையான விடயங்களிலே பெரும் முரண்பாடு நிலவும் பொழுது, இவ்விரு பகுதியாரும் ஒரு தீர்வுக்கு வருவது எவ்வாறு?'' என்பது மூத்த இராஜதந்திரி ஒருவரின் கேள்வியாகும்.

*ஹமிஷ் மக்டொனால்ட்-பத்ரப்பூர், நேபாளம்.*

*வார் ஈஸ்ரேன் எக்கனமிக்றிவியு, நவம்பர் 11, 1993*

# மலேசியா: அன்வரைப் பதவி உயர்த்த, பிரதம மந்திரி மகத்தீருக்கு அவசரமில்லை.

*எழுதியவர் கோலாலம்பூரிலிருந்து*
*— மைக்கல் வற்றிகியோற்றிஸ் —*

ஹோட்டல் ஒன்றின் கோப்பிக் கடையொன்றினுள்ளே கமாறுதீன் மாற்நோர் செல்கின்றார். அவரை, இடசின் வர்த்தகப் பிரமுகர்கள் தமது மதிய போசனத்தை நிறுத்திவிட்டு எழுந்து சென்று வரவேற்று நிற்கிறார்கள். கமாறுதீனின் மேல் அதிகாரியான டத்துக் செரி அன்வர் இப்ராஹிம் மலேசியாவின் அடுத்து வரக்கூடிய பிரதம மந்திரியென, இரு நாட்களுக்கு முன்னர் அரசாங்கக் கட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

## ஆதிக்கச் சமநிலை

ஐக்கிய மலாயரின் தேசியச் சபையின் ( உம்நோ ) இவ்வருடத் தேர்தலில் வென்றவர்களை, உடனடியாகக் கவர விரும்புவது ஆச்சரியப்படுவதற்கில்லை; மதிப்பிடவுமில்லை. நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட விவாதத்தை முடித்துவைத்துப் பேசும் பொழுது உள்நாட்டுத் தொலைக்காட்சியில் அதிக விளம்பரம் இவருக்குக்கொடுக்கப்பட்டது. அத்துடன், இரவுநேரச் செய்திகளில் இவருக்கு அதிக முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டது.

மலேசியாவின் ஆதிக்கச் சக்தியாக அன்வர் கருதப்படுமுன்னர், மேலும் அவர் முன்னுக்கு வர இடமுண்டு எனக், கமாறுதீனே குறிப்பிடுகின்றார். '' ஒரு மாற்றத்திற்காகக் கட்சிப் பிரதிநிதிகள் விருப்பம் தெரிவித்து வாக்களித்தும் விட்டார்கள். ஆனால்,எப்பொழுது என்பது பிரதம மந்திரியின் கையில் உள்ளது '' என, அன்வரின் முக்கிய அரசியல் உதவியாளரான கமாறுதீன் இப்பத்திரிகைக்குக் கூறினார்.

நவம்பர் மாதம் நான்காம் திகதி நடைபெற்ற '' உம்நோ '' தேர்தலின் அமளி அடங்கும் பொழுது, அன்வரின் வெற்றியின் முழுத்தாக்கம் தெளிவாகத் தெரிகின்றது. ஆனால், ஆட்சி செய்யும் தேசிய முன்னணிக் கூட்டமைப்பில் மேலாதிக்கம் செலுத்தும் கட்சியின் மீது, பிரதம மந்திரி டத்துக் செரி மகத்தீர் முகம்மது முழுக்கட்டுப்பாடு வைத்துள்ளார் என்பதற்கான அறிகுறிகள் அவ்வளவாகத் தென்படவில்லை.

புதிய ஆதிக்கச் சமநிலையைக் காட்டும் வண்ணம் கட்சியை, அல்லது, அரசாங்கப் பதவிகளை மாற்றியமைக்க,மகத்தீர் விருப்பமில்லாதது போல் தோன்றுவது இந்நோக்குக்கு ஆதாரம் அளிக்கின்றது. தானே இன்னும் சக்தியின் இருப்பிடம் என்பதைக் காட்டும் தந்திரோபாயமாகவும் இருக்கலாம் என்று, வெளிநாட்டு இராசதந்திரியொருவர் கூறுகின்றார்.

இது கஷ்டமாயிருக்கலாம்; 'உம்நோ' வில் ஆதிக்கச் சமநிலை சந்தேகத்திற்கிடமின்றி அன்வரின் பக்கம் திரும்பிவிட்டது. அவரின் அரசியல் நண்பர்களில் மூவர் 'உம்நோ' வில் உபதலைவர்கள் பதவியைப் பெற்றது மட்டுமன்றி, மாநிலங்களின் தலைவர்களும் அன்வரின் பக்கம் சேர்ந்தார்கள். மலேசியாவின் தந்திரோபாய ஆராய்ச்சி மையத்தின் அப்துல் றசாக் அப்துல்லா பகின்டாவின் கருத்துப்படி, உம்நோவின் கட்டமைப்பின் முதுகெலும்பு போன்ற 153 பிரிவுகளிற் கூடுதலானவை


அன்வரின் ஆதரவாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டன.

தனது மந்திரிசபையைத் தெரிவதற்குப், பிரதம மந்திரி என்ற முறையில் மகத்தீருக்கு முன்னுரிமை உண்டு. உம்நோ உயர் மட்டச் சபையின் கட்சியின் தலைவர் என்ற முறையிற் 10 பேரை அவர் நியமிக்கமுடியும். 68 வயதுடைய பிரதம மந்திரி தனது நேரத்திற்கு அமைய மாற்றங்களைக் கொண்டு வருவார். ''உடனடியாக மாற்றங்கள் இராது'' என 'உம்நோ' பொருளாளரும், முன்னாள் நிதி மந்திரியும், மகத்தீரின் நெருங்கிய சகபாடியுமான துன் டெய்ம் செய்துதீன் கூறுகிறார்.

அரசாங்கக் கட்டமைப்பின்படியும் மகத்தீரின் பக்கம் நேரம் உள்ளது. அடுத்த தேர்தலுக்கு முன், அன்வரின் உயர்பதவி வகிக்கும் நண்பர்களை - மூவர் மாநில முதல்வர்களாக இருப்பதனால், மந்திரி சபைக்குப் பதவியுயர்த்துவது கடினமாகவிருக்கும். மத்திய அரசுக்கு வருவதாயின், அவர்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட வேண்டும். இவ்வருட முற்பகுதியில் நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்புத் திருத்தத்தின்படி, அடுத்து நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலுக்கு முன், இரண்டு வருடங்களுக்குள் உபதேர்தல் நடத்த முடியாது. தற்போதைய அரசின் பதவிக்காலம் 1995 இல் முடிவடைவதனால், அன்வரின் நண்பர்களுக்கு நாடாளுமன்ற ஆசனங்கள் கிடைப்பது தடுக்கப்படுகின்றது.

மார்ச் 1991 தொடக்கம் அன்வர் வகிக்கும் நிதி மந்திரிப் பதவியானது மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். அவர் பதவியில் இருக்க விரும்புகிறார், அல்லது, அவரின் அரசியல் நண்பர்களில் ஒருவரான, யோகோரில் இருந்து புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 'உம்நோ' உபதலைவரான தான் நிறி முகையிதீன் யாசின் தனது பதவியைப் பெறுவதை விரும்புகிறார் என, அவரின் ஆதரவாளர்கள் திடமாக நம்புகிறார்கள்.

எனினும், முன்னாள் நிதி மந்திரி டெய்மை மீண்டும் நியமிக்க,



அன்வர் பிரதம மந்திரி மகத்தீர் உடன்

மகத்தீர் விரும்புவார். ''டெய்ம் நிதிமந்திரியாக வந்தால், மகத்தீர் தனது எண்ணப்படி நடந்துள்ளார் என்ற முடிவுக்கு வரலாம்'' என, மந்திரிசபையில் அன்வருக்கு எதிரான ஒருவர் கூறுகிறார்.

மகத்தீர் தனது கட்டுப்பாட்டுக்குள் கட்சியை வைத்தும், அன்வர் அரசியல் அழுத்தம் ஒன்றையும் பிரயோகிக்காது இருப்பதையே, இக்காட்சி எடுகோளாக ஏற்கிறது. இவ்வருட உம்நோ தேர்தலில் தோற்றவர்களோடு, அரசியற் சக்தியைப் பங்கிடப் போவதைப் பற்றி அன்வரின் ஆதரவாளர்கள், மகிழ்ச்சியடையவில்லை.

உள்நாட்டுப் பத்திரிகைகள் தேர்தற் பிரச்சாரம் முழுவதும் அன்வருக்கு ஆதரவாக - வெளிப்படையாக ஆதரித்தன. ஆனால், பத்திரிகாசிரியர்கள் மீது மறைமுகமாகச் செல்வாக்குச் செலுத்தியதை மறுக்கிறார். அன்வருக்கும், பத்திரிகைகளுக்கும் இடையேயுள்ள பிணைப்பு, சில பிரதி கூலங்களையும் தோற்றுவிக்கும் என, கமாருதீன் தெரிவிக்கிறார். ''சில செயற்பாடுகள் கட்டுப்படுத்த முடியாமலும் இருக்கலாம். அரசாங்கத் தலைவர் ஒருவரைப் பத்திரிகையாளர்கள் விரும்பினால், அவர் கூறுவது எல்லாவற்றுக்கும் அதிக விளம்பரம் கொடுப்பார்கள். சில சமயங்களில் சற்று மேலதிகமாகவும் செயற்படுவார்கள்.''

எனினும், அவர்கள் பெற்ற ஆணையின்படி அன்வரும், ஆதரவாளரும் வரப்போகும் மாற்றத்திலும், பதவியைத் தொடர்ந்து பெறுவதிலும், உறுதியாகப் பார்வையைச் செலுத்தியுள்ளார்கள். எதிர்காலத்தைப் பற்றி அன்வரின் முகாமில் இருந்து ஒருவரும் வெளிப்படையாகக் கதைக்காவிடினும், மகத்தீர் பதவியிலிருந்து இளைப்பாறும் திட்டத்தில் அதிகம் தங்கியுள்ளது என, அன்வரின் உதவியாளர் ஒருவர் தனித்துக் கூறினார். மேலும், ''கட்சியைப் பிளவுபடாமல் அன்வர் வைத்திருக்கக்கூடியவர் என மகத்தீர் முடிவுக்கு வந்தால், விரைவில் அவர் வெளியேறுவார். அவ்வாறு இல்லையெனின், தளநிலை அன்வருக்குக் கஷ்டமாயிருக்கும்'' டெய்மின் கருத்துப்படி, மகத்தீர் இளைப்பாற விரும்பவில்லை என்கிறார்.

மகத்தீருக்கு, நேரடியாக அன்வர் சவால் விடுவார் என அவதானிகள் நம்பவில்லை. அத்துடன், நூற்றாண்டு முடியும் வரைக்கும் மகத்தீருக்குக் கீழ் அன்வர் பணியாற்றுவார் என, அவரின் ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். ''பதவியைப் பெற அவசரப்படுவதுபோல் காட்டுவது அவ்வளவு நல்லதல்ல'' எனக் கமாருதீன் ஒத்துக்கொள்கிறார்.

ஆனால், அன்வர் செயற்படும் விதத்தை அவதானித்த அவரின் எதிரிகள், இதை நம்பவில்லை. ''இது ஒரு விரிவான நாடகமாகும்'' எனக்கூறும் மந்திரிசபை சகபாடியான ஒரு விமர்சகர், மேலும் மகத்தீரைச் சொகுசாக வைத்துத், தனது ஆதிக்கத்தைத் தக்க வைக்க வேண்டிய நிலை, அன்வருக்கு உண்டு எனக் கூறுகின்றார்.

1982ஆம் ஆண்டு உம்நோஅரசியலில் தடுமாறிக்கொண்டு பிரவேசித்த பொழுது, தனது புத்தியை உபயோகித்து மிகவும் அமைதியாக இருந்த காலத்திலிருந்து, அன்வர் ஒரு முழுவட்டம் வந்து விட்டார். ஒரு முஸ்லிம் தீவிரவாளர் என்ற ரீதியில் 1982 ஆம் ஆண்டு கட்சியிற் சேர்ந்த பொழுது, வரவேற்பு மகிழ்ச்சியாக இருக்கவில்லை என்றும், தான் வேண்டுமென்றே தன்னை விளம்பரப்படுத்தாமல் இருந்தார் என்றும் அன்வர் ஒத்துக்கொள்கிறார். ஆனால், 1993 இல் அவ்வாறல்ல. ''கட்சித் தலைமைப் பீடம் என்னையே ஆதரிக்கிறது; ஆகவே பிரச்சினை எங்கேயிருக்கிறது?'' என, அண்மைக்காலப் பேட்டியொன்றின் போது அன்வர் கேட்டார்.

*(F) வார் ஈஸ்ரேன் எக்கனமிக் றிவியூ, டிசம்பர் 2, 1993*

---

# எதிர்க்கும் குரல்கள்

*எழுதியவர் ஹனோயிலிருந்து*
— மறே ஹைபேற் —

## வியற்நாம்:

### கட்சி மகாநாட்டுக்கு முன்வரும் விமர்சனங்கள் அரசாங்கத்தைக் கோபமுறச் செய்கின்றன

கம்யூனிஸ்ற் கட்சியின் விசேட மகாநாட்டை, அடுத்த தை மாதம் நடாத்த எடுத்த தீர்மானத்தையிட்டு வியற்நாமியத் தலைவர்கள் விசனப்படுவார்கள். சுதந்திரசந்தைப் படுத்தும் பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் கட்சி, இன்னும் பழைமையான மார்க்சிய-லெனினியக் கொள்கைகளை ஒட்டிப் பிடித்து நிற்பதை, இம் மகாநாட்டை ஒரு சாட்டாக வைத்துப் பல முன்னணிப் புத்திஜீவிகள் பலமாகச் சாடுகிறார்கள்.

அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகள் இவர்களின் விமர்சனங்களைப்பிரசுரிக்கவில்லை. எனவே, இவற்றின் ஃபோட்டோப் பிரதிகள் இரகசியமாக உலாவுகின்றன, இவ்வாறு சோஷலிசத்தினை எதிர்ப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் எனக் கட்சி அங்கத்தவர்களை அரசாங்கம் எச்சரிக்கை செய்துள்ளது. வியற்நாமிய சுதந்திரத்தின் தந்தையெனக் கருதப்படும் ஹோசீ மின் இனாற் புகுத்தப்பட்ட காரணத்தினால், கட்சி மார்க்சிய-லெனினியக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்ற, கட்சியின் புனிதமான கோட்பாட்டை எதிர்க்கும் தென்பிரதேசப் புத்திஜீவியாகிய லூ ஃபோஓங் கினால் எழுதப்பட்ட விமர்சனம் மிகக் காரமான தாகும்.

பிரான்ஸ் நாட்டுக் குடியேற்றவாதிகளையும், அமெரிக்கரையும் எதிர்த்துப் போரிடுவதற்கு ஒரு கருவியாக, லெனினிசத்தை ஹோ உபயோகித்தார் என முன்னாள் கட்சித்தொண்டரும், பண்பாட்டு அமைச்சின் அதிகாரியுமான ஃபோ ஓங் கூறுகிறார், ''விவேகமான மக்களை முட்டாள்களாகவும் இலட்சியவாதிகளைத் தரம்கெட்டவர்களாகவும் மாற்றுவதான, நாட்டை அதே மந்த நிலையில் வைத்திருக்கும் ஒருசித்தாந்தத்தை ஹோ ஏற்றுக்கொண்டதாக, அவர் ஒருபோதும் எண்ணவில்லை'' என ஃபோஓங் எழுதுகிறார்.

மார்க்ஸ், மற்றும் புரட்சியின் சார்பாக, சோஷலிச அரசியலமைப்பினாற் கொண்டு வரப்பட்ட பொருளாதார மந்தநிலையும், அரசியல் மற்றும் பண்பாட்டு, ரீதியான அடக்குமுறையும், வியற்நாம் பல வருடங்களாகச் சுதந்திரத்தை அனுபவித்தாலும், மக்களுக்கு மகிழ்ச்சி

யையும், சுதந்திர உணர்வையும் கொடுக்கவில்லை எனத் தனது 16 பக்கக் கட்டுரையில், தற்போது ஹோ சி மின் நகரிற் படப்பிடிப் பாளராக வேலை செய்யும் ஃபோ ஓங் எழுதுகிறார்.

"அரசியலில் தாராள சிந்தனையைத் தொடர்ந்தே, பொருளாதார வளர்ச்சி ஏற்படும் எளிய முறையில், ஹோ தெரிவு செய்த இலட்சியவாதத்தைக் கைவிட வேண்டும். ஆனால் எவ்வாறு கைவிடுவது? சீரழிவினாலா, அல்லது, சமாதான வழிகளிலா?" என மேலும் ஃபோஓங் கேட்கிறார்.

தலைநகரில் உலாவும் மேலும் ஒரு விமர்சனம், உயிரியற் பேராசிரியர் என்குயன் சுவன் தூ வினால் எழுதப்பட்டது. "தேசிய ஒற்றுமையையும், ஜனநாயக சமுதாயத்தையும், சந்தைப் பொருளாதாரத்தையும் ஏற்படுத்த, மார்க்சிய லெனினிசத்தால் முடியாமற் போய் விட்டது" எனத் தனது 76 ஆம் பக்கக் கட்டுரையில்தூ விவாதிக்கிறார். "எமது நாட்டுக்கு ஏற்புடையதாக இல்லாத அயல் நாட்டுக் கொள்கையைக் கைவிட்டு, உள்நாட்டில் ஒற்றுமையை வளர்த்து, நாட்டை வளர்ச்சியடையச் செய்யப் பல்வேறு உதவிகளைப் பெற்று, பரந்த உலகில் எமது நாடும் ஒத்தியங்கக் கூடியவாறு, தளநிலை அமைக்கப்பட வேண்டும்" என எழுதுகிறார்.

"இலட்சியவாதத்தைக் கைவிட்டால், உடனடியாக நாடுகுழப்ப நிலையை அடையும் என்ற கட்சியின் கூற்றை மறுத்து, இது உண்மையானால், நாம், சுதந்திரமாக இருக்கத் தகுதியற்றவர்கள். நாம் என்றும் அடிமைகளாகவே இருக்கக்கூடியவர்கள்" எனத் தூ கூறுகிறார்.

தென் பிரதேசப் புத்திஜீவியான எங்குயன் ஃபோங் ஹோஉறியூ, மூன்றாவது இரகசியக் கட்டுரையை எழுதியிருக்கிறார். வியற்நாமிற்கு எதிராக, அமெரிக்க வர்த்தகத் தடையை நீக்கும் பொழுது ஏற்படக்கூடிய மாற்றங்களை இவர் ஆராய்ந்துள்ளார். வியற்நாமிற்கு, மீண்டும் அமெரிக்காவின் வருகையினால் எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சி



ஹோ-சி-மீன்

யில் அரசியல் தாக்கத்தின் காரணத்தினால், அமெரிக்காவின் வருகையைப்பற்றி வியற்நாமியத் தலைவர்கள் இரு மனமுடையவர்களாக இருக்கிறார்கள் என, 1990-ம் ஆண்டிற் கட்சியை விட்டு விலகிய ஹியூ எழுதுகிறார்.

"மக்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரம் கிடைத்தால், அரசியற் சுதந்திரம் என்ற கேள்வியும் எழும். தாம் இழந்த உரிமைகள் அரசு தர வேண்டுமென வற்புறுத்துவார்கள்" எனக் கூறிச் சுதந்திரமான தேர்தல்கள், பேச்சுரிமை, பத்திரிகை, மற்றும் சமய உரிமைச் சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்ற கோட்பாடு ஆகியவற்றைப் பட்டியற்படுத்திக் காட்டுகிறார்.

கட்சியை விமர்சிக்கும் ஆவணங்களை, வெளிநாட்டில் வசிக்கும் வியற்நாமியரும் நாட்டினுள்ளே கடத்தியிருக்கிறார்கள். ஹனோய் இல் உலாவும் ஒரு கட்டுரையில் "மார்க்சியத்தைச் சவக்குழியிற் புதைக்க நேரம் வந்துவிட்டது" எனத் தலையங்கமிடப்பட்டுள்ளது.

இவ்விமர்சனங்களைப் பற்றி, இன்னமும் வெளிப்படையாகத் தனது நிலைப்பாட்டைக் கட்சி கூறவில்லை. ஆனால், ஐப்பசி மாதத்திற் கட்சியின் எதிரிகளைத் தாக்கி, ஹனோய் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்ட கட்டுரை, ஏற்கனவே இரகசியமாக விநியோகிக்கப்பட்ட விமர்சனங்களைப் பார்க்காத வாசகர்களை ஆச்சரியத்தில் அமிழ்த்திப் பிரசுரிக்கப்பட்ட காரணத்தை அவர்களால் ஊகிக்கவே முடிந்தது. அதன்பின்னர், அம்மாதத்திலும், நவம்பர் மாத முற்பகுதியிலும் ஹனோயிலும், ஹோசி மின் நகரிலும் பிரசுரிக்கப்படும் கட்சிப் பத்திரிகைகளில் பெயர் குறிப்பிடப்படாத கணித வல்லுனரை, அவரின் இலட்சியவாதத் தவறுகளுக்காகத் தாக்கி, இரு பகுதிகளாகத் தொடர் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன.

கட்சியை அடிக்கடி விமர்சிப்பவரான ஃபான் டின் டியூ மீது, இது ஒரு வெளிப்படையான அடியாகும். மனிஷ் பத்திரிகையாளருக்கு இவர் அளித்த செவ்வி ஐரோப்பாவிற் பிரசுரிக்கப்பட்ட பின், விஞ்ஞான ஆராய்ச்சியின் தேசிய மையத்தின் உபதலைவராக இருந்த இவர், தனது பதவியிலிருந்து சில மாதங்களுக்கு முன் அகற்றப்பட்டார்.

பத்திரிகைகளில் டியூ தாக்கப்பட்ட நேரம், வியற்நாமில் சீர்திருத்தம் பற்றிக் கலந்துரையாட, வெளிப்படுத்தப்படாத கூட்டமொன்றுக்குக் கட்சித் தலைவர் டோ முஓய் இனால் இவர் அழைக்கப்பட்டிருந்தார். தமது விமர்சகர்களுக்கு எவ்வாறு பதிலளிப்பது என்பதிற் கட்சித்தலைவர்களே தடுமாறுகிறார்கள் என்பதையே இது காட்டுகின்றது, அதே நேரத்தில், மறைமுகமாக உதவும் பத்திரிகைகளை விமர்சிக்கும் வண்ணம் கட்டுரைகள் எழுதுமாறு, அரசாங்கத்துக்கு ஆதரவாக உள்ள அரை இடசின் புத்திஜீவிகள் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

மகாநாட்டுக்கு ஆயத்தப்படும் பொழுது, இத்தாக்கங்கள் மட்டுமே தலைவர்களைக் குழப்பும் ஒரே பிரச்சினையல்ல. நவம்பரில் நடைபெற இருந்த மகாநாடு ஒருதடவை டிசம்பருக்கும், பின்பு ஜனவரி மாதத்திற்கும் பிற்போடப்பட்டுள்ளமைக்கு, தலைவர்களுக்கிடையே ஏற்பட்ட அபிப்பிராய பேதங்களே காரணம் எனக்கூறப்பட்டது. மேலும் பி. போடப்படலாம் என, ஹனோயில் வதந்திகள் உலாவுகின்றன.

சீர்திருத்தம் தொடர வேண்டும் என்பதிற் கட்சிக்குள் ஒற்றுமை இருப்பினும், எந்த வேகத்தில் மாற்றத்தைப் புகுத்துவது என்பதில், தலைவர்களுக்கிடையே அபிப்பிராயபேதம் இருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

மகாநாட்டுக்குப் பின்னர், இளைப்பாறும், அல்லது, பதவி இழப்பவர்களின் இடங்களுக்கு வர இருக்கும் 15 புதிய மத்திய குழு அங்கத்தவர்களின் நியமனங்களிலும், முதுநிலைத் தலைவர்கள் பேதப்படுகிறார்கள் எனக் கட்சி மூலங்கள் தெரிவிக்கின்றன. நவம்பர் மாதம் 23-ம் திகதியளவில் நடைபெற இருக்கும் மத்திய குழுவின் ஆறாவது பொதுச்சபைக் கூட்டத்தில், இவ்வபிப்பிராய பேதங்கள் விவாதிக்கப்படவுள்ளன.

மகாநாட்டுக்காகத் தயாரிக்கப்பட்ட அரசியல் அறிக்கை, இக்கூட்டத்தில் மீளாய்வு செய்யப்படும். 1991-ம் ஆண்டில் நடைபெற்ற ஏழாவது மகாநாட்டுக்குப் பின்னர், நாட்டில் ஏற்பட்ட அரசியற் பொருளாதார வளர்ச்சியை மீள் பார்வை செய்யும் தற்போதைய வரைவு, ஒரு மாதத்திற்கு முன்னர் சுற்றறிக்கையாக விடப்பட்டபோது மாகாண அதிகாரிகள் மற்றும் அரசாங்க அமைச்சுக்களாற் பரந்தளவில் விமர்சிக்கப்பட்டன. சீர்திருத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பற்றி, அரசியல் அறிக்கை அதிகம் நம்பிக்கையுடையதாக உள்ளது என, ஒருசில விமர்சகர்கள் கூறுகிறார்கள். வேறுசிலர், அரசின் தலைமையின் கீழ் சோஷலிச சார்புடைய, கட்டுப்பாடற்ற சுதந்திர சந்தைப் பொருளாதாரம் என்பதற்கு வரைவிலக்கணம் கூறி, நாட்டின் எதிர்காலத்தைப்பற்றிய கட்சியின் தூரநோக்கை வரையறுக்கக் கட்சியின் வரைவு அறிக்கை தவறிவிட்டது என முறையிடுகிறார்கள்.

:வார் ஈஸ்ரேன் எக்கனமிக் றிவியு, டிசம்பர் 2, 1993

## இரு கொரியாக்கள்

# விறைப்புக்குள் இருந்து வெளியேறல்

எழுதியவர் சியோலிலிருந்து
— எட்வட் டபிள்யூ டெஸ்மன்ட் —

வடகொரியாவில், ஒரு மனிதனின் வாழ்வை நாசமாக்கக் கூடிய வகையான கஷ்டம் ஒன்றிற்குள் 25 வயதான சோள் ஹவான் மாட்டிக் கொண்டான். அவன் மீது பொறாமை கொண்ட நண்பன் ஒருவன், அவன் தென்கொரியப் பொப் பாடல்கள் பாடுவதாகப் பாதுகாப்புக் காவல் துறைக்குத் துப்புக் கொடுத்து விட்டான். அதாவது, அவனிடம் மிகவும் சட்ட விரோதமான சள்ளக் கடத்தற் பொருளான ஒரு வானொலிப் பெட்டி உள்ளது என்பதாகும். சோள் ஹவானுக்குத் தெரியும், தான் நிச்சயம் சிறை முகாமுக்கு அனுப்பப்படுவேன் என்று. அவனுடைய பாட்டனார் ஓர் அரசாங்க எதிரி என்று குற்றஞ் சாட்டப்பட்டதால், அவனும் ஏற்கனவே தனது குடும்பத்துடன் அங்கு 10 ஆண்டுகள் கழித்து விட்டான். ''இரண்டாம் முறை அங்கு ஒருவர் போனால், மீண்டும் அவர் திரும்பி வெளியே வரமாட்டார்'' என்று அவன் கூறுகிறான். அதனால், அவன் நாட்டை விட்டுத் தப்பி ஓட நினைத்தானாம்.

ஜப்பானிலிருந்து வருகை தந்த உறவினர்களிடம் இருந்து கிடைத்த பணத்தைக் கொண்டு, அவன் உள்ளூர்க் கட்சி அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்து, 100 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் உள்ள சீன எல்லை வரை சென்றுவர, அவன் ஓர் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டான். சீன எல்லையை அடைந்ததும், அவன் ஒரு கடத்தற் காரனைப்போல் நடித்து, எல்லைக் காவலர்களுக்கு விஸ்கியும், சிகரெட்டும் இலஞ்சமாகக் கொடுத்து, 1992 மார்ச் 8 ஆம் திகதி யூளு ஆற்றின் அக்கரை சென்று, அதன் மூலம் ஒரு புதிய வாழ்வுக்குள் புகுந்தான்.


இப்படி ஓடிவந்தவன் அவன் மட்டுமல்ல; மென்மேலும் வட கொரியா மரணத்தை உண்டாக்க வல்ல ஆபத்தைக் கூட அசட்டை செய்து, பனிப்போரின் இறுதி எல்லைக் கோட்டுப் பிரதேசத்தைக் கடந்து, இரும்புத் திரைக் காவற் கோபுரங்களின் கண்ணிற் படாமல், ஒளி வெள்ளப் பாய்ச்சலுக்கும், கண்ட இடத்திற் சுடும் கட்டளைக்

**கிம் இல் சுங்கிற்கு அத்தனை தூரம் விசுவாசம் இல்லாதவர்கள் வட கொரியாவை விட்டு ஓடுகின்றனர். அதனால், தென் கொரியாவுக்குப் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள நேர்கிறது.**

கும்தப்பி, வெளியேறிக் கொண்டுஉள்ளனர். அப்படி எல்லை கடந்து போவோரிற் பெரும்பான்மையினர், அங்கு மஞ்சூரியாவின் எல்லைக்கு அப்பால் வதியும் 1.2 மில்லியன் கொரிய இனத்தவர்களுடன் வாழ்கின்றனர். ஆனால், சிலர் எப்படியோ தென் கொரியாவை அடைந்து விடுகின்றனர். அப்படியாக ஓடிவந்த சோள், இப்பொழுது தனது துயரம் நீங்கி, சியோலில் உள்ள ஹன்பாஸ் பல்கலைக் கழகத்திற் பயில்கிறான்.

இதில் முக்கிய ஓர் அம்சமாக இருப்பது, பீகிங் இந்தத் தப்பி ஓடு தலைக் கண்ணை மூடிக்கொண்டு பார்ப்பது தான். முன்னாளில், சீனா தனது எல்லையைக் கடுமையாகக் காவல் காத்துக் கள்ளமாக நுழையும் வட கொரியர்களைப் பிடித்தால், மீண்டும் அங்கேயே திருப்பி அனுப்புவர். வட கொரியாவின் ஒரேயொரு பலம் வாய்ந்த இறுதி நண்பனாக இருந்த பீகிங், இப்பொழுது அந்த நிலைப்பாட்டில் இருந்து நீங்குவதாகச் சீனத் தலைநகரில் உள்ள இராஜதந்திரிகள் கூறுகின்றனர். அதற்குக் காரணம், உழுத்துப்போன ஸ்டாலினிஸப் பொருளாதாரத்தைக் கிம் இல் சுங் கைவிட மறுப்பதும், வடகொரியாவில் அணு ஆயுத உற்பத்திச் சாலைகள் இருக்கலாம் என்று சந்தேகப்படுவதால், உலக நாடுகள் அதனை அறியச் சென்றும், பார்வையிடக் கொரியா அனுமதி மறுப்பதுமாகும்.

அது என்ன காரணமாகத்தான் இருந்தாலும், சீன எல்லைக்கு அப்பால் இருள் அகன்று உள்ளதால், கடந்து வரும் வாய்ப்புக்கள் அதிகரித்து உள்ளன என்று, முன்பு இராணுவத்தில் சார்ஜண்டாக இருந்த 33 வயதான கிம் மொயுங்கன் என்ற நபர் கூறினார். சென்ற ஜனவரியில் சீனாவுக்குத்தப்பிச் சென்ற அவர், சென்ற ஜூலையில் கப்பல் மூலம் தென்கொரியாவுக்கு வந்தார். அந்த நபர் தனக்குச் சீன நண்பர்கள் இருப்பதாகவும், அவர்கள் மூலம் இதற்கு வழி அறிந்து கொண்டதாகவும், மேலும் பல வட கொரியர் தனது வழியைப் பின் பற்றுவதாகவும் கூறுகிறார்.



வடகொரிய ஜனாதிபதி
கிம் இல் சுங் கொம்யூனிஸ்ட்
உலகை விடாப்பிடியாக
பிடித்து வைத்துள்ளார்


சீனாவின் மனமாற்றம் மட்டுந்தான், இதற்கு ஒரு காரணம் என்று கூறமுடியாது. வடகொரியாவிற்குச் சரிந்து கொண்டு இருக்கும் பொருளாதாரத்தாலும், சரியில்லாத வேளாண்மை விளைச்சலே பல ஆண்டுகளாக நடந்ததாலும், கடும் உணவுப் பஞ்சம் நிலவுகிறது. அதே நேரத்தில், சீனாவின் செழிக்கும் பொருளாதாரம் தொழில் வளர்ச்சிக்குச் சந்தர்ப்பம் கொடுக்கிறது. அங்கிருந்து ஓடிப்போகிறவர்கள் கிம் இல் சுங்கின் தொழிலாளர்களின் சுவர்க்கத்திற் காவற்றுறையினர் செய்யும் அடக்குமுறைகளைத் தாங்காமல் ஓடுகின்றனர். கிம்மொயுங் ஒரு தொழிற்சாலையின் முகாமையாளனாக இருந்தவன். அப்பொழுது, அவன் மீன் ஏற்றுமதியால் வந்த அன்னியச் செலாவணியைப் பயன்படுத்தித் தனது நண்பர்களுக்காகச் சீனி வாங்கியதற்காக ஒரு வருடம் சிறையில் இடப்பட்டான். சென்ற ஒக்ரோபரில் சீனா ஊடாகத் தப்பி வந்த யூண் வூங் என்ற 27 வயதினன் வட கொரியாவிற் பல்கலைக்கழகத்திற்குப் புக அனுமதி அளிக்கப்படவில்லை. அதற்குக் காரணம் அவனுடைய தாய் மாமன் ஒருவன் 40 வருடங்களுக்கு முன்பு நடந்த கொரிய யுத்தத்தின் போது தென் கொரியாவக்கு ஓடி விட்டான் என்ற பதிவு இருந்தமையாகும். இன்னும் ஓர் 27 வயது இளைஞன் பாக் சூஹூன் யூண் உடன் சேர்ந்து தப்பி ஓடிவந்தான். அவன் வைத்தியக் கல்லூரியிற் "படித்துக் கொண்டு" இருக்கும் பொழுது, சகோதரன் அடுத்த வீட்டில் உணவுகள எடுக்கும் பொழுது பிடிபட்டதாற் கல்லூரியில் இருந்து விலக்கப்பட்டானாம். ஓர் இராணுவ ஊடுருவல் நிபுணனான மையுங் ஜின், தனது பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு அனுமதி அளிக்கப்படாதவர்களை இராணுவ விடுதிக்குள் அழைத்ததற்காக அடிபட்டதால், கோபங் கொண்டு தனது திறமையைப் பிரயோகித்து, இராணுவ சூனியப் பிரதேசம் ஒன்றின் ஊடாகக் கடந்து, நேரடியாகத் தென் கொரியாவிற்குள் புகுந்து விட்டான்.

இராணுவ லெப்டினன்ட் கிம் யங் சியோன் போன்ற சிலர், பல முக்கியமான இராணுவச் செயற்பாட்டுக் கதைகளைக் கொண்டு வருகின்றனர். ஜனாதிபதி கிம் இல் சுங்கிற்கு எதிராக நடந்த இராணுவச் சதிப் புரட்சி ஒன்று பற்றியும், பல நூறு உயிர்களைப் பலி கொண்ட அணு உலை விபத்து ஒன்று பற்றியும், அந்த நபர் கூறினார். அப்படியான செய்திகளின் உண்மையைப் பகுத்தாய முடியாமல் உள்ளதால், தென்கொரிய இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் அவற்றை நிராகரிக்கின்றனர்.

தென்கொரிய அதிகாரிகள் முன்னைய வழக்கம் போலவே, அப்படி நாட்டை விட்டு ஓடி வந்து தம்மிடம் அடைக்கலம் கொள்பவர்களுக்கு நல்ல உடை உடுத்தி, அவர்களைச் செய்தியாளர்கள் முன் கொணர்ந்து, அவர்கள் துன்புறுத்தப்பட்டு ஓடிவத்த கதைகளைக் கூற வைக்கின்றனர். பல மாதங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட பின்பு, கொரியப் புலனாய்வுத் துறையினர் அவர்களுக்குப் புது வாழ்வு ஆரம்பிக்க வகை செய்கின்றனர்.

இப்படி நாட்டைவிட்டு ஓடி வந்தவர்களால், தென் கொரியாவிற்குப் பிரச்சார நன்மை கிடைக்கிறது. சியோல், பீகிங்கில் 1992 ஒகஸ்டில் ஓர் இராசதந்திர தூதரகத்தைத் திறந்தபின்பு, தென்கொரிய வர்த்தகர்களும், முதலீட்டாளர்களும் சீனாவின் ஜூலியான் மாகாணத்தில்

யான் பியன் தன் ஆட்சிப் பிரதேசத்திற்குள் பிரவேசித்துள்ளனர். அங்கு தொழிற்சாலைகளும், கடைகளும், உணவு விடுதிகளும் திறந்துள்ளனர். அதன் காரணமாக, வடகொரியாவை விட்டு ஓடிவரும் ஆட்களைப் 'பிடிக்கத்' தென்கொரியாவுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. ஆனால், அது சீனாவைச் சினக்க வைத்தது, சீனாவுடன் தென் கொரியா ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒட்டாத உறவான தொடர்புக்குப் பாதகம் ஏற்படலாம் என்றும் அஞ்சப்படுகிறது. முன்பு, பனிப் போர் நிகழ்ந்த காலத்தில் இரண்டு கொரியாக்களுக்கும் இடையில் நிலவிய பேதத்தால், அது பற்றிக் கவலைப்பட்டதில்லை. ஆனால், இப்பொழுதோ சியோல் வடகொரியாத் தலைநகர் பொயங் யாங்குடன் 40 வருடமாக நிலவிய தனது இராணுவ அரசியற் பிணக்குகளைத் தணித்துக் கொள்ள முனைகிறது. அதற்காக இடைவிட்டு, விட்டு நடந்த பேச்சுக்களைச், சென்ற



கட்டுமானப்பணிகள் பல நடைபெறுகின்றன: உலகம் அணு ஆயுத சந்தேகக்கண் கொண்டு பார்க்கின்றது.

ஒக்ரோபரில் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் லெஸ் அஸ்பின் பேச்சுவார்த்தைக்காகச் சியோலுக்கு வந்ததைச் சாட்டாக வைத்து, பொயங் யாங் முறித்துக் கொண்டுள்ளது.

அதனால், சீனாவில் இருக்கும் வடகொரியர்களைத் தென்கொரியாவுக்கு வரவிடுவதில், சியோலுக்கு அவ்வளவு விருப்பம் இல்லை. எதிர்காலத்தில் அப்படி வரக்கூடியவர்களுக்கு அத்தனை வரவேற்பும், அவர்கள் மூலம் பிரச்சாரம் செய்வதும் அற்றுப்போகலாம். அதே வேளை, கிம் இல் சுங்கும் தனது நாட்டு எல்லைக் காவலைக் கடுமையாக்கி அமுல் நடத்த, அதிகம் துருப்புக்களை அங்கு அமர்த்தியுள்ளார். முன்னைய கம்யூனிஸ்ற் உலகின் பல தடைச்சுவர்கள் எலலாம் உடைந்து வீழ்ந்து விட்ட பின்பு, தொடர்ந்தும் கிம் இல் சுங் தனது விடாப்பிடியை நெடுநாட்களுக்கு இறுக்கிப் பிடித்துக் கொண்டு இருக்க முடியுமா? என்பது சந்தேகத்திற்குரியதாகும்.

டைம், நவம்பர் 15, 1993

# விலகி நிற்கவும்

# காஷ்மீர் காயம் மேலும் ஊடுருவுகிறது

இந்திய ஆட்சிக்கு எதிரான காஸ்மீரின் எதிர்ப்பில், 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஹஸ்றத்பால் மசூதி, தற்பொழுது இறுதியாக வெளிப்பட்ட சின்னம் ஆகிறது. சென்ற ஒக்ரோபர் 15 ஆந் திகதி இந்தியப் படை அந்த மசூதிக்குட் புகுந்துகொண்ட காஸ்மீர் பிரிவினை வாதிகளை அடக்க, மசூதியை முற்றுகை இட்டது. வெள்ளைப் பளிங்கால் கட்டப்பட்ட அந்த மசூதியை விட்டு வெளியேற 40 போராளிகளும், அதே அளவு யாத்திரிகர்களும் மறுத்துள்ளனர். அந்த மசூதியில், முகம்மது நபியின் தலைமயிர்க் கற்றையொன்று புனிதச் சின்னமாக வைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. காஸ்மீர் முஸ்லிம் பெரும்பான்மையினர் சீற்றம் அடைந்து உள்ளனர். ஒக்ரோபர் 22 ஆந் திகதி, அந்த முற்றுகையை எதிர்த்து நடந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணியின் போது 37 பேர் கொலையுண்டதுடன், 70 பேர் காயமுற்றனர். அந்த நிகழ்ச்சி, பாகிஸ்தானின் பெனாசீர் பூட்டோவுடனான அரசுடன் இந்தியாவிற்கு உள்ள உறவை மேலும் புளிப்படையச் செய்து விட்டது. ஒரு காஸ்மீர் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரான சைபுத்தீன் சொஸ் என்பவர், புதுடில்லி பலத்தைக் குறைவாகவும், அரசியலைக் கூடுதலாகவும் பிரயோகிக்க வேண்டும் என்றும், பேச்சு வார்த்தை மூலம் தான் பிணக்குத் தீர்க்கப்படலாம் என்றும் கூறினார்.

# சீனாவின் உட்பக்கம்

எழுதியது — ஜேம்ஸ் வால்ஷ்

பொது வியாதியாகக் கூறலாம்: சீனர் பகிரங்க அவமானத்தை வெறுப்பதில், வேறு எவர்க்கும் பின்நிற்கமாட்டார்கள். அதிலும், சர்வதேச விழிகளும் உற்றுநோக்கும் வெட்கக்கேடான காரியமென்றால், பெரிதும் வெறுப்பர். 2,000 ஆம் ஆண்டு ஒலிம்பிக் விடயத்தில் தோல்வி கண்டமை, வரும் பேரிடரை முன்காட்டுவதாகக் கருதப்பட்டது. மக்கள் குடியரசைச், சீறும் முகமுடைய சோஷலிச ஆட்சி அமைப்பாக (பிற நாடுகளுடன் தொடர்பற்றதாக) மாற்றிவிடும் தன்மைகள் அங்கு தெரிந்தன. ஆயினும், அந்த அச்சம் ஒருவாறு விலகியது. சென்ற ஒக்ரோபர் கடைசியில், பீகிங் தலைநகர் அரசாங்கம் சற்று வளைந்து கொடுத்தமை, மேலை நாட்டு அரசுகள் அதனுடைய மனித உரிமைகள் (மீறல்) பதிவுகளைப் பற்றிக் கொண்டுள்ள அக்கறைக்குச் செவிசாய்ப்பது போலத் தோன்றியது. சீனாவும், வோஷிங்ரனும் அது பற்றி முறையான பேச்சு வார்த்தைகளைத் தொடங்கியபோது, ஒலிம்பிக் அனுமதி மறுத்ததால் ஆழ்ந்த ஏமாற்றம் அடைந்த சீனா சுய அறிவு பெற்று, உயிர் நாடியான நலன்கள் எதில் உள்ளன என்பதைச் சுட்டி உணர்ந்துள்ளதாகத் தெரிகிறது. அமெரிக்க வர்த்தகம் என்ற முக்கிய காரணத்தால் வலுவூட்டப்பட்ட பொருளாதாரத் திடீர் வளர்ச்சியைச், சோரவிடாது காப்பது எப்படி என்பதே உயிர்நாடியான விடயம்.



கருங்குதிரையைப் பார்மின.

வலதுபுறம் காணப்படுபவர் கியாவோ சீர்திருத்தவாதி எனக் கருதப்படுபவர். இருந்தும், புரியா நிலையினர். மக்கள்பெருமன்றத்தில் ஸூ உடனே அமர்ந்திருக்கிறார்.

## குவாசி "டெங்கின்" மேலங்கியைப் போர்த்துக் கொள்ளும் பிரத்தியேக உரிமையுடையவரா?

உள்நாட்டில் தலைமை யாருக்கு? என்ற போட்டி, மேற்குறித்த கவனத்தை முதனிலையிலிருந்து பின் தள்ளிவிடுமா? என்ற வினா சிக்கலானதே. டெங் ஷியாவோபிங் தலைமையினை அடுத்து, யார் இரண்டாம் பதவியிலிருந்து, அவருக்குப் பின் முதல் ஆசனத்தில் அமர்வது என்ற பிரச்சனையை, ஆட்சிபீடம் சமீப மாதங்களிற் கையாளும் விடயத்தில் மாறி, மாறி வெல்வெற் கையுறையுடனும், குதிரைச் சவுக்குடனும் நடந்து கொள்வதாகத் தோன்றுகிறது. இப்போட்டியிற் கலந்து ஆரவாரஞ் செய்யாது, தன் தலையையும், குரலையும் சமநிலையில் வைத்திருக்கும் ஒரே ஒரு மனிதர் சியாஓஷீ என்பவரே; அவர் ஒரு சிரேஷ்ட உயர் ஆட்சிக் குழு உறுப்பினர்; தேசிய மக்கள் கொங்கிரஸ் என்ற சட்டசபையின் புதிய தவிசாளர். ஆட்சி ஏணிப் படியின் உச்சிக்கு அயலில் உள்ள இவர் தேர்வுற்றால், குடியுரிமையை மதிக்கும் சமுதாயம் ஒன்றை நிலைபெறச் செய்யும் முயற்சி, பலம் வாய்ந்த அத்திவாரத்தில் அமையும் என்று நம்பலாம்.

வெளித் தோற்றத்தில் சியாஓஷீக்கும், பெருமை மிக்க சீர்திருத்த்வாதியும், தற்போது நோயுற்று இருப்பவருமான முதுபெரும் தலைவர் டெங்குக்கும் இடையே பொதுத் தன்மைகள் ஏதும் இல்லை. 68 வயதுள்ள சியாஓ எனப்படும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் அரச நிர்வாகத்தின் இருள் மிக்க இரகசியங்களைக் காப்பவர் என்று மட்டுமே நன்கு அறியப்பட்டிருந்தார். (அமெரிக்க நிர்வாகத்தில் ஒரு காலத்தில்) ஜே.எட்கார் ஹூவர் இருந்த அந்தஸ்தில், ஆனால் மனித உரிமைச் சட்டம் என்ற கட்டுப்பாடில்லாதலராய் அவர் திகழ்ந்தார். எனினும், சீனா பொதுவுடைமை நாடாவதற்கு முந்திய பெருந்தலைவர் சியாங்கை ஷேக்கின் பிரதம சேனாதிபதியுடைய உறவுப் பெண்ணை விவாகஞ் செய்த இவர், பொதுவுடைமை ஆட்சியின் சக்தி மிக்க தலைமை அதிகாரியாக இருந்தும், அவர் தமது கட்சியின் இலட்சியக் கருத்துவாதக் குழு மக்களிடையே கம்பீர நடை போட்டு விரும்பியபடி தாவி அடிவைக்கக் கூடிய திரிவிக்கிரமர் என்று நிருபித்துள்ளார். அவருடைய ஆந்தை விழிகளும், புன்சிரிப்பை மூடி மறைக்கும் இறுகிய அதரமும், தமக்குக் கீழ்ப்படிதலையே விரும்பும் ஒரு மனிதரைக் காட்டி நிற்கும் எனினும், அவர் உண்மையில் ஜனநாயக ரீதியானவர் அல்லாவிடினும், விசாலமான அடிப்படை வகை அரசியலையே உற்சாகப்படுத்தி வந்துள்ளார். அதைவிட இப்பொழுது தலைமைப் பீடத்தில் மூன்றாம்

இடத்தில் இருக்கும் அவர் வெற்றி பெற்று டெங்கைக் கொண்ட நவீனத்துவப் படுத்தல் என்ற அங்கியைத் தரிக்க, ஒரு குறுக்கு உள் வழி ஒன்றுள்ளது.

சீனா செல்வச் செழிப்பை நோக்கிய வளர்ச்சியைத் தீவிரப் படுத்தும் முயற்சியின் ஆபத்து, அது தண்டவாளத்தைவிட்டு விலகிய புகையிரதம் போலாகிவிடுமோ என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றது. ஒக்ரோபர் கடைசி வாரத்தில், அமெரிக்க மனித உரிமைத்துறை உப செயலர் ஜோன் ஹற்றக்கின் பீகிங் விஜயத்தின் போது இது தெளிவாயிற்று. சென்ற மே மாதம், அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் சீனாவை வர்த்தகத்தில் மிகச் சலுகைபெற்ற தேசம் என்ற அந்தஸ்தில் அமெரிக்கா வைக்கும் தனி உரிமைகளைத், தொடர்ந்து மற்றோர் ஆண்டுக்கும் விஸ்தரித்தார். ஆனால், பீகிங் உள்ளூர் அடக்கு முறைகளைக் குறைக்கும் பாதையில், ''மொத்தம் கணிசமான முன்னேற்றம்'' காணப்படல் வேண்டும் என்ற விசேட விதியும் சேர்க்கப்பட்டிருந்தது. இப்பொழுது உள்ள நிலையில், மிகச் சலுகை பெற்றநாடு என்ற அந்தஸ்து ஆபத்துக்குட்படும் போலத் தெரிகிறது என்பதை ஹற்றக் வலியுறுத்தினார். ஹொங்கொங்கில் நிகழ்ந்த செய்தியாளர் மகாநாட்டில் அவர் கூறினார்:—இன்று, கிளின்ரன் மிகச் சலுகை பெற்ற தேச அந்தஸ்தைப் புதுப்பிக்க விரும்பினாலும், அவர் அப்படிச் செய்ய முடியாது,

வோஷிங்ரனில், அமெரிக்க வர்த்தகத்தலைவர்கள் மத்தியில் பேசுகையில், வெளியுறவுச் செயலர் வாரன் கிறிஸ்தோபர் அதேவிடயத்தைக் கூறியதுடன், அயல் நாடுகளில் சீனா போர்க்கருவிகளை விற்பது பற்றியும், ஒரு புது விதியைக் குறிப்பிட்டார். கிறிஸ்தோபர் ஆயுதப் பரவல் பற்றித் தவறுதலாகக் குறிப்பிட்டாரோ என்பது தெளிவாக இல்லை. கிளின்ரன், வெளிப்படையாக இந்த முரண்பாட்டை வர்த்தக உடன்படிக்கை விதிகளினின்றும் விலக்கி வைத்தே, விசேட சலுகைபெற்ற தேச அந்தஸ்தை வழங்கியிருந்தார். எது எவ்வாறாயினும், இரட்டைக் குழற் துப்பாக்கி முனை எச்சரிக்கைகளை ஹற்றக்கும், அவரது தலைவரும் வழங்கியிருப்பதன் அர்த்தம், பீகிங் தங்களது எதிர்பார்ப்புக்களைக் கவலையுடன் கவனிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தலேயாம்.

டைம், நவம்பர் 1, 1993

# ஜெருசலெம் நகர பிதா பதவி விலகுகிறார்

தொல்பெரும் பதியான ஜெருசலெம் நகரைப் போலவே என்றென்றும் மாறாதிருப்பவர் அதன் மேயர் ரெடி கொலெக் 28 ஆண்டுகள் பதவி வகித்த அவருக்கும் வாக்காளர் சீட்டுக் கிழித்து விட்டார்கள். அவரது தொழிற்கட்சியின் சார்பில் தேர்தலுக்கு நிறுத்தப்பட்ட அவருக்குப் போட்டியாக நின்ற லிகுட்த் கட்சியின் வேட்பாளர் ஆன சட்டவல்லுநர் எஹூத் ஒல்மேட் 60 வீதம் வாக்குகளைப் பெற்று அவரைத் தோற்கடித்துள்ளார். அவரது கொள்கை நகரின் அராபியர் வசிக்கும் பிரதேசங்களை முற்றாக நகர நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வருவதாகும். கொலெக் கடைப்பிடித்த கொள்கை யூதர்கள் தனித்தனி அயற்புறங்களில் வசிக்கத் தூண்டுவதாகும். அராபிய வாக்காளர் நினைத்திருந்தால் கொலெக்கை மீண்டும் பதவியில் வைத்திருக்கலாம். ஆனால் அவர்கள் இஸ்ரேலிய தேர்தல்களைப் பகிஷ்கரிப்பது என்று நீண்டகாலக் கொள்கையை விடாது கடைப்பிடிப்பதால் இந்நகர சபைத் தேர்தலிலும் பங்கு கொள்ளவில்லை. அவர்கள் சொல்லும் குற்றம் அவர் தமது வேண்டுகோளை ஏற்று நகரின் அடிப்படைத் தேவைகளைத் தமக்கு வழங்கத் தவறினார் என்பதாகும். ஒரு தொழிற்சாலை ஊழியர், நபில் கனிம் கேட்கிறார்: ''அவர் எங்களுக்கு என்ன செய்து விட்டார்? தான் ஓர் அராபிய வேட்பாளருக்கு வாக்களிக்க விரும்புகிறேன்'' என்று.

# ஆசியாவின் ஆதிக்கப் போராட்டம்

**பொருளாதார வெற்றியானது, சீனாவினதும் ஜப்பானதும் தேசியத்தை மீண்டும் மேலெழச் செய்ததால், அரசியல் ரீதியான போட்டியினைத் துரிதப்படுத்தியுள்ளது. ஐக்கிய அமெரிக்கா, தொடர்ந்து தனது ஆதிக்கச் சமநிலையைப் பேணுவதற்கு வாய்ப்பு உண்டா?**

"மத்திய தரைக்கடலில் ஆதிக்கம் பழைய சதை. அத்திலாந்திக் சமுத்திரத்தின் ஆதிக்கம் நிகழ்காலக் கதை. பசுபிக் சமுத்திரத்தின் ஆதிக்கம் எதிர்காலக் கதை'' — ஐக்கிய அமெரிக்க அரசுச் செயலாளர் ஜோன் ஹே ஒரு நூற்றாண்டுக்கு முன்பு இவ்வாறு சொன்னார். அவரின் எதிர்வு கூறல், இவ்வேளையில் உண்மையாகிக் கொண்டிருக்கிறது. ஆனால், அவர் எதிர்வு கூறாமல் விட்டது, பசுபிக் அதிகாரம் எவர் கைப்படப்போகிறது? என்பதைத்தான். சீனாவா? ஜப்பானா? ஐக்கிய அமெரிக்காவா? இவற்றில் மேலாண்மை பெறப்போவது எது?

ஆசிய பசுபிக் வலயத்தின் புவியியல், அரசியல் முக்கியத்துவம் பற்றி, இன்று கேள்வியெழுப்புவார் எவருமில்லை. ஆசியாவின் கரையோரப் பிரதேசங்களை மட்டுமே கணக்கில் எடுத்தாலும், அவை உலகின் கால்வாசிச் சனத்தொகையைக் கொண்டுள்ளன. அதன் ஐந்தில் இரண்டு நிலப் பகுதியில், அதனுடைய பொருளாதாரச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. உலகின் எந்தப் பகுதியை விடவும், அதிகமான வேறுபட்ட பண்பாடு, மொழி, சமயம் என்பன இங்கு நிலவுகின்றன. வர்த்தக விரிவாக்கம் காரணமாக, முதலீடு முதல், தொழில் நுட்பம் என்பவற்றிற் கடந்த ஒரு தசாப்த இடைவெளியில், தனித்துவமான மூன்று சக்திகள் மேலோங்கி வருவதையும் காணலாம். அவை முன்னரிலும் பெரியனவாகிவிட்ட சீனாவும், ஜப்பானும்; குறைந்த அளவில் கணக்கெடுப்பதானால், பெரிய ஐக்கிய அமெரிக்காவுமாகும்.

ஆசியாவின் மிகப்பெரிய அரசியற் சக்தியான சீனா, பொருளாதார பலத்திலும் பூதாகார வளர்ச்சி கண்டுள்ளது. ஜப்பான் தனது மாபெரும் பொருளாதாரப் பலத்தினை, அரசியற் சக்தியாக மாற்றிக் கொள்ள முனைந்து நிற்கிறது. இவற்றால், இவ்விரண்டு நாடுகளிடையேயும்



போட்டி முனைப்படைவது தவிர்க்க முடியாததே. இன்றும், இந்தப்போட்டியானது சிறிய அளவில் நடந்து கொண்டுதான் இருக்கிறது என்பதற்கு, சென்கக்கு தீவுகள் (Senkaku Islands) தொடர்பான அசிங்கமான ஆதிக்கப் போட்டி ஓர் உதாரணம். றொக்கி தீவுகளுக்கு (Rocky Islands) வட-கிழக்கிலுள்ள தாய்வான் மீதும், இருநாடுகளும் சொந்தம் கொண்டாடுவதையும் நோக்கலாம். ஆசிய மேம்பாட்டு வங்கியின் (Asian Development Bank) பிரதான பற்றாளராக (Crediter) விளங்குவதன் மூலம், தனது வெளிநாட்டுக் கொள்கையில் இறுக்கத்தினைக் கடைப்பிடிக்கலாம் என்று ஜப்பான் கருதுகிறது. ஆனால், அந்த வங்கியின் பெரும் கடனாளியான சீனா அதே கொள்கையைத் தானும் கடைப் பிடிக்கிறது. 1986 இல் சீனா அந்த வங்கியிற் கணக்கினை ஆரம்பித்ததும், சீனா பீடத்திலிருந்து தாய்வானை விரட்டி வெளியேற்றியது. இந்தச் செயலின் மூலம் சீனா பசுபிக் பிராந்தியத்தில் தானே வல்லாண்மைச் சக்தி கொண்டது என்பதையும், அப்பிரதேசத்தின் பொருளாதார மேம்பாட்டில் முதன்மைபெற முனைந்து செயற்படுவதுதான் தன் எண்ணம் என்பதையும் தெளிவாக வெளிப்படுத்தி விட்டது.

பெய்ஷிங்கும், (சீனத்தலைநகர்) ரோக்கியோவும் (ஜப்பான் தலைநகர்) அமைதியான ஆனால், தீர்மானமான இராஜதந்

திரப் போராட்டம் ஒன்றினையும் தொடங்கியுள்ளன. இப் போராட்டத்தின் அடிப்படை நோக்கம், தம்முடைய தொடர்ச்சியான தொழிலபிவிருத்திக்கு அவசியமான மூலவளத்தை, எண்ணெயை விநியோகிக்கும் மத்திய கிழக்கு நாடுகளிலே இருந்து பெறுவதைப் பாதுகாப்பான முறையில் உறுதி செய்துகொள்வதே. ஜப்பான் மத்திய கிழக்கு நாடுகளுக்குக் கடன் வழங்குவதன் மூலம் தனக்கு வேண்டிய மசகெண்ணெயைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால், சீனாவோ பணத்துக்குப்பதில், எண்ணெய் உற்பத்தி நாடுகளுக்கு - ஈராக்குக்கும், ஈரானுக்கும் போர்க்கருவிகளை வழங்குகின்றது. வளைகுடாப்போரிலே ரோக்கியோ எந்தப்பக்கத்தினைச் சார்வது என்று முடிவு செய்யவியலாது திணறியதும், இவ்விடத்திற் கவனத்திற்குரியதே.

கிழக்காசியாவுடன் எளிதான வகையில் தொடர்பு கொண்டு, பெரும் டாங்கிக் கப்பல்களில் எண்ணெயைப் பெறுவதற்கு மலாக்கா நீரிணைப் பாதை உகந்தது என்று ஜப்பான் முடிவு செய்து அமைதியான முறையில் அந்த நீரிணை மீது தனது ஆதிக்கத்தைச் செலுத்திய வேளையில் சிறிய எண்ணெய்க் கப்பல்கள் மூலம் தன் தேவையை நிறைவேற்ற, ஜப்பான் கட்டுப்பாட்டையும் மீறி நிறைவேற்ற முடியாத நிலை சீனாவுக்கு ஏற்பட்டது. ஆனால், சீனா சோர்ந்து விடவில்லை. அது வங்காளக் குடாக் கடலுடன் இலகுவில் இணையக் கூடிய, மியன்மார் நீரிணைக் கூடாகத் தனது வணிகத் தொடர்புகளை மத்திய கிழக்குடன் ஏற்படுத்திக் கொண்டதோடு, அதன் சமீபகாலத் திட்டம் மியன்மாரில் கடற்படைத்தளம் ஒன்றை ஏற்படுத்துவதாகும்.

இரண்டாம் உலகப்போரின் பின், ஜப்பானுடைய வெளிநாட்டுக் கொள்கை அதனுடைய முதன்மையான பாதுகாப்பு அதன் சொந்தப் பொருளாதாரப் பலத்திலேயே தங்கியுள்ளது என்பதை உணர்ந்ததன் பயனே. எனவே, இன்று தென்கிழக்காசியா, பெய்ஷிங்கும், ரோக்கியோவும் தமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி, மேலாண்மைபெற முனைந்துள்ள போட்டிப் போராட்டத்தின் முன்னணிப் போர்க்களமாக்கிக் கொண்டிருக்கிறது. ஹொங்கொங்கிலும், கடல் கடந்த வெளிநாடுகளிலும் வாழும் சீனத் தொழிலதிபர்களைச் சீனாவில் — தென் சீனா, பியூஜியன் மாகாணங்களில் முதலீடு செய்யத் தூண்டும் வகையில் அவர்களோடு சீனா தொடர்பு கொண்டுள்ளது. இந்தத் தொழிலதிபர்களின் தொடர்புகள் சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா போன்ற தொழில்வளர்ச்சி நாடுகளில் வேரோடி உறுதி பெற்றுள்ளன. ஆனால், இதே நாடுகள் ஜப்பானுடனும் முக்கிய பொருளாதாரத் தொடர்புகள் பெற்றிருக்கின்றன. இவை, ஜப்பானியத் தலைநகரிலிருந்து முதலீட்டையும், தொழில்நுட்பத்தையும் சென்ற தசாப்தத்தில் விருப்பத்தோடு ஏற்றுக் கொண்டவை. ஆரம்பத்தில் உதிரிப்பாகங்களை வழங்கி, அவை வழங்கப்படும் நாடுகளோடு இணைந்து தொழில் உற்பத்தியில் ஈடுபட்டு; தானும், சார்ந்த நாடுகளும் வளர்வதற்கு உதவிய ஜப்பான், பின்பு தனது நாட்டிலேயே உற்பத்தி செய்த பொருள்களை அந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது. ஆனால், சீனாவும் இப்பொழுது இப் பொருள்களின் ஏற்றுமதியில் இறங்கியுள்ளதால் இரு நாடுகளுக்குமிடையே முரண்பாடுகளும், போட்டிகளும் ஏற்பட்டுள்ளன.



ஜப்பானியத் தலைவர்கள், சீனாவுடன் தாம் கொள்ளும் தொடர்புகளின் பொழுது, நடைமுறைச் சாத்தியப்பாடு ஏற்படுமா என்பதில் ஐயம் கொண்டாலும், மிக அண்மித்த அயல்நாடாகவும், அளவாலும் சனத்தொகையாலும் பெரிதாகவும் விளங்கும் அதனோடு முரணுவதால் ஏற்படக்கூடிய விளைவு பற்றித் தெரிந்து தான் இருக்கிறார்கள். மேலும், சீனாவின்தொடர்ந்தேர்ச்சியான பொருளாதார வெற்றி, சீனாவின் ஸ்திரத் தன்மைக்கு மிகச் சிறந்த உத்தரவாதமாக இருப்பதும், ஜப்பானுக்குச் சங்கடத்தை ஏற்படுத்துவதையும் அவர்கள் அறிந்து தான் இருக்கிறார்கன்.

வர்த்தக இறுக்கங்களினால், ரோக்கியோவுக்கு வோஷிங்ரனோடு ஏற்பட்டுள்ள உறவில் விரிசல் உண்டாகியிருப்பது, எதிர்காலத்தில் ஜப்பான் சீனாவை எவ்வாறு பார்க்கும் என்பதற்கான செயல் மாதிரியை வகுத்துக் கொள்ள அதைத் தூண்டும். இன்று, ஐக்கிய அமெரிக்காவுடன் பரஸ்பரச் சார்பு நிலையினை ஜப்பான் எவ்வாறு பேணுகிறதோ, அதே பேணல் முறையினைச் சீனாவோடும் பேண வேண்டிய நிலை உருவாவதையே அது விரும்புகிறது. 1989 இலிருந்து அமெரிக்காவுடன் நடத்தும் வர்த்தகத்தில் முதலீடுகள் அதிகரித்தது, இன்று 1992 ஆம்

ஆண்டிலும் 20 வீதம் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், இவ்விரு நாடுகளும் தங்கள் வர்த்தக உறவுகளை முறித்துக் கொண்டு சண்டைகளில் ஈடுபடும் நிலையில் இல்லை என்பது தெளிவாகிறது. ஆனால், இந்தப் பரஸ்பரச்சார்பு சுதந்திரம் எவ்வளவு காலத்திற்கு ஜப்பானால் விரும்பித் தொடரப்படும் என்பது கேள்விக்குரியது. ஜப்பான் முன்பு வாக்களித்தபடி, தனது பொருளாதாரத்தில் வெளிநாட்டினரும் பங்கு கொள்வதற்கு உதவாத வரையில், அமெரிக்கா தனது வர்த்தகத் தொடர்புகளைக் குறைத்துக் கொள்ளப்போவதாக வலியுறுத்துகிறது. ஆனால், ஜப்பான் மீது அவ்வாறு கடும்போக்கினை அமெரிக்கா கையாண்டால், அது அமெரிக்காவிற்கே மாற்றமுடியாத வீழ்ச்சியாய் அமையுமென்றும், அதே வேளை ஆசிய பொருளாதார வர்த்தகத் தொடர்பில், தான் கூடுதலாக இணைய நேருமென்றும் கருதுகிறது. ஆகவே, பசுபிக் நூற்றாண்டு என்பது, துண்டுப் பிரசுரகாரர்கள் எதிர்வு கூறலிலும், கூடிய இறுக்கம் கொண்டதாகவே இருக்கும்.

இப்படியாகப், பலவழிகளிலும் சீனாவும், ஜப்பானும் முறுகல் நிலையிலிருந்த போதிலும், அமெரிக்காவின் எதிர்காலம் பசுபிக் பிராந்தியத்தில் மேலோங்குவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டா? என்பது கேள்விக்குறிதான். எனினும், அண்மையில் இம்மூன்று வல்லரசுத் தலைவர்களும் அமெரிக்க நகரான சீட்டுலில் கூறி, 'பசுபிக் நூற்றாண்டு' அமையப்போகும் முறைமை பற்றி ஆராய்ந்தது உண்மைதான். அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன், சீனத்தலைவர் ஜியாங் செமின், ஜப்பானியப் பிரதமர் மோரிகிரோ ஆகிய மூவரும் "பொற்காலத்துக்கான அடித்தளம்" இடுவதில் ஈடுபட்டனர். இம்மூன்று பேரரசுகளும், தங்களின் புவியியல், அரசியல் இயக்கத்திற்கான அடித்தளம் ஒன்றோடொன்று பூசலிடுவதால் இடப்படாமல், வர்த்தக உறவுகளால் இடப்படல் வேண்டும் என்பதை உணர்ந்துள்ளமை, இச்சந்திப்பின் பயன் எனலாம். இதனை அடைவது இம்மூன்று அரசுகளுக்கும் எட்டக் கூடிய ஒன்றுதான். என்றாலும், இது இவற்றைப் பூட்டிவைக்கும் பூட்டல்ல. ஒரு நல்ல வழி என்பது தான் உண்மை. இவை மூன்றும் பண்பாட்டில் மிகப் பாரிய வேறுபாடு கொண்டவை. ஆனால், தத்தம் அளவிலே அசாதாரணபலம் வாய்ந்தவையுமாகும். அதனால், பசுபிக்கில் எது முன்னணியில் திகழவேண்டும் என்பதில், இவற்றினிடையே அடிப்படையான போட்டி நிலவவே செய்கின்றது. அமெரிக்கா தானாகவே விலகிச் செல்லுமானால், தமக்குள்ள தடை நீங்கும் என்றும். எண்ணலாம்

நியூஸ்வீக், நவம்பர் 15, 1994

## நானும், அசாகியும் ஒன்றாக மரணிப்போம்.

பல வருட காலமாக அவர் ஜப்பானின் சர்க்கரவர்த்தியை வணங்குகின்றவர்களும் இரண்டாவது உலகப்போரில் ஜப்பான் தோற்றது ஒரு பாபச்செயல் என எண்ணுபவர்களும், இராணுவ செயற்பாடுகளினாற் பெறப்படும் புகழுக்கு ஏங்குபவர்களுமான வலது சாரிக் குழுவின் மிகப்பிரபலம் வாய்ந்தவருமாக இருந்தார். பலவருடங்களாகச் சுககா நொமூரு மித வாதத்திற்கும், தீவிரவாதத்திற்கும் இடையில் தகளிப்பவராக இருந்து வருகிறார். எனினும் இவர் தேசிய கதாசிரியர் யுகியாமிஷிமா 1970 இல் தற்கொலை செய்தது போல செயற்படக்கூடியவரல்லர். தொலைக்காட்சியில் தோன்றும் போது கம்பீரமான உடையணிந்து, அழகாக உரையாற்றவல்ல இவர் சாதாரண வாழ்வில் தனது கோட்பாடுகளில் தீவிர வாதியாகச் செயற்படுகிறார். கெல்டான்றென் தலைமை செயலகத்தைக் கைப்பற்றியதற்காகவும், இசிறோகோனோவின் வீட்டை உளவு பார்த்ததற்காகவும் 18 வருடங்களைச் சிறையில் அனுபவித்தவர் நொமூரு. சிறையிலிருந்து விடுபட்டதும் நொமூரு 1952 இல் ஜப்பானிய பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிப்பதற்கு எடுத்த பயனற்ற முயற்சி உட்பட அதிக தீவிரமற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டார். சுடந்தவாரம் அசாகி கிம்புன்னால் நடாத்தப்படும் செல்வாக்கும், மிதவாதப் போக்குமுடைய தினசரிப் பத்திரிகை நிறுவனத்துக்கு வந்தார். இப்பத்திரிகை வலதுசாரியினரது புதினத்தாளாகும். அங்கு அப்பத்திரிகை நிறுவனத் தலைவர் நொஷிராடா நிகாயி அவரை வரவேற்றுத் தமது அசாகி சஞ்சிகையொன்றில் நொமூருவினால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட அரசியற் பிரிவை மிகக் கேவலமாகக் கேலிச்சித்திரம் ஒன்றை வரைந்ததற்காக மன்னிப்புக் கோரினார். நிகாயி சொல்வதாவது: நொமூரு எந்தத் திசையில் அரச மாளிகை உள்ளது என வினாவி அத்திசையை நோக்கி வணங்கிக் கதிரையில் அமர்ந்து தனது உடையுள் மறைத்து வைத்திருந்த இரண்டு கைத் துப்பாக்கிகளை எடுத்தார் பின்னர் நொமூரு சொன்னார்: "தானும் அசாகியும் ஒன்றாக மரிப்போம்" என்று பின்னர் தனது மகனை நோக்கி, "இப்படித்தான் இலட்சியமுள்ள மனிதன் செயற்படுகிறான்" என்று கூறிவிட்டு தனது மார்புள் இருமுறை சுட்டார். இரண்டு மணி நேரத்தின் பின் அண்மையிலுள்ள வைத்தியசாலை [illegible] இறந்தார். பல தீவிரவாத வலது சாரியினருக்கு தமது இலட்சியத்திற்குத் தாம் காட்டும் ஈடுபாட்டை முடிவில் நிரூபிப்பது தற்கொலையாகும். அதுவும் தமது எதிரிக்கு முன்னால் தற்கொலை செய்வது தமது ஆத்ம வலிமையைப் பிரதிபலிப்பதாயுள்ளது. இது தீவிர்வாதம் மட்டுமன்றி அறிகூரத்தன்மையுமாகும்.

நியூஸ்வீக், நவம்பர் 1, 1993.

# கடந்த காலக் கைதிகள்

மொஸ்கோவிலிருந்து
— ஜெப்பிறி லில்லி —

ருஷ்யப் படையைச் சேர்ந்த மேஜர் கார்ப்போவ் இரண்டாம் உலகப் போர் பற்றிய அறிக்கைகளை ஆராய்ந்து எடுத்த உண்மைகள் ஜப்பானியரோ அல்லது ருஷ்யர்களோ கேட்பதற்கு உவப்பானதாக இல்லை. யுத்தத்தில் பிடிக்கப்பட்டு ருஷ்ய நாட்டில் இறந்த ஜப்பானிய கைதிகளின் தொகை இரு நாடுகளாலும் உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகையிலும் அதிகம் என்பது கார்ப்போவின் கூற்றாகும்.

பல ஆண்டுகளாகப் பகைமை பூண்டிருந்த இரு நாடுகளினதும் உறவுகள் சீர் செய்யப்பட்டு வரும் வேளையில் யுத்தக் கைதிகள் சம்பந்தமான இக் கண்டுபிடிப்பு ருஷ்யாவிடமுள்ள ஜப்பானிடமிருந்து கைப்பற்றப்பட்ட தீவுகளைத் திருப்பி ஒப்படைக்கப்படுதல் ருஷ்யாவிற்கு ஜப்பானியப் பொருளாதார உதவி போன்ற விடயங்கள் பாதிக்கப்படக்கூடும். ருஷ்ய ஜனாதிபதி யெல்சின் விரும்பக் கூடிய கடைசி விடயம் இரு நாடுகளுக்கும் இடையிலுள்ள உறவைச் சீர் கொடுக்கக்கூடிய ஒரு பிரச்சனையே. இரண்டு நாடுகளுக்கிடையிலான பாதிக்கப்பட்ட உறவைச் சீர் செய்யும் நோக்கமாகக் கொண்டே சென்ற ஒக்ரோபர் மத்தியில யெல்சின் 600,000 ஜப்பானியக் கைதிகள் முந்திய ருஷ்ய அரசினாற் கொடூரமாகக் கடத்தப்பட்டதற்காக மன்னிப்புக் கோரினார். மொஸ்கோவிலுள்ள ஒரு ஸ்தானிகர் கூறியதாவது! ''ருஷ்யர் தமது தவறை உணர்கிறார்கள் என்ற நிலையை அவரது மன்னிப்புக் கோருதல் ஜப்பானியரில் ஆக்கியுள்ளது.'' மொஸ்கோ யுத்த வரலாறு பற்றி 3 வருடங்களாக ஆய்வு நடத்திக் கொண்டிருக்கும் கார்ப்போவின் நோக்கம் இராஜதந்திரம் அல்ல. அவர் கூறுவதாவது: ''எனது ஆராய்ச்சி இரு நாடுகளுக்கிடையிலும் உள்ள உறவைப் பாதிக்கூடும். ஆனால் வரலாற்றைப் பொய்யாக்க முடியாது.'' யோசேவ் ஸ்ராலினின் அரசு கொடுத்த கட்டளையின் பேரில் தொழில் முகாம் பணிப்பாளர்கள் ஜப்பானிய கைதிகளின் பது மிகக் குறைத்துக் காட்டப்பட்ட தொகை என்றும் 1945-56 இற்கும் இடையில் ஜப்பானியக் கைதிகள் ஜப்பானுக்குத் திருப்பி அனுப்பப்பட்ட போது 1,13,000 வரை இறந்திருக்கவேண்டும் எனவும் கார்ப்போவ் கூறுகிறார்.

அவரது கூற்றின்படி எத்தனை ஜப்பானியப் போர்க் கைதிகள் நாட்டிற்குத் திரும்பினர். என்பது இன்னொரு முரண்பாடாகும். கைதிகள் கப்பலிலேறிய துறைமுகங்களில் வைத்துக் கணக்கிடப்பட்ட காரணத்தினால் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கைகள் நம்பகமானவை எனக் கார்ப்போவ் நம்புகிறார். இக் கணக்கின்படி 5,10,000 ஜப்பானியர் நாடு திரும்பினர். ஆனால் உள்நாட்டு விவகார அமைச்சினாற் தயாரிக்கப்பட்ட அறிக்கையின்படி இத்தொகை 5,76,000 ஆகும். இது இது பற்றிஆய்வு நடாத்தும் ருஷ்ய, ஜப்பானிய நிபுணர்கள் கார்ப்போவின் கூற்றில் உண்மையுள்ளது என நம்புகின்றனர் 1970, 1980 களில் ஜப்பான் விவகாரங்களுக்குப் பொறுப்பாக இருந்த அதிகாரி அலென்செயிறிசென்கோ உத்தியோகபூர்வ அறிக்கைகளே சரியானவை எனக் கொள்கிறார். ஆனால் அவரும் தவறுகள் நடந்



இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜப்பானிய இராணுவத்தினர் சோவியத் யூனியனிடம் சரணடைந்தார்கள்.

மரித்தவர்கள் தொகையைக் குறைத்துக் கணித்ததாகவும் பின்னர் கொம்யூனிச ஆட்சியாளர்கள் மரித்தவர்கள் தொகையைத் தம் நாட்டு நன்மை கருதி மாற்றி வெளியிட்டதாகவும் கார்ப்போவ் கூறுகிறார். முன்னர் ஆய்வு செய்யப்படாத இராணுவக் கோப்புகளின்படி பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட தொழில் முகாங்களில் மரித்த ஜப்பானிய கைதிகளின் தொகை 52,000 என்

துள்ளன என்றும் கணக்கிடுவதில் பிழைகள் இருக்கலாமென்றும், இன்னும் மேலதிகமான ஜப்பானியக் கைதிகள் இறந்திருக்கலாமென்றும், ஒத்துக்கொள்கிறார். கைதிகளாகவுள்ளபோது எத்தனைபோர் வீரர்கள் இறந்தனர் என்பதனைக் கணக்கிட எத்தனை பேர் தனது நாட்டிற்குத் திரும்பினர் என்ற தொகை முடிவானது என்றும் கார்ப்போவின் ஆய்வு நிலையை கிறிசென்கோ உறுதிப்படுத்துகிறார்,

ஆனால் ஜப்பான் அரசு இது விடயமாக மிக எச்சரிக்கையாக உள்ளது. உத்தியோக பூர்வமாக ஜப்பானிய அரசு முகாங்களில் 55,000 ஜப்பானியரே இறந்தனர் எனக் கொள்கின்றது. ரோக்கியோ அரசு சைபீரியாவில் இறந்த போர் வீரர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க உறுதியாக மறுத்தாலும், அரசியல் ரீதியான தர்க்கங்களும் இல்லாமல் இல்லை. இறந்தோர் தொகை அதிகரிக்கப்படின் அவர்களது குடும்பங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய நட்டஈட்டுத் தொகையும் அதிகரிக்கும். கிறிசென்கோவின் கூற்றுப்படி இவ்விடயம் ருஷ்யாவுடனான உறவைப் பாதிக்கக் கூடிய அளவு பொதுசன அபிப்பிராயம் மாறக்கூடும்.

எனினும் ஜப்பானிய அரசு, கணக்குகளிற் தவறுண்டு என்பதை ஏற்றுள்ளது. மொஸ்கோவிலுள்ள ஸ்தானிகராலயத்திலுள்ள கொயிச் செகுச்சி சொல்வதாவது: ''உண்மையான கணக்கு விபரம் பெறுவது மிகக் கடினம். இது பற்றிய மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய இன்னொரு ஆய்வாளர் திரு, மியாஸமினோரு ஆகும்.'' இவரது கூற்றுப்படி கார்ப்போவினுடைய விபரங்களும் மிகக் குறைந்தனவாகும். ஜப்பானிய காலாட் படையைச் சேர்ந்த இவர் ஸ்ராலினது அரசால் ஜெர்மனியினாற் தகர்க்கப்பட்ட நாட்டைக் கட்டியெழுப்ப உபயோகிக்கப்பட்ட 6,00,000 யுத்தக் கைதிகளுள்

## ஜப்பானியப் போர்க் கைதிகள் பற்றிய உண்மையான பல தகவல்களை ஆய்வாளர்கள் வெளியிடுகின்றனர்.

ஒருவராவர். இவர் 1945-48 வரை கிழக்கு சைபீரியாவில் ஒரு மரத் தொழிற்சாலையில் 3,000 ஜப்பானியக் கைதிகளோடு தொழில் புரிந்தவர். இப்போது மூப்பினால் கடனடைந்த இவர் தூர கிழக்கு ருஷ்யாவின் அண்மையில் ஜப்பானிய கைதிகளது சேமக் காலைகளுக்கு மேற்கொண்ட பயணத்தில் ஜப்பானியக் கைதிகள் அனுபவித்த கடூரமான வேலைப் பளுவையும், தாங்கொணாத குளிரையும் நினைவு கூர்ந்தார். கைதிகள் மூவருள் ஒருவர் என்ற வீதத்தில் மடிந்தனர் என்றார் அவர்- மேலும் 1945-46 மாரி காலத்தில் மாத்திரம் 20,000 கைதிகள் போஷாக்கின்மையாலும், தாங்கொணாத குளிரினாலும் இறந்தனர் எனக் கூறுகிறார். பலர் இறந்ததன் காரணம் காசநோய், பட்டினி, சுவாசம் சம்பந்தமான பிணிகள் என்றும் கூறுகிறார்.

1947 இல் கைதிகள் குழுக்களாகத் தமது கப்டன்கள் மேற்பார்வையிற் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டனர். பலன்கள் அதிகம் கிடைக்காததனால் வேறு வகையிற் பிரிக்கப்பட்டுப் பொது உடைமை சித்தாந்தங்கள் போதிக்கப்பட்டன. இந்த ஒழுங்கு ஜப்பானிய போர் வீரர்களிடையேயிருந்த ஒற்றுமை, மரபு முறைகளைச் சீரழித்தது.

சென்ற சில ஆண்டுகளில் பல புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1992 தொடக்கம் ஜப்பானிய வெளி விவகார அமைச்சு மூத்த யுத்த வீரர்களையும், உறவினர்களையும் சைபீரியாவுக்கு அழைத்துச் சென்று அவர்களது வழிகாட்டலில் அங்குள்ள யுத்தக் கைதிகளது எலும்புக் கூடுகளைப் புதைகுழிகளிலிருந்து அகழ்ந்தெடுத்து அவை அளக்கப்பட்டுப் பெட்டிகளுள் அடைக்கப்பட்டு ஜப்பானில் உகந்த அடக்கத்திற்காக எடுத்துச் செல்வதில் முனைந்துள்ளது. சோவியத் மண்ணில் இன்னும் ஜப்பானிய யுத்தக் கைதிகள் சம்பந்தமான வஞ்சக நடவடிக்கையின் வடு மறைந்துவிடவில்லை. சைபீரியாவில் மரித்த ஜப்பானிய யுத்தக் கைதிகளது விபரங்களை நான்காவது ஆண்டுகளாகக் கம்யூனிஸ்ற் கட்சி மறைத்து வருகிறது. மொஸ்கோவிலுள்ள ஒரு சாரார் சில ருஷ்ய காரியஸ்தர்கள் உணர்ச்சி பூர்வமான கோப்புக்கள் இன்னும் பணம் அல்லது பரிசுகள் பெற்று வெளியிடும் நோக்குடன் மறைத்து வைத்துள்ளனர் எனக் கூறுகின்றனர்.

இராஜதந்திரிகளினதும், அரசியல் வாதிகளினதும் தலையீடு இன்றி கார்ப்போவ் ஆய்வுகளை நடாத்துகிறார். இராணுவ மேலாதிக்கமின்றி சுதந்திரமாக நிருபர்களுடன் உரையாடிய வண்ணம் தனது ஆய்வுகளைத் தொடர்கிறார். ஆனால் இன்றும் அவர் பாரபட்சமற்றவராக இருந்து கொள்கிறார். கார்ப்போவ் சொல்கிறார்: ''நான் தவறு என நம்புகிறேன். ஆனால் இவ்விடயத்தில் தெளிவு இருக்கட்டும். இன்று இவ்விடயம் பற்றி இருசாராருக்குமிடையே பரஸ்பர விளக்கநிலை ஏற்பட்டுள்ளது. நாம் ஏன் சகல புள்ளி விபரங்களையும் வெளிக்கொணர்ந்து நடைபெற்ற உண்மை நிலையை அறியப் படுத்தக் கூடாது?''

*வார் ஈஸ்ரேன் எக்கனமிக் றிவியு,*
*நவம்பர் 11, 1993*

# சுதந்திரம் சமாதானத்தை உறுதி செய்யுமா?

கெய்ரோவிலிருந்து
— கிறிஸ்ரோபர் டிக்கி —

## இஸ்ரேல் பாலஸ்தீனியரை விடுதலை செய்கிறது.

ஆறு ஆண்டுகள் இஸ்ரேல் சிறை ஒன்றிலே கழித்த பின் தமது தாயகமான காசாவுக்குத் திரும்பிய அப்துல் றஹ்மான் ஏமாற்றம் அடைந்ததற்கு அவருடைய மனைவியோ, ஐந்து பிள்ளைகளோ காரணமாய் இருக்கவில்லை. சுளுக்குப் பிடித்தது போன்ற நிலையில் காட்சி தந்த அவரின் சிறியவீடு மாறிப் போயிருந்தது. அவர் திரும்பிய திசைகளிலெல்லாம் சுவரொட்டிகளிலே பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் அவரை விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். நாசர் அசட்டுச் சிரிப்புடன் காட்சியளித்தார். ''நான் வீடு வந்த பொழுது இந்தச் சுவரொட்டிகளைக் கண்டேன். ஆனால், அவற்றைக் கிழித்தெறிய என்னால் முடியவில்லையே'' என்று காசாவாசியும், முப்பத்தொரு வயதானவருமான அப்துல் றஹ்மான் அங்கலாய்த்தார். அவர் அரபாத்தின் விசிறி அல்லர். ஈரானின் ஆதரவு பெற்றதும் இஸ்லாமியச் சார்பானதுமான ஜிகாத் குழுவைச் சேர்ந்தவர். வெடிகுண்டை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு அவர் விபத்திலே தமது வலக் கையை இழந்ததோடு 15 ஆண்டு சிறைத்தண்டனையும் பெற்றார். அன்று தொடக்கம் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கு (பி.எல்.ஓ) எதிரான இஸ்லாமிற்காகப் போராடும் இயக்கத்தில் இணைந்து கொண்டார். அண்மையில் 600-ற்கு மேற்பட்ட பாலஸ்தீனியக் கைதிகள் அவரோடு விடுதலை செய்யப்பட்டார்கள். இந்த விடுதலை ஆறு வார வயதுகொண்ட, பி. எல். ஓ. வுடனான சமாதானப் பேச்சுவார்த்தையில் ஓர் அங்கமாகும். '' நாசர் இந்தச் சமாதான நடவடிக்கைக்கு, ஆதரவு வழங்குவாரா? '' என்று றஹ்மானைக் கேட்ட பொழுது, அவர் தமது தோள்களைக் குலுக்கியபடி, '' என்னால் சொல்ல முடியாது. பாலஸ்தீனத்தின் ஓர் அங்குலத்தையும் விட்டுக் கொடுக்கக் கூடாதென்றே குரான் கூறுகிறது. ஆனால், நான் சிறையினின்றும் வடுதலை பெற்றது இந்த உடன்படிக்கையாலே தான் '' என்றார்.



சிறையிலிருந்து வெளிவரும் நாசருக்கு உற்சாகமான வரவேற்பு

பாலஸ்தீனியர் எவ்வாறு இந்தப் புதிரை நாசர் விடுவிப்பார் என்று விரும்புவதிலேயே சமாதான முயற்சி தங்கியிருப்பதாக இஸ்ரேல் நம்புகின்றது. பி. எல். ஓ. வும் யூத அரசும் அண்மையில் மேற்கொண்ட சிறைவிடுவிப்புப் படிப்படியாகவும், தொடர்ச்சியாகவும் நடைபெறும் என உறுதியளித்துள்ளன. அரசியற் குற்றங்களுக்காக இன்று 16,000 பாலஸ்தீனியர்கள் வரை, இஸ்ரேலில் சிறைவைக்கப் பட்டுள்ளனர். இவர்களில் பலர் எதிர்ப்பு வாசகங்களைச் சுவரில் வரைந்ததும், பாலஸ்தீனியக் கொடிகளைத் தூக்கியதுமான சிறு குற்றங்களே செய்தவர்கள். ஏறக்குறைய முன்னூறு பேர் எவ்வித குற்றச் சாட்டும் பதியப்படாமல் சிறைப்பட்டவர்கள். அரபாத்தும் அவரின் ஆதரவாளர்களும் ''வன்முறையை முடிவுக்கு கொண்டுவர இஸ்ரேலுக்கு உள்ள ஒரே வழி இது தான்'' என்கிறார்கள். அப்துல் நாசரின் பத்து வயதான மகன் இஸ்ரேல் எல்லாச் சிறைக்கைதிகளையும் விடுதலை செய்யவேண்டும். அப்பொழுது தான் நாங்கள் அன்போடும் அமைதியோடும் வாழலாம் என்கிறான்.

கைதிகளிலே பெரும் பான்மையினர் இஸ்ரேலியரைத் தங்கள் பரம வைரிகளாகக் கருதுவதோடு பாலஸ்தீன் – இஸ்ரேல் உடன்படிக்கைக்கும் கடும் எதிர்ப்பாளர்களாய் உள்ளார்கள். இவர்களிற் சிலர்

விடுதலையானதும் சமாதான உடன்படிக்கைக்கு எதிரான இரகசியச் சதி முயற்சியில் ஈடுபடுவார்கள். ஆனால் பி. எல். ஓ. வோ ''இந்த ஆபத்தான முயற்சி அவசியம்'' என்கிறது. பாலஸ்தீனிய சமாதானப் பேச்சாளரான சியாட் அபுசியாட், ''அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும்'' என்று வற்புறுத்தி வருகிறார். ''நாங்கள் புதியதொரு சகாப்தத்துள் நுழைகிறோம் என்பதை மக்களுக்கு நிரூபிக்க இது உதவும்'' என்பது அவர் நம்பிக்கை. இஸ்ரேல் காசாவிலிருந்தும் ஜெரிக்கோவிலிருந்தும் தனது படைகளை வாபஸ் செய்யும் பொழுது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 10,000 பேர் வீடுகளுக்கு அனுப்பப்படுவர் என்று அவர் எதிர்பார்க்கிறார். அரபாத் தமது எதிராளியும் ஹாமாஸ் தலைவருமான ஷெயிக் அகவட் யாசீனை விடுதலை செய்யும்படி மீண்டும் மீண்டும் கோருவதற்கு' இதுவரை இஸ்ரேல் செவிசாய்க்கவில்லை.

## ''புத்தகங்களில் இருந்தல்ல''

பி. எல். ஓ. கைதிகளிலே மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறது. புதிதாகத் தன்னாட்சி பெறப்போகும் பாலஸ்தீனியப் பிரதேசங்களிலே இவர்கள் காவல் துறைப்பணியில் நியமிக்கப்படுவார்கள். பதவிகளை விரும்பி விண்ணப்பிப் போருக்கு அவர்கள் நாட்டுக்கான போராட்டத்தில் ஈடுபட்டதையும், ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போரிட்டதையும் கணித்துப் படையில் சேர்த்துக் கொள்ளப்படுவதாகவும், பி. எல். ஓ. கூறுகிறது. இன்ரிபடா (Intifada) என்றபெயரால் சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு அதன் அடித்தள காலத்திலிருந்து பங்குகொண்ட ஓர் இலட்சத்துக்கும் மேலானவர்கள் காலத்துக்குக் காலம் சிறைவாசம் அனுபவித்தவர்கள், சிறைச்சாலைகள் அரசியல் பயிற்சி நிலையங்களாயின, ''புரட்சிப் பாடசாலை'' என்று சிறையை அழைத்தோம் என்று பி. எல். ஓ. போராளியும், இரண்டரை ஆண்டுகள் சிறையிலே கழித்தவரும், நிர்வாகப் பொறுப்புத் தடுப்பாளியாகச் சிறைக் காலத்தில் செயற்பட்டவருமான அட்லி டனா கூறுகிறார்: ''அது புத்தகங்கள் மூலம் பெறமுடியாததோர் அனுபவம்'' என்று.

இன்று 'அந்தப், பள்ளிப்' பட்டதாரிகள் வெளியிலே தங்கள் அதிகாரத்தினை நடத்தி வருகிறார்கள். இவர்களில் அரசியற் கைதிகளாகவுள்ள பலர் ஜெரிக்கோ வீதிகளிலே ஊர்காவலில் ஈடுபடுபவர்களுடன் உள்ளடங்குவர். பி. எல். ஓ. சமாதானப் பேச்சாளர்கள் உலங்கு வானூர்தியோடும், காவற்படைகளோடும் கூடிய 25,000 அலுவர்களைக் கொண்டு காவல்துறை கட்டி எழுப்பப்படப் போவதாகச் சொல்கிறார்கள். ஆனால் சமாதானக் குழுவில் ஓர் உறுப்பினரும், உளவியலாளரும் காசாவாசியுமான இயாட் சராஜி, ''தண்டனைக்குள்ளாகி விடுதலை பெற்றோர் பொது மக்களின் நலன் காக்கும் சிறந்தகாவலர்கள் ஆகார்'' என்றும் ''வசவுக்குள்ளானவர் வசவாளர்களாகவே மாறுவர் என்றும்'' கவலை தெரிவிக்கிறார்.

இந்த அச்சங்கள் யாவும் சமாதானத் திட்டம் செயற்படப் போகிறது என்றே கொள்ள வைக்கின்றன. ஆனால் அண்மையில் சிறைவிடுவிப்புத் தொடங்கியதுமே குழப்பமும் தலைகாட்டத் தொடங்கிவிட்டது. மற்றைய கைதிகளோடு இஸ்லாமியப் போராளிகளும் விடுதலையான வேளையும் துப்பாக்கி ஏந்திய சிலர்–இஸல்டின் -அல்குசாம் என்ற இயக்கத்தின் ஆயுதம் ஏந்தியோர்-இஸ்ரேலியர் இருவரைக் கொன்று அந்தக் கொலைக்கு உரிமையும் கோரினார்கள். ''இஸ்ரேலுடன் எமது சமாதானம் சவக்குழியிலே தான் இடம் பெறும்'' என்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட இவர்களின் நடவடிக்கை காரணமாக இஸ்லாமியர் பலரையும் விடுதலை செய்வதை இஸ்ரேல் இடைநிறுத்தியுள்ளது.

இந்த இடைநிறுத்தம் தமது உறவினர், நண்பர்களின் விடுதலையை எதிர்பார்த்திருந்த பலரினதும் பொறுமையை இழக்கச் செய்து விட்டது. சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட தனது நாலு மக்களும் திரும்பி வருவார்கள் என்று காத்திருந்த ஐம்பது வயதான தாயொருத்தி-இவளின் மூன்று மக்கள் பி. எல். ஓ. வின் இராணுவப் பிரிவாகிய ஃபற்றாவில் அங்கத்தவர்கள்-''இத்தச் சிறைவிடுவிப்பு திணையளவுதான், சிறைப்பட்டவர்கள் கொலையாளிகளோ இல்லையோ அவர்கள் யாவரும் பாலஸ்தீன விடுதலைக்குப் போராடியவர்கள். இஸ்ரேலியர்கள் மட்டும் என்ன? அவர்களும் எங்கள் பிள்ளைகளைக் கொலை புரிந்தவர்களே'' என்றாள்.

## முதுமையும், பிணியும்

இஸ்ரேலியப் பிரதமர் யின்சாக் ராபின் குற்றம் சாட்டப்பட்ட கொலையாளிகளை விடுதலை செய்வதில் அவசரப்படுவதாயில்லை. அண்மையில் சிறை விடுவிப்புச் செய்யப்பட்டவர்களிற் பலரும் இருபது வயதுக்குள்ளானவர்கள். இவர்கள் கல்லெறிதலும், சுவரில் எழுதுதலும் ஆகிய சிறு குற்றவாளி

கள். ஏழுபேர் ஐம்பது வயதைக் கடந்தவர்கள். 44 பேர் நோயாளிகள். 12 பேர் பெண்கள். ஆனால் இவர்களைக் கூட விடுதலை செய்யக்கூடாது என்று நெசெட் வலதுசாரிகள் வாதிட்டனர். ஆனால் அவர்களின் வாதம் வெற்றி பெறவில்லை. ''மேற்கொண்டும் கைதிகளை விடுதலை செய்வது பேச்சு வார்த்தையின் முன்னேற்றத்தைப் பொறுத்தே உள்ளது'' என்கிறார் யாசீன். ''பேச்சு வார்த்தை தொடங்கியதிலிருந்து சமாதானத்துக்கான சைகைகள் கிடைக்கும் என்று மீண்டும், மீண்டும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பாலஸ்தீனியர் அத்தகைய சைகை ஒன்றையாவது வெளிப்படுத்தியதாக என்னால் நினைவுகூர முடியவில்லை'' என்றார் ராபினின் பேச்சாளர் காட் பென் ஆரி.

இருந்தபோதும் சிறைவிடுவிப்பு இருபகுதி யாருக்கும் வாய்ப்பான தொன்று என்றே பாலஸ்தீனியர் இன்னும் கருதுகின்றனர். இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் பாலஸ்தீனியப் போர் பாலஸ்தீனிய மக்களுக்குச் சொல்லொணா இன்னல்களை விளைவித்து வந்திருக்கின்றது. இஸ்ரேலியர் மீது குண்டொன்றை வீச முற்பட்டதில் தனது கையொன்றை இழந்தும், 11 ஆண்டுகளுக்கு மேல் சிறைவாசம் செய்தும், பெற்றோரின் வீடு இடிக்கப்பட்டும், மீண்டும் 3 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தும் பல பாதிப்புக்களுக்குள்ளான நாமா என்ற பாலஸ்தீனியப் பெண் கூறுவது துஇ.:''எனக்கு ஒரு தாயகமும் அரசும் வேண்டும்; எனது உரிமைகள் எனக்கு வழங்கப்பட வேண்டும்.'' இவற்றைப் பெறுவதற்கான போராட்ட சுதந்திரத்தையே நாமா போன்ற பலஸ்தீனியன் ஒவ்வொருவனும் விரும்புகின்றான்.

*நியூஸ்வீக், நவம்பர் 8, 1993*

# பாதுகாப்பு யாருடைய பொறுப்பு?

காஸா நகரிலிருந்து

**— கிறிஸ்தோபர் டிக்ஃபி —**

நெற்ஸரிம் என்பது, 'காஸா பகுதியின் இதயஸ்தானத்திலுள்ள ஒரு யூதக் குடியேற்றம். அங்கு, ஒரு சிறு மனையில் ஆறு பிள்ளைகளுடனும், கணவனுடனும் வசிக்கும் ஆஸி ஹிலேல், சமையல் அறையில் உருளைக்கிழங்கு உரித்துக்கொண்டிருக்கிறாள். பாலை நில மணற் குன்றுகளுக்கு மத்தியில், அவள் இல்லம் உயர்ந்த வேலியாற் பாதுகாக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலியப் படைவீரர் முழு இராணுவ உடையிற் காவல் புரிகின்றனர். தனது குடும்பம், பாலஸ்தீனியப் பொலிஸ் பாதுகாப்பில் தொடர்ந்து தங்கியிருக்கவேண்டும் என்று நினைக்கவும் அவளால் முடியவில்லை. அவள் சொலகிறாள்:– '' அவர்களில் பெருந்தொகையினர் இப்போது தான் சிறைகளிலிருந்து விடுதலை பெற்ற பயங்கரவாதிகள். ''

இவ்விடயம் மிகவும் விமர்சனத்துக்குரியது. சென்ற ஒக்ரோபர் மாத இறுதியில், இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்துக்குமிடையில் செப்ரம்பர் 13 இல் கையெழுத்தான உடன்படிக்கையை நடைமுறைக்குக் கொண்டு வருவது பற்றிய பேச்சு வார்த்தை நிகழ்ந்த போது, அது முறிவு எய்தியமைக்கு இவ்விடயமே காரணம். காஸாப் பகுதியில் வாழும் இஸ்ரேலியரைப் பாதுகாக்க, இஸ்ரேல் ஒரு திட்டத்தை முன் வைத்தது. அதில், நகரங்களிலுள்ள தனது படைகளை நகர்த்தித் தம்மவர் குடியேறியுள்ள 16 குடியிருப்புக்களையும், அவர்கள் பிரயாணம் செய்யும் பாதைகளையும் பாதுகாக்க அமர்த்துவது முக்கிய கருமமாகும். பா. வி. இயக்க சமாதானப்பேச்சாளர் நபில் உவா அவ்உடன்படிக்கையில் இஸ்ரேலியப் படைகளைக் காஸா பிரதேசத்திலிருந்து வாபஸ் செய்வது என்று குறிக்கப்பட்டது. அவற்றைப், பாதுகாப்புக்கென மீண்டும் தமது மண்ணில் நகர்த்திவைக்கும் பேச்சுக்கே இடமில்லை என்கிறார். செய்தியாளர் மத்தியில் அவர்

## இஸ்ரேல்: கைப்பற்றிய பிரதேசங்களிற் குடியேற்றப்பட்டவர்களின் அச்சம்

பேசும் போது. '' பாதுகாப்புப் பற்றிய பயத்தை இஸ்ரேலியர் மிகைப்படுத்துகின்றனர். காஸா ஒடுங்கிய நிலப்பரப்பில் வசிக்கும் அனைவருக்கும், பாலஸ்தீனியப் பாதுகாப்புப் படைமூலம் பூரண பாதுகாப்பு வழங்க, நாம் ஆயத்தமாயிருக்கிறோம், '' என்றார்.

இந்தப் பேச்சை, உறுதிச் சொல்லாக ஏற்றுக்கொள்ளும் நம்பிக்கை இஸ்ரேலியரிடம் காணப்படவில்லை. பா. வி. இ. அதிகாரிகள், குடியேற்றப்பட்ட இஸ்ரேலியரைக் காஸாவை விட்டு வெளியேற்ற வேண்டும் என்பதை மறைத்து வைக்கவில்லை. '' பாலஸ்தீனியரின் நிர்வாகத்தில், அவர்கள் பின்வாங்கிச் ( தத்தம் நாட்டுக்கு ) செல்வர் என நம்புகிறோம் '' என்கிறார், பா. வி. இ. பிரதிநிதி உவாஃபிக் அபு சித்து. ஏழு இலட்சம் பாலஸ்தீனியர்களுக்கு மத்தியில் வாழும் 5,200குடியேற்றவாசிகளும்,

அரசாங்க நட்டஈடு பெறுவதற்கே காத்திருக்கிறார்கள் எனப், பல காஸா வாசிகள் நம்புகிறார்கள். அதைப் பெற்றதும், அவர்களை வெளியேறுமாறு நெருக்குதல் ஏற்படும்போது வெளிக்கிளம்பிவிடுவார்கள். ஆரம்பத்திற் குறிப்பிட்ட ஹிலேல் போன்ற யூதர்கள், அகண்ட இஸ்ரேல் நாடு என்ற சமய இலட்சியத்தால் உந்தப்பட்டுத், தொடர்ந்து இருப்பதற்கே விரும்புகிறார்கள். ''நாம், எம் உயிரை எப்படியாயினும் பாதுகாத்துக் கொள்ளவே முயல்வோம்.'' பிரதமர் யிற்சாக் ராபின் அமைத்துள்ள பலவீனமான கூட்டரசாங்கம், குடியேறியோர் பாதுகாப்புப் பற்றி விட்டுக் கொடுத்தால், அரசாங்கம் சுயபுத்தியை மீண்டும் பெற வேண்டும் எனப் பிரார்த்திப்போம், அல்லது, பாலஸ்தீனியர் நாம் விட்டுக்கொடுப்பவைகளில் திருப்தியடையாத வகையில் எமக்கு உதவுவார்கள் என்றோ, அரசாங்கம் வீழ்ச்சியடையும் என்றோ எதிர்பார்த்திருப்போம்.''

சமாதானத்தை நடைமுறைப்படுத்தும் பேச்சுவார்த்தை தடையுற்ற நிலையில், யார் பாதுகாப்புப் பொறுப்பாளி? என்பதிற் பெருங் குழப்பம் உண்டாகியுள்ளது. காஸாவில் மட்டுமன்றி, மேற்குக் கரைப்பிரதேசம் முழுவதிலுமே இச்சிக்கல் வளர்கிறது. சென்ற ஒக்ரோபர் கடைசியிற் பா. வி. இ. ஆயுதமற்ற, வாகனப்போக்குவரவுக் கட்டுப்பாட்டாளரை (பொலிஸ்) ஜெக்கோ நகரவீதிகளில் நிறுத்தியபோது, இஸ்ரேலிய அதிகாரிகள் அவர்களைத் தற்காலிகமாகக் கைது செய்தனர். காஸா அராபியரிடையே ஓரளவு ஒழுங்கு நிலைபெற்றுள்ளமைக்குக் காரணம், பா. வி. இ. த்தின் ''இளம் ஃபற்றா பருந்துகள்'' என்ற நிலைவர அமைதிகாப்புக் குழுவினர், நீதியை நிலை நிறுத்தும் ''சேவையில்'' ஈடுபட்டிருக்கின்றமையே. (ஆனால் அவர்களிற் பலர் முன்னர் கொலை செய்த குற்றத்திற்காக இஸ்ரேலியரால் தேடப்படுவோர். அவர்கள், எமக்குத் தீங்கு புரிவோரைப் பழிவாங்குவர். எனவே, நாம் ஆறுதலாயிருக்கலாம் என்கிறஒழுங்கு நிலைஅராபியரிடையே உள்ளது.)



பாலஸ்தீன மககளின் இன்ரிபாடா எனும் ஏதிர்ப்பியக்கம்

குடியமர்த்தப்பட்ட இஸ்ரேலியரும், ''நிலபர அமைதிகாப்பு நீதி'' யைக் கைக்கொள்ள வேண்டியவராகின்றனர். மேற்குக்கரையிலுள்ள பேய்ற்—எல் குடியிருப்பின் உறுப்பினர் ஒருவர், சென்ற ஒக்ரோபரில் இஸ்லாமிய ஹமாஸ் தீவிரவாதிகளாற் கொல்லப்பட்டபோது, அவரது அயலவர்கள் கட்டுமீறிக் கோரதாண்டவம் புரிந்தனர். பாலஸ்தீனியரின் கார்களுக்குத் தீவைத்தனர்.; சன்னல்களை உடைத்தனர். அயலிலுள்ள ஜாலகூன் அகதி முகாமின் அருகேயுள்ள ஒரு வீட்டைக்கொளுத்தினர். மேற்குக் கரையிலிருந்து இஸ்ரேலுக்குள் செல்லும் பெரும்பாலான வீதிகளை மூடிவிட்டனர். சிலர், யூதரும் அராபியரது இன்ரிஃபாடா என்னும் தற்காப்புப் போர் முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றனர். ஆனால், அப்படிச் செய்வதால் இஸ்ரேலியப் படையினருடன் மோதும் நிலை ஏற்படும். அது, இறுதியில் தமக்கே கேடு தேடுவதாகலாம்.

## அடிக்குறிப்பு:-

இன்ரிஃபாடா என்னும் அராபியச் சொல், ஒவ்வொரு உள்ளூர்ச் சமூகமும் (கிராம, வட்டார அளவில்) தற்காப்பு, அயலவர் உதவிப் பொறுப்புக்களுக்கு உரிய ஏற்பாடுகளைச் செய்து, இஸ்ரேலிய அரசாங்கத்துடன் ஒத்துழைக்காது, தம்மைத் தாமே கவனித்துக் கொள்ளும் ஒழுங்கு முறையைக் குறிக்கும். அதை வெற்றிகரமாக அராபியர் நிறைவேற்றித், தம் மண்ணை அபகரித்த இஸ்ரேலியரைத் துணிகரமாக எதிர்த்து நின்றனர். தம் சிறுவரது கல்வி, சுகாதாரசேவை, கூட்டுறவு போன்றவற்றுக்கு முழுப்பொறுப் பேற்று, அரசாங்க உதவியை நாடாது நின்றனர். ஆண்கள் தூர நகரங்களில் வேலைதேடிச் செல்ல, இளைஞரும், பெண்களுமே இதனைச் செய்து முடித்தனர். பா. வி. இ உள்ளூர்மட்ட சேவைக் கரமாக இயங்கிய இதற்கும், இன்று அராபிய மண் விடுதலையிற் பெரும் பங்கு உண்டு. இன்ரிஃபாடா'வில் அராபியக் கிறிஸ்தவர் முதலியோரும் மொழி, மண் அபிமானத்தாற் பங்குகொண்டனர் என்பது, நம் விசேட கவனத்துக்குரியது. இதன் வெற்றி காரணமாக, இன்று சிறுபான்மையாக்கப்பட்ட குடியேற்றவாசிகளான யூதரும், இந்த முறையைக் கைக்கொள்ள எண்ணுகின்றனர் போலும்.

நியூஸ் வீக், 1993

பொஸ்னியா

# மிக அண்மைக்கால அச்சுறுத்தல்:

சூரிய ஒளிகாலும் மத்தியானப் பொழுது ஒன்றில், பொஸ்னியாவின் மத்திய நகரமான ட்றாவ்னிக்கில் கைக்குண்டு ஒன்று வெடித்து, நகரத்தின் அமைதியைக் குலைக்கிறது. வழிப்போக்கர் ஒரு கணம் திகைப்பிற்குள்ளாகிப் பின்வாங்குகின்றனர்; பின்னர் போர்ச் சூழ்நிலைக்குப் பழக்கப்பட்டுப் போய்விட்ட காரணத்தால், அவர்கள் ஒன்றும் நடவாததுபோல மேலே நடந்து செல்கின்றனர். போர் இன்னும் முடிவிற்கு வரவில்லை என்பதை உணர்ந்திருந்தமையால், நரக வேதனை தரும் மாரி காலத்திற்கென்று சிறிய அளவில் சேர்த்து வைத்திருக்கும் விறகுகள் நிலாமுற்றங்களிலே பாதுகாப்புக் கருதி அடுக்கப்பட்டுள்ளன. கலாசாரம் ஒன்றின் தப்பிப் பிழைத்தலும் சகிப்பு மனப்பான்மையும் கொண்டு இஸ்லாமியரும், குறோசியர்களும், சேர்பியர்களும் அமைதியாக வாழ்வது ஒன்றைத்தான் அவர்களால் உறுதிப்படுத்த முடியாதிருக்கிறது.

## இஸ்லாமியத் தீவிரவாதிகள்

உணவு விடுதியிற் பரிமாறும் வேலையில் ஈடுபட்டுள்ள செலடின் ஹ்ருசி என்ற 18 வயது இளைஞன், அரசின் இஸ்லாமியப் பாதுகாப்புப் படையினர் (M. O. S) முஸ்லிம் ஒருவரால் நடத்தப்படும் மதுபானசாலையை, மதுபானம் விற்கக் கடுமையான சட்டத் தடை உள்ளது என்ற காரணத்தைக் காட்டி, அந்தச் சட்டத்தினைச் செயற்படுத்தும் வகையில் அவரின் மதுபானசாலை அடித்து நொருக்கப்படுவதைப் பார்த்து நிற்கிறான். பச்சை நிறமும், முஜாகிடீனின் இலச்சினையும் பொறித்த ஜீப் ஒன்று வீதியாற் செல்வது வழிச் செல்வோரின் பயங்கலந்த பார்வையிற் படுகின்றது. அந்த ஜீப்பினுள்ளே இஸ்லாமிய புனிதப் போருக்கென வந்த ஈரானியப் படையினர் காணப்படுகின்றனர்.

**பல்வேறு கலாசாரக் கட்டிணைப்புக்கள் கொண்ட ஒரு நாட்டில், அவை, தேசியம் என்ற போர்வையில் தோன்றிப் போரினை நோக்கிச் செலுத்துகின்ற கொள்கை காரணமாக நிர்மூலமாகின்றன.**

ஹ்ருசி சொல்கிறான்: ''இவர்கள் என்னைத் தொழும்படி பலவந்தம் செய்தால் நான் இங்கு இருக்கமாட்டேன்.''

பொஸ்னியரான முஸ்லிம்கள் சேபியரினதும், குறோசியரினதும் சகிப்பின்மையும், இன ஒதுக்கலுங் கொண்ட கொடூரமான பாதையையே பின்பற்றுவதாகப் பலரும் கருதுகின்றனர். பொஸ்னியாவின் தலைவரான அலிஜா இசெட்பெகோவிக் ''சர்வதேசிய மன்னிப்புப் பிரிவினையானது உயிர்ப் பிராணிகளை வெட்டிச் செய்யும் பரிசோதனையாகும்'' என்று விளக்கம் தந்தார். அவர் தமது பங்குக்குச் சமயஞ் சார்ந்த தேசியம், என்ற குரலை எழுப்பத் தொடங்கியுள்ளார். அரசியல் நகைச்சுவையில் இது மிகப் பயங்கரமான ஒன்றாகும். பொஸ்னியப் படையதிகாரியான முடெறிஸ், கடந்த 27 ஆந் திகதியன்று கறுப்புக் குல்லாயும், கறுப்புக் கழுத்துப் பட்டியும் அணிந்தபடி, ''இசெட்பெகோவிக் மேற்கிலிருந்து உதவி கிடைக்கும் என்று உறுதி மொழி பெற்றிருக்கிறார். ஆனால் அந்த உதவி என்றைக்கும் கிட்டாது'' என்றார். அல்லாவைத் தவிர ஆண்டவன் இல்லை. முகம்மது ஒருவரே தீர்க்கதரிசி. நாங்கள் எக்காலத்திலும் மீண்டும் மேற்கை நம்பப் போவதில்லை'' என்ற கூற்றும் அவரால் வெளியிடப்பட்டது.

மாற்றம் எவையுமே விரும்பாத நிலையில் இசெட்பெகோக்கின் அரசு முஸ்லிம் இனத்தவரைக் கொண்டதொரு விசேட ஒன்றுகூடலைக் கூட்டி, மிக அண்மைக் காலத்தான சமாதானக் கோரிக்கையை அவர்கள் முன்வைத்து இனப்பாகுபாடுகளைக்கருதி அவர்கள் இந்தக் கோரிக்கையை நிராகரிக்கவில்லை. ஆனால் முஸ்லிம்களை மிகப்பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசத்தினைச் சேர்பியருக்கு வழங்கத் தயாரற்ற நிலையிலேயே அக் கோரிக்கை முஸ்லிம் இனத்தினரால் முற்றாக நிராகரிக்கப்பட்டது. முஸ்லிம் தேசியவாதிகள் தலைநகரின் பெரும் பகுதி

யை ஆக்கிரமித்துக்கொண்டதோடு, முஸ்லிம் அல்லாதவர்களை எவ்விதக்காரணமுமின்றிக் கைது செய்தலும், தொல்லைப்படுத்தலும் அதிகரித்து வருகின்றன. வடமேற்கில் 56 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள செனிக்கா என்னுமிடத்தில் பொஸ்னியப் படையின் மூன்றாவது பிரிவான ''முஸ்லிமன்ஸ்கி'' படையினருடைய கட்டுப்பாடுகள் அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்டு விட்டதையிட்டுப் பெரும்பாலான முஸ்லிம்கள் கவலைப்படுகின்றார்கள். ட்றவ்னிக்கில் மதுபான சாலைகள் தங்களது மதுபானங்களை ஒளித்து வைக்க வேண்டிய நிலை தவறினால் தீக்குண்டுகளுக்கு அவை இரையாக்கப்படும் என்ற அச்சம். சாராய வடிகலன்கள்—நாட்டின் சுற்றுப்புறங்களில் உள்ளவை—அழிக்கப்படுகின்றன. குடிமக்களுடைய வீடுகள் போர் வீரர்கள் தங்குவதற்காகச் சுவீகரிக்கப்படுகின்றன.



முஸ்லிம் போர் வீரன் ஒருவன்'ன் மரணத்தை ஒட்டி வழிபாடு செய்யும் இப் பெண்மணியைப் போன்று பொஸ்னியர்கள் இன்னொரு யுத்த மாரிக்கும் வளர்ந்து வரும் சகிக்க முடியாமைக்குமாக தம்மை உறுதிப்படுத்திக் கொள்கின்றார்கள்.

''துரதிருஷ்டம் குடிகொண்டுள்ள ஒரு நாட்டிலே முஸ்லிம் இனமானது, கடும் தாக்குதலுக்கு உட்பட்டுள்ள இவ்வேளையில், தீவிரவாதிகளின் நடவடிக்கை வரவேற்கப் படக்கூடியதாய் இல்லை'' என்று கூறும் ட்றவானிக்கைச் சேர்ந்த பொஸ்னியப் படை வீரரான சமிர்சே:ப்பர் தொடர்ந்தும் சொல்கிறார்: ''என்னுடைய 27 வயதுக் காலத்தில் நான் எந்த ஒரு பள்ளிவாசலுக்கும் சென்றதில்லை. மது அருந்துவதிலும் குட்டை உடை தரித்த பெண்களை விரும்புவதிலும் நான் பின்நிற்கவில்லை. அடிப்படைவாதியாக மாறக்கூடிய பருவத்தை நான் கடந்துவிட்டேன். 90 சத வீதமான மக்களும் என்னைப் போன்ற மனப்பான்மையிலேயே இருந்து வருகிறார்கள்.''

போரில் இடைவேளை ஏற்படாது என்பதனாலும், அடிப்படைவாதிகளின் பிடி இறுகிவருகிறது என்பதனாலும் பொஸ்னிய மக்கள் அஞ்சி, அஞ்சியே வாழ்கிறார்கள். இதேவேளையில், இஸ்லாமியர், குறோசியர், சேர்பியர் ஆகிய இம் மூன்று இனத்தினரும் தொடர்ந்து சமாதான சகவாழ்வினை நடத்துவதை விரும்பும் சமாதானப் பிரியர்களின் குரல் ஓங்கி ஒலிக்காததும், மேலதிகப் போர், மேலதிகத் துன்பங்கள் மேலதிகச் சகிப்பின்மை என்பவற்றுக்கு எதிரான அவர்களின் வாதம் பயனற்றுப் போவதும் கவலைக்குரியனவே.

ஜேம்ஸ் கிரா:ப் ட்றாவ்னிக் ரைம், நவம்பர் 1, 1993

## இராஜ தந்திரம்

# இரு உறவினர்கள்

பில் கிளின்ரனும் ஜோன் மேஜரும் நல்ல நண்பர்கள் என்று கூறும் அளவுக்கு இல்லை. அமெரிக்க ஜனாதிபதி பிரித்தானியப்பழைமை வாதக் கட்சியினர் சென்ற ஆண்டில் ஜோர்ஜ் புஷ் மீண்டும் தேர்தலிற் குதிக்கவைக்கச் செய்த உதவிகள் பற்றித் தனக்கு உள்ள கசப்பை இன்னும் மறக்கவில்லை. பத்திரிகைச் செய்திகள் சென்ற மாதத்தில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் வோறன் கிறிஸ்தோப்பர் தனிப்பட்ட முறையில் பிரிட்டிஷ் வெளியுறவுச் செயலர் டக்ளஸ்ஹேட்டைப் பொஸ்னியாவில் அமைதித் தீர்வு வந்தால் பிரிட்டிஷ் துருப்புகள் நிச்சயம் அங்கு செல்ல நேருமா என்று கேட்டதாக அறிவித்த பின்பு அந்த இரண்டு நாடுகளின் சிறப்பு உறவுகள் மேலும் சுழி வெள்ளத்துக்குள் இறங்கியுள்ளன. அந்தச் செய்தி வெளிப்பட்டதும் சிரேஷ்ட அமெரிக்க அதிகாரிகளை மேலும் கோபம் அடையச் செய்து பிரிட்டிஷ்காரர் மீது குறை கூறச் செய்துள்ளது. கோபம் கொண்ட கிறிஸ்தோப்பர் ஐரோப்பாவின் ''அமெரிக்காவைக் குறைகூறலைக்'' குத்திக்காட்டியுள்ளார். கிளின்ரன் பிரிட்டனின் பொஸ்னியாக் கொள்கையை விளாசியுள்ளார். அது பொஸ்னியாவைக் காப்பாற்றுவதிலும் பார்க்க அந்த நாட்டின் மீது மேற்கொண்டுள்ள ஆயுத விநியோகத் தடையைத் தவிர்ப்பதாகவே உள்ளதென்று கிளின்ரன் கூறினார். இருந்தும் பிரித்தானிய அதிகாரிகள் அடுத்த ஜூன் மாதத்தில் கிளின்ரன் இங்கிலாந்திற்கு விஜயம் செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கின்றனர். அதற்கிடையில் அந்த இரு நாடுகளுக்கும் இடையில் இருளூட்டும் பொஸ்னியாவின் நிழல் மறைந்துவிடும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர். இருந்தாலும் எப்பொழுதாவது கிளின்ரனும் மேஜரும் சிறப்பான நண்பர்கள் ஆவார்களா? சந்தேகமே.

# அவ்வளவு பெரியதும் கெட்டதும் அல்ல

சென்ற மாதம் நாடாளுமன்றத்திலிருந்து தனது எதிரிகளை அகற்ற பொறிஸ் யெல்சினுக்கு ருஷ்ய இராணுவம் உதவியதிலிருந்து பெரிய காணிக்கை கொடுக்க வேண்டியுள்ளது. இராணுவத்தின் உதவி இல்லாதிருந்திருப்பின் ருஷ்ய ஜனாதிபதி வரலாற்றின் சாம்பல் மேட்டை நோக்கிச் சென்றிருப்பார். எனவே சென்ற வாரம் பாதுகாப்பு மந்திரி பவெல் கிறச்செவ் புதிய இராணுவக் கொள்கை யொன்றை அறிவித்தபொழுது பொறிஸ் யெல்சின் தனது கடனைத் தீர்ப்பதாகத் தெரிந்தது. ''கிட்டிய வெளி நாடுகள் என்றழைக்கப்படும் சோவியத் ஒன்றியத்தின் முன்னாள் குடியரசுகளுக்கு துருப்புக்கள் அனுப்புவதை இக்கொள்கை நியாயப் படுத்துகின்றது. மக்கள் தொகையின் ஒரு சதவீதம் அல்லது 1.5 மில்லியன் ஆட்கள் என்ற ரீதியில் இராணுவ எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் சட்டத்தை இக்கொள்கை கைவிடுகின்றது. அத்துடன் 1982-க்குப் பின்னர் முதற்றடவையாக 'முதலாவதாக உபயோகிப்பதில்லை' என்ற கோட்பாட்டை மொஸ்கோ கைவிடுகின்றது. அதாவது வேறொரு அணுக்கரு ஆயுதங்களை வைத்திருக்கும் நாட்டுடன் ஏற்படும் போரில் இவ்வாயுதங்களை உபயோகிக்கலாம்'' என்பதே.

ஆனால் உண்மையில் கண்ணுக்குத் தெரிவதிலும் பார்க்கக் குறைவாகவே இத்திட்டத்தில் உள்ளது. 'முதலாவதாக உபயோகிப்பதில்லை, என்ற தத்துவத்தை மேற்குலகுடனான அணுக்கரு யுத்தமொன்றில் இருந்து மிகத் தூரத்திலே நாம் இருக்கிறோம்; சிறந்த பலமான இராணுவம் அமைக்கப்படவேண்டிய கோரிக்கை பெரியதாகத் தோன்றினாலும் உண்மையில் வாரமொன்றுக்கு 120 படைவீரர் மட்டில் படையைவிட்டு ஓடுகிறார்கள். உயர்ந்த பாணியில் சாப்பிடும் இராணுவப் பேச்சு அவர்களின் மனதை மாற்றப்போவதில்லை. காகிதக்கணக்கில் உள்ள துருப்புக்கள் மற்றும் ஆயுதங்களில் ஐந்தில் ஒரு பங்கு மட்டுமே உபயோகிக்கக்கூடிய நிலையில் உள்ளன என்பது மேற்குலக நிபுணரின் கருத்தாகும். பழைய சோவியத் ஒன்றியம் அல்லது அதன் ஒரு பகுதியை மீண்டும் கட்டி யெழுப்புவது கடும்போக்குடைய கிறெம்ளின் ஜெனரல்களாலும் முடியாத காரியமாகும். ''அண்டிய வெளிநாடுகளுக்கு எதிரான ஆக்கிரமிப்பு நிலையொன்று கொள்வதற்கு அதிக மூலதனம் தேவைப்படும். இது ருஷ்யாவிடம் இல்லை'' என்று மொஸ்கோ யோசனை வங்கியொன்றின் பிரதான இராணுவ நிபுணர் ரெயெக் அமிறொவ் கூறுகிறார்.

## காரம் குறைந்து விட்டது

இக் கோட்பாட்டின் முன்னைய வரைவுகளைப் பார்த்த மேற்கு நாட்டு நிபுணர்கள், நாடாளுமன்றத் தாக்குதலுக்குப் பின்னர் இதன் காரம் குறைந்துவிட்டது என்று கூறுகிறார்கள். போல்ரிக் நாடுகளில் உள்ள ருஷ்யரைப் பாதுகாக்கக் கடும்போக்காளர் கோரிய கடுமையான ஏற்பாடுகள் ஈற்றில் கோட்பாட்டில் சேர்க்கப்படவில்லை. ''வருட ஆரம்பத்தில் கோட்பாட்டின் பாஷை மேலும் கடுமையாக இருந்தது. நாடாளுமன்றத்தின் பழைமைவாதிகள் வீழ்ச்சியடைந்த காரணத்தினால் காரம் குறைந்துவிட்டது'' என இராணுவ ஆலோசகர் ஜோன் ஹைன்ஸ் கூறுகிறார்.

ஆனால் ருஷ்ய இராணுவம் அபாயகரமற்றது எனக் கூறமுடியாது. இக் கோட்பாட்டின் பிரகாரம் தமது எல்லைக்கு அப்பால் உதாரணமாகப் பதற்ற நிலையில் உள்ள கோகேசியன் பிரதேசத்தில் ருஷ்யப் படைவீரர் குழப்பநிலையை உருவாக்கலாம். உக்ரேனிய அரசியல்வாதிகள் இக் கோட்பாட்டிற்கு எதிராகக் கோபமுற்றிருக்கிறார்கள். அதுவும் உக்கிரேன் போன்ற அணுக் கரு ஆயுதம் வைத்திருக்கும் நாட்டுக்கு எதிராக அணுக்கரு ஆயுதங்களை உபயோகிக்கலாம் என்ற கருத்து அவர்களை அவ்வாறு ஆத்திரமடையச் செய்கின்றது. ''இது ஓர் ஏகாதிபத்திய அச்சுறுத்தலாகும். கிழக்குத் திசை ஆக்கிரமிப்பாளருக்கெதிராக எமது நாட்டைப் பாதுகாக்க அணுக்கரு ஆயுதங்களை நாம் வைத்திருக்க வேண்டும். நாம் ஆயுதங்களைக் களைவது ஆயிரம் மடங்கு மேலும் அபாயகரமானது'' எனத் தேசிய சட்டமாக்குபவர் ஓவெஸ் ஷெல்சென்கோ கூறுகிறார். மொஸ்கோவில் இருந்து அச்சுறுத்தல் இல்லை என்று மேற்குலகம் மூச்சு விடலாம். ஆனால் எல்லோரும் அப்படியிருக்க முடியாது.

## ருஷ்யா: கிட்டிய வெளிநாடுகளில் மொஸ்கோ இன்னும் தலையிடுகின்றது.

எழுதியவர்கள்-

மொஸ்கோவிலிருந்து:

டொறின்டா எலியற்றுடன் கரோல் போகேட் மற்றும் பெற்சி மக்கே.

வோஷிங்ரனிலிருந்து:

ஜோன்பரி மற்றும்

கீல்லில் இருந்து

றொபேட் சீவி.

# யெல்சின் "பயங்கரப் பொரிஸ்" ஆக மாறுகிறாரா?

அவர் கூறியது ஒரு சோதனை பண்ணுவதாகவும் இருக்கலாம். சென்ற வாரம், மொஸ்கோவில் பத்திரிகை ஆசிரியர்களுடனான பிரத்தியேகச் சந்திப்பில், அடுத்த வருடம் தேர்தலில் போட்டியிடுவது என்ற தனது வாக்குறுதியை மீறப் போவதாக பொரிஸ் யெல்சின் கூறினாரென அறியப்படுகின்றது. 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தலிற்கு, நான் எதிராக உள்ளேன் என்று கூறியதாக, இன்ரஃபக்ஸ் செய்தி நிறுவனம் அறிவித்தது. இதற்குப் பதிலாக 1996 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிவடையும் வரை பதவியில் இருக்கப் போவதாக யெல்சின் கூறுகிறார்.

ஜனநாயகவாதியானயெல்சின், முதலாம் பொரிஸ் ஜோராக மாறுகிறாரா? சென்ற மாதம் கடும்போக்குடைய ருஷ்ய நாடாளுமன்றத்தைத் தோற்கடித்த பின்பு, கலக்கத்தையூட்டும் தொடர்ச்சியான நகர்த்தல்களைச் செய்தார். நாடு முழுவதிலும் தேர்தல் மூலம் நிறுவப்பட்ட சட்டவாக்குச் சபைகளைக் கலைத்தார். தீவிரவாத அரசியற்கட்சிகளையும், எதிர்க்கட்சிப் பத்திரிகைகளையும் மூடினார். சோவியத் ஒன்றியத்தில் நடைமுறையில் இருந்த வதிவிட அனுமதி முறையை மீண்டும் ஏற்படுத்தி, மொஸ்கோவில் இருந்து ஏறக்குறைய 10,000 பேரை வெளியேற்றினார். வெளியேற்றத்திற்கு மக்கள் ஆதரவளித்தனர். ஆனால் வெளிப்படையான இனவாதமாக இருந்தது. வெளியேற்றப்பட்டவர்களில் அநேகம் பேர் தென் கோகேசியப் பிரதேசக் கறுப்புத் தோலுடைய மக்களாவர்.

டிசம்பர் 12 ஆம் திகதி நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தல், மற்றும் ஆறு மாதங்களுக்குப் பின் வரும் ஜனாதிபதித் தேர்தல் வரைக்கும், நாட்டின் உறுதி நிலையைப் பேண எடுக்கப்பட்ட தற்காலிக நடவடிக்கைகளே இவை என்றும் கூறப்பட்டது. ஆனால் பல வாரங்களாக ஜூன் மாதம் வரும் தேர்தல் நடைபெறமாட்டாது என்று யெல்சின் உதவியாளர்கள் கூறிவருகிறார்கள். 1996 ஆம் ஆண்டில் இன்னுமொரு தடவை போட்டியிடுவதில்லையென்றும்யெல்சின்பத்திரிகை ஆசிரியருக்குக் கூறினார். ஒரு மனிதனுக்கு மிகவும் பொறுப்பு வாய்ந்த வேலை என்றும், தனக்குப் பின் பதவிக்கு வருபவரைக் கண்டுபிடித்து அவரைப்பயிற்றுவிக்கிறதே தனது பிரதான வேலை என்றும் கூறினார். இன்றும் யெல்சினே நாட்டின் அதிக மக்கள் ஆதரவுள்ள அரசியல்வாதியாவார். மக்கள் மீது இரக்கமுள்ள சர்வாதிகார ஆட்சி நடாத்துவதாக இவர் நோக்கப்படுகிறார். ஆனால் ருஷ்யாவின் பொருளாதாரப் பிரச்சினைகள் மிகவும் பாரதூரமாக இருப்பதனால் அடுத்த ஜூன் மாதம் நடைபெற இருக்கும் தேர்தலில் வெல்லுவது நல்லவர் எனப்படும் பொரிஸ்ஸுக்கும் கஷ்டமாயிருக்கும்.

நியூஸ்வீக், நவம்பர் 15, 1993

## நோர்வே — பனிச்சறுக்குக் கலை

நோர்வீஜியர்கள் ஒருவகையில் எல்லாம் வல்லவர்கள். முதலில் அவர்களைப் பாலஸ்தீனிய இஸ்ரேலியப் பேச்சாளர்களை ஒன்று சேர்த்துக் கதைக்க வைத்தனர். உலக அமைதியைப் போல் வட ஐரோப்பியர் மிகமுக்கியமானதாகக் கருதும் பனிச்சறுக்கல் விளையாட்டுத் துறையில் இப்பொழுது நோர்வீஜியர்கள் ஒரு பெரும் சாதனைத் தரமான கண்டுபிடிப்புச் செய்துள்ளனர். சென்ற வாரம் அவர்கள் வெளிப்படுத்திய புதிய பனிச் சறுக்கல் ஸ்கேட் பனியில் சறுக்கிச் செல்லும் ஒவ்வொரு 1,000 மீற்றருக்கும் ஒரு வினாடிப்(செக் கன்) பொழுதை மீதமாக்கும். காபன் இளைய உருக்கு ஸ்கேட்ஸ் பாதத்திற்குப் பொருத்தமாய் வடிவமைக்கப்பட்டிருப்பதுடன் வழக்கமான 625 கிராம் நிறையான ஸ்கேட்டை விடவும் மூன்றில் ஒரு பங்கு பாரம் குறைந்ததாகும். நோர்வேயின் அதிவேகப் பனிச்சறுக்கல் வீரரான ஜொஹான் ஒளவ் கொஸ் அடுத்த பனிக்கால ஒலிம்பிக் விளையாட்டுகளின் போது அந்த ஸ்கேட் அனைவருக்கும் கிடைக்கக் கூடியதாகச் செய்ய வேண்டும் என்று கூறுகிறார் ஆனால் தற்பொழுது உள்ளது ஒரேயொரு அத்தகைய ஸ்கேட் சோடி மட்டும் தான். அது அவருடைய பாதங்களுக்கு ஏற்ப வடிவமைத்து வார்க்கப்பட்டதாகும்.


# 'நேட்டோ' அமைப்பிற் சேர்வதற்கு முயற்சி

பொன்னிலிருந்து எழுதியவர்:-
— ஜேம்ஸ் ஓ ஜாக்சன் —

ஜேர்மனியின் ட்ரவமுன்டே நகரில் தனது நேட்டோ சகபாடிகளை, அமெரிக்க பாதுகாப்புச் செயலர் லெஸ் அஸ்பின் சந்தித்தபொழுது: ''இது ஒரு புத்தம் புதிய உலகாகத் தென்படுகிறது'' என, ஏற்பட்டுள்ள பிரச்சினையைப் பற்றி மிகச் சுருக்கமாக விபரித்தார். அது உண்மை தான். தனது பகைவர்கள் யார் எனத் தெரியாத அட்லான்ரிக் கூட்டமைப்பு, அதன் வரப்போகும் நண்பர்களும் யார் எனத் தடுமாறும் நிலையில் உள்ள, அவர் கூறிய உலகமாகும். அக்காலத்திற் பிரச்சினைகளை ஏற்படுத்திய கெடுபிடி யுத்தம் காரணமாகக்கிழக்கில் இருந்து வரும் மேற்கு ஐரோப்பா மீதான அச்சுறுத்தலைத் தடுக்க அமைக்கப்பட்ட வாளும், பாதுகாப்புக் கேடயமும் என்ற கொள்கையை அரசியற் கிளர்ச்சிகளும், மற்றும் பிரதேசச் சச்சரவுகளும் மலிந்துள்ள இன்றைய ஐரோப்பாவில், தடுமாற்றமடையும் நேட்டோ கட்டிப்பிடித்துக் கொண்டு நிற்கின்றது. ஆனால், அச்சுறுத்தலும், செயற்பாடும் மாறி விட்டன. சோவியத் பேரரசில் இருந்து அபாயம் வரவில்லை. அதன் உருக்குலைந்த பகுதிகளில், இரத்தத்தில் வஞ்சம் தீர்க்கும் முகமாகப் பால்கன் மற்றும் கோகேசஸ் ஆகிய இடங்களில் நடைபெறும் சிறிய யுத்தங்களில் இருந்தே அபாயம் வருகின்றது.

சென்ற வாரம் ட்ரவமுன்டேயில் முடிவடைந்த கூட்டத்தில் எழுந்த தொனியின்படி, ஜனவரி 10 இல் நடைபெற இருக்கும் உச்சி மகாநாட்டை முன்வைத்துத், தனது பிரச்சினைகளைத் தற்போது நேட்டோ உற்று நோக்கத் தொடங்கியுள்ளது. முற்காலத்தில் விழிப்பாக இருந்ததைப் போல், இக்காலத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என அக்கூட்டத்தில் தெளிவாகத் தென்பட்டது. இன்றும், ஆயுதம் தாங்கிய அணுக்கரு ஆயுதங்கள் வைத்திருக்கும், அத்துடன் அச்சுறுத்தும் ருஷ்யாவைப் பற்றி, மந்திரிமார் எச்சரிக்கையாக இருப்பதனால், மத்திய ஐரோப்பாவின் புதிய ஜனநாயக அரசுகளுக்குப் பாதுகாப்பு உறுதி கொடுக்க விரும்பவில்லை. ''சமாதானத்திற்கான ஒத்துழைப்பு'' என்ற சுலோகமே, கூட்டத்திற் பங்குபற்றிய மந்திரிமாரால் அதி கூடுதலாகக் கொடுக்கக்கூடியதாக இருந்தது. அத்துடன், எதிர்காலத்திற் கனமான, ஆனால், விபரிக்கப்படாத ஏதாவதற்கு வாக்குறுதியும் அளிக்கப்பட்டது.

இவ்வொத்துழைப்புக்கான சுலோகம், முன்னாள் வோர்சோ ஒப்பந்த அங்கத்துவ நாடுகள் எதிர்காலத்தில் நேட்டோவில் அங்கத்துவம் வகிக்க வழி செய்யும் என, நேட்டோ செயலாளர் நாயகம் மான்:பிறெட் வோனர் நேர்மையாக விளக்கினார். ''எமது வழிமுறைகளை, எமது சக்தியின் கட்டமைப்புகளைத், தமக்குத் தேவையான முறையில் அமைத்துக் கொள்ள இது உதவும்'' எனக் கூறுகின்றார். ஆனால், விபரமாக விளக்கும் பொழுது, பாதுகாப்பு உத்தரவாதம் இவ்வொழுங்கில் அமையவில்லையென்றும், அங்கத்துவம் பெறுவது மெதுவாகவே செல்லும் என்றும் கூறுகின்றார்.




**இக்கூட்டமைப்பின் அண்மைக்கால எதிரிகள் அதன் புதிய நண்பர்களாக முயற்சிக்கின்றனர். ஆனால் மேலும் விரிவாக்கினால் ருஷ்யரையும் கணிப்பில் கொள்ள வேண்டிவரும்.**

அதிகம் மந்தமாகச் செல்வது போல் சிலருக்குத் தோன்றுகிறது. ஜனநாயகப் பாதையில் முன்னேறிய முன்னாள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளான போலந்து, ஹங்கேரி செக் குடியரசு மற்றும் சிலோவாக்கியா போன்றவற்றுக்கு விரைவில் அங்கத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என வற்புறுத்தும் ஜேர்மனியின் பாதுகாப்பு அமைச்சரான வோல்கர் றூஹே, ''உறுதிப்பாட்டை நாம் ஏற்றுமதி செய்யவில்லையெனில் உறுத்யற்ற நிலையை நாம் இறக்குமதி செய்யவேண்டி நேரிடும்'' என எச்சரித்துள்ளார். அத்துடன் ஒத்துழைப்பை வரவேற்பது அங்கத்துவம் கொடுப்பதற்கு ஈடாகாது எனக் கூறுகின்றார்.

அமெரிக்க நாட்டின் வெளிநாட்டுத் தொடர்புகள் சபையின் கடைசியாக வெளிவந்த வெளிநாட்டு விவகாரங்கள் என்னும் பத்திரிகையில் இஃவிடயம் மேலும் விவாதிக்கப்பட்டுள்ளது றான்ட் கோப்பரேஷனின் மூன்று முதுநிலைப் பகுப்பாய்வாளர்கள் இப்பத்திரிகையில் எழுதும் பொழுது, ''தனது செயற்பாட்டுப் பிரதேசத்திற்கு வெளியே நேட்டோ செல்லவேண்டும். அல்லாவிட்டால் அது செயல றுவிடும்'' என எச்சரிக்கிறார்கள். மேற்கு ஐரோப்பிய அரசியற் பொருளாதார மற்றும் இராணுவக் கட்டமைப்பில் எவ்வளவு விரைவாகப் புதிய நாடுகள் சேர்க்கப்படுகின்றனவோ அதில் கிழக்கு ஐரோப்பாவில் ஜனநாயகத்தின் வெற்றி தங்கியுள்ளது. சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிராக மட்டுமல்லாமல் மேற்கு ஐரோப்பாவில் எழக்கூடிய இராணுவச் சச்சரவுகளைத் தடுக்கும் முகமாகவே அட்லான்ரிக் நட்புறவுக் கட்டமைப்பு ஆக்கப்பட்டது. ஜேர்மனியில் இராணுவமயச் செயற்பாடு மீண்டும் வளருவதை அது தடுத்தது. இரு நேட்டோ நட்பு நாடுகளான கிரேக்கத்துக்கும், துருக்கிக்கும் சைப்பிரஸ் மீது ஏற்பட்ட பிரச்சினை காரணமாக யுத்தம் ஏற்படுவதையும் அது தடுத்தது. கிழக்கு ஐரோப்பாவையும் அடக்கக்கூடிய மாதிரி விரிவடைந்தால் நேட்டோ இன்றும் அவ்வாறு செயலாற்ற முடியும். 'வெளிநாட்டு விவகாரங்கள் பத்திரிகைக் கட்டுரையாளர் கூறுவதைப் போல ''முரண்பாடுகள் வெளியே தோன்றிக் கூட்டமைப்புக்குள் புகுவதிலும் பார்க்க ஒரு கூட்டமைப்புப் பாதுகாப்புக் கட்டமைப்பினால் இவற்றை அணுகுவது சிறந்ததாகும்.''

நேட்டோப் பழைமை வாதிகள் ஏற்க முடியாத விதமாக நேட்டோ யூரல்ஸ் வரைக்கும் அதற்கு அப்பாலும் சென்று ருஷ்யாவையும் அதனுள் அடக்கவேண்டும் எனச் சில பகுப்பாய்வாளர்கள் இன்னும் ஒரு படி மேலே எடுத்துரைக்கிறார்கள். பொதுவாகப் பழைமையான கருத்துக்களை உடைய யோசனைப் பெட்டகமான வோஷிங்ரனில் அமைந்துள்ள பாதுகாப்புக் கொள்கை மையத்தின் பணிப்பாளர் ஃபிராங்க் காஃப்னி, ''ருஷ்யர் உள்ளே வந்தால் நேட்டோ என்பது இல்லாமற் போய்விடும்'' என்று கூறுகிறார். மொஸ்கோவிற் காணப்படும் ஆதிக்கப் போராட்டம், நேட்டோவைப் பாரம்பரிய முறையிற் பலப்படுத்துவதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது என நம்பும் காஃப்னி ''கிழக்கிலிருந்து அச்சுறுத்தல் இருப்பதை அண்மைக் காலத்தில் நடந்தவை மீண்டும் வலியுறுத்துகின்றன'' என்று கூறுகிறார்.

எனினும் புதிய அட்லான்ரிக் இராணுவ ஒழுங்கில் வரக்கூடிய புதிய அங்கத்தவரில் ருஷ்யாவும் ஒன்றாக இருக்கலாம் என ட்றவமுன்டேயில் அஸ்பின் மகிழ்ச்சியுடன் கூறினார், ஐரோப்பாவிற் பாதுகாப்பும், கூட்டுறவும் என்ற மகாநாட்டில் பங்குபற்றும் 53 நாடுகளில் எவற்றுக்கும் சமாதானத்திற்கான ஒத்துழைப்புத் திட்டத்தில் சேர அனுமதி இருக்கவேண்டும் எனக் கூறி ''ருஷ்யாவும் சேரலாம், உக்கிரேனும் சேரலாம்'' என அஸ்பின் கூறினார்.

அஸ்பின் கூறுவதைப் போன்று நிச்சயமற்ற சமாதான நட்புறவுத் திட்டத்தில் சேர்வது, நேட்டோவில் சேர்வது போல் அன்று, இதில் ருஷ்யாவின் பார்வை படிப்படியாகத் தெளிவாகவும் விரோதமாகவும் தென்படுகிறது சென்ற ஆகஸ்ட்டில் போலந்தின் அங்கத்துவத்தை ஆமோதிப்பதாகக் காட்டிய பின்னர் முக்கிய மேற்குத் தலைவர்களுக்கு செப்ரெம்பர் மாதம் எழுதிய இன்று அவப்பெயர் பெற்ற கடிதத்தில் தனது நிலையிலிருந்து பொரிஸ் யெல்சின் பின்வாங்கி கிழக்கு நோக்கிய ஆதிக்க விரிவாக்கத்திற்கு எதிராக எச்சரித்தார். அன்றிலிருந்து நாடாளுமன்றப் போரில் யெல்சினுக்கு ஆதரவு அளித்த ஜெனரல்மார் இவ்விடயத்தில் ஒரு விறைத்த தொனியிற் பேசி வருகிறார்கள். ''நேட்டோ ஓர் இராணுவ நட்புறவுக் கூட்டமைப்பாகும். அதன் விரிவாக்



போலந்துத் துருப்புக்கள்: ''நாங்கள் ஐரோப்பாவை இருபகுதியாக பிரிக்க விரும்பவில்லை: அதே நேரம் ருஷ்யாவையும் தனிமைப்படுத்த விரும்பவில்லை'' என்றார் நேட்டோவின் செயலர் வோணர்.

கத்தின் நோக்கத்தைப் பற்றி நாம் யோசிக்க வேண்டியுள்ளது. இம்முறை, எமது பழைய வோர்சோ ஒப்பந்த நட்பு நாடுகளுடன் சேர்ந்து எமக்கு எதிராக மேற்கு நாடுகள் அணி சேர்கின்றனவா?'' என ருஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் பவல் பிறச்செவ் வினவுகிறார்.

உலகத்தின் இரண்டாவது சக்தி வாய்ந்த அணுக்கரு ஆயுதப்பலத்தைக் கொண்ட நாட்டின் படைத்தலைவர் இவ்வாறு யோசிக்கும் பொழுது, மேற்கு நாடுகள் அச்சமுறுகின்றன. ருஷ்யாவின் வலதுசாரிகளின் அழுத்தத்திற்கு வளைந்து கொடுப்பதை வோனரும், அஸ்பினும் மறுக்கும் அதே வேளையில், தீவிர விசனம் ஏற்படுவதாக ஒத்துக்கொள்கிறார்கள். ''ருஷ்யாவின் அச்சுறுத்தலுக்கு நாம் பயப்படுகிறோம் என்பதல்ல. பிரச்சனையைத் தீர்ப்பதிலும் பார்க்க, அவற்றை அதிகரிக்காமல் எவ்வாறு செயற்படலாம் என்பதே எமது அக்கறையாகும்'' என அஸ்பின் கூறுகின்றார். ''நேட்டோ யாது செய்யினும் அது ருஷ்யாவிற்கு எதிராக இராது. ருஷ்யாவைத் தனிமைப்படுத்த மாட்டோம்'' என வோனர் கூறுகின்றார். உறுதிநிலையில்லாத பதற்றத்தில் இருக்கும் ருஷ்யாவைத் தூண்டிக் கிளறுவதால், மீண்டும் பழைய அபாயகரமான கெடுபிடி யுத்தநிலைக்குத் தள்ளப்படலாம் என்பதே அவர்களின் விசனமாகும். ''மொஸ்கோவிற்கு எதிரான ஒரு நிலை எடுப்பதனால், இப்போது கிழக்கு ஐரோப்பா மீது இல்லாத ருஷ்யாவின் அச்சுறுத்தலை மீண்டும் தூண்டுவதாக அமையலாம்'' என, ஒரு முதுநிலை நேட்டோ இராஜதந்திரி கூறுகின்றார்.

நேட்டோவை விரிவுபடுத்தி மீளமைப்புச் செய்யும் அதே நேரத்தில், கெடுபிடி யுத்தத்தின் இறந்த பிசாசுகளை, எவ்வாறு மீண்டும் எழச்செய்யாமல் இருக்கும் யுக்தியே கருத்திற் கொள்ளவேண்டியுள்ளது. ஐரோப்பாவின் பாதுகாப்பில் ருஷ்யாவிற்கு ஒரு முக்கிய பங்குண்டு என்ற நிலைப்பாட்டை, மிக வைராக்கியமான காலங்கடந்த பனிப்போர் வீரர்கள் தவிர்ந்த மற்றும் யாவரும் ஏற்றுக்கொள்கிறார்கள். ''ருஷ்யாவைக் கவனத்திற் கொள்ளவேண்டும். ருஷ்யா பேச்சு வார்த்தைகளிற் கலந்து கொள்ள ஏதுவாக மேசைக்கு வர வேண்டும்'' என்று ஜேர்மனியின் முன்னாள் வெளிநாட்டமைச்சர் ஹான்ஸ் டியற்றிச் கென்ஷர் அறிவுறுத்துகிறார். வளரும் கிழக்கு ஐரோப்பிய ஜனநாயக நாடுகளுக்கு அங்கத்துவம் கொடுப்பதால், பாதுகாப்பு உத்தரவாதமும் கொடுக்கப்படும் என்ற தவறான உறுதிமொழிகளை மேற்கு நாடுகள் வழங்கலாம். ''ருஷ்யரை இதில் ஈடுபடுத்தாவிடின், இந்நாடுகளை ஒரு வழியிலும் பாதுகாக்க முடியாது'' என மியூனிச் நகருக்கு அண்மையில் உள்ள, எபென்ஷோசனில் அமைந்துள்ள சர்வதேச அரசியலும் பாதுகாப்பும் என்ற ஆராய்ச்சி நிறுவனத்தின் உபபணிப்பாளர் உவே நேலிக் கூறுகிறார். விசேடமாக, அணுக்கரு ஆயுதங்களைப் பொறுத்தவரையில் ருஷ்யாவின் இராணுவப் பலம் முன்னாள் சோவியத்தின் இராணுவப் பலத்தை ஒத்ததாகும் எனச் சுட்டிக் காட்டுகிறார். ''மேற்கின் அடிப்படைப் பாதுகாப்புத் தொடர்பு ருஷ்யாவுடனேயன்றி, அதைச்சுற்றியுள்ள நாடுகளுடன் அல்ல'' என்று மேலும் கூறுகிறார். முன்னாள் வோர்சோ ஒப்பந்த நாடுகள் தமது படைகளை ஒன்றிணைத்து, இராணுவக் கூட்டமைப்பொன்றை உருவாக்கி நேட்டோவுடனும், ருஷ்யாவுடனும் பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என ஆலோசனை, வழங்குகிறார்.

நேட்டோவின் விரிவாக்கமும், மீளமைப்பும் பற்றிய அமளியான விவாதத்தின் அடியில், புதிய நிபந்தனைகளுக்கேற்றவாறு நேட்டோ தன்னை ஒழுங்கு படுத்தி வருகின்றது. பால்கன் பிரதேசத்தில் நேட்டோவால் கொடுக்கப்பட்ட அவாக்ஸ் விமானங்களின் (Awacs) செயற்பாடு, அட்றியாற்றிக்கின் தடைகள், பொஸ்னியாவிற்கு ஒரு சமாதானத் திட்டம் சமரசம் பேசுவோரால் வழங்க முடியுமாயின், அங்கே 50.000 துருப்புக்களை அனுப்பும் நேட்டோவின் ஆயத்தப் பணிகள் ஆகியவற்றைப் பெருமையுடன் நேட்டோ இராஜதந்திரிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

''பிரதேசத்திற்கு வெளியே எனின், வியாபாரமும் இல்லை என்ற சுலோகம் காலங்கடந்து விட்டது. பிரதேசத்திற்கு வெளியே செயற்படுகிறோம். ஆனால், கண்டிப்பாகச் செயற்பாட்டில் உள்ளோம்'' என வோணர் கூறுகிறார்.

அவை சிறிதாக ஆரம்பிக்கப்பட்டவை; ஆனால் மிக முக்கியமானவை. அஸ்பின் விபரித்த புத்தம் புதிய உலகில், யாருக்குப் பயப்படவேண்டும்? யாருடன் நட்புக்கொள்ள வேண்டும்? என நேட்டோ தெரிந்திருக்க வேண்டும்.

உதவிய நிருபர்கள்:–
வோஷிங்ரனில் இருந்து
டேவிட் அய்க்மன்.
பிரஸஸல்லில் இருந்து
யே பிராநேகன்.
மற்றும் வியன்னாவில் இருந்து
ஏஞ்சலா வியூக்கர்.

டைம் நவம்பர் 8, 1993

# காரியம் சாதிக்க

# ஐ. நா. வால் முடியுமா?

**1992** ஜனவரியில் ஐ. நாவின் செயலாளர் நாயகமாக, பூட்றோஸ் பூட்றோஸ் காலி பதவியேற்ற போது, அவருடைய பொறுப்புக்களின் அளவை விஞ்சி நின்றது, அவர் பெறவிரும்பியதை அடைந்து விட்ட செயல்தான். எகிப்து நாட்டின் கல்விமானும், இராஜ தந்திரியுமான 70 வயதுடைய அவர், வளைகுடாப் போரினாலும், 40 ஆண்டுகாலப் பனிப்போரினால் விளைந்த அரசியற் பாரிச வாதத்தைத் தீர்க்கும் ஆர்வத்தினாலும், ஓங்கி நின்றஓர் அமைப்பையே கையேற்றார். இந்தப் பதவியைப் பெற்ற முதலாம் அராபியர், முதலாம் ஆபிரிக்கர், முதற் பிரெஞ்சுமொழி பேசுபவர் என்ற பெருமை இவருக்குண்டு. பதவியேற்றதுமே பூட்றோஸ் காலி எதிர்பார்ப்புக்களுக் கெல்லாம் எதிராகவே நடந்து கொண்டார். நியூயோர்க்கிலமைந்துள்ள ஐ. நா. செயலகத்தின் அளவைக் கத்தரித்ததன் மூலம் அதிகாரத்துவ மோகம் கொண்ட மேலை நாடுகளிடம் நல்ல பெயர் எடுத்துக் கொண்டார். இஸ்ரேலைத் தண்டிக்க மறுத்து, ஏனைய அரபு நாடுகளைத் திகைப்படையவைத்தார். பனிப் போருக்குப் பிந்திய உலகத்தின் வெவ்வேறு பாதங்களிற் காளான்கள் போன்று தோன்றும் சச்சரவு மையங்களை அடக்கி, ''அமைதியை நிறைவேற்றும் பணிக்காக, நிலையான ஐ. நா. படையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்'' என்ற கோரிக்கையை முன் வைத்ததன் மூலம், அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் கணிப்பை ஈர்த்தார்.

புதிய உலக அமைப்பை நோக்கிய பாதையில், ஒரு விசித்திர நிகழ்வு விளைந்தது. பூட்றோஸ் காலி பதவியேற்ற காலந்தொட்டுச், சமகாலத்திலேயே தொடர்ச்சியான உள்நாட்டுப் போர்கள், இனப்படுகொலைகள், மனிதாபிமானப் பேரழிவுகள் என்ற நிகழ்வுகளைச் சந்திக்க வேண்டியவரானார். இவை முன்னெப்போதையும் விட அபாயகரமானதும், செலவீனங்கள் அதிகமானதுமான ஐ. நா. தலையீட்டிற்கும் வழிவ ‹ த்தன.



ஐ. நா. செயலாளர் நாயகம்:
பூட்ரோஸ் பூட்ரோஸ்காலி

துணிச்சலான மனிதாபிமான நடவடிக்கையாக ஆரம்பித்த சோமாலியத் தலையீடு, ஈற்றில் போர்ப் பிரபு மொகமட் பாரா அயிடித்தி படையினருடனான இரத்தப் பெருக்கெடுக்கும் போராகச், சீர்கெட்ட நிலைக்குப் போய் விட்டது. இந்த அவசரத்தனம், பல தரப்பினரையும் அணைத்துச்செல்ல வேண்டும் என்ற கிளின்ரனின் பேராவலை அணைத்துவிட்ட தோடல்லாமல், செல்வாக்கு மிக்க ஒரு நண்பனை பூட்றோஸ் காலி இழந்துவிடவும் வேண்டியதாயிற்று.

பொஸ்னியாவிலும், குறோசியாவிலும் உலக அமைப்பினாற் ''பாதுகாப்பான புகலிடம்'' என்பனவெல்லாம் நகைப்புக்கிடமானவையாகி விட்டன. ஐ. நா. படையணிகள் கறுப்புச் சந்தை வியாபாரத்திலீடுபடுவதாகவும், இனப் படுகொலைகளைப் பற்றிப் பராமுகமாக இருப்பதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஜீன் போட்றாண்ட் அரிஸ்ற்றைடை, மீண்டும் ஹெயிட்டுக்குக் கொண்டு வருவதற்கான ஆயத்தங்கள் செய்வதான ஐ. நா.வின் மிகப்புதிய நடவடிக்கை தொல்லைக் குள்ளாகியுள்ளது. அமெரிக்கக், கனேடியப் படைகளின் அணிகளில் முன்கூட்டியே வந்து சேர்ந்த குழுவினர் போட்-அவு-பிறின்சிற்கு (இளவரசரின் துறைமுகம்) சென்ற வாரம்வந்தடைந்ததும், உள்ளூர்த் துப்பாக்கியாளர்கள் ஐ. நாவின் வருகையை எதிர்த்து, ஒரு பொது வேலை நிறுத்தத்தை அறிவித்தனர். இதற்குப் பணியாத குடிமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தனது பதவியைப் பற்றி விமர்சித்த ஐ. நாவின் செயலாளர் நாயகம், ''அது மணிக்கு 120 மைல் வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் வாகனத்தை, ஓட்டிக்கொண்டிருக்கும் போதே, ஓட்டிச் செல்பவர் திருத்துவது போன்ற தொழில்'' என்று விமர்சித்துள்ளார். 1989 ஆம் ஆண்டிலிருந்து 14 நாடுகளில் அமைதி காக்கும் பணியில் ஐ. நா ஈடுபட்டுள்ளது. இது, ஐ. நா ஆரம்பித்து முதல் 44 ஆண்டுகளில் மேற்கொள்

ளப்பட்ட அனைத்து நடவடிக்கை களையும்விட அதிகமாகும். அமைதி காப்புப் பணி தொடர்பான பாரம்பரிய நம்பிக்கைகளுக்கு விழுந்துள்ள பேரடி இவையாகும். சர்வதேச மத்தியஸ்தத்திற்கு அனுமதியளிக்கும் ஆதிபத்திய உரிமையுள்ள நாடுகள், அங்கீகரிக்கப்பட்ட படையங்கள், போர் நிறுத்தங்கள் என்பனவெல்லாம் உண்டு. ''இன்று போர் வெறியர்களோடும், காடையர்களோடும் ஐ. நா. மோதவேண்டியுள்ளது. இவர்களும் அந்த அமைப்பை உதாசீனம் செய்ய முடியாது. ஆனால், இவர்கள் அதன் உறுப்பினர்களல்லர்''. 40 வருடகாலம் ஐ. நா. வோடு அனுபவம் கொண்டவரும், தற்போது நியூயோர்க்கிலுள்ள போட் தர்ம நிறுவனத்திலுள்ளவருமான சேர் பிறயன் ஷகாட்டின் கருத்து இதுவாகும்.

பூட்றோஸ் காலி பொறுப் பேற்றுள்ள நிறுவனம், குழப்பம் நிறைந்த ஒன்று என்பதில் எவருக்கும் ஐயமில்லை. தன் பதவிக்காலத்தில் அவர் சில ஆதரவாளர்களையே பெற்றுள்ளார். தனது குத்திக் காட்டும் தன்மையாலும், ஐ. நாவின் தூதுவர்களை உதாசீனம் செய்து, அவர்களது வெளியுறவு அமைச்சர்களோடு நேரடியாகத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளுவதாலும் அவர்களைத் தன்னிலிருந்து அந்நியப் படுத்தியுள்ளார். தனக்கு விருப்பமில்லாத போது, பொது இடங்களிலேயே கண்டிக்கும் பழக்கம் உள்ளவரென்பதால், அரசுகள் பல வற்றின் ஆத்திரத்தையும் சம்பாதித்துக் கொண்டுள்ளார். ''வரலாற்றின் இன்றைய கால கட்டத்தில், இந்தப் பதவிக்குச் சரியான ஆள் இவர் தானா என்று, என்னால் நிச்சயமாகக் கூறிக்கொள்ள முடியவில்லை'' என்று கூறியுள்ளார் ஒரு மேற்கு நாட்டு இராஜதந்திரி. ''ஐ. நாவின் பெயரைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்யக்கூடிய ஒருவரே, இந்த நிறுவனத்திற்குத் தேவை'' என்பதும் அவர் கருத்தாகும்.

பொதுமக்கள் தொடர்பு என்பது, பூட்றோஸ் காலியின் விருப்பத்துக்குரிய ஒருவிடயமல்ல. சென்ற டிசம்பரில் அவர் சரேஜேவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட போது, கூடிநின்ற மக்கள் அவர் மீது எச்சிலைக் காறித் துப்பிக், 'கொலைகாரன்' என்று கூச்சலிட்ட போது பூட்றோஸ் காலி வார்த்தைகளால் திருப்பியடித்தார். ''உலகத்திலே வேறு 10இடங்களிலும் பார்க்க, உங்கள்நிலை மோசமானதல்ல. வேண்டுமானால் பட்டியல் தருகிறேன்'' என்றார் அவர். மொகடிசுவில் செயலாளர் நாயகத்தை அயிடித்தின் ஆதரவாளர்கள் கல்மாரி பொழிந்து வரவேற்றார்கள். சோமாலியப் போர்ப் பிரபுக்கெதிரான தனிப்பட்ட வஞ்சத்தை பூட்றோஸ் காலி தீர்த்துக் கொள்வதற்காகவே இந்த ஐ. நா. நடவடிக்கை என்பது சில இராஜதந்திரிகளின் கருத்து. ''அபத்தமான'' குற்றச் சாட்டு இதுவாகும் என்று கூறும் பூட்றோஸ் காலியின் உதவியாளர், செயலாளர் நாயகம் ''உலகத்தின் பலிக்கடாவே, தான் வகிக்கும் பதவி என்பதைப் புரிந்து ஏற்றுக் கொள்கிறார்'' என்று சொல்கிறார். அவருடைய அலுவலர்கள் அவ்வளவு நிச்சயமாக இருக்கவில்லை. அமெரிக்கக்கொங்கிரஸ் ஐ. நா மீது குற்றங்களைச் சுமத்திய போது, சோமாலியா தொடர்பான அமெரிக்காவின் ஆத்திரம், தவறான வழிகாட்டலால் ஏற்பட்ட ஒன்று என பூட்றோஸ் காலியின் உதவியாளர்கள் குற்றம் சுமத்தினார்கள். ''ஐ. நா. வைப்புரிந்து கொள்ளும் விடயம் வரும்போது கொங்கிரஸ் சந்திரனில் நிற்கிறது. ஐ. நா. வை 'இல்லை' என்று சொல்ல வைப்பது அமெரிக்காவிற்கு இலகுவான காரியமாகும். பாதுகாப்புச் சபையில், தமக்குள்ள இரத்ததிகாரப் பிரயோகத்தை உபயோகிப்பதன் மூலம் அதனை நிறைவேற்ற முடியும்'' என்று கூறுகிறார் ஐ. நா. வைச் சேர்ந்த ஓர் இராஜதந்திரி.

தற்போதைய விமர்சனங்களுக்குக் காரணம், தமக்கென்று ஒதுக்கப் படாத இராஜீய நீரோட்டத்துக்குள் ஐ. நா. ஓடம் விடுவதுதான். ''அடிப்படை வினாவுக்கு, எவருமே விடை கூறத் தயாராக இல்லை. நாடுகளுக்குள் பிணக்குகள் ஏற்படும் போது, மத்தியஸ்தம் செய்து வைக்கும் பழைய அமைப்பாகவா ஐ. நா இயங்குகிறது? அல்லது, மக்கள் கொலை செய்யப்படும் சூழ் நிலைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் படையணியா? பொலிஸ் படையா? சுகாதாரத் திணைக்களமா அது?'' என்று வினாவுகிறார் சூர்க்காட். ஒரு படையணி அளவிலான நிரந்தரப் போர் வீரரமைப்பு ஐ. நாவிக்கில்லாது போனால்-உடனே செயற்பாட்டில் இறங்க முடியாது விட்டால்-ஒரு சில அமைதிப் பணிகளில் மட்டுமே வெற்றி காண முடியும் என்பது அவரது அபிப்பிராயம். உலகத்தின் சுமைமிக்க சிக்கல்களைத் தீர்ப்பதற்கு, ஐ. நா.வை மீளமைப்புச் செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது. செயலாளர் நாயகத்தைக் குறி பார்த்துப் பலன் ஏற்படப் போவதில்லை.

ஐ. நா. விலிருந்து

—கரேன் பிறெஸ்யோ.—

நியூஸ்வீக், ஒக்ரோபர் 18, 1993

# ஆதாரம் அற்ற அபாய எச்சரிக்கை

பரந்த பசுபிக் பெருங்கடலைக் கடந்து வரும் சரக்குக் கப்பல்கள், சரக்குகளுக்குப் பதிலாக உணவுப்பற்றாக்குறையும், சுகாதாரச் சீர்கேடும், நீர்வசதிக் குறைவும் கொண்ட மனிதக் கூட்டத்தை ஏற்றி வருவதாகவும், இது, பத்தொன்பதாம் நூற்றாண்டிலே இடம்பெற்ற 'ஆபத்தான மஞ்சள் ( நிறத்தவர் ) முற்றுகை', 1990 இலும் மீள இடம் பெறுவதன் அறிகுறியாகவும் காட்டி, அமெரிக்கக் குற்றவியல் அதிகார சபை அமெரிக்கரிடையே அச்சத்தையும், வெறுப்பையும் உருவாக்கி வருகிறது. வெளியான அறிக்கைகளின் பிரகாரம், ஒவ்வோராண்டும் 100,000 மக்கள் அமெரிக்காவினுட் புகுந்து, சட்ட விரோதமாகக் குடியேறுகின்றனர் என்று கூறப்படுகிறது. இதன் காரணமாகச், சர்வதேச நீர்ப்பரப்பிலே நடமாடும் கப்பல்களைத் தடுத்துப் பரிசோதிக்குமாறு ஐக்கிய அமெரிக்க அரசு கட்டளை பிறப்பித்துள்ளது.

சமீபகாலத்தியக் கணக்கெடுப்பின்படி, ஐக்கிய அமெரிக்காவின் பிரதான பகுதிகளான மெக்சிக்கோ, எல்சல்வடோர், சௌதமாலா ஆகிய மூன்றிலும் மிகப் பெருமளவு குடியேறியுள்ள அந்நியரோடு, அமெரிக்காவில் 3.2 மில்லியன் வந்தேறுகுடிகள் வாழ்வதாகத் தெரிகிறது. இவ்வாறு குடியேறியவர்களில் சீனரே பெரும்பான்மையினர். அண்மையில் வெளியேற்றப் படவுள்ள ஆசியாக் காரர்களின் தொகை 12,437 என்றும், இவர்களில் 5,764 பேர் சீனர் என்றும் சொல்லப்படுகிறது.

வெள்ளையரல்லாதவர்களில், சீனர்களின் குடியேற்ற 'முற்றுகை' யினைத் தகர்ப்பது பற்றிய பிரச்சினையே பெருந்தலையிடி. சட்ட விரோதக் குடியேறிகளைக் கட்டுப் படுத்துவதோடு, எல்லாம் முடிந்து விட்டது என்றும் கொள்வதற்கில்லை. நாட்டின் பொருளாதார வீழ்ச்சி, இந்த நெருப்பினைத் தூண்டி மேலெழ வைத்திருப்பதைப் பயன்படுத்தி மேல்வர முயல்கின்றார்கள் அரசியல் வாதிகள் என்பதுதான் உண்மை. பொருளாதாரத்திலும், மக்கள் தொகையிலும் முன்னணி வகிக்கும் கலிபோர்னியாவில், அதன் ஆளுநர் (குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்) ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதிகள் இருவரோடு குடியேற்றத் தடை முயற்சியிலே போட்டிபோடுகிறார். கலிபோர்னிய அரசு 20 சட்ட மசோதாக்களைச் சமர்ப்பித்து, அவற்றின் மூலம் குடியேற்றத் தடுப்பில் பொது மக்களின் ஒத்துழைப்பை நாடியுள்ளது. எல் பாசோ, ரெக்சாஸ் மாகாணங்களுக்கு அண்மையில் எல்லைப்புற அதிகாரிகள், பதிவுசெய்து கொள்ளாத மெக்சிக்கோவாழ் மக்கள் மீது பெருமளவில் நடவடிக்கை எடுப்பதில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால்,

## ஆசியாவிலிருந்து வந்தேறும் குடிகள் பற்றி, அமெரிக்கா அஞ்ச வேண்டிய தேவை இல்லை

குற்றவியற் செயற்பாடுகள் வீழ்ச்சி கண்டபோதும், பெருந்தொகையான கடைக்காரர்களுக்கும், வர்த்தக நிறுவனங்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் சிறுபான்மை இனக்குழுக்களுக்குச் சங்கடம் விளைவிக்கின்ற அரசாங்க சபையிலே இடம்பெற்ற விவாதத்தின்போது மக்கள் பிரதிநிதி ஒருவர்:- ''அண்மைக்காலத்தில் வந்தேறிய குடிகளைப் போல, எனது முன்னோர் இந் நாட்டிலே தங்கள் சுயமுன்னேற்றத்தைக் கருதிக் குடியேறவில்லை. சமுதாய மேன்மையே அவர்களின் குறிக்கோளாய் இருந்தது'' என்றார். இவர் கூற்றிற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், இரண்டாவது உலகப்போரின் போது ஜப்பானில் அமெரிக்கக் குடியேறிகளின் தடுப்பு முகாமில் வாசம் செய்தவரான றொபட் மட்சுய்:- ''கௌரவ உறுப்பினர் அவர்கள் இந்தக் குழுவினுள்ளே அடங்கலாம். ஆனால், பல தலைமுறைகளுக்கு முன் இங்கு குடியேறியவர்களின் வழித்தோன்றல்களான நாங்கள், அவரின் அணி அலங்காரச் சொல்வீச்சினால் சில வேளைகளிற் பாதிப்புக்கு உள்ளாக வேண்டியே இருக்கிறது'' என்றார்.

இந்தப் பிரச்சினை அமெரிக்க தலைமைப் பீடத்திற்குப் பெரும் சிக்கலாகவே உள்ளது என்பதற்கு, கிளின்ரனின் உயர்பீட அதிகாரிகளில் ஒருவரான றொபேட் றீய்ச்சின் பின்வரும் கூற்று உதாரணமாகும். ''ஆழமாகப் புரையேறியுள்ள தொழில் தேடும் ஆர்வமானது, இத்தகைய தனிப்பட்டு நிற்கும் மனப்பான்மையையும், பிரதேசப்பற்றையும், புதிய குடியேற்றக்காரர்மீது வெறுப்பையும் ஏற்படுத்துவது, 30 அல்லது, 40, ஆண்டுகளுக்கு ஒருமுறை இடம் பெறுகிறதோ என்று நான் அஞ்சுகிறேன். இதனை நாம் ஏற்பதானது பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் தற்கொலைக்குச் சமமாகும். பலவகைப் பிரிவினைகளையும், துவேஷங்களையும் நாமாகவே வரவேற்கிறோம் என்பதே இதன் பொருள்.''

றீய்ச்சின் கூற்று சரியானதே. ''தங்கம் தேடல்'' காரணமாக, அமெரிக்காவில் சீனரின் குடியேற்றம் காட்டாற்று வெள்ளமாகப் பெருகி ஓடியதல்ல. அவர்களின் வருகையாலும், உதவியாலும் அமெரிக்கப் பொருளாதாரம் மீண்டும், மீண்டும் கட்டியெழுப்பப் பட்டே வந்துள்ளது. எனவே, அவர்களின் குடியேற்றத்திற்கு முரண்பாடோ, தடையோ எதுவுமின்றி வாய்ப்பளிக்கப்படவேண்டும்.

*ஏசியாவீக், நவம்பர் 10, 1993*

# உணவு விடுதியில் பயங்கரக் கொலைகள்

## வட ஆபிரிக்காவில் வெளிநாட்டவர் எதிர்க்கொள்ள நேரும் ஆபத்துக்கள் அதிகரிக்கின்றன.

நைல் நதியை நோக்கிய படி கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் அந்த ஐந்து நட்சத்திர உணவு விடுதியின் பெயர் பெலூக்கா பிரஸ்செரி. அதன் உணவு மேசைக்குப் பின்னால் எகிப்திய தேசியக் கொடிகள் தொங்குகின்றன. இரவு வேளை 28 வயதான இசைக்கலைஞன் சபெர் அபு எல் அலா என்ற இளைஞன் அந்த உணவு விடுதிக்குள் நுழைகிறான். குளிர்பானத்துக்குக் கட்டளையிட்ட அவன், 'ஆண்டவன் பெரியவன்' என்று கோஷமிட்டபடி, துப்பாக்கி வேட்டுக்களைச் சரமாரியாகப் பொழியத் தொடங்குகிறான். இரண்டு அமெரிக்க வர்த்தகர்கள், பிரெஞ்சிய சட்டவல்லுனர் ஒருவர் பிணங்களாய்த் தரை சாய்கிறார்கள். நால்வர் படுகாயத்துக்கு உள்ளாகிறார்கள். இளைஞன் தன் கைத்துப்பாக்கியைத் தரையிற் போட்டுவிட்டுக், ''காவற்துறையினரை அழையுங்கள்'' என்கிறான். இவன் சிற்றுண்டிக் கடைகளிலே நன்கு தெரியப்பட்ட, வளர்ந்து வரும் ஓர் இசைக் கலைஞன். ஷிராஜ் என்ற அல்ஜீரியப் பெண்ணொருத்தியோடு கூட்டாகப் பாடிய இவனுடைய அராபிய பொப்பிசைப் பாடல்களின் ஒலிப்பதிவு நாடாக்கள் எகிப்திலும், இஸ்ரேலிலும் பரவலாக விநியோகமாகிக் கொண்டிருக்கின்றன. எனினும், இவன் பொப்பிசைத் துறையில் இன்னமும் பிரபலமாகவில்லை. பலமாதங்களுக்கு முன்பே தன் மகன் இசைத்துறையைக் கைவிட்டு, இஸ்லாமிய அடிப்படை வாதத்தைத் தழுவிக் கொண்டான் என்பதை இவனுடைய தாய் அறியலானாள். அபு எல் அலா உணவு விடுதியின் வாயிற் கதவுகளைத் தள்ளித்திறந்து கொண்டு வெளிப்பட்ட பொழுது, ''அல்லாவைத் தவிர, வேறு கடவுள் இல்லை; முகம்மது அவருடைய தீர்க்கதரிசி'' என்ற பாட்டொலி இவன் வாயிலிருந்து எழுந்தது.

இத்தகைய கொடுங்கொலைகள், எகிப்துக்கு நெருக்கடியான காலத்தில் இடம் பெற்றவையல்ல. இஸ்லாமியக் கடும் போக்காளர்களைக் கொண்ட சிறிய குழுக்களே தமது வன் செயல்களால், கடந்த ஒரு வருடத்தில் உல்லாசப் பயணிகள் மூலம் எகிப்துக்கும்க் கிடைத்திருக்க வேண்டிய நாலுகோடி டொலர் வருமானத்தைப் பாழடித்தன. இந்தப்பயங்கரவாதக் குழுக்களிற் சிலவற்றைச் சிறைப்படுத்தி அடக்கிய செயல் இரண்டு மாதங்களின் முன்பு இடம் பெற்றது. எனவே, தொடர்ந்து ஏற்பட்ட இடைக்கால அமைதி எகிப்திய ஜனாதிபதி ஹோஸ்னி முபாறக்கை, ''உலகத்தில் இன்று எகிப்தைப் போல அமைதியான நாடு இல்லை'' என்று வோஷிங்ரனுக்குப் பிரகடனம் செய்ய வைத்தது. இப்பொழுது இந்தக் கொலைகள்!

பின்னிரவில் நடந்த படுகொலை பற்றி, இரண்டு மணித்தியாலங்களுக்கிடையிலேயே கெய்ரோ அதிகாரிகள் ஓர் அறிக்கையை வெளியிட்டார்கள். அந்த அறிக்கையின் பிரகாரம் தெரிய வந்தது, அபு எல் அலா ஒரு தனிமையான மனநோயாளி என்பதே. ''அவன் இஸ்லாமிய அடிப்படை வாத முகவன் அல்லன். இது ஒரு கொலை விபத்து மட்டுந்தான்; வேறு ஒன்றும் இல்லை'' என்று அந்த அறிக்கை தொடர்ந்தது. ''அபு எல் அலா புத்தி சுவாதீன மற்றவன் என்பதைச் சான்றிதழ் கொண்டு நிரூபிக்க முடியும். உளவியற்காரணங்களால், அவன் 1989 ஆம் ஆண்டு இராணுவத்திலிருந்து விலக்கப்பட்டான் என்று, எகிப்திய உல்லாசப் பயணத்துறை அமைச்சர் மம்டவ் பல்தகி பத்திரிகையாளருக்குத் தெரிவித்தார். இதை மறுக்க ஆதாரம் இல்லை. எனினும் இன்னமும் அரசாங்கத்துக்கும். திட்டமிட்ட பயங்கரவாதிகளுக்குமிடையே ஆழமான முரண்பாடு நிலவுவதன் எச்சசொச்சந்தான் இந்தக் கொடுங்கொலை. எதிப்திலும், அல்ஜீரியாவிலும் வன்செயலானது வழமையான நடைமுறையாகி, அதன் விளைவாக இடம்பெறும் பயங்கரத் தாக்குதல்களை நோக்கிச் சர்வதேசக் கவனம் இன்னும் முற்றாகத் திரும்பவில்லை.

இந்தக் காரணத்தினலோயே, கடும்போக்காளரின் தாக்குதல்களுக்கு வெளி நாட்டினர் இலக்காகின்றனர். அண்மையில் அல்ஜீரியாவிற் கிளர்ச்சியாளர், பிரஞ்சியரின் நலன்பேணும் அலுவலகத்திலிருந்து மூன்று ஊழியர்களைக் கடத்திச் சென்றார்கள். கடந்த மாதம் பிரஞ்சிய நில அளவையாளர் இருவரையும், ருஷ்ய இராணுவ அதிகாரிகள் இருவரையும் கடத்திச் சென்று கொலை செய்தார்கள். இவர்களோடு மேலும் மூன்று அயல் நாட்டினர் கடத்தப்பட்டுக் கொலைக்குள்ளாயினர். அல்ஜீரியாவில் உள்ள தனது ஊழியர்களுக்குப் பள்ளி விடுமுறையைச் சாட்டாக வைத்து, நாட்டைவிட்டு நீங்குமாறு பிரான்ஸ் அறிவுரை வழங்கியுள்ளது, இத்தாலியர் சிலருக்கும், அவர்கள் பணியாற்றும்

நிறுவனத்தில் இவ்வாறு கூறப்பட்டது.

இதனோடு, பிரான்ஸ் தனது குடிமக்களை வடக்கு எகிப்துக்குப் பயணம் செய்யவேண்டாம் என்றும் எச்சரிக்கை வழங்கியுள்ளது. அண்மையில், எகிப்தின் காவல்துறை சிரேஷ்ட அதிகாரிகள் இருவர் - இவர்களில் ஒருவர் பிறிகேடியர் ஜெனரல் பதவி வகிப்பவர் - பதுங்கியிருந்து தாக்கப்பட்டதன் மூலம் கொலைக்குள்ளாயினர். வெவ்வேறு சந்தர்ப்பங்களில், வட எகிப்தில் இரு நகரங்களைச் சுற்றிவளைத்து காவல்துறையினர் தேடுதல் நடத்தி சந்தேகத்திற்குரிய நூற்றுக்கு மேற்பட்ட போராளிகளைக் கைது செய்துள்ளனர். கெய்ரோவில் இதேவேளை எட்டு இஸ்லாமியப் போராளிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. இவ்வருடத்தில் இதுவரை 15 பேர் மரணதண்டனைக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று முபாரக் வலியுறுத்திவருவது பொருத்தமற்றதாகவே எகிப்தியர் பலருக்குத் தோற்றுகின்றது. இவ்வாறு மெத்தனமாக இருப்பது பொறுப்பற்ற பழிவாங்கல்களுக்கு இடமளிப்பதோடு, எல்லைப்புறத்தில் 'வீரசாகசம்' புரிவோரைப், பகிரங்க இரவுப் பொழுதுபோக்கிடங்களில் இலட்சிய வீரர் அந்தஸ்துக்கு உயர்த்துவது போலாகும்.

கிறிஸ்தோபர் டிக்கி கெய்ரோ

*நியூஸ்வீக், நவம்பர் 8, 1993*

# "மகனும்" உயர்ச்சி அடைகிறார்

## தென்னாபிரிக்கா: மண்டேலாவின் படைவீரன் உருவாகிறான்.

இருபது வருடங்களுக்கு முன், பன்ரு ஹொலோமிசாவுக்கு ஒரு மேஜர் ஜெனரலாகவும், அரசாங்கமொன்றின் தலைவனாகவும், தென்னாபிரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக வர இருப்பவரின் அன்புக்கு, ஆதரவு உள்ளவராகவும் வரக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கவில்லை. ஆனால், மாற்றமடையும் அரசியல் நிலை, விவேகமுள்ள, உயர்வடைய விரும்பும் கறுப்பு இன மக்களுக்குப் புதிய வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இவ் வாய்ப்புக்களை முதலாவதாகக் கண்டவர்களில் 38 வயதுடைய ஹொலோமிசாவும் ஒருவர். அத்துடன், அவற்றை முனைப்புடன் எட்டிப் பிடித்தவர்களிலும் இவர் ஒருவராவார். தென் ஆபிரிக்காவின் வெள்ளை இன அரசால் கறுப்பு இன மக்களின் தாயகம் என அமைக்கப்பட்டுச், சுதந்திர நாடு எனக் கூறப்படும் வறுமை நிலையில் ட்றான்ஸ்கியின் சர்வாதிகாரி போல் கடந்த ஆறு வருடங்களாகப் பதவி வகிக்கிறார். ட்றான்ஸ்கியின் தலைநகர் உம்ரற்றாவிற்குப் புறத்தே பிறந்த நெல்சன் மண்டேலாவுடன் தனக்குத் தந்தை, தனயன் போன்ற உறவு இருப்பதாகக் கூறுகின்றார். பல்லின மக்களின் ஜனநாயகத்தை நோக்கித் தென்னாபிரிக்கா செல்லுகையில், மீள் கட்டமைக்கப்படும் தென் ஆபிரிக்கப் பாதுகாப்புப் படையில் ஹொலோமிசாவின் படையினரும் சேர்க்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவருடைய அரசின்



குருதி சிந்தும் நகர்ப்புறம் அரச படைகள்

மனித உரிமைச் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லாவிடினும், புதிய இராணுவக் கட்டமைப்பில் இக் குழந்தை முகமுடைய ஜெனரல் உயர் பதவி வகிப்பார் எனக் கூறப்படுகின்றது.

வன்முறையில் நாட்டமுடைய கறுப்பு இன மக்களின் பட்டினங்களில் ஒழுங்கை நிலைநாட்டச், சீருடையில் உள்ள அரசியலில் சரியான நிலை கொண்டுள்ள அதிகாரிகளே தேவை, ஜனநாயகத்தென்ஆபிரிக்காவின் வருங்காலத் தலைவர்களுக்குத் தேவைப்படும் நுண்ணிய மதிநுட்பமும், பலமும் சரியான அளவில் உபயோகிக்க வேண்டிய

ஓர் உத்தியோகத்தில், எவ்வாறு ஹொலோமிசா செயற்படுவார் என்று கூறமுடியாது. ஆனால், ட்றான்ஸ்கியில் 'தோழர் ஜென ரல்' என்று அன்பாக அழைக்கப் படும் இவரைப் போல், வேறொரு உயர் பதவி வகிக்கும் கறுப்பு இன அதிகாரி ஒருவரும் பொருத்தமா யிருப்பதாகத் தோன்றவில்லை. தனக்கு அரசியலில் அபிலாஷை கள் இல்லை என்று வலியுறுத்தும் இவர், ''அரசியல் சூடானது. உயர் மட்டத்தில் பதவி வகித்துள் ளேன்; எனவே பதவியை நான் எதிர்பார்க்கவுமில்லை'' என்று கூறுகின்றார்.

இவரின் அரசியற் திறன் காரணமாக, ட்றான்ஸ்கியின் மக்க ளால் மிகவும் விரும்பப்படுபவரா கவும், தென் ஆபிரிக்காவின் ஏனைய பகுதிகளில் மதிக்கப்படுப வராகவும் விளங்குகின்றார். யோகானெஸ்பேக் கொள்கை விளக்கப் படிப்புகள் மையத்தின் கேல்லாஷுபேன், 'தென் ஆபிரிக்கா வின் வெள்ளை இன ஆட்சியாளரை வேறொரு பன்ருஸ்ரான் தலை வர் இவரைப் போல் எதிர் கொள் ளவில்லை' என்று கூறுகிறார். ஹொலோமிசா விரும்பியிருந்தால், வெள்ளை இனத்தோடு சேர்ந்து, பணிந்து செயற்பட்டிருக்கலாம். தென் ஆபிரிக்க இராணுவக் கல்லூரியிற் பட்டம் பெற்ற முத லாவது கறுப்பு இன மக்களில் இவரும் ஒருவராவார். 1976 ஆம் ஆண்டு ட்றான்ஸ்கி பாதுகாப்புப் படையில் இவர் சேர்ந்த பொழுது, வெள்ளை அரசின் தாயகக் கொள் கையை மறைமுகமாக ஏற்று, மிக விரைவாகப் பதவிகளில் உயர்ச்சி பெற்றார். 1987 இல் மண்டேலா சிறையில் இருக்கும்போதே, இரத் தம் சிந்தாத புரட்சியொன்றின் மூலம் பதவி ஏற்றார். மண்டேலா வின் ஆபிரிக்கத் தேசியக் கொங்கிர சுடன் இறுக்கமான பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டார். வெள்ளை இன அரசுடன் ஓர் எதிர்ப்புப் போக்கைக் கடைப் பிடித்து, மீண்டும் தனது அடிமை நாடு தென்ஆபிரிக்காவுடன் சேர வேண்டுமெனக் குரல் கொடுத்த முதலாவது தாயகத் தலைவரா வார்.

இராணுவ சக்தி வாய்ந்தவ ராக இருப்பினும், புற நகரப்பகுதி யில் தனது மனைவி, மூன்று பிள்ளை களுடனும் சாதாரண வாழ்க்கையே நடத்துகிறார். சுதந்திரமான தேர் தல் வைப்பதாக வாக்குறுதி அளித் திருப்பினும், இன்னமும் தேர்தல் வைக்கப்படவில்லை. ட்றான்ஸ்கி யின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வில்லை. இவருடைய அரசாங்கம், தனது வருமானத்தில் 75 சத வீதத்தை பிறிற்ரோறியா அரசிட மிருந்தே இன்னமும் பெறுகின்றது. ஆனால், மக்களின் வாழ்க்கைச் சிறப்பை உயர்த்தியுள்ளார். மக்கள் வீடுகளையும், வீதி களையும் சுத்தமாக வைத் துள்ளார்கள். கறுப்பு இன கெரில் லாக்களைத் தனது நாட்டில் செயற் படவைத்துத் தனது புகழை உயர்த் தியுள்ளார். இதற்குப் பதிலடியும் கிடைக்கும். இம்மாத முற்பகுதியில் தென் ஆபிரிக்கப் பாதுகாப்புப்படை யினர் உம்ராற்றாவில் வீடொன் றைத் தாக்கிக், கறுப்பு இன கெரில் லாக்களுடன் தொடர்புடையவர் கள் என்று சந்தேகிக்கப்பட்ட ஐந்து இளைஞர்களைக் கொன்றனர்.

ஹொலோமிசாவின் பாதுகாப் புப்படையின் வழிமுறைகளும் இதைப்போலக் கடுமையாக இருக் கலாம். 1990 இல் இவருக்கு எதிரான தோல்வியடைந்த புரட்சி முயற் சிக்குத் தலைமை தாங்கியவரைக் கைப்பற்றி, ஆறு மணித்தியாலங் களில் இவரின் படையினர் சுட்டுக் கொன்றனர் என்று கூறப்பட்டது. புரட்சிக்குத் திட்டமிட்டு உதவியவர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட வர்த் தகர், 19‍ 1 ஆம் ஆண்டு யோகா னெஸ்பேக்கிற் கடத்தப்பட்டார். (இவர் இக்குற்றத்தை மறுத்தார்.) இதே புரட்சியிற் பங்குபற்றியதாகச் சந்தேகிக்கப்பட்ட முன்னாள் காவற் துறை அதிகாரி பொங்கானி வானா வின் வீட்டைச், சென்ற வைகாசி மாதம் ஒரு வன்முறைக்குழு தாக் கியது. துவக்கு மனிதர்கள் வரமுன், அவர் ஓடிவிட்டார். ஆனால், வீட் டில் இருந்த மூவர் கொல்லப்பட்ட னர். இராணுவப் புலனாய்வுத் துறையினராற் கொலைஞர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன என ட்றான்ஸ்கி மூலமொன்று நம்புகின் றது. வானாவைக் கடத்த இருந்த சூழ்ச்சியைப் பற்றித் தனக்குத் தெரியாது என்று ஹொலோமிசா கூறுகிறார்.

## புதிய இராணுவம்

அரசாங்கம், ஏ. என். சி. மற் றும் வேறு அரசியற் குழுக்கள் ஆகி யவற்றின் கூட்டுக் கட்டுப்பாட்டில் இருக்கும் புதிய தேசிய அமைதி காக்கும் இராணுவத்தில் ஹொலோ மிசாவுக்கு ஓர் இடம் கொடுப்பதை, அவரின் மனித உரிமை மீறல் வர லாறு தடுக்கும் என்பதற்கு அறிகுறி கள் இல்லை. அடுத்த வருட முற் பகுதியில், இப்புதிய இராணுவம் தற்போதுள்ள படைகளுடன் சேர்ந்து, மாற்றம் ஏற்படும் இடைக் காலத்திற் செயற்பட்டுச், சித்திரை 27 இல் நடைபெற இருக்கும் நாட் டின் முதலாவது பூரண ஜனநாயகத் தேர்தலுக்கு இட்டுச் செல்லும். தென் ஆபிரிக்க இராணுவ மூலத் தின்படி, தற்போதைய அரசாங்கப் படையின் 3,000 பேர், ஏ. என். சி யின் 3,000 பேர், மற்றும், ஹொலோமிசாவின் படையின் சில நூறு பேர் உட்பட புதிய படையிற் 10,000 படை வீரரும், காவற்றுறை யினரும் இருப்பர். உம்ரற்றாவின் புறத்தே கிராமப்புற வீடு ஒன்றை வைத்திருக்கும் மண்டேலாவுடன் உள்ள சொந்தத் தொடர்புகளால், ஹொலோமிசா நன்மையும் பெறு கிறார். தென் ஆபிரிக்காவில் வெளி நாட்டு மூலதனங்களை ஊக்குவிக்க, மண்டேலா மூன்று வாரகால வெளி நாட்டுச் சுற்றுலா சென்ற பொழுது, இவரும் கூடவே சென்றிருந்தார். ஜனநாயக நாட்டில் மீண்டும் ட்றான்ஸ்கி சேரும்பொழுது, தனது இராணுவ உத்தியோகத்தைத் தொடரப்போவதாகக் கூறுகிறார். ஆனால், மண்டேலாவின் ஆதரவும், இவருடைய முன்னேறும் அபிலா ஷயும், புதிய தென் ஆபிரிக்காவில் பன்ரு ஹொலோமிசாவை ஒரு சக்தி வாய்ந்த இராணுவ அதிகாரி யாக ஆக்கும்.

*எழுதியவர்கள்:- யோகானஸ் பேக் கிலிருந்து: மைக்கல் போ:பிறியுடன் யோசே:ப் கொன்ரெரொசும் மற்றும் கிழக்கு லண்டனிலிருந்து: அன்று ட்றெஞ்ச் அவர்களும்.*

*நியூஸ்வீக், நவம்பர், 1993*

# "போய் உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள்"

## மண்டேலாவின் இந்த வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்த தாபோ எம்பெக்கி, இன்று மண்டேலாவின் வாரிசாகிறார்.

கேப்ரவுணிலிருந்து
— பீற்றர் ஹோர்த்தோண் —

1960 களின் ஆரம்பத்தில், இன ஒதுக்கலுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்த கறுப்பின இளைஞர்கள், வேதனை தரும் முடிவொன்றை எடுக்க வேண்டியிருந்தது. ஒன்றில் நாட்டை விட்டு வெளியேறிப் போராட்டத்தைத் தொடர வேண்டும் அல்லது தலைமறைவாகத் தங்கள் தலைவர் மண்டேலாவுடனிருந்து கொண்டு விடுதலைக்கான கிளர்ச்சியை முன்னெடுக்க வேண்டும், தாபோ எம்பெக்கியைப் பொறுத்தளவில் இந்தத் தர்மசங்கடமான கேள்விக்கான பதிலை மண்டேலாவே அளித்தார். அப்போது 19 வயதேயாயிருந்த எம்பெக்கி, ஆபிரிக்க தேசிய கொங்கிரசின் தலைவருடனான ஓர் இரகசியச் சந்திப்புக்காக அழைக்கப்பட்டவர்களில் ஒருவராயிருந்தார். ''எங்கள் இலட்சியத்திற்காக உங்களைத் தியாகம் செய்யாதீர்கள்'' - தன்னைச் சூழ்ந்திருந்த இளைஞர்களைப் பார்த்து மண்டேலா கூறினார். ''எதிர்காலத் தலைவர்கள் நீங்கள் தாம் போய் உங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்'' என மேலும் கூறினார்.

அதன் பிறகு, வெகு விரைவிலேயே மண்டேலாவும், எம்பெக்கியின் தந்தை கோவனும் கைது செய்யப்பட்டு, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார்கள். ஆனால் அப்போது எம்பெக்கி நாட்டை விட்டு வெளியேறித் தன் நீண்ட காலத் தயார்ப்படுத்தல் வேலையைத் தொடக்கியிருந்தார். ஆ. தே. கொ. சானது தென்னாபிரிக்காவின் கறுப்பின மக்களை அரசியல் சுதந்திரத்தை நோக்கி வழிநடத்திச் செல்லும் நாளுக்கான தயாரிப்பு அது. இப்போது 30 வருடங்களின் பிறகு புது யுகமொன்றின் வாசலில் காலடி எடுத்து வைத்திருக்கும் தென்னாபிரிக்காவிற்குத் திரும்பி வந்திருக்கும் எம்பெக்கி, எதிர்வரும் ஏப்ரலில் நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலின் பிறகு பெரியதோர் பதவியொன்றினை ஏற்கவுள்ளவர் எனக் குறிப்பிடப்படுகிறார். அநேகமாக அச்சமயத்தில் நாட்டின் முதலாவது கறுப்பின ஜனாதிபதியாக மண்டேலா ஆகியிருப்பார். மண்டேலாவுக்கு அடுத்த ஸ்தானத்தில் எம்பெக்கி இருப்பார் என்பதில் நாட்டிலுள்ள மிகச் சிலரே சந்தேகம் கொள்கின்றனர். ஸ்ரெலன்பொஷ் பல்கலைக்கழகத்தில் ஆபிரிக்க இயல் பேராசிரியரான வில்லி பிரெய்ரன்பாக், ''எம்பெக்கி, எதிர்காலத்திற்கான ஒரு முதலீடு'' என்கிறார். 'ஆபிரிக்கனர்கள்' எனப்படும் கறுப்பு - வெள்ளைக் கலப்பின மக்களுக்கும், கறுப்பின மக்களுக்குமிடையே மிக அத்தியாவயசியமாகத் தேவைப்படும் சமரசமொன்றினை ஏற்படுத்தும் அதிமுக்கிய முயற்சியொன்றில் அச்சாணியாகவும் எம்பெக்கி செயற்படுகிறாரென வில்லி கருதுகிறார்.

நெல்சன் மண்டேலாவின் சொந்த இடமான ட்ரான்ஸ்கெய்யைச் சேர்ந்த அரசியல் ஈடுபாடு மிக்க குடும்பமொன்றில் எம்பெக்கி பிறந்தார். அவருடைய தந்தை ஆ. தே. கொ. வின் தீவிர உறுப்பினர். கொம்யூனிச சார்பு கொண்டவர். ஆ. தே. கொ. வின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சுதந்திர சாசனத்தை உருவாக்க உதவியவர். தாயார் எப்பாய்நெற் அவர்களோ உண்மையான தீவிரவாதி. தென்-ஆபிரிக்காக் கொம்யூனிசத்தை அடக்குவதற்காகக் கொண்டு வந்த சட்டத்தின் கீழ் முதன் முதலாகத் தடை செய்யப்பட்டோர்களில் ஒருவர். பிரிட்டோரியா தொல்லைகள் தரக்கூடுமென்பதை எதிர்பார்த்து எம்பெக்கி குடும்பத்தினர் குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டியிருந்தது. தாபோவும், அவருடைய இரு சகோதரர்களும், ஒரு சகோதரியும் உறவினர்களுடனும், நண்பர்களுடனும் வசிக்கும் பொருட்டு வேறிடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

ஆனால், அரசியல் அவர்களின் பரம்பரையிலேயே ஊறியிருந்தது. 1959 இல் அப்போது 17 வயதாயிருந்த எம்பெக்கி தனது உயர்நிலைப் பள்ளியில் நிலவிய சமத்துவமின்மைக் கெதிராக இடம்பெற்ற வேலை நிறுத்தமொன்றினை தலைமை தாங்கி நடத்தினார். அதற்கடுத்த ஆண்டில், ஆ. தே. கொ. தடை செய்யப்பட்ட போது, அவரும், ஏனைய இளம் தீவிரவாதிகளும் தலைமறைவு மாணவர் இயக்கங்களைத் தொடர்ந்து உருவாக்கி வந்தார்கள். ஒரு முறை மண்டேலா 'நாட்டின் ஈட்டி' என்ற அமைப்பொன்றினை உண்டாக்கினார். அது ஆ. தே. கொ. வின் இராணுவப்

பிரிவாக இருந்தது. அவர்களின் இலட்சியம் ஒன்றே ஒன்றுதான்: சுதந்திரப் போரில் முன்னணி வீரர்களாக ஆவது.

இருப்பினும், பின்னர், உயிர்த் தியாகங்களை விடுத்து வெளிநாடுகளுக்குச் சென்று எதிர்காலத் தலைமைத்துவத்திற்காகத் தயார்ப்படுத்தும்படி கூறும் மண்டேலாவின் உத்தரவு வந்தது. நாட்டை விட்டு வெளியேறியிருந்த ஆ. தே. கொ. வின் தலைவரான ஒலிவர் தம்போவின் கண்காணிப்பின் கீழ், எம்பெக்கி சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் பொருளியலில் முதுகலைப் பட்டம் பெற்றார். தொடர்ந்து ஐரோப்பிய மாணவர் சமுதாயத்தினிடையே இன ஒதுக்கலுக்கெதிரான செயற்பாடுகளைப் பரவலாக்குவதில், ஆ. தே. கொ. வின் இலண்டன் செயலகத்துடன் இணைந்து ஈடுபட்டார். 1970 இல், தனது தலைமைத்துவத் திறமைகளை வளர்த்துக் கொள்ளும் பொருட்டு, 'நாட்டின் ஈட்டி' அமைப்பு மூலம் சோவியத் யூனியனில் ஒரு நிருவாகப் பயிற்சியினைப் பெறச் சென்றார். பிரிட்டோரிய அரசுக்கும், இன ஒதுக்கலுக்கும் எதிராக உலகம் நெருக்குதலைக் கொடுக்கும் வகையில் இராஜதந்திர ரீதியிலான போர் ஒன்றினை நடத்துவதென்கிற ஆ. தே. கொ. வின் போருபாயத்தினை முன்னெடுப்பதில் ஏற்கனவே தனது திறமைகளைக் காட்டி வந்த எம்பெக்கிக்கு, இப் பயிற்சியானது ஏறத்தாழ ஒரு சம்பிரதாயம் போலவே அமைந்தது. வெளிநாட்டு வாழ்வை விட்டுத் திரும்பியபோது அவர் ஒரு புதிய அணுகுமுறையுடன் திரும்பினார்: தென்னாபிரிக்காவின் வெள்ளையர்களுடனேயே தொடர்பு கொள்வது. ''1960 களிலிருந்த உணர்வுநிலைப்-போராட்டம் அநேகமாக வெற்றி பெற்று விட்டது என்ற நிலை-முடிந்து விட்டது''- எம்பெக்கி நினைவு கூர்கிறார். ''ஒரு நீண்ட திசை திருப்பத்தை எதிர் நோக்கினோம் என்பதை நாங்கள் அறிந்திருந்தோம். தென்னாபிரிக்க மக்களின் அரசியல் ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கான காலம் வந்து விட்டது''.

ஸாம்பியத் தலைநகர் லுஸாக்காவில் அமைந்துள்ள ஆ. தே. கொ. இயக்கத் தலைமைச் செயலகத்தில், தகவற் பணிப்பாளராகப் பொறுப்பேற்ற எம்பெக்கி, 1978இல், இன ஒதுக்கலைத் தூக்கியெறிதலையும், நாட்டை விட்டு வெளியேறிய ஆ. தே. கொ. வினர் வெற்றிகரமாகத் திரும்பிவருதலையும் தீவிரமுறச் செய்யும் செயற்பாட்டினை நடைமுறைப்படுத்த உதவினார். தென்னானாபிரிக்க அரசு உளவு வேலை செய்யும் என்கிற ஆ. தே. கொ. கடும் போக்காளர்களின் எதிர்ப்புகளையும் மீறி, எம்பெக்கி, பிரிட்டோரியாவுடன் தொலைத்தொடர்பு வழிகளை ஏற்படுத்தி, பேச்சுவார்த்தைகளைத் தொடங்கத் துணிந்தார். வெகுவிரைவிலேயே, தென்னாபிரிக்கப் பத்திரிகையாளர்கள், வர்த்தகர்கள், கல்விமான்கள், மாணவர்கள், ஆகியோரிடையே அவர் பெயர் முதலிடம் பெற்றது. இன ஒதுக்கலை மேலும் இறுக்கமடையச் செய்யும்-எதுவித இலாபமுமற்றஇந்தவெட்கங்கெட்ட ஸ்தம்பித நிலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஆ. தே. கொ. வுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனத் தயாராயிருக்கும் எவருக்கும் அவர் பெயரே முதலிற் படும்.

''எல்லைகளுக்கு ஊடான இத் தொடர்பு - நாட்டிற்கு வெளியேயிருந்தாலென்ன நாட்டினிலிருந்தாலென்ன, நாம் ஒருவரோடொருவர் பேசிக் கொள்கிறோம் என்ற உணர்வு - தென்னாபிரிக்கர்கள் என்ற முறையில் எம் எல்லோருக்குமே ஓர் ஆறுதலைக் கொடுத்துள்ளது'' என்கிறார் எம்பெக்கி. ''ஏனெனில் நாம் இவற்றைப் பேசித் தீர்க்காவிட்டால், கடைசியில் சண்டையிட்டுத்தான் தீர்க்க வேண்டி வருமென நாமறிவோம்.'' இதன் பெறுபேறு யாதெனில் - ஜனாதிபதி டீ கிளார்க், ஆ. தே. கொ. வின் மீதான தடையை அகற்றி, மண்டேலாவை உடனே விடுவிப்பதை அறிவிக்கும் தனது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த 1990 பெப்ரவரி பேச்சை நிகழ்த்து முன்பே, அவர் அதைக் கூறப் போகிறாரென்பதை நாம் அறிந்திருந்தோம்.

ஆ. தே. கொ. வின் வெளிநாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் தலைவராக இன்னமும் இருக்கும் எம்பெக்கி, நாட்டின் முதலாவது கறுப்பின வெளிநாட்டமைச்சராக வரக் கூடியவராகவும் உள்ளார். இவ்வாண்டு, ஏற்கனவே 'தேசியத் தலைவர்' ஆக நியமிக்கப்படுவதற்கான ஆ. தே. கொ.வின் முற்றுமுழுதான ஆதரவை, இயக்கத் தீவிரவாதப் போக்குடைய இளைஞர் அணியின் ஆதரவுட்படப் பெற்றார், இத் தலைமைப் பதவி, காலஞ்சென்ற ஒலிவர் தம்போவிற்காக உருவாக்கப்பட்டது. மண்டேலாவின் வாரிசாக வருவதற்கான ஒரு படிக்கல் இப் இப்பதவி எனப் பலர் கருதினாலும், எம்பெக்கி அப்படியல்ல என்கிறார். வாரிசு பற்றிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில், தமது இயல்புக்கு மாறான முறையிற் புதிராகப் பதிலளித்த எம்பெக்கி, ''உண்மையைப் பகட்டாக்கி அலைக்கழிப்பது'' என்றார். இந்த வரி, மெய்யியலில் இருந்து எடுக்கப்பட்டது. ஒவ்வொரு நோக்கத்திற்கும் ஒவ்வொரு நேரமுண்டு என மெய்யியலிற் கூறப்படுவது, மெய்யியல் மாணாக்கரான எம்பெக்கிக்குத் தெரியும்.

''ரைம்'' நவம்பர் 1993

## பொது அறிவுப் புதிர்

# உலகைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்!

பூமியைப்பற்றிய உங்களது பூகோளவியல் அறிவை இங்கே பரீட்சித்துப் பாருங்கள். நாம் கீழே தரும் வினாக்களிற்கு விடைகாண முற்படும் போது, உங்களை நீங்கள் உரசிப்பார்க்கலாம். இது ஒரு பொது அறிவுப் புதையல்; முதலாவது வினாவிலிருந்து ஆரம்பியுங்கள். வாழ்த்துக்கள்.

01. நான்கு பக்கமும் கடலாற் சூழப்பட்ட பிரதேசத்தைத் தீவு என்கிறோம். உலகிலேயே மிகப் பெரிய தீவின் பெயர் என்ன?
(அ) நியூஸிலாந்து எனின், வினா 26-க்குச் செல்லுங்கள்.
(ஆ) கிறீன்லாந்து எனின், வினா 12-க்குச் செல்லுங்கள்.

02. பிழையான பதில்: உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி, வெனிசுலா நாட்டில் உள்ள ஏஞ்சல் என்னும் நீர் வீழ்ச்சியாகும். எனவே, நீங்கள் வினா 08 -க்குச் செல்லுங்கள்.

03. சரியான பதில் இல்லை! ஓசோன் மண்டலம் பூமியில் இருந்து 20 — 30 கி. மீ. உயரத்தில் உள்ளது. சூரி னிலிருந்து வரும் புற ஊதாக் கதிர்களைப் பூமிக்குள் விடாமல் தடுக்கும் பணியைச் செய்கிறது.

04. ஓ... இல்லை. ஆபிரிக்காக் கண்டத்திற் பாயும் நைல் நதி 6,650 கி. மீ. நீளம் உடையது. இதுவே உலகின் இரண்டாவது மிகப் பெரிய நதியாகும். உலகின் மிக நீண்ட நதியினை அறிய, மீண்டும் வினா 10 –க்குச் சென்று முயற்சி செய்யுங்கள்,

05. உலகின் மிக உயரமான நீர்வீழ்ச்சி எந்த நாட்டில் உள்ளது?
(அ) வெனிசுலா எனின், வினா 02 -க்குச் செல்லுங்கள்.
(ஆ) நைஜீரியா எனின், வினா 09 –க்குச் செல்லுங்கள்.

06. ஐயகோ. இது பிழையான ஆரம்பம். முதலாம் வினாவுக்குச் சென்று, மீண்டும் ஆரம்பியுங்கள்.

07. உங்கள் விடைசரி. தென்னாபிரிக்காக் கண்டத்திற் பாயும் அமேசன் நதியே, உலகின் மிக நீண்ட நதியாகும். அண்மைக்காலத்துக் கணிப்புக்களின் படி, அமேசன் நதியின் நீளம் 6,750 கிலோ மீற்றர் ஆகும். இனி, நீங்கள் வினா 19 –க்குச் செல்லுங்கள்.

08. ஓசோன் வாயு, பூமியின் எந்த உயரத்தில் உள்ளது?
(அ) 10—20 கி. மீ. ஆயின், வினா 03 -க்குச் செல்லுங்கள்.
(ஆ) 20—30 கி. மீ. ஆயின், வினா 11 -க்குச் செல்லுங்கள்.

09. நன்றாகச் செய்துள்ளீர்கள். தென் அமெரிக்காவில் உள்ள வெனிசுலா நாட்டிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி உள்ளது. இதன் பெயர் ஏஞ்சல். உயரம் 807 மீற்றராகும். இனி, நீங்கள் நதியைப் பற்றிய வினாவான 10 -க்குச் செல்லுங்கள்.

10. உலகிலேயே மிக நீளமான நதியின் பெயர் என்ன?
(அ) நைல் நதி எனின், வினா 04 -க்குச் செல்லுங்கள்.
(ஆ) அமேசன் நதி எனின், வினா 07 -க்குச் செல்லுங்கள்.
(இ) மிசிசிப்பி நதி எனின், வினா 14 -க்குச் செல்லுங்கள்.

11. சரியான பதில். ஓசோன் மண்டலமானது, சூரியனிலிருந்து வரும் புற ஊதாக் கதிர்களைப் புவிக்குள் வரவிடாமற் தடுக்கிறது. இதனால், தோற் புற்று நோய் வராமலும், சூழல் மாசடையாமலும் பாதுகாக்கப்படுகிறது. இனி, வினா 10 -க்குச் செல்லுங்கள்.

12. நல்ல ஆரம்பம். உலகிலேயே மிகப் பெரிய தீவு, ஆட்டிக் சமுத்திரத்தில் உள்ள கிறீன்லாந்து ஆகும். இதன் பரப்பளவு 21,75,600 சதுர கிலோ மீற்றராகும். இனி, நீங்கள் வினா 05 -க்குச் செல்லுங்கள்.

13. சரியானபதில். சைபீரியாவில் உள்ள பைக்கால் ஏரியே, உலகின் மிகப்பெரிய நன்னீர் ஏரியாகும். பாலைவனம் பற்றிய கேள்வியான வினா 16 -க்குச் செல்லுங்கள்.

14. சரியில்லை. அமெரிக்காவிலோடும் மிக நீளமான நதி, மிசிசிப்பி நதியாகும். இதன் நீளம் 5,970 கிலோ மீற்றர் ஆகும். எனவே, நீங்கள் சரியான விடைகாண விரும்பின், வினா 10 -க்குச் செல்லுங்கள்.

15. மயிரிழையில் விட்டு விட்டீர்கள். இந்தியாவில் உள்ள காட்வீன் என்ற மலைச் சிகரம், உலகின் இரண்டாவது பெரிய மலைச் சிகரமாகும். சரியான விடை காண, வினா 18 -க்குச் செல்லுங்கள்.

## பொது அறிவுப் புதிர்

16. உலகில் மிகப் பெரிய பாலைவனம் எது?
(அ) லிபியா எனின், வினா 21 -க்குச் செல்லுங்கள்.
(ஆ) அவுஸ்திரேலியா எனின், வினா 26 -க்குச் செல்லுங்கள்.
(இ) சகாரா எனின், வினா 29 -க்குச் செல்லுங்கள்.

17. சரியான பதில் இல்லை. அமெரிக்காவிற் புகழ் பெற்ற ஐம்பெரும் ஏரி உள்ளது. ஆனால், இவை மிகப் பெரியவை அல்ல. நீங்கள், திரும்பவும் வினா 19 -க்குச் சென்று முயற்சி செய்து பாருங்கள்.

18. உலகின் அதி உயரமான மலைச்சிகரம் எந்த நாட்டில் உள்ளது?
(அ) நேபாளம் — திபேத் எனின், வினா 20 -க்குச் செல்லுங்கள்.
(ஆ) இந்தியா எனின், வினா 15 -க்குச் செல்லுங்கள்.

19. உலகிலேயே, நன்னீரைக் கொண்டுள்ள மிகப் பெரிய ஏரி எங்கிருக்கிறது?
(அ) அமெரிக்கா எனின், வினா 17 -க்குச் செல்லுங்கள்.
(ஆ) சைபீரியா எனில், வினா 13 -க்குச் செல்லுங்கள்.

20. மிகவும் கெட்டிக்காரன். உலகின் அதி உயர்ந்த மலைச்சிகரமான எவரெஸ்ற், நேபாளம் – திபெத் நாடுகளுக்கு மேலேயே உள்ளது. இதன் உயரம் 8,848 மீற்றர் ஆகும். இனி, வினா 30 -க்குச் செல்லுங்கள்.

21. இல்லை; இல்லை; உங்கள் விடை தவறு. வட ஆபிரிக்காவில் உள்ள லிபியாப் பாலைவனம், உலகின் இரண்டாவது பெரிய பாலைவனமாகும். இதன் பரப்பளவு 16, 83, 500 சதுர கிலோ மீற்றர் ஆகும். சரியான விடை காண விரும்பின், வினா 16 -க்குச் செல்லுங்கள்.

22. நிச்சயமாக இல்லை. சுமார் 600 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வளியும், தூசியுமாகச் சுழன்றடித்த மேகத் திரளிலிருந்து தோன்றியதே சூரிய மண்டலம் என்பது ஜேர்மன் விஞ்ஞானி ஒருவரின் கோட்பாடு ஆகும். சரியான விடை காண, வினா 30 -க்குச் செல்லுங்கள்.

23. மிகச் சரியான விடை. பழைய பாறைகளின் தொன்மை அடிப்படையில், புவியியல் வல்லுநர்கள் நடத்திய அறிவியற் தேடல்களின் பயனாகப், புவியின் வயது சுமார் 460 கோடி ஆண்டுகள் என்று தெரிய வந்தது. இனி, நீங்கள் வினா 31 -க்குச் செல்லுங்கள்.

24. இல்லை; உங்களுக்கு அதிர்ஷ்டம் இல்லை. ஓசானியா என்பது அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தாஸ்மேனியா, நியூகினியா மற்றும் பசுபிக் தீவுகளைக் கொண்ட பகுதியே எனப் புவியியல் நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். இந்தப் புதிரின் முடிவு காண, வினா 27 -க்குச் செல்லுங்கள்.

25. கெட்டிக் காரன். ஆசியாக் கண்டத்தில் உள்ள தென் சீனக் கடலே, உலகின் மிகப்பெரிய கடலாகும். இதன் பரப்பளவு 11, 48, 500 சதுர மைல்களாகும். இத்துடன், இந்தப் புதிர் முடிவடைந்தது. மீண்டும், அடுத்த மாதம் சந்திப்போம். நன்றி; வணக்கம்.

26. தவறான விடை நண்பனே! அவுஸ்திரேலியாவிலுள்ள அவுஸ்திரேலியப் பாலைவனம், உலகின் மூன்றாவது பெரியதாகும். இதன் பரப்பளவு 15, 54, 000 ச. கி. மீ. ஆகும். எனவே, நீங்கள் மீண்டும் வினா 16 -க்குச் செல்லுங்கள்.

27. உலகிலேயே மிகப் பெரிய கடல், எந்தக் கண்டத்தில் உள்ளது?
(அ) ஆசியாக் கண்டம் எனின், வினா 25 -க்குச் செல்லுங்கள்.
(ஆ) வட அமெரிக்காக் கண்டம் எனின், வினா 06 -க்குச் செல்லுங்கள்.

28. சரியான பதில். அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, தாஸ்மேனியா, நியூகினியா மற்றும் பசுபிக் தீவுகளை, ஓசானியா என்று புவியியல் நிபுணர்கள் அழைப்பார்கள். இந்தப் புதிரின் முடிவுகாண, வினா 27 -க்குச் செல்லுங்கள்.

29. சொல்லி வேலையில்லை! மிகச் சரியானபதில். வட ஆபிரிக்காவில் உள்ள சகாராப் பாலைவனமே, உலகின் மிகப் பெரிய பாலைவனமாகும். இதன் பரப்பளவு 90, 65, 000 ச. கி. மீ. ஆகும். சரி; இனி, வினா 18 -க்குச் செல்லுங்கள்.

30. பூமியின் வயது பற்றிப் புவியியல் வல்லுநர்கள் பல ஆண்டு காலமாக ஆராய்ச்சி செய்து வந்தார்கள். இதன் பயனாகப், பூமியின் வயது கண்டு பிடிக்கப்பட்டது. சரியான விடை:
(அ) 200 கோடி ஆண்டுகள் எனின், வினா 22 -க்குச் செல்லுங்கள்.
(ஆ) 460 கோடி ஆண்டுகள் எனின், வினா 23 -க்குச் செல்லுங்கள்.

31. ஓசானியா என்றழைக்கப்படும் பூமியின் பகுதி எங்குள்ளது?
(அ) தென் துருவம் எனின், வினா 28 -க்குச் செல்லுங்கள்.
(ஆ) வட துருவம் எனின், வினா 24 -க்குச் செல்லுங்கள்.

வாணிகம்


# மீண்டும் ஒளியேற்றம்

## வாடிக்கையாளர் நட்புடைய பிலிப்ஸ் கம்பெனியால் 1990 களில் ஜப்பானியரைத் தொழில் நுட்பங்களில் வீழ்த்த முடியுமா?

பிரசல் (Brussel) என்னும் நகரத்தின் கொங்கலில் அமைந்துள்ள Cavernous FNAC Music Store இல் ஒலிக் கதைத் துறையில் இறுதியில் தோன்றிய, புரட்சியை வென்றெடுப்பதற்கான போராட்டம் ஆரவாரமின்றி, ஆனால் அமைதியுடன் ஆரம்பமாகிறது. பின்புறமாகவுள்ள ஒரு மூலையில் ''டச் எலெக்ரோனிக்ஸ் ஜயன்ட் பிலிப்ஸ்'' இலிருந்து பெறப்பட்ட Euro Hope நிற்கின்றது. இதுஎண்கைளைத் தன்னகத்தே கொண்டுள்ள, கசட்டுகளைத் தாங்கியுள்ள தட்டு (DCCS) வீட்டிலிருந்து கொண்டே பதிவு செய்யப்பட வல்லதுவும், சிறந்த தரமுமுள்ள, உறுதியான ஒலித் தட்டுகளைக் கொண்ட ஒலிப்பதிவு நாடாவைக் கொண்டுமிருக்கின்றது. முன்பக்கலில், ஜப்பானிய சொனி தயாரிப்பான மினி டிஸ்க் காணப்படுகிறது. இதுவும், சிறந்த தரமுடையதுவும், வீட்டிலே பதிவு செய்யக்கூடியதுவுமாகும். ஆனால், இது காசினோ (Casino Chip) தட்டொன்றை விட ஒரளவு பெரியதும், 6.3 ச. மீ. உலோகத் தட்டொன்றில் அமைந்துள்ளதும் ஆகும். இதுவரையில் இவ்விரு கருவிகளும் பொது மக்களின் மீது எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

பிலிப்ஸ், சொனி என்பவற்றைப் பொறுத்த வரையில், இவையிரண்டும் கடந்த வருடத்திற் கொண்டு வரப்பட்டவை. இக் கருவிகள் உயர் தொழில் நுட்பத் தன்மை வாய்ந்தவை. அத்துடன் ஆராய்ச்சி, அபிவிருத்தி என்பவற்றிற் பல கோடி டொலர் முதலீட்டை மேற்கொண்டுள்ளன. இதனை விட, இவற்றால் விளைய வல்ல எதிர்கால நன்மைகளும், அந்தஸ்தும் குறிப்பிடத்தக்கவை.

மிகப் பெரிய எலெக்ரோனிக்ஸ் நிறுவனமாகிய பிலிப்ஸ், 2.5 பில்லியன் டொலரை இழந்தது. பணம் இழந்தவர்களைப் பணம் படைத்தவர்களாக மாற்றிய பெருமை பெற்றவர் 41 வயதுடைய கம்பனி நிறுமுகரான ஜான் ரிம்மர் என்பவராவார். இவர் 1990 ஜூலையில் தலைவராக வந்தார். உலகளாவிய பொருளாதார வீழ்ச்சி விற்பனையையும், இலாப மட்டத்தையும் பாதித்துள்ளது. ஏனெனில், நுகர்வோர் இலத்திரனியற் போட்டி வியாபாரத்தில்



ஆய்வுத் தொழில்நுட்ப நிபுணர்கள் வெண்மேலங்கி அணிந்து, 'தந்தக்கோபுரப்' பணியகத்தில் செயலாற்றும் போக்கு இனி இயலாது. ''ஓர் ஆய்வு வெற்றிபெறுகிறது என்றால் அது வர்த்தக நோக்கில் வெற்றி பெற்றதாகப் கணிக்கப்பட வேண்டும். இல்லையேல், அது தோல்வி என்போம்''.

ஆனால், பிலிப்ஸ்ஸிற்கான வருமானச் செலவீனங்கள் அதிகமானவை. கம்பனியின் நன்மைகளை நிலைநிறுத்தும் பொருட்டு, மற்றும் புதிய உற்பத்திப் பொருட்கள் மீது இக் கம்பனி வங்கிச் செயற்பாட்டில் ஈடுபடுகிறது. 1990 இல், ஐரோப்பாவில் உள்ள விலைகள் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளன. வருமானங்கள் தளம்பல் நிலையடைந்தன. பின் தங்கிய வியாபாரங்கள் விற்கப்பட்டன. 50,000 இற்கும் மேற்பட்ட தொழில்கள் நீக்கப்பட்டன. இச் சம்பவங்கள் யாவும், கம்பனியை மீளமைவுச் செய்யும் ''Operation

Centurion'' எனப்படும், கம்பனியின் 1991 ஆம் ஆண்டுக் கொண்டாட்டத்துடன் இணைந்தவையாகும்.

செலவைக் குறைத்தலுக்கும் மேலாக, பிலிப்ஸ் கம்பனியின் மந்தமான, தொழில்நுட்ப ரீதியிலான கலாசாரத்தை மாற்றுவதே, Centurion செயற்பாட்டின் நோக்கமாகும். எயின்ட்கோவன் தலைமை அலுவலகத்தில் உள்ள விசேட நுகர்வோர் தொடர்புச் செயற்பிரிவின் தலைவராகிய ஜான் போஸ்ட் என்பவர், ''யானை ஒன்றை 180 பாகைவரையிற் திருப்புவதை, இது நிகர்க்கும்'' எனக் கூறினார். 1970 களிலும், 80 களிலும் பிலிப்ஸ் நிறுவனம் பௌதிக அளவைகளைக் கொண்ட கசட்டுகள், (Analog Cassette) இறுகப் பிணைந்த டிஸ்குகள் (Compact Disc) போன்ற தொழில் நுட்பங்களில் முன்னோடியாக விளங்கிய போதிலும், ஜப்பானிய நிறுவனங்கள் சிறந்த வடிவமைப்புடைய கருவிகள், வியாபாரம் சேவை போன்றவற்றால், ஐரோப்பாவிற் பாரிய சந்தைப் பங்குகளைப் பிடித்தமையை அவதானித்தது. ''பொறியியலாளர்களைக் கொண்ட ஒரு கம்பனி தான் நாம். இங்கு வாடிக்கையாளர்களைக் கவனிப்பதற்கு முகாமையாளர்கள் 'மற்ற ஆட்களை' வாடகைக்கு அமர்த்தினார்கள். விற்பனையிற் தினமும் கோடிக் கணக்கில் நாம் இழந்தோம் எனக் கூறுகிறார் போஸ்ட்.

ரிம்மரின் ஆட்சிக் காலம் சில வேளைகளிற் கடுமையானதாக இருந்திருப்பின், கொம்பியூட்டர்கள் தொடக்கம், கோப்பி தயாரிக்கும் கருவிகள் வரை அனைத்தையும் உற்பத்தி செய்த நன்கு வளர்ச்சியடைந்த நிறுவனம், அதன் பலவீனத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்டிருத்தல் வேண்டும் எனச் சிலர் வாதிடுகின்றனர். 1992 இல் இக்கம்பனியின் வருமானம் 33.2 பில்லியன் டொலராக இருந்ததையடுத்து, மிகப்பெரிய கைத்தொழிற் கம்பனிகளின் உலக அதிர்ஷ்ட 500 (Fortune Global 500) என்ற பெயர் வரிசையில், இது 31



தொழில்நுட்பப் போட்டி. தேவமாதா அல்பத்தில் பிலிப்ஸ் நிறுவன D.C.C. நாடா.


ஆவது ஸ்தானத்தை எட்டியது. சொனிக்கு ஒருபடி மேலாக இந்த ஸ்தானம் அமைந்தது. ஒளியமைப்பு, மின்சாரச் சவர அலகுகள், ரீ.வி. படக் குழாய்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் உலகில் முதலாவது ஸ்தானத்தையும், ஆய்வியல், எக்ஸ் கதிர் உபகரண உற்பத்தியில் மூன்றாவது இடத்தையும், பதிவு செய்யப்பட்ட இசையில் முதல் மூன்று ஸ்தானங்களில் ஒன்றையும் பெறுகிறது பிலிப்ஸ். (இலண்டன் சார் Polygram இல் இதனது 75 வீதம் உரித்துரிமைக்கு நன்றி) ஐரோப்பாவின் முன்னணி நுகர்வோர் இலத்திரனியற் கம்பனியாக இது விளங்குவதுடன், அரிதிற் கடத்தி உற்பத்தி நிறுவனமாயும் அமைகிறது. ஆனால் பிலிப்ஸ் இன் கணிசமான அளவிலான ஆராய்ச்சி, உற்பத்திச் செயற்பாடுகள் வாய்ப்பற்ற சந்தை நிலைகளாற் தடைப்பட்டது. குறிப்பாக, விற்பனையில் மூன்றாவது ஸ்தானத்தைப் பெறும், முக்கியமான நுகர்வோர் இலத்திரனியற் பகுதி பாதிக்கப்பட்டுள்ளது.

'பிலிப்ஸ்' இன் தொழில்நுட்ப ரீதியில் முன்னணியில் விளங்கும் வீடியோ நாடா வடிவம், உதாரணமாக வி-2 000, வீ. எச். எஸ். இற்கான சந்தை வாய்ப்பை இழந்தது. ''காட்சிப் பதிவுகளின் மீதான எமது உரித்துரிமைச் சான்றிதழிலிருந்தும், வியாபார உரித்துரிமைச் சான்றிதழிலிருந்தும், (Patents) நாம் அதிகளவு பணஞ் சம்பாதிக்கின்றோம். ஆனால், 'பிலிப்ஸ்' இன் சொந்தத் தயாரிப்புகளிலிருந்தல்ல'' ஓர் ஆராய்ச்சி இயக்குநரான சுவானென்பேர்க் இவ்வாறு கூறுகிறார். Centurion இற்கு முன்னர், பிலிப்ஸின் எயின்ட்கோவன் நகரில் உள்ள ஆய்வுகூடம் ஒரு தந்தக் கோபுரமாகும் என ஒப்புக்கொள்கிறார். ''எமது அதிசயமிக்க கண்டுபிடிப்புக்கள் பணத்தை ஈட்டித் தரவில்லையென்றால், எமது வியாபாரம் குழப்பல் நிலையில் உள்ளதென்பதே அர்த்தமாகும் என, நாம் கூறுகிறோம். எமது ஆய்வுகள் வியாபார வெற்றிக்கு இட்டுச் செல்லவில்லையெனின், அவ்வாய்வுகள் வெற்றிகரமாக அமையவில்லை என, இப்போது நாம் கூறுகின்றோம்.''

ரிம்மரின் ஆட்சிக்காலத்தின் மூன்று வருடங்களையடுத்து, ஆய்வாளர்கள் தாம் கண்டறிந்ததை உற்பத்தியில் ஈடுபடுத்தத் தொடங்கினர். 1992 இல், பிலிப்ஸின் சரக்கிருப்பு ஒரு பங்கிற்கு, ஏறத்தாழ 22 டொலராக இரட்டித்தது. இதன் மூலம், பலம்வாய்ந்த அம்ஸ்ரடாம் சந்தை, மற்றும் பெரும்பாலான ஐரோப்பிய இலத்திரனியற் கம்பனிகளின் செயற்பாட்டை விஞ்சியதாக, பிலிப்ஸின் செயற்பாடு அமைந்தது. ஒக்ரோபர் வரை, விற்பனை அடிப்படையில் மட்டமாக விளங்கிய போதிலும், மூன்றாம் காலாண்டு வருமானமாக 72 கோடி டொலரை ஈட்டிக்கொண்டதாகக், கடந்த வாரம் பிலிப்ஸ் ஆச்சரியப் படத்தக்க விதத்தில் அறிவித்துக் கொண்டது. ஜப்பானியக் மட்சுசிட்டா (Matsushita) கம்பனியுடன், ஓர் இலத்திரனியல் வியாபார முயற்சியில் 35 வீதம் முதலீட்டுப் பணமுறியை விற்றமைக்காக, பிலிப்ஸ் பாராட்டுதலைப் பெற்றுக் கொண்டது. 1.6 பில்லியன் டொலரினால் முறிவடையும் நிலைக்கு நெருங்கிக் கொண்டிருந்த பிலிப்ஸ் நிறுவனத்தை, அந்நிலையிலிருந்து காப்பாற்றியது இந் நடவடிக்கையேயாகும்.. '' பிலிப்ஸ் நிறுவனம் நிலைக்குமா? என்பது

பற்றிய சிறு சந்தேகம் கடந்த வருடம் தோன்றியது. இறுதியாக நிதி மீளமைப்பின் மூலம் நன்மை பெறப்படுகிறது. அவர்கள், தம்மைத் தாமே மேல் விளிம்பிலிருந்து, பின்நோக்கிஇழுத்துக் கொண்டார்கள்'' எனக் கூறுகிறார், இலண்டன் சார், சிமித் நியூ கோற் தரகர் இல்லத்தைச் சேர்ந்த ஆய்வாளரான ஆர் ஜன்லொஸ் என்பவர்.

பொலிகிராம் (Polygram) நிறுவனத்திலிருந்தும், மின் குமிழ்களிலிருந்தும் குறைந்தளவு சக்தியுடன் இயங்கவல்ல விளக்குகள், ஈபில் (Elffel) கோரத்திற்கான ஒளியூட்டம் ஈறாக, உபகரணங்களை உற்பத்தி செய்யும் ஒளியியல் அலகிலிருந்தும் (Lighting Unit) பெறப்படும் உயர் இலாபங்கள், நுகர்வோர் இலத்திரனியற் பிரிவில் ஏற்படும் தொடர்ச்சியான நட்டத்தை ஈடுசெய்கின்றன. அடுத்த வருடமளவில் அவ்வியாபாரம் வீழ்ச்சியுறும் என, இரு வருடங்களுக்கு முன்னர் வியாபாரத்தை முன்னெடுத்துச் சென்ற, அதன் முதல்வரான 55 வயதுடைய கெண்க்போட் வற்புறுத்துகிறார். ''நாம், முன்னதை விடத் தற்போது கடுமையாகவுள்ளோம். நாம் அதிகளவில் அடிமட்டச் சார்புள்ளவர்களாக இருக்கின்றோம்'' என அவர் கூறுகிறார். செலவுகளைக் குறைப்பதிலும்,புதிய சந்தைகளைத் தேடுவதிலும் அவர் சிரத்தை காட்டியுள்ளார். ''கடந்த காலங்களில், ஆசியாவின் உள்ளீடான பயன்பாடுகளான அதன் சந்தை வாய்ப்பை மட்டுமன்றி, அங்குள்ள நுகர்வோரின் அதிகரித்த நாகரிகப் போக்கையும் நாம் உதாசீனம்செய்துவிட்டோம்''என, அவர் சுட்டிக் காட்டுகின்றார்.ரோக்கியோ விற்பனைச் செயற்பாடுகளுக்கு அவர் வலுவூட்டியதுடன், செப்ரெம்பர் மாதத்தில், உலகுபூரான ஒலியியல் தலைமையலுவலகத்தைச் சிங்கப்பூருக்கு நகர்த்தினார். அத் தலைமை அலுவலகத்திற்குப் பொறுப்பாக, ஒரு சிங்கப்பூர்ப் பிரஜை நியமிக்கப்பட்டார்.



ஸோனி நிறுவனத்த்ன் மினி டிஸ்க்

சக்தி வாய்ந்த ஜப்பானியப் போட்டியாளர்களுக்கு ஈடுகொடுப்பதற்காக, வர்ணத் தொலைக்காட்சிப்பெட்டிகள், வீடியோ றெக்கோடர்கள் போன்ற கருவிகளின் தரத்தை அதிகரிப்பதற்கு, பிலிப்ஸ் கம்பனிக்குப் புதிய உற்பத்திப் பொருட்கள் தேவைப்படுகின்றன. தன்னியக்கக் கருவிப் பிரியர்களின் கருத்துப்படி, சொனி கம்பனியின் மினி டிஸ்க்கிற்கு,டி. சீ. சீ. (D.C.C.) போல ஒத்த சந்தை வாய்ப்பு இருப்பினும், தரத்திற் குறைவானதாக வேயுள்ளது. டீ. சீ. சீ. யின் பிரதான அநுகூலம் என்னவெனில், மினி டிஸ்க் அல்லது, அதற்கு முன் வெளிவந்ததும், விலைகூடியதுமான டிஜிற்றல் ஒடியோ ரேப் (டீ ஏ. ரி.) என்பவற்றைப் போலன்றி வீடுகளிலே காணப்படும் விசேட கசட்டுகளை டீ. சீ. சீ. இயந்திரங்களால் இயக்க முடிகிறது. இந் நன்மை காரணமாக, இதன் மீதான வாடிக்கையாளரின் நாட்டம் பலமாகவுள்ளது. சொனி (Sony). பிலிப்ஸ் (Philips) ஆகிய இரு கம்பனிகளும், C. D. I. ஐ விடத் தத்தமதுதயாரிப்புக்கள்தரம் கூடியவை எனக் கூறுகின்றன. ஆனால், அமெரிக்கச் சந்தையில் ஒரே முக்கிய பொழுது போக்குச் சாதனங்களாக, பிலிப்ஸின் ரீ. வி. வீ. சி. ஆர். (V, C. R.) (Magnavox மற்றும் லேபல்களுடன்) என்பன இன்றுவரை விளங்குகின்றன. இதே சந்தையில் DCC Decks ஐக் காட்டிலும், மினி டிஸ்க் ( Mini Disc player ) களின் விற்பனை கூடுதலாகக் காணப்படுகிறது. நியூயோர்க் கில் வெளியாகும் ''ஒடியோ வீக்'' சஞ்சிகையின் நிர்வாக இயக்குனராகிய போல் கிளாக் பின்வருமாறு கூறுகின்றார்:– கைத்தொழிற்றுறையில் ஏற்கப்பட்ட ஒரு மித்தகருத்துயாதெனில், டீ. சீ. சீ. யின் முயற்சிகள் சரியான வெற்றியாக அமையவில்லை.', பிரித்தானிய ''நியூ சயன்ரிஸ்ட்'' (New Scientist) சஞ்சிகையில், Consumer Electronics சார்பு எழுத்தாளரான பாரிவொக்ஸ் பின்வருமாறு கூறுகிறார்:- ''ஜப்பானில், சொனியின் அடிப்படைத் தளத்தை மினிடிஸ்க் முறியடித்தாலும், உரிய விலை கொடுக்கப்படுமானால், ஐரோப்பாவில் டீ. சீ. சீ. தன்னை நிலைப்படுத்த முடியும்.''

C. D. I (Compact Disc-Interactive System) எனப்படும் நவீன சாதனம் மூலம், பிலிப்ஸ் தனது போட்டி நிறுவனங்களை முறியடிக்க முடிகிறது. இச்சாதனத்தின் மூலம், திரைப்படங்களின் கதைப் போக்கை வளர்ந்தோர்கள் மாற்றியமைக்கவும், கேலிச் சித்திரங்களில் இடம் பெறும் பாத்திரங்களைப் பிள்ளைகள் தமது விருப்பத்திற்கமையக் கையாளவும், வரலாற்றுத் திரைப்படக் காலகட்டங்களை மாணவர்கள் ஞாபகத்திற்குக் கொண்டுவரவும் முடிகிறது. இவ் வசதிகள் அனைத்தும் சீ. டீ. யிற் காணப்படுவதுடன் ஓர் ஒழுங்கான ரீ. வி. பெட்டியில் இவற்றை இயக்க முடியும். $1\frac{1}{2}$ வருட காலத்திற்கு உலகு முழுவதுமான சந்தையை நோக்கினால், இவ் வருடத்தில் C. D. I. இன் விற்பனை 2000 00 ஆக இரட்டிக்கப் போவதுடன்,ஒவ்வொரு தட்டின் விலை ஏறத்தாழ

400இலிருந்து600 டொலராக இருக்கும் என பிலிப்ஸ் எதிர்பார்க்கிறது. மேலும் தொழில் நுட்பத்துடன் கூடிய, வாடிக்கையாளர்களின் விருப்புக்கமையும் திரைப்படங்கள், விளையாட்டுக்கள்,மற்றும் நிகழ்ச்சிகள் போன்றவற்றை வளர்ப்பதற்கு உற்பத்தியாளர் உதவுகின்றனர். இம் முயற்சிகள் மூலம், இக் கம்பனி ஒரு மறுபிறப்பையே எடுத்துவிடும்'' எனக் கூறுகிறார். C. D. I. இயக்குநரான ஜோன கவாக்கின், இப் புதுவகையான வீட்டுப் பொழுதுப் போக்குச் சாதனம் பற்றிய அறிவை வாடிக்கையாளர்களுக்கு அளிப்பது, முயற்சி நிறைந்ததும், செலவுமிக்கதும் ஆனதாகும். ''நாம் இதைச் செய்தி நக்கின்றோமா? நன்று; நாம் இதைச் செய்திருக்கின்றோம். நாம் திருப்தி யடையவில்லை என்ப தில்லை'' என, போட் கூறுகிறார்.

மேற் கூறப்பட்ட இரு உற்சாகந் தரும் கூற்றுக்களும் பொருத்தமானவை. Dutch Giant சரியான திசையில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், ஜப்பானியச் சாதனங்களை முறியடிப்பதற்கான வேகத்தை, நிரூபித்துத்தான் காட்ட வேண்டியுள்ளது.

நியூயோர்க்கிலிருந்து ரமாலா எட்வேட்ஸ், பிரசல்லிலிருந்து ஃபயினென் றென்ஸ்

டைம், நவம்பர் 15, 1993

இத்தாலி


# குண்டு வைத்தோரைக் கண்டு கொண்டனரா?

கடந்த இரண்டு தசாப்தங்களாகப் பெரும் அழிவுகள் விளைவித்த பல குண்டு வெடிப்புகளால் இத்தாலி உலுப்பப்பட்டுள்ளது. அவற்றில் இரண்டான 1980 இல் பொலோனியா புகையிரத நிலயத்தில் வெடித்து 85 பேரைப் பலிகொண்ட குண்டும் சென்ற மே மாதத்தில் புளொரன்ஸ் நகரத்தின் உபிசி கலைக்காட்சியகத்தில் வெடித்து 5 பேரைக் கொன்றதுடன் பல விலைமதிக்க முடியாத மறுமலர்ச்சிக்காலக் கலைச் செல்வங்களை அழித்ததுமான குண்டு வெடிப்பும் அடங்கும். இந்தப் பயங்கரவாதத்தின் பின்னணியில் யார் இருக்கிறார்ள் என்ற சந்தேகம் மாபியா இயக்கத்தினர் முதல் இடதுசாரிப் பயங்கரவாதிகள் வரை எல்லோர் மேலும் எழுந்தது. ஆனால் இப்பொழுது அரசாங்கம் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துபவர்களின் நடவடிக்கைகள் பற்றி ஆராய்கிறது. இத்தாலியின் குடியியல் இரகசியப் புலனாய்வு அமைப்பான Sisde பற்றியும் இராணுவ இரகசியப் புலனாய்வு அமைப்பான Sisme மீதும் கவனம் திரும்பியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் இத்தாலியர்களை அவ்வளவு அதிரவைக்க இல்லை. பலவருடங்களாக நிலவும் பரந்த அளவிலான ஊழல்கள் பற்றிய அறிக்கைகள் அந்த அமைப்புக்கள் நாட்டில் குழப்ப நிலையை உருவாக்கி அரசியற் சதிப்புரட்சி ஒன்றை உண்டாக்க முயல்வதாகச் சந்தேகிக்க இடம் கொடுத்தன. சில வாரங்களுக்கு முன்பு அரசாங்கம் 700 உத்தியோகத்தர்களை அந்த இரண்டு அமைப்புக்களிலும் இருந்து பதவி நீக்கியது. சென்ற செப்ரம்பரில் பலர்மோவிலிருந்து செல்லும் கடுகதிப் புகையிரதத்தில் சந்தேகிக்கப்படும் ஓர் உடந்தையாளனைக் கொண்டு குண்டு வைக்க Sisde அமைப்பைச் சேர்ந்தவர்கள் சிலர் முயன்றனர் என்ற குற்றச்சாட்டு எழுந்ததைத் தொடர்ந்தே இந்தப் பதவிநீக்கம் நடத்தப்பட்டது. அந்த அமைப்பின் முகவர்கள் இந்தக் குண்டை வைக்க வைத்த பின்பு அது பற்றிப் பொலிசாருக்குத் தாம் செய்தி கொடுத்து அதனால் புகழ் தேட முயன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது.

பொலோனியா குண்டு வெடிப்புப்பற்றி பிழையாக வழிநடத்தும் சான்றுகளை விசாரணை நீதிவான்களுக்குக் கொடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டில் Sisme உத்தியோகத்தர்கள் இருவர் தற்பொழுது நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் அந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்து உள்ளனர். அண்மைக்காலத்தில் நடந்த பல தொடர் குண்டு வெடிப்புக்கள் சம்பந்தமாக Sisme அமைப்பைச் சேர்ந்த இராணுவ உத்தியோகத்தர்கள் மீது சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. இதில் உபிசி குண்டு வெடிப்பும் அடங்கும். மேலும் பலர் பதவி நீக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விண்வெளி ஆய்வு



## நாசாவின், "செய்! அல்லது, மடி" என்கிற பணி.

**26** வருடங்களாக, விண்வெளிப் பயணியாகக் (Astronaut) கடமைபுரியும் கலாநிதி ஸ்ரோறி முஸ்கிறேவ், அழுத்தங்களின் ஆபத்துக்கள் என்பவற்றிற்கு எவ்வாறு தாக்குப்பிடிக்க வேண்டும் என அறிந்துள்ளார். 2,400 தொன் எடையுள்ள விண்கலத்தின் மூன்று எஞ்சின்களும் இயக்கப்படும் போது அதனுள் இருப்பவரின் மனநிலை எவ்வாறு இருக்கும் என்பதை அறிவார். உந்து மட்டையுடன் (Launching Pad) றொக்கற்றை (Rocket) இணைக்கும் எட்டு ஆணிகளும் வெடித்தபின் திரும்பிப் பார்க்க முடியாது என அறிந்துள்ளார். 2,720 தொன் எடை அழுத்தம் வரை விண்வெளிக்குள் செலுத்தும் போது அழுத்தும் உணர்வைப் பெற்றுள்ளார். ஒரு மெல்லிய கம்பியால் விண்கலத்துடன் இணைக்கப் பட்ட நிலையில் விண் வெளியில் மிதப்பது என்பது ஒரு பய உணர்வை ஏற்படுத்தும் என்பதையும் அனுபவித்திருக்கிறார். ஆயினும் இதுவரை அவர் மேற்கொண்ட நான்கு விண்வெளிப் பயணங்களும், இன்னும் ஒரு வாரத்தில் அவரும், வேறு அறுவரும் மேற்

கொள்ளவுள்ள பயணத்திற்குப் போதிய பயிற்சியல்ல. புளோரிடா வின் கேப் காணவரல்ஸ் (Cape canaveral) என்னும் இடத்தில் இவர்கள் என்டீவர்(Endeavour)என்னும் விண்கலத்திற் பயணஞ் செய்ய வுள்ளனர்.

இதுவே அப்பொலோ விண் கலம் செலுத்தப்பட்ட காலந் தொடக்கம் நடைபெற்ற விண் வெளி ஆய்வுப் பணிகளில் மிகவும் கடினமானது. பழுதடைந்துள்ள ஹபிள் விண்தொலைக்காட்டியை (Hubble space Telescope) இவர்கள் திருத்த வேண்டும். 1.6 மில்லியன் செலவில் உருவாக்கப்பட்ட இத் தொலைக்காட்டி பெரும் ஏமாற் றத்தையே ஏற்படுத்தியுள்ளது. இதைத் திருத்துவதற்கு மாறிமாறி ஒவ்வொரு சோடியாக 5 தரம் விண்வெளியில் நடந்து ஒவ்வொரு முறையும் 6 மணித்தியாலங்கள் வேலை செய்ய வேண்டும். இத் தொழிலானது குத்துச் சண்டைக் கையுறைகள் அணிந்து, காற்றில் மிதந்து கொண்டு கூடை ஒன்றைப் பின்னுவது போன்று கடினமான தாகும். எனவே வெற்றி கிடைக் கும் எனக் கூறமுடியாது.

1986 ஆம் ஆண்டு சலஞ்சர் என்ற விண்வெளிக் கலம் வெடித் துச் சிதறியபின் நாளாந்தம் தன் மதிப்பை இழந்து வரும் நாசாவுக்கு இது கடைசிச் சந்தர்ப்பமாகும். கடந்த வருடம் 1 மில்லியன் டொலர் செலவில் அனுப்பப்பட்ட செவ்வாய்க் (Mars) கோளை ஆரா யும் விண்கலத்துடன் தொடர்பு அனுப்பப்பட்டு விட்டது. விண் ணுக்கு அனுப்புவதற்கு 3 செக்கன் களுக்கு முன்தான் இன்னொரு கலத்தைக் கைவிட வேண்டிய தேவை ஏற்பட்டது. GOES-Next என்ற காலநிலை ஆராயும் கலத்தை உருவாக்குவதிற் சிரமம் ஏற்பட்டது. இது குறித்த காலத்திலும் 3 வரு டம் பின் தள்ளிப் போடப்பட்டது. இதனால் செலவு இருமடங்காகி 1.7 மில்லியன் டொலர் செலவிடப் பட்டது.

இப்பொழுது நடைபெற உள்ள பணியிற் கூட சிக்கல்கள் உண்டு, சென்ற வாரம் தொழில்நுட்ப வியலாளர்கள் என்டீவரின் வலது



பயிற்சி பெறும் நீர்த் தொட்டி
3,700 கனமீட்டர் நீரினுள் விண்பயணிகள், திருத்தும் வேலைக்கு பயிற்சி பெறுகின்றனர்.

**ஹபிள் தொலை நோக்கியைத் திருத்தும் அபாயகரமான வேலையை நாசாவின் நிறுவனமொன்று பொறுப்பெடுத் துள்ளது.**

செட்டையில் உள்ள கட்டுப்படுத் தும் கருவியிற் தவறு உள்ளது என்று கண்டுப்பிடித்துள்ளனர், ஒரு நாள் திருத்தும் பணியில் ஈடுபட்டபின் நாசா அதிகாரிகள், பயணத்தைப் பிற்போடப்படாது என முடிவு செய்தனர். ஏனெனில் வேறு மூன்று உணர்விகள் பழுத டைந்த உணர்வியின் தொழிலைச் செய்ய முடியும் என்றனர். டிசம்பர் 1 ஆம் திகதி பயணமாகும் இக் கலம் வெற்றியளிக்கும் எனக் கூற முடியாது.

வெள்ளை மாளிகையும், அமெ ரிக்கக் கொங்கிரஸ்சும் நாசாவுக்குப் பணம்கொடுத்து அலுத்து விட்டன. இரண்டு வருடங்களுக்கு முன் 5 வருட உத்தேசச் செலவாக 106 மில்லியன் டொலரை நாசா கேட்டிருந்தது ஆனால் புஷ் அர சாங்கம் அதை 96 மில்லியன் டொலராகக் குறைத்தது. கிளின்ரன் அரசாங்கம் 5 வருடத்திற்கு 71 மில்லியன் டொலரைக் கொடுப்ப தாகத் தீர்மானித்தது. ருஷ்யாவு டன் இணைந்து செயற்பட்டால் செலவு மேலும் குறையும் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

நாசா தன்னால் சரியாக எதையும் செய்ய முடியும் என நிரூபித்தால் ஒழிய விண்வெளி ஆராய்ச்சிக்குப் பணம்செலவழிப்பது என்பது கடினமாகும் எனவே தான் இப்பணி மிக முக்கியமான தாகும். சில கொங்கிரஸ் உறுப்பி னர் உட்பட ஆகக் குறைந்தது அரை மில்லியன் மக்கள் தொலைக் காட்சி மூலம் ஹபிள் தொலைக் காட்டியைத் திருத்தும் பணியைப் பார்ப்பதென நாசா நம்புகிறது. இது ஒருவேளை பயன் தரலாம் என ரொபேர்ட் கிப்சன் கூறுகிறார்.

ஹபிள் தொலைக்காட்டியில் உள்ள குறைபாடுகளில் ஒன்று மயோப்பியா (Myopia) எனப் படும் கிட்டிய பார்வையாகும். இது, தயாரிக்கும்போது தவறாகச் செய்யப்பட்ட ஆடியினால் ஏற்பட் டது ஆகும், சில வில்லைகளைப் (Lens) பொருத்துவதன் மூலம் இதனைச் சீர் செய்யலாம். மின்னி யற் திருத்தங்கள் செய்யவேண்டும். புதிய கைறோஸ்கோப் (Gyros cope) பொருத்தவேண்டும். நிலை யற்ற சூரிய ஒளிக்கலங்களைப் பிரதியீடு செய்ய வேண்டும். இவையெல்லாவற்றையும் செய்ய 280 ஆயுதங்களும். 6,800 கிலோ கிராம் கருவிகளும் தேவையாகும். இம்மட்டும் ஹபிள் அரைவாசி செயற்பட்டு வந்தது. திருத்தப்படா விடில் மிக விரைவில் இது புவியை வலம் வரும் ஒரு குப்பையாக மாறிவிடும்.

இப்பயணம் வெற்றியடைய வேண்டும் என்பதற்காக, நாசா அதிக அனுபவம்மிக்க 6 ஆண்களையும், ஒரு பெண்ணையும் இப்பணிக்காக நியமித்துள்ளது. மஸ்கிரேவ் என்பவரே இப்பயணத்தின் அதிகாரியாவார். (Payload Commander) இவர் வைத்திய பட்டம், கணனி நிகழ்ச்சித்தயாரிப்பில் (Computer Programming) முதுமானிப் பட்டம் உட்பட 7 உயர் பட்டங்கள் பெற்றுள்ளார். விண்வெளியில் நடப்பவற்றை மேற்பார்வை செய்யும் இவர் இதுவரை நான்குமுறை விண்பயணம் மேற்கொண்டுள்ளார். இப்பயணத்துடன் 5 ஆம் முறை பயணம் செய்வார். றிச்சாட் கொவே என்பவர் விண்கல அதிகாரியாவர். (Shuttle Commander) முன்பு போர் விமானங்களை இயக்கிய இவர் 339 முறை தாக்குதல் பணிகளில் ஈடுபட்டிருக்கிறார். சலஞ்சர் (Challenger) அழிவுக்குப் பின் அனுப்பப்பட்ட முதலாவது விண்கலத்தை வழி நடத்துவதற்காக 1988 இல் தெரிவு செய்யப்பட்டார். கோவேக்குஉதவியாயிருப்பவர் அமெரிக்க கடற்படை விமானி கென்னத் போவ சொக்ஸ் ஆவார். இவர் விமானம்தாங்கிக் கப்பல்களில் 300 முறை விமானங்களை இறக்கிய அனுபவம் உடையவர்.

இப் பயணத்திற்காக, இக்குழு வாரத்திற்கு 70 மணி வீதம் 10 மாதங்களுக்குப் பயிற்சி பெற்றது. இது வழமையான பயிற்சியிலும். 2 மடங்காகும். தண்ணீருக்கு அடியில் நிறையற்ற உணர்வுடன் ஹபிள் தொலைக்காட்டியைத் திருத்துவதற்குப் பயிற்சிகள் மேற்கொண்டனர். இது அலபாமா என்ற மாநிலத்தின் ஹன்ஸ்விலே என்னுமிடத்தில் அமைந்துள்ள விண்பயண மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

ஹவுஸ்ரனிலுள்ள ஜொன்சன் விண்வெளி மத்திய நிலையத்தில் 184 பாகைக்குக் குளிரூட்டப்பட்ட, வளியகற்றப்பட்ட அறையினுள் பணி செய்வதன் மூலம், மிக குளிரான விண்வெளியில் பணிபுரிவதற்குப் பயிற்சி பெற்றனர். முஸ்கிரெவ் தமது கையில் குளிரால் காயம் ஏற்படும் வரை பணிபுரிந்தார். இதனால் கையுறைகளை மேலும் முன்னேற்றமாகச் செய்ய முற்பட்டனர்.

முஸ்கிரெவ், ஜெப்ரி ஹொவ்மான், தோமஸ் ஆக்கெஸ், கத்றின் தோன்ரன் ஆகியோர் விண்கலத்திற்கு வெளியே சென்று ஹப்பிளை திருத்துவர். இவர்கள் அனைவரும் விண்வெளியில் நடப்பதில்அனுபவம் மிக்கவர்கள். 5 பிள்ளைகளுக்குத் தாயாரான கதறின் தோன்ரன் அணுக்கரு பௌதிகவியலாளர் ஆவார். (Nuclcar Physicist) 1992 இல் Intelsat என்ற தொலைதொடர்புச் செய்மதியைத் திருத்தச் சென்ற குழுவுடன் சென்றவர், முதற்பயணத்தில் 1.63 மீற்றர் உயரமுடைய கே.ரி. (அவ்வாறு தான் அவரது குழுவினர் அழைப்பர்) 3 தொன் எடையுள்ள செய்மதியை விண்கலத்திற்குக் கொண்டு வருவதில் ஈடுபடவில்லை. ஆனால் இம்முறை முக்கிய பங்கினை வகிப்பார்.

ஒரு தொலைபேசி அறை அளவுள்ள 270 கிலோ கிராம் எடையுள்ள பெட்டியினுள் வைக்கப்பட்டுள்ள வில்லைகளைத் தொலைக்காட்டியில் பொருத்துவார். விண்வெளியின் பாரமற்ற நிலையில் இதைச்செய்வது 12 மீற்றர் நீளமுடைய இரண்டு சூரிய மின்கலங்களைப் பொருத்துவதே மிகவும் கடினமான செயலாகும். முழுநாள் வேலை இதற்குத் தேவை. இக் காலப்பகுதியில் தோன்ரனும் ஆக்கேசும் மிக நுணுக்கமாக ஒவ்வொரு படியாகச் செயற்படுவர். கிளேர்ட் நிக்கொல்லியர் (Claud Nicollier) என்ற சுவிஸ் விண்வெளிப் பயணி 15 மீற்றர் நீளமுடைய பொறிமுறைக்கையை (Mechanical Arm) இயக்குவார். இது என்டெவர்விண்கலத்திலிருந்து வெளிச்சென்று விண்வெளியில் நடப்பவர்களைக் கொண்டு செல்லும். இப்பணியில் ஈடுபடும் விண்பயணிகள். களைத்துப் போவார்கள் என ஆய்வகத்தினர் அறிந்துள்ளனர். எனவே தேவைப்படின் ஓய்வு எடுப்பதற்காக ஒருநாளை மேலதிகமாகக் கொடுத்துள்ளனர்.

சந்திரனுக்கு ஆட்களை அனுப்பிப் பெருமை தேடிக் கொண்ட நாசா நிறுவனத்தினர், இப் பயணத்தை ஆவலோடு விரல்களைக் கோத்த வண்ணம் எதிர்பார்க்கின்றனர். இதன் மூலம் தமது பழைய பெருமையைத் தேடிக்கொள்வார்களா?

ரைம், நவம்பர் 29, 1993

## இந்தியா:
## ஆபிரிக்கத் தொடர்புகள்

முப்பத்தொன்பது ஆண்டுகாலப் பிரிவுக்குப் பின்பு இந்தியாவும், தென் ஆபிரிக்காவும் முழு அளவிலான இராசதந்திரத் தொடர்புகளைப் பரிமாறிக் கொள்ளச் சென்ற நவம்பர் 22 ஆம் திகதி இணங்கின.

தென் ஆபிரிக்க வெளியுறவு அமைச்சர் பிக் போதாவும், இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஸ் சிங்கும் புதுடில்லியில் அதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்து இட்டனர். அதன் பின்பு தென்னாபிரிக்க வெளியுறவு அமைச்சர், தென் ஆசிய வளைகுடாப் பிராந்திய, கிழக்கு மற்றும் தெற்கு ஆபிரிக்க நாடுகளைக் கொண்ட, இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகள் குழு ஒன்றை அமைத்து அதன் மூலம் முதற் கட்டமாகச் சுற்றாடல், கடற்பிராந்திய, மற்றும் அவை தொடர்பான விவகாரங்களைக் கையாளலாம் என்று ஓர் ஆலோசனையை முன்வைத்துள்ளார்.

# தும்பிக்கையைச் சுருட்டிக் கொண்டு பயணம் செய்வோம்

எழுதியவர் :
யோசெவ் கொன்ரெறாஸ்

**சுற்றாடல்:**
**யானைக் கூட்டங்களைப் பாதுகாப்பாகக் கொண்டுசெல்லும் ஒரு புதிய யுக்தி, யானைகளை அவற்றின் பழைய வசிப்பிடங்களில் மீளக்குடியமர்த்த வழிசெய்கிறது.**

இலங்கு வானூர்தியின் த்வாக், த்வாக் சத்தம் அதிகரிக்கும் பொழுது, கீழே எட்டு யானைகள் நெருக்கமாக ஒன்று சேர்கின்றன. சிம்பாப்வே யின் கோனா-றே-ம்ஜன தேசியப் பூங்காவில் எரிக்கும் சூரியனின் கீழ் நடுமாலை நேரம் ஆகின்றது. 22 கலிபர் றைஃபிள் ஆயத்தமாக இருக்க வேட்டைக்குக் கிளெம் கோற்சீ கிளம்பி விட்டார். மந்தை யைக் கைவிட்டுப் பாதுகாப்பான தூரத்தில் நின்று பெரிய ஆண் யானை பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, தாய் யானை பின்னே வர, எஞ்சிய யானைகள் ஓடுகின் றன. ஓர் அழுக்குப் பாதையினூடாக வாகனங்களை நோக்கி ஆட்டு மந்தையைக் கலைப்பது போல் வானூர்தி யானைகளைக் கலைத்துக் கொண்டு செல்கின்றது. மேலதிகக் காட்டு விலங்குகளை அகற்றும் அனுபவம் பெற்ற கோற்சீ குறிபார்த்து அடுத்தடுத்துச் சுடுகி றார். பாலை மற்றும் முசிம்பிற்றி மரங்களுக்கிடையில் சில நிமிடங்களில் ஆறு யானைகள் குவிந்து கிடக் கின்றன.

அவை பலத்த சத்தத் துடன் குறட்டைவிடத் தொடங்குகின்றன. போதைப் பொருளும், அமைதியாக்கும் பொருளும் கலந்த வலுவுள்ள கலவையைக் கொண்டுள்ள கணைகளால் யானைகளைக் கோற்சீ சுட்டுள்ளார். அடுத்த ஒரு மணித்தியாலம் வரையும் மிருகங்கள் நித்திரையில் இருக்கும் பொழுது, வியர்வை கொட்டும். 10 பேர் வரை அவற்றைக் கட்டிக் கருவிகளின் உதவியுடன் வாகனங்களில் ஏற்றுகி றார்கள். மேலதிக யானைகளைக் கொல்லும் சிம்பாவேயின் பிரச்சி

மயக்க மருந்து கலந்த கலவையினால் யானை சுடப்படுகின்றது.




னைக்குரிய திட்டத்திற்கு அமையக் கொல்லப்பட்ட பல்லாயிரக் கணக் கான யானைகளோடு ஒரு வருடத் திற்கு முன்னராக இருந்தால், இவையும் சேர்ந்திருக்கும். ' அமெ ரிக்க மீன் மற்றும் வனவிலங்கு சேவை ' யினாலும் பிரித்தானியா வின் வனவிலங்குக்கு ஆதரவு என்ற குழுவினாலும் பணம் வழங்கப்பட்ட புதிய திட்டமொன்றின் மூலம் யானைகள் சிம்பாவேயிலும், தென் னாபிரிக்காவிலும் தமது புதிய பாதுகாப்புப் பிரதேசங்களுக்குச் செல்வன.

லொக்சோடொன்ரா ஆபிரிக் கானாவின் எதிர் காலத்திற்கு இந் நடவடிக்கை சிறந்த விளைவை ஏற் படுத்தும். ஆபிரிக்கக் கண்டத்தின் யானைத்தொகை ஒரு மதிப்பின் படி 600,000 ஆக இருப்பினும் அழியக் கூடிய இனமாக இல்லா திருப்பினும் எல்லாப் பிரதேசத் திலும் ஒழுங்காகப் பரவியிருக்க வில்லை. சிம்பாவே பொற்ஸ்வானா மற்றும், தென் ஆபிரிக்கா தவிர்ந்த சகாராவுக்குக் கீழ் உள்ள மற்றைய நாடுகளிற் தந்தங்கள் பெறுவதற் காகக் களவாகச் சுடப்பட்டு யானை மந்தைகள் மிகவும் குறைந்து விட் டன. அந் நாடுகளிலும் தேசியச் சரணாலயங் களின் ஆதரவு அளிக்கக் கூடிய யானை மந்தை கள் பெருகிவிட்டதாக அதிகாரிகள் கூறுகிறார் கள். தொகை கூடிய தென் பகுதியிலிருந்து யானைத் தொகை குறைந்த நாடுகளான கென்யா, உகண்டா மற்றும் வேறு இடங்க ளுக்கு இவற்றை அனுப் புவது மிகவும் கஷ்டமா னது என்று எதிர்பார்க் கப்பட்டதே. குட்டிகளை

யும், இளம் மிருகங்களையுமே தூர இடங்களுக்குக் கொண்டுசெல்லலாம். வயது கூடியவை மிகப் பெரியனவாக இருப்பதனால் கொண்டு செல்ல முடியாது. மேலும் ஒரு மந்தையில் இருந்து தனியே ஒவ்வொன்றாகப் பிடித்துக் கடத்தும்பொழுதும் மிக உயர்ந்த சமூக வாழ்க்கையுடைய இப் பிராணிகளிற் கடும் பாதிப்பு முன்னர் ஏற்பட்டது.

ஆனால், இவற்றின் சமூக வாழ்க்கைக்குப் பாதிப்பு ஏற்படாமல் முழுக்குடும்பத்தையுமே நூற்றுக் கணக்கான மைல்கள் தூரத்துக்கு அப்பால், பாதுகாப்பாகக் கொண்டு செல்ல, சிம்பாப்வேயின் தேசியப் பூங்காக்களிலும், வனவிலங்கு முகாமைத்துவப் பணியகத்திலும் 24 வருட அனுபவம் பெற்ற கோற்சீ ஒரு புதிய யுக்தியைக் கையாளுகிறார். இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் ஒரு முதிர்ந்த யானையைப் பாதுகாப்பாக மயக்கமுயற்சி செய்ய முடியாது எனப் பலகாலமாகக் கருதப்பட்ட வேளையில் இரு புதிய மயக்க மருந்துகளான ஹெலோபிறிடோல் மற்றும் ட்றியாஃபொன் ஆகியவற்றை உபயோகித்து 48 மணித்தியாலங்கள் வரை பாதுகாப்பாக நடுத்தர வயதுடைய யானைகளையும் அமைதிப்படுத்தலாம் என கோற்சீ நிறுவியுள்ளார். மயக்கமுற்ற நிலையில் காட்டில் சிறிய ட்றக்ரர்களில் முதலில் ஏற்றப்படுகின்றன. பின்னர் ஒரு ட்றக்ரர் இழுவைப் பெட்டியின் மீது வைக்கப்பட்ட கப்பற் கொள்கலன் ஒன்றினுள் ஒரே தடவையில் எட்டு மிருகங்கள் வரை சுய நினைவுள்ள ஆனால், அமைதிப்படுத்தப்பட்ட நிலையில் ஏற்றப்படுகின்றன. சென்ற ஒகஸ்ற் மாதம் இத் திட்டம்தொடங்கிய பின்பு கோனா-றே-ஜென (ஷங்கான் பாஷைகளில் யானைகளின் இடம்) விலிருந்து 600 யானைகள் வேறு இடங்களிற் குடியமர்த்தப்பட்டுள்ளன. இவற்றில் 1,050 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள தென் ஆபிரிக்கக் கறுப்பு இன மக்களின் ஒரு தாயகமான பொஃபுத்தற்ஸ் வானாவில் உள்ள மடிக்வே வன விலங்குச் சரணாலயத்திற்கு அனுப்பப்பட்ட 200 யானைகளும் அடங்கும். இவற்றின் பாதுகாப்பு வீதம் சிறப்பாக உள்ளது. சென்ற ஒகஸ்ற் மாதம் இத் திட்டம் தொடங்கிய பின் 15 மிருகங்களே இழக்கப்பட்டுள்ளன.



சுடப்பட்ட யானை, வனவிலங்கு சரணாலயத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

உலகளாவிய யானைத் தந்த வர்த்தகத்தைத் தடை செய்து திருட்டுத்தனமான யானைகள் கொல்லப்படுவதைத் தடுப்பது என்ற 1989 ஆம் ஆண்டின் உடன்படிக்கையின் பின்னர் யானைகள் இல்லாத நாடுகளுக்கும், கூடியளவு இருக்கும் நாடுகளுக்கும் ஏற்பட்ட பிரச்சினையை இப் புதிய திட்டம் தணிக்கும்போற் தெரிகின்றது. சட்ட ரீதியாகக் கொல்லப்பட்ட யானைகளிலிருந்து பெறப்பட்ட தந்தத்தை விற்பதற்குத் திருட்டுகளைக் குறைத்து மந்தைகளை முறையாகப் பேணிய சிம்பாப்வே, அரசாங்கத்திற்கு அனுமதி வழங்கப்படவேண்டும் என ஹராறே பலகாலமாகக் கோரி வருகின்றது. (தடைக்கு முந்திய விலையின் ஒரு சிறு பகுதியே யானைத் தந்தத்தின் தற்போதைய கறுப்புச் சந்தை விலையான கிலோ கிராமொன்றுக்கு 3 டொலராகும்.) தந்த விற்பனைக்குத் தடையை அகற்ற எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தாலும் பணம் தேவைப்படும் சிம்பாப்வேக்கு இக் குடியமர்த்தல் திட்டம் மூலம் ஓர் அதிர்ஷ்டம் அடிக்கின்றது. கோனா-றெ-ஜெனவில் இருந்து கொண்டு செல்லப்பட்ட ஒவ்வொரு யானைக்கும் 1,800 டொலரைப் பெறுகின்றது.

இத் திட்டத்திலே பங்கு பற்றுபவர்களிடையே ஓர் அன்புப் பிணைப்பு ஏற்பட்டுள்ளது. இத் திட்டத்தை வழி நடத்துபவரான கோற்சீ தனது சொந்த உணர்வுகளுக்கு இடம் கொடுப்பவரல்லர். 54 வயதுடைய பேரனான இவர் தனது வாழ் நாளில் பல்லாயிரக் கணக்கில் யானைகளைச் சுட்டுள்ளார். 'யானைத் தொகையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். ஆனால், அவற்றுக்குப் புதிய வீடுகள் கண்டுபிடித்து உயிருடன் குடியமர்த்தினால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கின்றது' என்று கோற்சீ கூறுகிறார். "வனவிலங்குகளுக்கு ஆதரவு" என்ற நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் ஃகென்றி ஹோல்வேட் இவரின் சகபாடியாவார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றவரான இவர் ஒரு முதலீட்டாளராவார். அண்மையில், ஹராறேயில் நடைபெற்ற விழாவொன்றில் அமெரிக்கத் தூதுவரின் மனைவி அணிந்திருந்த யானைத் தந்தத்திலான ஆபரணங்களைக் கழற்றும்படி இவர் கூற, அவரும் உடன்பட்டார். "யானைகளைக் கொண்டு செல்லும் பொழுது யானைத் தொகையிற் தலையிடுகி

றோம். ஆனால், யானைகளைக் கொல்வதற்கு அனுமதியோம்'' என்று ஹோல்வேட் கூறுகிறார்.

### எல்லைகள் கிடையா.

கென்யா, தன்சானியா மற்றும் சாம்பியா நாட்டு வனவிலங்கு அதிகாரிகள் இத் திட்டத்தில் அக்கறை காட்டியுள்ளனர். போதியளவு நீரும், உணவும் கொடுக்கப்பட்டால் அமைதியாக்கப்பட்ட யானைகளைக் கொண்டு செல்லப்படக்கூடிய தூரங்களுக்கு எல்லை கிடையாது என்று கோற்சி நம்புகிறார்.

சிம்பாப்வேக்கு வடக்கில் உள்ள பிரதேசங்களுக்குப் பெருமளவில் தென் பகுதி யானைகளைக் கொண்டு செல்லு முன்னர் வேறுபல தடைகளையும் தாண்டவேண்டியுள்ளது. மீளக் குடியமர்த்தப்பட்ட யானைகள் தமது புதிய இடங்களில் மனிதாபிமான முறையிற் கவனிக்கப்படல் வேண்டும். மற்றும் வனவிலங்குகளுக்கு ஆதரவு என்ற நிறுவனத்தின் ஆதரவுடன் கைப்பற்றப்பட்ட மிருகங்களை 25 வருடங்களுக்கு வேட்டையாடக் கூடாது என்று இந் நிறுவனம் தடை விதித்துள்ளது. ஆனால், இதை நடைமுறைப்படுத்துவது கடினமாக இருக்கும் என்று ஹோல்வேட் ஒத்துக் கொள்கிறார்.

சிம்பாப்வேயில் பெறப்பட்ட வெற்றி, ஆபிரிக்க யானைக்கு நல்ல எதிர்காலத்தை உறுதிப்படுத்தலாம். கமறுான் நாட்டின் கெய்ல் விவசாயப் பிரதேசத்தின் பயிர்களை அழிக்கும் யானைகளை ஏற்கனவே இருக்கும் தேசியச் சரணாலயங்களுக்கு அனுப்பலாம். யானைகளோடு தொடர்புடையயாவரும் இத் திட்டம் வேறுஇடங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என ஒரு மனதுடன் அக்கறை காட்டுகிறார்கள். ''அதனூடாக ஒரு துவக்குக் குண்டு போகிறதிலிருந்து யானை காப்பாற்றப்படுகின்றது'' என்று ஹோல்வேட் கூறுகிறார். அத்துடன் அதற்குரிய பிரதேசத்தில் அது மீளக் குடியமர்த்தப்படுகின்றது.

நியூஸ் வீக், நவம்பர் 8, 1993.

# சமுத்திரத்தில் அணுஆய்வுக் கழிவுகளைக் கொட்டுதல்

கடந்த வாரம் நடைபெற்ற ஒரு நிகழ்விலும் பார்க்க வேறொரு காரணம் ருஷ்யர்களுக்கும், ஜப்பானியர்களுக்கும் இடையில் பிணக்கை ஏற்படுத்த வேண்டியதில்லை. அது நடைபெற்ற காலமும் பிரச்சினை நிறைந்த தொன்றாகும். இருமுறைகள் பிற்போடப்பட்ட பொறிஸ் யெல்சினுடைய ஜப்பானிய விஜயம் மூன்றாவது முறையாக மேற்கொள்ளப்பட்ட தருணத்தில் 600,000 ஜப்பானியர்கள் 2ஆவது போரின் பின் சைபீரியாவில் சிறை வைக்கப்பட்டதற்கு ஜப்பானியரிடம் மன்னிப்புக் கோரி அவர்களது நல்லெண்ணத்தைப் பெற்ற சமயத்தில் ஜப்பானியக் கடற்படையினர் பழுதடைந்த ருஷ்யராங்கர் கப்பலொன்று ஜப்பான் கடலில் அணுவாய்வுக் கழிவுகளைக் கொட்டிக் கொண்டிருப்பதைக் கண்டு பிடித்தனர். இதுஜப்பான் கரையிலிருந்து 370 கிலோ மீற்றருக்கு அப்பால் நடைபெற்றது. இந்த 900 கனமீற்றர் திரவக்கழிவுகள் சமுத்திர உயிரினங்களுக்கு அதிகளவு தீங்கு விளைவிக்கக் கூடியவையல்ல. ஜப்பானியர்வெகுண்டெழுந்தனர். பிரதமர் மொறிகிறோமொசாகாவா தொடக்கம் சாதாரண அதிகாரிகள் வரை இத்தகைய செய்கையை உடனடியாக நிறுத்தும்படி பணித்தனர்.

சிறிது கலகலப்பின் பின் இது சாத்தியமாயிற்று மொஸ்கோ அடுத்த மாதமும் இது நடைபெறும் என அறிவித்தது. ஜப்பானிய வெளிவிவகார மந்திரி சுற்றொம்காட்டா ருஷ்ய வெளிவிவகார மந்திரி அன்றெயிகொசிறெவ்வுக்குத் தொலைபேசி மூலம் அழுத்தம் கொடுத்ததினாலும், வோஷிங்ரனிலிருந்தும், சோவியத்திலிருந்தும் சிறிதளவு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதனாலும் இதை நிறுத்த மொஸ்கோ உடன்பட்டது. சுற்றுச்சூழல் மந்திரி விக்ரர் டானிலொவ் சர்வதேச எதிர்ப்பு மிகை ஆக்கப்பட்டது அவசியமற்றதாகும் என ஆலோசனை கூறினார். ''இதைத் தடை செய்வதனால் வேறுபல பிரச்சினைகளை ருஷ்யாவில் நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது'' என அவர் கூறினார். அணு ஆய்வுக் கழிவுகளை ருஷ்யா கடலிற் கொட்டாவிடில் அவற்றை என்ன செய்வது என்பதை இரு நாடுகளும் சேர்ந்து ஆராய்ந்து தீர்மானிக்க வேண்டியுள்ளது. மொஸ்கோ பணியகத்தைச் சேர்ந்த சாகா அஸ்காரோவின் கூற்றுப்படி 1983 இல் ஐ. நா. வினால் கடலில் அணு ஆய்வுக் கழிவுகளைக் கொட்டுதல் சம்பந்தமாக ஆக்கப்பட்ட உடன்படிக்கையை மீறும் நாடு சோவியத் யூனியன் ஒன்று தான். 1960 இன் பிற்பகுதியிலிருந்து ருஷ்யாவினால் 2.5 மில்லியன் கனமீற்றர் கழிவுகள் கடலிற் கொட்டப்பட்டன. கடந்தவாரம் டானிலொவ் டானிவியான் உண்மையை ஏற்றுக் கொண்டார்- அணு ஆய்வுக் கழிவுகளைச் சேகரித்து வைக்கக்கூடிய களஞ்சியங்கள் போதியளவு ருஷ்யாவில் இல்லையென்றும், போதுமான களஞ்சியப்படுத்தும் இடங்களை அமைக்க 10 மில்லியன் டொலரும், குறைந்தது 3 வருட காலமும் தேவை எனவும் ஏற்றுக் கொண்டார். மேலும் மந்திரியின் அலுவலக அதிகாரிகள் கூறுவதாவது: அடுத்த 18 மாத காலத்துள் ருஷ்யா வேண்டிய தொகைப் பணத்தைப் பெற்றுக்கொள்ளமுடியாவிடின் மீண்டும் கழிவுகளைக் கடலிற் கொட்ட வேண்டிய நிலை ஏற்படும். சில ஜப்பானியக்கண்டணக்காரர், ருஷ்யா முழுப் பணத்தையும் அல்லது பெருமளவு பணத்தை ஜப்பானிடமிருந்து பெற்றுக்கொள்ளவுமே இச்சதியிலீடுபட்டுள்ளது எனக் கூறுகின்றனர். வெகு விரைவில் ருஷ்ய நிபுணர் குழுவொன்று ஜப்பானுக்குச் சென்று இது பற்றிய விடயங்களில் ஒத்துழைப்பை நாடுமென்றும், இறுதியில், விரும்பாவிட்டாலும் ஜப்பான்பொருளாதாரத், தொழில் நுட்ப உதவி வழங்க வேண்டி வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஜப்பான் முழுவதிலுமுள்ள மீன்பிடி கூட்டுறவுச்சங்கங்கள் கொசாக்காவா அரசை இத்தகைய ஏற்பாடொன்றைச் செய்யுமாறு வற்புறுத்துகின்றன. இதனைவிட ஜப்பானிய வாக்காளரைச் சீண்டும் விடயம் வேறொன்றில்லை.

நியூஸ்வீக், நவம்பர் 1, 1993

போதைவஸ்து

# எஸ்கோபரின் வாழ்வு மரணத்தில் முடிந்தது

எழுதியவர்
— கேவின் பேடர்க்கோ —

**கொலம்பியாவில், மிகவும் தேடப்பட்டு வந்த போதைப் பொருள் கடத்தல் மன்னன் பொலிசாரால் சுடப்பட்டார். ஆனால் கொக்கேயின் வியாபாரம் தொடர்கின்றது.**

கொலம்பியாவின் மிகவும் முக்கிய புள்ளியான போதைப் பொருள் கடத்தல் பிரமுகரைத் தேடிப்பொலிசார் 16 மாதங்களாக வலைவிரித்தனர். இதன் பயனாகக் கடந்த வியாழன் அன்று மெடலினில் ஒரு இரண்டு மாடி வீடு முற்றுகையிடப்பட்டு அந்நபரான பப்லோ எஸ்கோபர் கவிரியா சுட்டுக் கொல்லப்பட்டார். போதைத் தடுப்புப் பிரிவினர், ''நாங்கள் வென்றுவிட்டோம்'' என்று போதைப் பொருள் கடவுள் என வருணிக்கப்படும் அந்நபரின் இறந்த உடலுக்கு மேல் தமது துப்பாக்கிகளை உயர்த்தினர். ஒன்றரை வருடங்களுக்கு மேல் பொலிசாரால் தேடப் பட்ட இவர் கடைசி நேரத்தில் வெறுங்காலுடனேயே இறந்து கிடந்தார். வெறுங்காலுடன் இறந்த பப்லோ எஸ்கோபர் கடைசி நேரம் வரை தனது வாழ்க்கைப் போக்கில் இருந்து விடுபடவே இல்லை.

இவரது இறப்பு சமூகத்தைப் பொறுத்தவரை பெரிய வெற்றியே. ஏனெனில் போதைப்பொருள் தொடர்பான பயங்கரச் செயல்களை வேறு எவரும் செய்திருக்காத வகையில் இவர் செய்திருக்கின்றார் என்றால் அது மிகையாகாது. கடந்த பத்து வருடகாலத்தில் கொலம்பியாவில் 1,000-க்கு மேற்பட்ட உயிர்கள் போதைப் பொருள் பயங்கரவாதத்தால் பலியாகின. அற்ரோனிஜெனரல், நீதிஅமைச்சர், மூன்று ஜனாதிபதிகள், வேட்பாளர்கள், 200-க்கு மேற்பட்டநீதிபதிகள், 30-க்குமேற்பட்ட கடத்தப்பட்டவர்கள், ஓர் இடசினுக்கு மேற்பட்ட பத்திரிகையாளர்கள், ஏறத்தாழ, 1,000 பொலிஸ்காரர்கள் ஆகியோர் இதில் அடங்குவர். ஆனாலும் ஒரு வருடத்தில் 15பில்லியன் டொலரை அடக்கும் கொக்கெயின் வியாபாரம் முடிவிற்கு வரவில்லை. அமெரிக்க போதைத் தடுப்பு அதிகாரி ஒருவரின் கருத்துப்படிஎஸ்கோபர்இறந்ததைக் கேள்விப்படும் போது மற்றைய குற்றவாளிகள் பெருமகிழ்வுத் தினமாக அதைக்கொள்வார்கள், ஏனெனில் கீழ்மட்ட கொக்கெயின் வியாபாரமும் எப்போதும் பெரியதாகவே காணப்படும். 1992 ஜூலையில் இருந்து எஸ்கோபர் பொலிசாரினால் தேடப்பட்டு வந்திருக்கின்றார். அக்காலத்தில் இருந்து இவர் ஒளிந்தே வாழ்க்கை நடாத்தினார். இவர் முன்னர் என்விக்காடோ (இவர் பிறந்த நகர்) அருகில் தங்கியிருந்தார். இவரது இருப்பிடம் மிக ஆடம்பரமாக விருந்தது. மிக ஆடம்பரமான கட்டில், உள்ளேயே அமைக்கப்பட்ட குளியல் அறை ஆகியனவும் அங்கு காணப்பட்டன. சுமார் 1,500 பொலிசாரைக் கொண்ட பன்னிரண்டிற்கும் மேற்பட்ட சுற்றிவளைப்புக்களில் இவரது தப்பியிருந்தார். அதன்பின், அவரது ஆதரவாளர்கள் உதவியுடன் கிராமப்



எஸ்கோபர் தனது பண்ணை வீட்டில் சுட்டுக் கொல்லப்பட்டு வீழ்ந்தபோது

புறச் சூழலைக் கொண்ட மெடலின் என்ற இடத்தில் ஒளித்திருந்தார். இவரது இருப்பிடத்தை அவதானிக்கையில் அங்கு இரண்டு சுவர்களுக்கு இடையிலான மறைவான அறைகள், மாடிப்படிக்குக் கீழ் உருமறைக்கப்பட்ட அறைகள், நிலவறைகள் ஆகியன காணப்பட்டன. அடிக்கடி இவர் மிகவும் கெட்டித்தனமாகத் தன்னை உருமாற்றிக் கொள்ளும் பழக்கம் உள்ளவர். பல சந்தர்ப்பங்களில் பெண் மாதிரி உடையணிவார். பிரேதப் பெட்டியில் இறந்தவர் போலப் படுத்திருந்து பல இடங்களுக்குப் பிரயாணம் செய்வார். பன்னிரண்டு சுற்றிவளைப்புக்களில் குறைந்தது நான்கு தடவைகள் மிக அண்மையில் இருந்து தப்பியிருக்கின்றார். வில்லி விவசாயியின் இரட்டை நாடியுள்ள இவர் தப்பி ஓடுவது மிக ஆச்சரியமான செயலாகும். ஒரு புலனாய்வாளர் கருத்துக் கூறுகையில்: ''இவர் மான்குட்டி போலத் தப்பி ஓடிவிடுவார் என்றும், மலைகளுக்குள் புகுந்தால் பின் கண்டுபிடிப்பதே கடினம்'' என்றும்கூறுகின்றார்.

ஒக்ரோபர் 11ஆம் திகதி எட்டு அங்கத்தவர்களைக் கொண்ட குற்றப் புலனாய்வு அதிகாரிகள் மெடலின் என்ற இடத்தைச் சுற்றி வளைத்தனர். (இது நகரில் இருந்து தனிமைப்படுத்தப்பட்ட சிறிய பண்ணையாகவிருந்தது.) அதிகாரிகள் கருத்துப்படி: ''நாங்கள் நிச்சயமாக எஸ்கோபரைச் சுற்றிவளைத்திருந்ததை உறுதிப்படுத்திக் கொண்டோம்.'' கடைசி நேரத்தில் எஸ்கோபர் இரண்டு ஆடைப் பெட்டிகளை விட்டுச் சென்றிருந்தார். அவை நிரம்ப சவர்க்காரங்கள், ரீ-சேட்டுக்கள், நீல நிற நீளக்காற்சட்டைகள், கறுப்புக் கண்ணாடிகள் ஆகியன காணப்பட்டன. அதில் எஸ்கோபருக்கு அவரது ஒன்பது வயது மகள் மறூலா எழுதிய கடிதம் ஒன்றும் இருந்தது. அதில் ''அன்பான அப்பா, தங்களைக் காணாது தவிக்கின்றோம்; விரைவில் காண விரும்புகின்றோம்'' என்று எழுதப்பட்டிருந்தது. அத்துடன் அவரது 16 வயது மகன் ஜீவான் பப்லோ எழுதிய கடிதமும் காணப்பட்டது. அத்துடன் எஸ்கோபர் தனது தாய்க்குச் சொந்தக் கையெழுத்தில் எழுதிய கடிதம் ஒன்றும் இருந்தது. தாயின் பெயர் ஷெர்மில்டா; வயது 70 ஆகும். தான் நல்ல வாழ்விற்குத் திரும்ப விரும்புவதாகவும் அதில் அவர் எழுதியுள்ளார். ஆனால் அரசு தன்னுடைய சரணாகதியை எப்படி ஏற்றுக் கொள்ளும் என்பதில், தான் சந்தேகப்படுவதாகவும் எழுதியிருந்தார்.

இவரைத் தேடும் பணியில் ஈடுபட்டபோது கொல்லப்படும் ஒவ்வொரு பொலிசாருக்கும் 27,000 டொலர் அரசினால் வழங்கப்பட்டது. சென்ற புதன் அன்று அவருக்கு 44 ஆவது பிறந்த நாள் ஆகும். அவர் ஒளிந்து வாழத் தொடங்கி 499 நாட்கள் ஆகின்றன. அவர் மிகவும் பெருத்தும் அதோடு வயிற்றுப்புண் (அல்சர்) நோயினால் பாதிக்கப்பட்டும் இருந்தார் என்றும் அவர் வீட்டில் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளில் இருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது.

இறுதிக் காலகட்டத்தில் அவர் தனது குடும்பத்தைப் பாதுகாப்பதில் மிகவும் வேகமாகச் செயற்பட்டார். அண்மைக் கிழமைகளில் அவரின் மைத்துனர் ஒருவர் பொலிசாரினால் சுட்டுக் கொல்லப்பட்டார். அத்துடன் அவரது பிள்ளைகளின் ஆசிரியரும் 'பெப்ஸ்' என அழைக்கப்படும் இவரால் ஏமாற்றப்பட்டவர்களால் உருவாக்கப்பட்ட எதிர்க்குழுவினால் கொலை செய்யப்பட்டார். 'காலி' போதைப்பொருள் எதிர்க்குழுவினாலும் மிரட்டல்களைச் சந்திக்க நேர்ந்தது. தனது மனைவியும், குழந்தைகளும் அடுத்த பலிக்கடாவாகப் போகலாம் என்ற பயத்தினால் அவர்களை அரசியல் தஞ்சங் கோரி ஜேர்மனிக்கு அனுப்பி வைத்தார். ஆனால் ஜேர்மன் அரசு அவர்களை உடனேயே போகோட்டாவிற்குத் திருப்பி அனுப்பிவிட்டது.

இவ்வாறு புத்திசாலியான எஸ்கோபர் இரண்டு தவறுகளை விட்டிருந்தார். அந்தத் தவறுகளே அவர் இறப்பதற்குக் காரணமாக அமைந்தன. முதலாவதாக, மெடலின் வானொலி நிலையத்திற்குத் தொலைபேசியில் அழைப்பு விடுத்த ஜேர்மனிய நாட்டின் ஒத்துழைப்பு இன்மை தொடர்பாக கண்டன அறிக்கை ஒன்றை விட்டிருந்தார். வியாழக்கிழமையன்று துணிந்து அறை எண் 2908ல் இருக்கும் தனது குடும்பத்துடன் தொலைபேசியில் கதைத்திருக்கின்றார். அப்போது, ''நான் சுகமாக இருக்கின்றேன், அத்துடன் இப்போதைக்கு நீங்கள் பொகோட்டாவிலேயே தங்கியிருத்தல் நல்லது'' என்று ஆலோசனை கூறியிருக்கின்றார். அவர் மனைவி மரியா விக்டோரியா ஹெனாவோ எஸ்கோபர், இவருக்குப் பிறந்த தின வாழ்த்துக் கூறியிருக்கின்றார். அத்துடன் அவதானமாக இருக்கும்படியும் கூறியிருக்கின்றார். 90 நிமிடங்களில் புலனாய்வுத்துறையினரால் அந்தத் தொலைபேசி அழைப்பு இலக்க விபரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அமெரிக்காவில் அன்பளிக்கப்பட்ட கருவி மூலம் இது சாத்தியமாகியது. இந்தக் கருவி நகரின் மேற்குப் பகுதியில் உள்ள இரண்டு மாடி வீட்டில் இருந்தே தொலைபேசி அழைப்பு விடுக்கப்பட்டது என்று அடையாளங் காட்டியது.

பெரியளவில் பொலிசாரை ஈடுபடுத்துவதில் தாமதமும், வேகமின்மையும் ஏற்படும் என்பதால் அவற்றைத் தவிர்க்க 17 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு சிறு பிரிவு அந்த வீட்டைச் சுற்றி வளைக்க அனுப்பப்பட்டது. இவர்கள் நடவடிக்கை தொடங்கு முன்னர் தொலைபேசித் தொடர்பைத் துண்டித்து விட்டனர். (வழக்கமாக சகாக்கள் தொலைபேசி மூலமே பொலிசார் நடவடிக்கைகள் பற்றி எஸ்கோபருக்குத் தகவல் வழங்குவார்கள்.) பின்னர் இரண்டு ஆயுத உத்தியோகத்தர்கள் வீட்டின் முன்புறம் பல மணி நேரமாக ஒளித்திருந்தனர். இவர்கள் முன் கதவு திறப்பதை எதிர்

பார்த்து இருந்தனர். ஓர் இளைஞர் இந்த வீட்டிற்கு மதிய உணவுடன் வருவதை அவதானித்து உசாரடைந்தனர். (இந்த இளைஞர் எஸ்கோபரின் மருமகனாவார்) இவர் கதவு தட்டும்போது எஸ்கோபர் கதவைத் திறக்க இரண்டு உத்தியோகத்தர்களும் உள்ளே பாய்ந்தனர். அதே நேரம் நான்கு மற்றைய பொலிசாரும் கார் கராஜ் கதவை உடைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி நுழைந்தனர்.

எஸ்கோபர் தனது மேல் மாடியில் உள்ள அறைக்குள் ஓடி ஒளிந்து காப்பாளரான அல்வாரோ டீஜீசஸ் அகுடெலோ என்பவருடன் சேர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். ரீசேட்டும், நீளக் காற்சட்டையும் அணிந்தபடி எஸ்கோபர் தனது சன்னலூடாக நுழைந்து ஓர் ஒடுக்கமான இடைவெளிக்குள்ளால் பக்கத்து வீட்டுக் கூரைக்குத் தாவிப்பாய முற்பட்டார். அதில் இருந்து அவர் நிலத்திற் குதித்து அருகில் இருந்த சிறு காட்டினுள் நுழைந்திருக்க முடியும். ஆனால் ஓர் அதிகாரியின் துப்பாக்கி எஸ்கோபரின் தலைப் பகுதியிலும், கழுத்துப் பகுதியிலும் ஏழு ரவைகளாற் சல்லடை போட்டது. தாவிய வேகத்தில் எஸ்கோபரின் உயிரற்ற உடல் உருண்டு நிலத்தில் விழுந்தது.

20 நிமிடங்களின் பின் எஸ்கோபரின் தாயார் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். ''அவன் இறுதியாக அமைதியடைந்து விட்டான். கடவுளுக்கு நன்றி'' என்று கூறினார். அடுத்த ஒரு மணி நேரத்தில் ஒரு தொலைபேசி அழைப்பு அறை இல 2908 இற்கு ஒரு தொலைக்காட்சிச் செய்தியாளரால் விடப்படுகின்றது. எஸ்கோபரின் மகனுக்கு (ஜீயுவான் பப்பொலோ) அவர் இறந்த செய்தி கூறப்படுகின்றது. ''உண்மையாகவா''? என்று தொலைபேசியில் அவர் அலறுவதை உணர முடிகின்றது. உடனடியாகக் கோபத்துடன், ''நான் எல்லோரையும் கொலை செய்வேன்'' என்று ஆத்திரத்திற் கத்துகின்றார். ஆனால் பின்னர் 'ரைம்' பத்திரிகையாளருடன் கதைக்கும் நேரத்தில் ''முதலில் அப்பாவின் செய்தி கேட்டவுடன் ஆத்திரத்தில் நான் கூறியவற்றிற்காக மன்னிப்புக் கேட்கின்றேன். எமது வேதனையை நீங்கள் நன்குணர்வீர்கள், நாம் எமது குடும்பத் தலைவரை இழந்துவிட்டோம். ஆனால் ஒருபோதும் எனது அப்பாவின் இறப்பிற்குப் பழிவாங்கமாட்டேன். கொலம்பியா மக்கள் மாதிரி அமைதியையே நாம் வேண்டி நிற்கின்றோம்'' என்கிறார்.

கொலம்பியாவில் வாழும் மற்றைய போதைவஸ்துக் கடத்தற்காரர்கள் அமைதியை விரும்பமாட்டார்கள். ஆனால் இதன் ஒரு பகுதி என்றாலும் மெடலின் நடவடிக்கையாற் கட்டுப்படுத்தப்பட்டுள்ளமை மறுக்கப்படமுடியாது. அதே நேரம் காலியில் இருக்கும் மற்றைய போதை வஸ்துக் குழுக்கள் எஸ்கோபரின் இறப்பை மகிழ்ச்சித் தினமாகக் கொண்டாடினர். அவரின் எதிர்ப்புத் தமக்கு இனிமேல் கிடையாது என்பதே அவர்கள் மகிழ்ச்சிக்குக் காரணமாகும். எஸ்கோபரின் மகள் ஆறு வருடங்களுக்கு முன் குண்டுத் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டார். எஸ்கோபரின் கருத்துப்படி அவரின் காலி நண்பர்களும், ஒரிஜியூலாவும் தான் காரணம் என்றார். பல குற்றவாளிகள் கொலம்பியாவின் மென்போக்குக் காரணமாகத் தொடர்ந்தும் குற்றச் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தனர். இப்போது எஸ்கோபர் சுட்டுக் கொல்லப்பட்டதால் பயத்தின் நிமித்தம் காலிப் போதைப்பொருள் தலைவர்கள் கூட தாம் ஜெயிலில் இருக்கத் தயாராக இருக்கின்றோம் என்று கூறுகின்றனர்.

''கொலம்பியாவின் கருத்துப்படி குற்றவாளி நிறுவனங்கள் எதுவும் அரசை வெல்ல இடம் தர முடியாது'' என்று ஜனாதிபதி சீசர் கவிரியா ருஜிலோ 'ரைம்' பத்திரிகைக்குக் கூறியிருக்கின்றார். காலிக் குழு மிகவும் மென்மையானதும், கையாள்வதற்கு இலகு என்றும் சில அதிகாரிகள் கூறிய போதும் இவர்களிற் சில அங்கத்தவர்கள் எஸ்கோபருடன் சேர்ந்து வேலை செய்திருக்கின்றார்கள் என்பதும் உண்மை. ஓர் அதிகாரியின் கருத்துப்படி, ''அவை ஒரு மகிழ்ச்சிகரமான குடும்பம்'' ''குற்றவியல் நிறுவனம்'' என்பதிற் சந்தேகம் இல்லை.

ஏறத்தாழ ஆயிரம் மக்கள் எஸ்கோபரின் இறுதி யாத்திரையிற் கலந்து கொண்டனர். சிலர் 20 வருடங்களுக்கு முன் எஸ்கோபர் களவெடுத்த நினைவுக் கற்களைப் போதைவஸ்துக் கும்பலுக்கு இதே இடத்தில் விற்றுப் பெரும் பணத்தைப் பெற்ற சம்பவத்தை நினைவு கூர்ந்தனர். அவர் தொழில் தொடங்கிய இடத்திலேயே முடிவுக்கு வந்துவிட்டார். தொழில் தொடங்கிய இடம் மெடலின் மயானம். அவர் முடிவடைந்த இடமும் அதுவே.

*ரைம், டிசம்பர் 13, 1993*

# சிறுபான்மையினரின் கலாசாரத்துக்கு ஆபத்து

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாகாண அரசின் தலைநகரமான ஸ்ரீநகர்க் கட்டடச் சுவரொன்றில், ''காஷ்மீரை இந்தியாவிலிருந்து விடுதலை செய்'' என்ற சுலோகம் எழுதப்பட்டிருந்தது. ஸ்ரீநகரின் கிழக்கில் சில நூறு கிலோ மீற்றர் தொலைவில் ''காஷ்மீரிலிருந்து லடாக்கை விடுதலை செய்'' என்ற வேறொரு சுலோகம்காணப்பட்டது. இவ்விரண்டையும் எழுதியோரின் விருப்பத்திற்கும் அப்பால், மேலெழுகின்ற செய்தி இந்தியாவின் தொலை தூர வடக்குப் பிரதேசத்தில் முஸ்லிம் காஷ்மீரிகளுக்கும் பௌத்த லடாக்கியருக்குமிடையே சமய அடிப்படையில் பிளவு ஏற்பட்டுள்ளது என்பதே. இவ்விரு பகுதியாருக்கும் இடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலையானது லடாக்கியரின் கலாசார சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாய் மாறி வருகிறது. முஸ்லிம்கள் லடாக்கில் தமது சனத்தொகையைப் பெருக்கி மேலாண்மை கொள்ளும் நிலையில் அங்கு வாழும் லடாக்கியர் படிப்படியாகத் தொகையிற் சுருங்கிச் சிறுபான்மையராகி வருகின்றனர்,

வளமான வரலாற்றையும், மரபினையுங் கொண்ட லடாக்கியர் தமது கலாசாரத்தை இழந்து விடுவார்களா? இவர்களின் முதாதையரான வட இந்திய மொன்கள், கில்ஜிற்றைச் சேர்ந்த டாட்கள், திபெத்திலிருந்து வந்த மொங்கோலிய நாடோடிகள் யாவரும் உள்ளிட்ட ஒரு கலப்பினத்தவரே லடாக்கியர். சுன்னிஸ், ஷியா முஸ்லிம் பிரிவினர் லடாக்கின் பிரதானமான பகுதிகளில் இடம்பிடித்துக் கொண்ட போதிலும் மகாயான பௌத்தமே இங்கு தலைமை பெற்ற மதமாக உள்ளது. திபெத்தின் தலாய் லாமா இவர்களின் ஆன்மீகத் தலைவர். 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய ஆட்சிக்கு உட்படும் வரை லடாக் தனித்த சுதந்திர அரசாக விளங்கியது. 1947 இல் இந்திய- பாகிஸ்தான் போரினை அடுத்து ஜம்மு காஷ்மீரோடு இணைக்கப்பட்டது. மத்திய கேந்திரமாய் விளங்கிய லடாக்கினூடாக யார்க்கண்டுக்கும், லேகுக்கும் இடையில் அமைக்கப்பட்ட வீதி மொங்கோலியரும், சீனரும், காஷ்மீரியரும் கிரிஜ்ஜியரும், அப்கானியரும், உய்கூர்களும் தங்கள் வண்டிகளில் பொருள்கள் கொண்டு வந்து பண்டமாற்று வியாபாரம் செய்ய வாய்ப்பளித்து வந்தது. 1950 இல் திபெத்தைச் சீனர் கைப்பற்றியதிலிருந்து இதன் எல்லை வழி முடப்பட்டதால் இந்த வியாபாரத்திற்கு முடிவு ஏற்பட்டது.

**முஸ்லிம்களின் பிரவேசத்தினால் லடாக் பிரதேசத்தின் பௌத்த சமயத்தினர் சீரழிவில் சிக்கிவிட்டதாக எண்ணுகின்றனர்.**

12 ஆண்டுகளின் பின் சீனப் படை லடாக்கினுள் நுழைந்து சன நெருக்கம் குறைந்த வடகிழக்கு மூலைப் பகுதியிலுள்ள அஸ்கைசின் என்ற 40,000 கிலோ மீற்றர் நிலப் பகுதியைக் கைப்பற்றியது. இதனால் லடாக் தனது பிரதேசத்தின் 40 வீதத்தை இழக்க நேர்ந்தது. சீனரின் ஆக்கிரமிப்பைத் தடுக்கும் முகமாக இந்தியா புதிதாக லே பிரதேசத்துக்கும், காஷ்மீருக்குமிடையே வீதியை ஏற்படுத்தி தனது நிரந்தர படைத் தளத்தையும் அமைத்துக் கொண்டது. இதனைத் தொடர்ந்து சீனாவுக்கும், இந்தியாவுக்குமிடையே அடிக்கடி சிறுச்சிறு சண்டைகள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன.



தலாய் லாமாவின் பிறந்த நாளின் போது லாடாக்கின் சிறப்பு நிகழ்ச்சிகள்

150,000 லடாக் மக்கள் தனித்துப் பிரிந்துள்ள நிலையிலும் தமது திபெத்திய இனமொழியையும், கலாசாரத்தையும் பேணியே வந்தனர் ஆனால் இன்று இவர்களின் அயலவர்களாக 4 மில்லியன் காஷ்மீர் முஸ்லிம்கள் வாழ்வதோடு, அவர்கள் காஷ்மீர் தலைநகரான ஸ்ரீநகரிலுள்ள ஆட்சியில் ஆதிக்கம்பெற்றும். இருப்பதால், காஷ்மீர் முஸ்லிம்கள் லடாக்கின் சூழவரவுள்ள பகுதிகளில் குடியேறி இன்று முஸ்லிம் லடாக்கிய சனத்தொகை சமஅளவை அடைந்துள்ளது. இதனோடு கொடுமை

யிழைக்கும் காஷ்மீர்ப் பிரிவினைவாத இயக்கத்தையும், அதன் செயற்பாடுகளையும் ஸ்ரீநகரின் பொருளாதாரத் தேக்கநிலையையும் தாங்கிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் அதற்குண்டு. காஷ்மீரில் நிகழும் போர்களினால் அங்கு உல்லாசப் பிரயாணிகளின் வருகை வீழ்ச்சி கண்டுவிட, அந்த உல்லாசப்பயணிகள் லடாக்கை நோக்கி வந்தவண்ணம் இருக்கின்றனர். ஆனால் இதனால் லடாக்கிற்கு எவ்வித நன்மையும் இல்லை. காஷ்மீர் இராணுவத்தினர் லடாக்கின் உல்லாச விடுதிகளில் பொழுதுபோக்குவதால் அதன் அமைதி குலைகிறது. காஷ்மீர் வியாபாரிகள் தடையின்றிப் பெருமளவில் லடாக்கினுட் புகுந்து உல்லாசப் பயணிகளுக்கு நடத்திவரும் வியாபாரத்தால் பொருளாதாரப் பாதிப்பு ஏற்படுகிறது. காஷ்மீர்ப் பயணி வழிகாட்டிகளின் பிழையான விளக்கங்களினால் பௌத்த சமயத்திற்கு இழிவும், மாசும் உண்டாகின்றன. லடாக்கிலுள்ள கோயில் விக்கிரகங்கள், பிறபுனிதப் பொருள்கள் களவாடப்படுகின்றன. வெளிநாட்டுப் பயணிகளின் செல்வாக்கு உட்படும் சுதேசிகள் பலரும் தமது பாரம்பரியச் செல்வங்களை இகழ்ந்து பழிக்கும் நிலையும் உருவாகிறது. முஸ்லிம்களுக்கும், பௌத்தர்களுக்குமிடையே நிலவும் வேறுபாடுகளும், லே பிரதேசத்தில் வெளிநாட்டார்கள் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற வந்து கடைப்பிடிக்கும் நடையுடை பாவனைகளும் லடாக்கியரின் கலாசாரத்தைப் பெரிதும் பாதிக்கின்றன. அபிவிருத்தியும், தொழில்நுட்பமும் அரசாங்க நிர்வாக அதிகாரிகளின் கைகளிலேயே இருப்பதால் அவர்களின் பொறுமையின்மை, வகுப்புவாத சமய முரண்பாடுகளுக்கும், குழப்பங்களுக்கும் இடமளிப்பதாக வெளிநாட்டு நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். புத்தரின் சிலைகளும், லாமாக்களின் திருவுருவங்களும் எழுந்தருளியுள்ள தூபங்களைப் பேணுவதற்கும் முடியாத நிலையில் பௌத்த குருமார் திணறுகின்றனர். உல்லாசப் பயணிகளின் பார்வையிடலுக்காகவும், அவர்களிடம் வருவாயாகப் பெறும் பணத்திற்காகவும், இங்கு வழமையாக மாரி காலத்தில் நடைபெறும் உற்சவங்கள் கோடைக் காலத்தில் நிகழ்த்தப்படுகின்றன.

சரியான முறையில் வகுக்கப்படாதனவும், பிழையான வழியில் நடத்தப்படுவனவுமான திட்டங்களால் லடாக்கின் குடும்ப, சமூகச் சுமுக நிலையிலும் பெரும் பாதிப்பு உண்டாகின்றது. உதாரணமாகத் திறமை வாய்ந்த தொழிலாளரையும், தொழில் நுட்பவியலாளரையும் உருவாக்குவதெற்கென இந்திய அரசு தான் வகுத்த கல்வித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு காஷ்மீரிலிருந்து நூற்றுக்கணக்கான இளம் முஸ்லிம் ஆசிரியர்களை லடாக்கிற்கு அனுப்புகிறது. இவர்கள் லடாக்கியரின் மரபை உடைத்தெறிந்து தமது கலாசாரத்தினை இளம் மாணவரிடையே திணிக்கின்றனர்.

போட்டியிடும் காஷ்மீரிய போராளிக் குழுக்கள் லடாக் பிரதேசத்திற்கு ஒற்றையாட்சிக் கீழ்ச் சுதந்திரம் அளிக்க வேண்டும் என்று கோருகின்றன. இந்தக் கோரிக்கையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தப் பாகிஸ்தானும் இந்தியாவும் இணங்கியுள்ளன. எந்தத் தீர்வாயிருப்பினும் சரி, அது நியூடெல்கி அரசாங்கத்தினது முடிவிலும் பலம் வாய்ந்த குரலெழுப்புதலிலுமே தங்கியுள்ளன. எவ்வாறாயினும் லடாக், தனது முன்னைய பௌத்த அரசின் உரிமை நிலையை இந்தியாவின் சமயச் சார்பற்ற சட்டவாக்கத்திற்கமையப் பெறுவதாக அமைதல் வேண்டும். இல்லாவிட்டால் இவர்களின் அயலவரான திபெத்தியருக்கு ஏற்பட்ட விதிதான் இவர்களுக்கு ஏற்பட்டு வருந்த நேரிடும்.

அட்றியன் மொங் ஹொங்கொங்
(அண்மையில் லடாக் சென்று வந்தவர்)

(F) வார்ஈஸ்ரேன் எக்கனமிக்றிவியூ,
நவம்பர், 11, 1993.

## ஐரோப்பிய புராணக்கதை

அறிவுக்கு எட்டாததைப் பற்றிய பயம் சில பலம்வாய்ந்த புராணக்கதைகளை உருவாக்கியுள்ளது. இடிஇடிப்பது கடவுளர்கள் கோபம் கொண்டதால் என்பது போன்று ஐரோப்பிய ஒற்றுமையை இட்டு எழும் பயங்களும் அத்தகைய புராணக் கதைகளுக்கு இணையான புதியவகைகளைப் பிரித்தானியாவில் தோற்றுவித்து உள்ளன. பிரித்தானிய வெளிநாட்டு அமைச்சு ஒரு கையேடு வெளியிட்டு அதில் ''ஐரோப்பிய மாயை', (Euromyths) ஐரோப்பிய பயங்கரம் (Eurolunacies) என்ற வகையான பல தப்பபிப்பிராயங்களை நீக்க முயன்றுள்ளது. மாஸ்ட்றிச்ட் ஒப்பந்தத்தால் அவை விளையலாம் என்று நிலவிய பயத்தால் அவை எழுந்த கைநூலில் இருந்து சில உதாரணங்கள்:

மாயை— மீனவர்கள் தலையில் வலை அணியவும், மீன்பிடி வள்ளங்களில் கருத்தடை உறைகள் கொண்டு செல்லவும் நேரும்.

மாயை— ஐரோப்பிய சமூகத்தின் தலைவர் ஜேகஸ் டிலோரின் தலை பிரிட்டிஸ் காசுத் தாள்களிலும், நாணயங்களிலும் அரசியாரின் தலைக்குப் பதிலாகப் போடப்படும்.

மாயை— கழுதைகள் பிரித்தானியக் கடற்கரைகளில் உலாவும் போது குழந்தைகள் ஈரமாக்காமல் அணிவது போன்று டையபர்கள் அணிய வேண்டிவரும்.

மாயை— கெக்கரிக்காய்கள் இனிமேல் வளைந்து இருக்க முடியாது.

மாயை— பிரித்தானியாவில் உள்ள மலகூடங்களில் நீர் பாய்ந்து கழுவும் திறன் குறைக்கப்படும்.

**எனக்குப் போதிய நேரம் இல்லை என்று யாரும், ஒருபோதும் கூறவில்லை, இருக்கும் முழுநேரத்தையும் நீங்கள் பெற்றுள்ளீர்கள். உங்களுக்குக் கிடைத்த நேரத்தைச் சரியாக முகாமைத்துவப்படுத்தும் ஆற்றல்களைப் பெற்றிருக்கவில்லை என்பதே பொருளாகும்.**

— அலக் மக்கன்சீ —

நேரத்தை வீண் அடிப்பவர்களை ஆராயும் பொழுது இதற்கான காரணம் அவர்களது சாதாரண மனித இயல்பு என்பதைப் புரிந்து கொள்வீர்கள். நேர முகாமைத்துவம் பற்றித் தவறான எண்ணங்களை நாம் கொண்டுள்ளோம். கீழ் வருவன உங்களுக்குப் பரீட்சயமானதா எனக் காணவும்.

'உங்களுக்கு நேரம் போதாது' என எப்பொழுதாவது உங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் தனிமையில் இல்லை. உங்களைப் போன்று அநேகமான எல்லா மனிதருக்கும் 'நேர முகாமைத்துவத்தில் பிரச்சினைகள் உண்டு.

ஆனால் 'நேர முகாமைத்துவம், பழைய எண்ணமென நீங்கள் கேட்கலாம். அநேகமாக எல்லாக் கைத்தொழிலிலும் தங்களை ஒழுங்கு படுத்த முடியாதவர்களுக்கு என்றே இயங்குகின்றனவே.

இதற்கு விடை இலகுவானது. மனித இயல்பு சிக்கலானது. செயன் முறையாக 'நேர முகாமைத்துவ' சட்டங்கள் எல்லாம் மனித இயல்பின் சட்டத்திற்கு முரணானவை.




# நேரப் பொறியிலிருந்து தப்புதல்

ஈகோ (Ego) என்பது திருப்திப் படுத்துவதற்கான விருப்பம் ஆகும். துன்பப்படுத்துவதற்குப் பயம், புதிய சவால்களுக்குப் பயம், ஆர்வம், பாதுகாப்பின்மை, எமது செயற்திறன்களில் பெருமை, மற்றவர்கள் மேல் பொறாமை, முன்னேற வேண்டும் என்ற ஆசை, பூரணத்துவ எண்ணம் (Perfectionism) இவைகள் எல்லாம் மனிதனுக்குரிய விசேட குணங்களாகும்.

நீங்கள் உங்கள் நேரத்தின் மேல் ஆதிக்கம் செலுத்த வேண்டுமாயின் இச் சக்திவாய்ந்த போக்குகள் எவை என அறிந்து கொள்ளக் கற்க வேண்டும். அவற்றைக் கட்டுப்படுத்தவும் நீங்கள் உங்களைக் கற்பிக்க வேண்டும். இவற்றை முழுமையாக இல்லாமற் செய்ய முடியாவிடினும், இவற்றை உங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடியும்.

### 1. நேர முகாமைத்துவம் என்பது பொது அறிவு (Common sense) ஆகும்

எனது வேலையைச் சரியாகச் செய்கிறேன். எனவே நான் நேரத்தைச் சரியாக முகாமைத்துவம் செய்கிறேன் எனலாம். ஆனால் நீங்கள் உங்கள் நேர முகாமைத்துவப் பயிற்சிக்கு மாறாக நன்றாகச் செய்கிறீர்கள் என்றே கூறவேண்

டும். கடினமானதல்ல எனச் சூசன் ரெயின் வோட்டர் Susan) Rainwater) என்ற விண் நடத்தல் (Space Walk) பயிற்றுநர் கூறுகிறார். ''KT தெரிந்து எடுத்ததற்குக் காரணம் உடற் பலம் அல்ல, புத்திக்கூர்மையும், கைகளின் வினைத்திறனுமே'' என்கிறார் அவர்.

## 2. அழுத்தங்களின் மத்தியில் நான் மேலும் திறமையாக வேலை செய்வேன்

ஒருவரும் அழுத்தங்களின் மத்தியில் திறமையாக அப்படிச் செயற்படுவதில்லை. உண்மையில் சூழ்நிலையே உங்களை அப்படிச் செய்யத் தூண்டுகிறது. காலதாமதம் செய்யும் பழக்கத்திற்கு (Procrastination) உங்கள் நனவிலி மனதில் (Subconscious) அப்படியான ஓர் எண்ணம் தோன்றுகிறது.

அழுத்தத்தின் போது திறமையாகச் செய்ய முடியும் என்று பெரிய வேலையைத் தள்ளிப் போட்டால் திட்டமிடுவதற்கு நீங்கள் நேரம் கொடுப்பதில்லை. இதனால் உயர் விளைவுகள் உங்களுக்குக் கிடைக்காது போய்விடும்.

## 3. நேர முகாமைத்துவத்தில் அதிகம் படிப்பிக்கிறார்கள் அதற்கு எனக்கு நேரமில்லை

செய்யாமல் இருப்பதற்கு உங்களுக்கு நேரமில்லை. ஒரு நேர அட்டவணை தயாரித்து நாளாந்த வேலைகளைத் திட்டமிடுவது உங்களுக்குப் புதிய ஒன்றாயிருக்கலாம். அது பயிற்சி பெற்றபின் அதிக நேரத்தை எடுக்காது. சில நிமிட திட்டமிடல் அதிக மணித்தியாலங்களை மிச்சப்படுத்தும்.

'நேர முகாமைத்துவம்' என்பது தவறான எண்ணக்கரு ஆகலாம். ஏனெனில் நேரத்தை முகாமைத்துவம் செய்ய முடியாது. அதாவது ஏனைய வளங்களைக் கையாளுவது போன்று இதனைச் செய்ய முடியாது.

தொழிலைச் சரியாகச் செய்ய 5 வகையான வளங்களைச் சரியான முறையில் பயன்படுத்தல் வேண்டும். மூலதனம், பௌதிக வளம், மனிதவளம், தகவல், நேரம் என்பனவாகும். முதல் நான்கையும் நமது தேவைப்படி எத்திசையிலும் செயற்படுத்தலாம்.

ஆனால் கண்ணுக்குத் தெரியாத வளமாகிய நேரமோ, வரையறுக்கப்பட்டது எனவே தனித்துவமானது. ஒரு நிமிடத்தில் 60 செக்கன்கள் உண்டு. 1 மணியில் 60 நிமிடங்கள் உண்டு. எனவே கணிப்பிடப்பட்ட அளவே உண்டு. கூட்டவோ, குறைக்கவோ முடியாது. இது செலவழிக்கப்படும் வளமேயாகும். பெற்றுக் கொள்ளும்போதே செலவழிக்க வேண்டிய ஒரே ஒரு வளம் இதுவேயாகும். நாம் நேரம் சார்பாக நம்மை முகாமைத்துவம் செய்யவேண்டும். எவ்வளவு நேரம் உண்டு என நாம் தீர்மானிக்க முடியாது. ஆனால் நேரத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும் எனத் தீர்மானிக்கலாம்.

ஒருமுறை நாம் நேரத்தை வீணாக்கினால் அது போய்விடும் திரும்பப் பெற முடியாது.

நல்ல நேர முகாமைத்துவத்தால் ஒரு மணி, அல்லது 2 மணி மிச்சம் பிடிக்கலாம். ஆனால் அதனால் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? மிச்சம் பிடித்த நேரத்தைப் பயனுள்ளதாகச் செலவழிக்காவிடில் பிரயோசனமில்லை. நேர முகாமைத்துவத்தின் பயன் அதைக் கட்டுப்படுத்துவது அன்று, மாறாக உங்கள் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாகும். நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தப் பழகிக்கொண்டால் அழுத்தங்களில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம். இது உங்கள் உற்பத்தியைப் பெருக்கும். உங்கள் இலக்குகளை அடைவதில் வெற்றியைத் தரும் சீரான வாழ்வு (Balanced Life) பெறுவீர்கள், அதாவது வேலை, வீடு, குடும்பம், தனியாள் என்பவற்றிற்குப் போதிய நேரமும், சக்தியும் கிடைக்கும்

நேர முகாமைத்துவம் மூலம் உங்களுக்குக் கிடைக்கும் பயன் அதிக நேரம் அல்ல, மேலும் சிறந்த வாழ்வேயாகும்.

*வோல்ட் எக்சி கியுற்றிவ் டைஜஸ்ட்,*
*நவம்பர், 1993*

# 1994 இன் இறுதிப் போட்டிக்கு ஆயத்தம்

உலகின் மிகப் பிரபலமான விளையாட்டு நிகழ்வான உலகக் கோப்பை உதை பந்தாட்டத்தைப் போல் வேறு எந்த விளையாட்டுப்போட்டியும் தேசப் பற்று உணர்ச்சிகளைத் தூண்டுவதில்லை. கடந்த வாரம் நடைபெற்ற 1994 இல் இறுதியாட்டங்களில் விளையாடத் தகுதி பெறும் சுற்றில் ஆனந்தமும், கண்ணீரும், கலந்திருந்தன. இறுதிச் சுற்றில் விளையாடத் தகுதிபெறும் 24 நாடுகளுள் இத்தாலியும், ஆர்ஜன்ரீனாவும் கடைசி நேரத் திமிர் வெற்றிகளால் நுழைந்து கொண்டன. இதனால் உரோம்நகரிலும், போனஸ் அயர்ஸ் நகரிலும் பெரும் கொண்டாட்டம் ஏற்பட்டது. ஒரு காலத்தில் பெருமைக்குரிய நிலையில் இருந்த இங்கிலாந்தும், பிரான்சும் தகுதிபெறத் தவறின. இதனையடுத்து இங்கிலாந்தின் நாளேடுகளுள் ஒன்றான ''டெய்லி மிறர்'' ''உலகத்தின் முடிவு'' எனத் தலையங்கம் வெளியிட்டது. பிரெஞ்சுக்காரர் பல்கேரியாவிடம் தோற்றுப் போனதுடன் மிகவும் மனமுடைந்து போயினர். இரண்டு அடுத்தடுத்த உலகக் கோப்பைகளில் பிரான்சு இறுதியாட்டங்களுக்குத் தகுதி பெறத் தவறியதனால், ''பரீசியன்'' என்ற நாளேடு, அந்த மோசமான கனவு எனத் தலையங்கம் வெளியிட்டிருந்தது. பல்கேரியாவின் பிரான்சுக்கெதிரான வெற்றி அதனை இறுதிச் சுற்றினுள் கொண்டு சேர்த்தது மட்டுமன்றி பிரதமர் வியூபென் பெரோவின் பதவியையும் காப்பாற்றியது. போட்டி நடந்த தினத்தில் பிரதமர் நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பை எதிர் கொள்ள விருந்தார். தொலைக்காட்சியில் ஒலிபரப்பப்படும் போட்டியைப் பார்ப்பதற்காக வாக்கெடுப்பு சில மணி நேரம் ஒத்திப் போடப்பட்டது. போட்டி முடிவடையப் 10 செக்கண்டுகள் இருக்கும்போது பல்கேரிய வீரர் எமில் கோஸ்ராடினோவ் கோல் ஒன்று அடித்து வெற்றி ஈட்டிக் கொடுத்தார்.



கோஸ்ராடினோவ் அடித்த கோல் பிரான்சைப் போட்டியிருலிந்து அகற்றியது.

வெற்றிக் களிப்பில் இருந்த உறுப்பினர்கள், பிரதமருக்கு இன்னோர் சந்தர்ப்பம் வழங்கும் வகையில் வாக்களித்தனர்.

இங்கிலாந்து தகுதி பெறாததினால், இந்த உலகக் கோப்பைப் போட்டி நடைபெறப்போகும் இடமான அமெரிக்காவில் உலகக்கோப்பை அதிகாரிகள் குழு பெரும் நிம்மதியடைந்தது. காரணம் இங்கிலாந்தின் முரட்டு ஆதரவாளர்கள், அமெரிக்க விளையாட்டரங்குகளில் வந்த கலவரங்களை ஏற்படுத்தமாட்டார்கள் என்பதாகும். இத்தாலியும், அயர்லாந்தும் தகுதி பெற்றது அதிகாரிகளுக்குச் சந்தோஷமே. இவ்விரு நாடுகளும் விளையாடுவது அமெரிக்காவில் பெருமளவில் வசிக்கும் இத்தாலிய, ஐரிசுக் குடிமக்களின் ஆர்வத்தைத் தூண்டும். இதனால் தமது வருவாய் நிச்சயிக்கப்படும் என அவர்கள் நம்புகின்றனர். இத்தாலி

**உலகக் கோப்பை உதைபந்தாட்டத்தில் பங்குபெறும் அணிகள் தீர்மானிக்கப்பட்டுவிட்டன.**

தனது ஆரம்பப் போட்டிகளை, இத்தாலிய, அமெரிக்கர் அதிகம் வாழும் இடமான நியூயோர்க்கில் விளையாடும், அதேவேளை அயர்லாந்து, பொஸ்ரன் நகரில் விளையாடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவை அரும்பொட்டில் வென்று தகுதி பெற்ற ஆர்ஜென்ரீனாவும் நன்கு வரவேற்கப்படுகிறது. 33 வயதான, கறைபடுத்தப்பட்ட, ஆனால் மிகப் பிரபலமான வீரர், டையகோ மரடோனா தான் இதற்குக் காரணம். அவர் இன்னமும் உதைபந்தாட்டத்தின் மிகப் பெரும் வீரர்களுள் ஒருவராக இருக்கிறார். அவருடைய அதிவேக நுட்பங்களும், பிறரை ஈர்க்கும் நடத்தையும் பெரும்பாலான அமெரிக்க இரசிகர்களுக்குப் பரிச்சயம் இல்லாத விளையாட்டான உதைபந்தாட்டத்துக்கு அழகு சேர்க்கும்.

நடந்த போட்டிகளில் மிகவும் பரபரப்பாக நடைபெற்றது அயர்லாந்துக்கும், வட அயர்லாந்துக்கும் இடையிலானதாகும். இப்போட்டி வட அயர்லாந்தில் பெல்பாஸ்ட் நகரின், வின்ட்சர் பர்க்கில் நடைபெற்றது. இவ்விடம் கொந்தளிப்பு நிறைந்தது. புரட்டஸ்தாந்து சுற்றாடலில், கைவிடப்பட்ட வீடுகளும், பலகை அடிக்கப்பட்ட ஜன்னல்களும், சுவர்களில் எழுதப்பட்டிருந்த கோபமான வாசகங்களும் இதற்குச் சான்று பகன்றன. பார்வையாளர்களின் எண்ணிக்கை 10,000 ஆகக் கட்டுப்படுத்தப்பட்டது. ஏறத்தாழ 2,000 பொலிஸாரும், இராணுவத்தினரும் வன்முறையைத் தடுப்பதற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். விளையாட்டரங்குக்கு வரும் பக்க வீதிகளைத் துருப்புக்களும், கவச வாகனங்களும் தடைசெய்து நின்றன. ஐரிசுக் குடியரசில், ரிக்கட்டுக்கள் விற்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தபோதும், 400 அபிமானிகள் வடக்கிலிருந்ததமது நண்பர்கள் மூலம் ரிக்கட்டுக்களைப் பெற்றுக் கொண்டனர் எனினும், அவர்கள் அமைதியாக இருந்து போட்டியைப் பார்த்தனர். அயர்லாந்து தாமதமாக ஒரு கோல் போட்டு இறுதியாட்டத்தில் இடம் பிடித்துக் கொண்டது. ஐரோப்பிய சாம்பியனான டென்மார்க் இதனால் தகுதி பெற முடியாது போயிற்று.

புதிய அணிகள் தகுதிபெறும் செயன்முறையானது, சமத்துவம் சர்வதேச உதைபந்தாட்டத்தில் வந்துவிட்டது என்பதை தெளிவுபடுத்தியது. பாரம்பரிய சக்திகளில் சிலவான ஆர்ஜென்ரீனா, பிறேசில், ஜேர்மனி, இத்தாலி போன்றவை இறுதியாட்டத்துக்குள் நுழைந்து கொண்டாலும் தெரிவு செய்யப்பட்ட 24 அணிகளுள் 6 அணிகள் முன்னெப்போதும் உலகக் கோப்பை இறுதியாட்டங்களுக்குத் தகுதி பெறாதவையாகும். அத்துடன் வேறு 9 அணிகள் கடந்த மூன்று முறைகளுள் ஒரு முறைதான் தகுதி பெற்றவை. 1994 உலகக் கோப்பையில் நீண்டகாலம் பங்கு பெறத் தவறிய சுவிற்சர்லாந்து, பொலிவியா, நோர்வே ஆகியவை கலந்து

## வெற்றி பெறப்போவது யாரெனில்...

*பிறேசில், எனினும் ஐரோப்பியர்களையும் குறைத்து எடைபோட வேண்டாம்.*

| பிரதேசம் | நாடு | வெற்றிச் சாத்தியம் |
|---|---|---|
| ஆபிரிக்கா | கமறூன் | 66: 1 |
| | மொறோகோ | 100: 1 |
| | நைஜீரியா | 100: 1 |
| ஆசியா | சவூதி அரேபியா | 150: 1 |
| | தென்கொரியா | 150: 1 |
| ஐரோப்பா | பெல்ஜியம் | 25: 1 |
| | பல்கேரியா | 40: 1 |
| | ஜேர்மனி | 5: 1 |
| | கிறீஸ் | 66: 1 |
| | அயர்லாந்து | 33: 1 |
| | இத்தாலி | 5: 1 |
| | நெதர்லாந்து | 8: 1 |
| | நோர்வே | 25: 1 |
| | றோமானியா | 33: 1 |
| | ருஷ்யா | 25: 1 |
| | ஸ்பெயின் | 16: 1 |
| | சுவீடன் | 25: 1 |
| | சுவிற்சர்லாந்து | 40: 1 |
| வட மத்திய அமெரிக்கா | மெக்சிக்கோ | 40: 1 |
| | ஐக்கிய அமெரிக்கா | 40: 1 |
| தென் அமெரிக்கா | ஆர்ஜென்ரீனா | 7: 1 |
| | பொலிவியா | 33: 1 |
| | பிறேசில் | 4: 1 |
| | கொலம்பியா | 11: 1 |

*மூலம்:— வில்லியம் ஹில், புத்தகத் தயாரிப்பாளர்கள் லண்டன்.*

கொள்ளும். சவூதி அரேபியா, கிரீஸ், நைஜீரியா ஆகியவை முதற் றடவையாகக் கலந்து கொள்ளும்.

அமெரிக்க உதைபந்தாட்ட சம் மேளனத்தின் நம்பிக்கை என்ன வெனில், இந்த உலகக் கோப்பை அமெரிக்கர்களிடையே உதைபந் தாட்டத்தில் ஆர்வத்தைத் தூண் டும் என்பதாகும். அமெரிக்காவிற் கூடைப்பந்து, பேஸ் பந்து ஆகிய விளையாட்டுக்களே ஒலிபரப்பப் படும் விளையாட்டுக்களில் முன் னணி வகிக்கின்றன.

சமீபத்தில் நடத்திய வாக்கெ டுப்பு ஒன்றின்படி 13 சதவீதமான அமெரிக்கர்களே உலகக் கோப்பை அமெரிக்காவில் நடைபெறப் போகி றது என்பதையும் நடைபெறப்போ கும் 52 போட்டிகளில் எல்லாப் போட்டிகளுக்கான ரிக்கட்டுக்களும், விற்றுத் தீர்ந்து விட்டன என்பதை யும் அறிந்திருக்கின்றனர் எனத் தெரியவருகிறது. அமெரிக்காவில் உதைபந்தாட்டத்தின் வளர்ச்சிக்கு டிக்கட்டுகளின் விற்பனை மட்டுமல் லாது, முதலீட்டாளர்களின் பார்வை, உதைபந்தாட்டத்தின் பக்கம் திரும்புதலும் தேவை.

வில்லியம் ஹில் எனும் பிரித் தானிய புத்தகம் அச்சிடும் நிறுவன மானது, பிறேசில் தற்போதைய சாம்பியனான ஜேர்மனி, ஆர்ஜென் ரீனா ஆகியவற்றுள் ஏதாவது ஒன்று உலகக் கோப்பையை வெல் லும் எனக் கூறுகிறது. ஒரு குறிப்பு: உலகக் கோப்பை ஆறு தடவைகள் மேற்கு அரைக் கோளத்தில் நடாத் தப்பட்டது. அதில் ஒவ்வொரு தட வையும் தென்னமெரிக்க அணி ஒன்றுதான் வெற்றி பெற்றது. தவிர, கொலம்பியா, மெக்சிக்கோ, நெதர்லாந்து, ஸ்பெயின் ஆகியவை தேர்வுப் போட்டியில் நன்றாகவே விளையாடின. 1990 இல் கமறூன் அரையிறுதி ஆட்டத்துக்குள் நுழைந்து அனைவரையும் வியப்பி லாழ்த்தியது. ஆனால், அது இம் முறை நடக்காது. பதிலாக ஆபி ரிக்காவின் மிகத் திறமையான அணியாக நைஜீரியா தன்னை நிரூ பிக்கக் கூடும். இத்தாலி போர்த் துக்கலை 1 — 0 என்ற கோல்க் கணக்கில் வென்றபோது மிலான் நகரில் உற்சாக மடைந்த அபிமானி கள்'' அமெரிக்காவே இதோ வருகி றோம் '' எனப் பாட்டுப் பாடினர்.

(பொஸ்ரனிலிருந்து றிச்சட் ஏ (ர்) ண்ஸ்பே (ர்) கர் (ஜூனியர்) மார்க். ஸ்ராப் ஆகியோர் லண்டனிலிருந்து சூசன். ஏச். கிறீன் பேர்க், உரோமிலிருந்து நிக்கோ. விவரெல்லி)

நியூஸ் வீக், நவம்பர் 29, 1993.

**ஹையிட்டி.**

## விடுபாடுகளின் பொய்கள்

ஹையிட்டியின் நாட்டைவிட்டுச் சென்றுள்ள ஜனாதிபதி ஜீன் பேற்றன்ட் அரிஸ்டயிட் மீண் டும் அதிகாரத்திற்கு வருவதை எதிர்ப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள அமெரிக்க உளவு அமைப்பான சீ ஐ ஏ குட்டுப்படுகிறதா? அரிஸ் டயிட்டுக்கு எதிரான அமெரிக்க அரசு அவை யான செனேட்டின் உறுப்பினர்கள் சிலர் அரிஸ் டயிட் பைத்தியத்திற்கு 1980இல் பரிகாரம் பெற் றார் என்றும், 1991இல் கூட அவர் மனோ வியா தியால் பீடிக்கப்பட்டு வைத்தியம் செய்யப்பட் டார் என்றும் கூறியது, சீ ஐ ஏ தந்த தகவலின் படிதான் என்று கூறியதும், ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் விரைந்து ஹையிட்டியின் இரா ணுவ அதிகாரிகள் சீ ஐ ஏ அமைப்பிடமிருந்து இலஞ்சம் பெறுகின்றனர் என்று செய்தி வெளி யிட்டுப் பதிலடி கொடுத்தனர். ஆனால் இரு பகுதியாருமே முழு உண்மையைக் கூறுவதாகத் தெரியவில்லை. அரிஸ்டயிட் எதிர்ப்பு செனேட் குழுவினர், சீ ஐ ஏ அமைப்பினர் 1991இன் பின்பு அரிஸ்டயிட் மனோ வியாதிக்குப் பரிகாரம் பெற் றதற்கான சான்று ஏதும் இல்லை என்றதையும் தற்பொழுது அவர் ஆட்சி நடத்தத் தகுதி வாய்ந்தவராக உள்ளார் என்று கூறியதையும் சொல்லாமல் விட்டு விட்டனர். அந்த செனேட் உறுப்பினர்கள் ஹையிட்டியின் எதிர்க்கட்சிகளு டனும், அரிஸ்டயிட் எதிர்ப்பாளர்களுடனும் தொடர்பு வைத்திருக்கிறார்கள் என்று நியூஸ் வீக் பத்திரிகை அறியவந்துள்ளது.

# மின்சாரக் கண்

## விஞ்ஞானத் தொழில் நுட்பத்தின் புதிய சாதனை

எழுதியது : மைக் மே

ஹரல்டு சேர்ச்சி என்பவரது பார்வையைத் தற்போது உள்ள எந்த சத்திர சிகிச்சையாலும் ஏற்படுத்த முடியாது. இவர் கிறிஸ் றெறினிரிஸ் பிக்மென்றோசா (Retinitis pigmentosa) என்ற பரம்பரை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார், இது விழித்திரையில் காணப்படும் ஒளி வாங்கிகள் (Photoreceptor) எனப்படும் ஒளியை உணரும் கலங்களைப் படிப்படியாக அழித்து விடுகிறது. ஆயினும். சென்ற வருடம் 64 வயதையுடைய இவர் டியூக் பல்கலைக் கழகத்தின் கண் மையத்தில் மருத்துவக் கல்விக்கு உதவும் வகையில் சத்திர சிச்சைக்கு உடன்பட்டார்.

வைத்திய கலாநிதி யூஜின் டி ஜுவான் Dr. Eugene de Juan என்ற வைத்தியர் இவாது கண்ணினுள் ஒரு மில்லி மீற்றர் விட்டமுடைய உலோகக் குழாயினூடாக ஆராயும் கருவியைச் (probe) செலுத்தினார். விழித் திரையில் இது வைக்கப்பட்ட பின் சிறு மின்சமிக்ஞை (signal) மூலம் சிறு அதிர்ச்சி கலங்களுக்குக் கொடுக்கப்பட்டது. இக் கலங்களே மின் அதிர்வின் மூலம் நரம்புத் தொகுதி மூலம் உடலெங்கும் தகவல்களைக் கொண்டு செல்லும் நியுரொன்கள் (neurons) என அழைக்கப்படுகின்றன.


இப் பல்கலைக் கழகத்தின் கண்ணியல் ஆராய்ச்சியாளர் கலாநிதி மாக் ஹுமயுன் (Dr. Mark Humayn) உயிரியல் மருத்துவ பொறியியல் பேராசிரியர் கலாநிதி றொய் ப்றொப்ஸ்ற் (Dr. Roy Propst) ஆகியோரினால் கட்டுப்படுத்தப்படும் கணனி இயக்கும் உபகரணங்கள் மூலம் சேர்ச்சியின் விழித்திரைக்கு மின் அதிர்ச்சி ஏற்படுத்தப்பட்டது. முதலில் அவர் ஒன்றையும் உணரவில்லை எனவே ஹுமையுன்'

**ஒளி உணர் திறன் மிக்க ஒன்றை விழித்திரையில் பொருத்துவதன் மூலம் கண் பார்வையை இழந்த சிலரின் ஆரம்ப மட்டத்திலான பார்வையைப் பெற்றுத்தர முடியும்**

ப்றொப்ஸ்ற் ஆகியோர் மிகச்சிறிய அளவுகளினால் மின் ஓட்டத்தை அதிகரித்தனர். இறுதியில் அவரால் ஏதோ பார்க்க முடிந்தது. அவர்: 'சிறு பட்டானிக் கடலை என்று அழைத்த ஏதோ ஒன்று தமது கண்ணின் முன் 12 அங்குல தூரத்தில் தெரிந்தது' எனக் கையசைவின் மூலம் காட்டினார். வெளி வெளிச்சம் ஒன்றும் இல்லாதிருந்தும் மின் அதிர்ச்சி அவரது கண்ணில் ஒளி உணர்வை ஏற்படுத்தியது. ஒரு வாரத்தின் பின் அப்பரிசோதனை அவன் டி லிஸ் என்ற 33 வயதுடைய ஒருவர் மேல் மெற்கொள்ளப்பட்டது. 'அது ஆச்சரியம்' என அவர் கத்தினார். அவரும் பார்வை உணர்வைப் பெற்றார். இவர்கள் இருவர் மேலும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை ஆரம்ப கட்டமேயாகும். இது வெற்றியளிக்கும் பட்சத்தில் ஒளி வாங்கிகள் செயற் படாததால் பார்வையற்றவர்களாயிருக்கும் 20,000 அமெரிக்கர்களுக்கு இது பிரயோசனமாயிருக்கும்.

இத் திட்டம் 5 வருடங்களுக்கு முன் இரு விஞ்ஞானிகளின் உரையாடல் மூலம் ஆரம்பமாயிற்று. ஒருவர் கலாநிதி டி ஜீவான், மற்றவர் குறைகடத்தி ஆராய்ச்சி மையத்தின் (Semi Conductor Reserach) கலாநிதி ஹொவர்ட் பிலிப்ஸ் என்பவர் ஆவர். பிலிப்ஸ் செயற்கைப் பார்வைத் தொகுதிகள் பற்றி விசாரித்து ஒளி உணர்விகளை அங்கு பயன்படுத்த முடியுமா எனக் கேட்டார். டி ஜுவான் இதனால் கவரப்பட்டார். இருவரும் செயற்கை விழித் திரையைப் பொருத்துவதன் மூலம் பார்வையற்றோருக்கு பார்வை அளிக்கும் முறையைப் பற்றிய திட்டமொன்றைத் தயாரித்தனர்.

மனித ஒளி வாங்கிகள் விழித் திரையின் பிற்பகுதியில் காணப்படுகின்றன. நாம் பார்ப்பவை முதலில் அநேகமாக விழித்திரையின் ஊடாகச் செல்கின்றன. பின்பு தகவலானது கலத் தொகுதி ஊடாக முன்னோக்கிச் செலுத்தப்படும். இறுதியில் காணப்படும் கலங்கள் கங்கிலியோன் கலங்கள் (ganglion cells) எனப்படும். ஒருவகை நியூரோன்கள் ஆகும். விழித்திரையின் முற்பகுதியின் கீழே ஒரு மில்லியன் கங்கிலியோன் கலங்கள் காணப்படுகின்றன, சேர்ச்சி, டிலிஸ் ஆகியோர் மேல் மேற்கொள்ளப்பட்ட பிரதான பரிசோதனைகளில் ஆராயும் கருவி (probes) இக் கங்கிலியோன் கலங்களுக்கு மின்னதிர்ச்சியை ஏற்படுத்தியது. இக்கலங்கள் பார்வை நரம்பு (optic Nerre) ஊடாக முளைக்கு மின் அதிர்வு




## விழித்திரை இயங்கும் முறை

கண்ணிலே பொருத்தப்படும் ஒளி உணர்த்திறன் கொண்ட புகைப்படக்கலங்களின் வரிசையொன்று உட்புகும் ஒளியைப் பெற்று, விம்பத்தை இலத்திரனியற் சமிக்ஞையாக (Signal) மாற்றி, பின் அச்சமிக்ஞையை விழித்திரைக்கு அனுப்புகின்றது. சாதாரணப் பார்வையுள்ளவர்களில், விழித்திரையின் பின்புறத்தில் உள்ள (Photoreceptors) இனால் விம்பம் வாங்கப்பட்டு ஒரு கலவரிசையினூடாக விழித்திரையின் முன்புறமாகச் செலுத்தப்பட்டுப் பின் காங்லயன் (Ganglion) கலங்களினால் மூளைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. காங்லயன் கலங்களின் முன் அமைந்துள்ள விழித்திரையின் மேற்றளத்தை நேரடியாகத் தூண்டுவதன் மூலம் செயற்கை விழித்திரை (Photoreceptors) ஐ விலகியமைகிறது.




1. ஒளியின் திசை
2. உணர்வூட்டும் மின்வாய்
3. கங்கிலியோன் கலம்
4. அமக்ரைன் கலம்
5. இருமுனைக்கலம்
6. ஒளி-ாங்கிகள் (தண்டுகளும் கூம்புகளும்)

---

களை ஏற்படுத்துகின்றன. எனவே இந்நோயாளிகள் வெளிச்சத்தைப் பார்த்தனர்.

மனிதரில் ஆராய்ச்சியை மேற்கொள்ளுமுன் பல கேள்விகளுக்கு விஞ்ஞானிகள் விடையளிக்க வேண்டியிருந்தது. கங்கிலியோன் கலங்களுக்குத் தகவலை அனுப்பக்கூடிய ஒளியை உணரும் கலங்களைத் தயாரிக்க முடியுமா என ஒருவரும் அறிந்திருக்கவில்லை, இதற்கு விடை காணும் முகமாக ஹுமயுன், பிரொப்ஸ்ற் ஆகியோர் விலங்குகளில் ஆராய்ச்சியை மேற்கொண்டனர்.

கையிலிருந்த உபகரணங்களுடன் இவர்கள் செயற்பட்டனர். முயல்களுக்குத் தொடுகை வில்லை மின்காய்களைப் (contact lens) பொருத்தினர். இதன் மூலம் மின் உணர்வைக் கண்ணுள் ஏற்படுத்தினர். ஆனால் முயல்கள் தம்மால் பார்க்க முடியுமா என கூறமாட்டா. எனவே மின் அளக்கும் உபகரணங்கள் மூலம் முயல்களின் மூளையின் பார்வைப் பகுதியை ஆராய்ந்தனர். இங்கு வெற்றி கிடைத்தது.

ஆனால் தற்போது அவர்களுக்கு ஏற்பட்ட பிரச்சினை மனிதரின் கண்ணினுள் இதனை ஆராய்வதாகும். சில வருட ஆராய்ச்சியின் முடிவில் ஹுமயூன், ப்ரொப்ஸ்ற் ஆகியோர் மிகச் சிறிய மின் அதிர்ச்சி மூலம் விழித்திரையின் முற்புறத்திலிருந்து கங்கிலியோன் கலங்களுக்குத் தகவல்களை அனுப்ப முடியும் எனக் காட்டினர். இவர்கள் உயிரியல் ரீதியாக இது சாத்தியம் எனக் காண்பித்த அதே வேளையில் வட கரோலினா மாநில பல்கலைக் கழகத்திலிருந்து இத் திட்டதிற்காக அழைத்து வரப்பட்ட பொறியியலாளர்கள் அதன் நுண் மின்னியலை ஆராய்ந்தனர். அவர்களது முதற் கேள்வி எவ்வளவு தூரம் ஒளியையும், இருளையும் பிரித்தறியும் திறன் தேவைப்படும் என்பதாகும்.

இப்பிரித்தறி திறன், பிக்சல் (pixal) என்ற அலகினால் அளக்கப்

# பார்வைக் கருவிகள்



செயற்கை விழித்திரை உற்பத்தித்திட்டம் உள்ளகக் கண் அறுவைச் சிகிச்சையிற் தங்கியுள்ளது. டேர்கம் இல் அமைந்துள்ள பல்கலைக்கழகக் கண்சிகிச்சை நிலையத்தின் துறைத் தலைவராகப் பின்னர் கடமை புரிந்த டாக்டர் றொபேட் மைக்ஸ்மர் 1960 களின் பிற்பகுதியில் கண்ணாடி பயன்படுத்தப்படும் சத்திர சிகிச்சை முறையைக் கண்டு பிடித்தார். கண்ணின் பெரும்பாலான பாகமாயுள்ள ஜெரற்றின் மீது இச்சிகிச்சை நடாத்தப்பட்டது. கடந்த இருபது வருடங்களில், உள்ளகக் கண்சிகிச்சைத் துறை பெருமளவில் நவீன கருவிகள் பயன்படுத்தப்பட்டுப் பெரு வளர்ச்சியடைந்துள்ளது.

அநேகமான இக்கருவிகள் டியூக் (Duke) பல்கலைக்கழகக் கண்சிகிச்சை நிலையத்தில் அமைந்துள்ள உயிரியற் பௌதிக ஆய்வுகூடத்தில் வடிவமைக்கப்படுகின்றன. இவ்வாய்வுகூட இயக்குனரான டைசன் விச்கிங் போதம் என்பவர் ஒவ்வொரு மாதமும் இரண்டு அல்லது மூன்று புதிய கருவிகளைத் தாம் தயாரிப்பதாகக் கூறுகின்றார். கண்ணின் வெளிப்புறத்தினூடாக உட்செலுத்தப்படும் ஒரு மில்லி மீற்றர் குழாயின் வழி கருவிகள் பொருத்தப்படல் வேண்டும். ஒரு மில்லிமீற்றர் பிளேட்டுகளைக் கொண்ட ஒரு சிறிய கத்தரிக்கோலைக் கிக்கின்போதம் எனக்குக் காட்டினார். கருவிகளில் அநேகமானவை பல்லுபயோகம் மிக்கவை. ஓர் உபகரணம் இழையப் பார்வையொளியைக் கொண்டுள்ளது. இது திரவங்களை உறிஞ்சி, உட்செலுத்தும் தன்மைவாய்ந்ததுடன் எவ்வகையான இரத்தப்போக்கையும் தடைசெய்யவல்ல கதிரியக்க அதிர்வியல் சமிக்ஞையையும் வெளிப்படுத்தவல்லது.

(MCNC) ஆராய்ச்சி முக்கோணப் பூங்காவில் அமைந்துள்ள (North Carolina) நுண் இலத்திரனியற் கம்பியூட்டர் நிலையம் சத்திரசிகிச்சைக் கருவிகளில் ஒருங்கிணைந்த தொழினுட்பச் சுற்றுமுறையைப் பிரயோகிக்கிறது. டாக்டர் றிச்சேட் பெயர் இது பற்றி, ''ஒருங்கிணைந்த சுற்றொன்றில் பெருமளவில் ட்ரான்சிஸ்டர்களை உருவாக்கும் போது பயன்படுத்தப்படும் தொழினுட்பத்தை மிகச் சிறிய சத்திரசிகிச்சை வெட்டலகுகளை (Surgical Blades) அதிகளவில் உற்பத்திசெய்வதிலும் பயன்படுத்த முடியும். இவ்வெட்டலகுகள் தற்போது கையாற் தயாரிக்கப்படுவதுடன், ஒவ்வோர் அலகிற்கும் ஆயிரக்கணக்கான டொலர் செலவாகின்றது. இச்செலவை மிகவும் குறுக்கி எம்மால் அவற்றைப் பெருமளவில் உற்பத்தி செய்ய முடியும்'' என விளக்குகின்றார். கத்தரிக்கோல்களுக்கான நுண்ணிய வெட்டலகுகள் MCNC யினாற் தயாரிக்கப்பட்டுள்ளன. சத்திரசிகிச்சையில் அவை விரைவிற் பயன்படுத்தப்படும்.

படும். பிலிப்ஸ் என்பவர் கூறுகிறார். ''ஒருவரின் பிரித்தறி திறன் ஒரு பிக்சல் எனில் அறைகுள் இருக்கும் ஒருவர் ஒளிக் கீற்றொன்றைக் காண முடியும். திறந்த கதவின் ஊடாக பார்த்து ஒளியைக் காண முடியும். சுவரைப் பார்க்கும் போது இருளாயிருக்கும். எனவே கதவு எங்கே என மட்டுமே அறிய முடியும். 4 பிக்சல் எனில் சிறு அசைவுகளையும் காண முடியும். எழுத்துக்களைக் காண்பதற்கு 64 பிக்சல் தேவை. ஆனால் வாசிக்கும் சக்திக்கு 256 பிக்சல் தேவை. ஒரு கலங்கலான காட்சியைக் காண 1024 பிக்சல் தேவை''.

எனினும் இப்பொறியியலாளர்கள் ஆரம்பத்திலிருந்தே கண்டுபிடிக்க வேண்டும் என்ற தேவை ஏற்பட வில்லை. ஏனெனில் கலிபோர்னியாவில் தொழில் நுட்பக் கழகத்தின் கலாநிதி காவர் மீட் என்பவர் ஏற்கனவே இவ்வகையான துண்டங்களைத் (chips) தயாரித்து விட்டார். 1989 ஆம் ஆண்டின் முடிவில் றொம்கிரே என்ற பட்டமேற் பரப்பு மாணவனின் உதவியுடன் 2.2 மி. மீ. சதுரத்தில் 190 பிக்சலை வைத்துக்கொள்ளக்கூடிய ஒரு துண்டத்தைத் தயாரித்தனர். அடுத்ததாக அவர்களது பிரச்சனை விழித்திரையைப் பாதிக்காமல் இத் துண்டங்களை வைப்பது ஆகும். விழித்திரையானது சரன்ராப் (saran wrap) அல்லது தின்னர் (Thinner) போன்ற அமைப்பை உடையது. எனவே மென்மையான பல் பகுதியத்தைத் தயாரித்தனர். இது விழித்திரையின் மேல் மிதக்கும்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் கடைசியாகச் செய்த பரிசோதனையில் துப்புரவாகப் பார்வை அற்ற ஒருவரின் கண்ணுள் இரு மின் வாய்களைப் பொருத்தினர். எவ்வளவு நெருக்கமாக இவ்விரு மின்வாய்களையும் கொணர்ந்தால் அவரால் இரு ஒளியின் இரு புள்ளிகளையும் பகுத்தறிய முடியாது என ஆராய்ந்தனர். முன்பு நாம் பார்த்த ஹரால்டு சேர்ச்சி என்பவரின் சகோதரன் கரோல் சேர்ச்சி என்பவரின் கண்ணில் இதனைப் பொருத்தினர். இவரும் தமையனுக்கு

செயற்கை விழித்திரைத் திட்டம் (Retinal Tack) எனப்படும் கருவிற் பெருமாவிற் தங்கியுள்ளது. இக்கருவி 2.5 மில்லிமீற்றர் நீளமுடையதும், ஒரு சோடி மனித உரோமங்களின் தடிப்புக் கொண்டதும் ஆணி வடிவிலமைந்ததொன்றுமாகும். இக்கருவி கலாநிதி டீ ஜீன் என்பவராற் கண்டுபிடிக்கப்பட்டது. விழித்திரையை உரிய ஸ்தானத்திற் பொருத்துவதற்கு இது பயன்படுகிறது. ''விழித்திரையின் மேற்பரப்பில் யாதாயினுமொன்றைப் பொருத்த முடியும் என்பதை இத்தொழினுட்பம் எமக்குக் காட்டியுள்ளது'' எனக் கூறுகிறார் டாக்டர் மார்க். ஒரு செயற்கை விழித்திரையைப் பொருத்துவதற்குச் சரியாகச் செய்யப்படவேண்டியது அதுவேயாகும்.

உள்ள நோயினால் பீடிக்கப்பட்டார். இரு மின்வாய்களும் ஒரு மில்லிமீற்றரிலும் குறைந்த தூரத்தில் வரும் பொழுதே இரு புள்ளிகளையும் அவரால் வேறுபடுத்த முடியாதிருந்தது. எனவே ஒருவர் பார்க்கக்கூடிய அளவுக்குப் பிச்சல்களைப் பொருத்த முடியும் என விஞ்ஞாளிகள் கருதுகின்றனர்.

அடுத்த பிரச்சினை கண்ணுள் எவ்வாறு பல பிக்சலைக் கொண்ட ஒளிக் கலத்தைப் பொருத்துவது என்பதே. இதற்கு மெல்லிய குழாயினூடு செலுத்தும் போது மூடப்பட்ட குடையை விரிவடைவதைப் போன்ற ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும். அடுத்ததாக உள்ள பிரச்சினை கண்ணுக்குத் தேவையான சக்தியைப் பெறுவதாகும்.

மேலும் பல தடைகளைத் தாண்ட வேண்டி இருந்தாலும் ஏற்கனவே விஞ்ஞானிகள் மின்சாரக் கண்ணைத் தயாரித்து விட்டனர் என்றே கூறலாம்.

பொப்பியூலர் சயன்ஸ்,
ஓகஸ்ட், 1993.

---

# விவேகமான முறையில் அமைக்கப்பட்ட தொடர்பு நிலையங்கள்

''விவேக கட்டடங்கள்'' என்பது பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம். இந்தக் கோபுரங்களின் உண்மையான வாசிகள் கோபுரங்களின் உள்ளேயே பொருத்தப்பட்டுள்ளன. கடல்தந்தி, துணைக் கோள்தட்டு, நுண்ணலை வாங்கி (Microwave receivers) .:வாக்ஸ் இயந்திரம் என்றபல நவீனதொலைத் தொடர்புச் சாதனங்களுடாக முடிவின்றிச் செய்திகள் இவற்றுக்குக் குவிந்த வண்ணமேயுள்ளன. பூமியில் அமைந்துள்ள எவ்விடத்திலும் கிடைக்காத முதலீட்டுடன் கூடிய நகரும் தொலைபேசிகள், வங்கி மேலுந்திகளில் (Elevators) 12 ஆம் மாடியிலிருந்து முப்பதாம் மாடி செல்லும் வரை வீடியோத் திரைகளிலே செய்திகளைத் தருகின்றன. இவை யாவும் அரை நிமிட இடைவேளையில் பெறக்கூடிய செய்திகள்.

பூமியின் சகல இடங்களோடும் தொடர்புகொண்டு பெறும் செய்திகளின் யாத்திரைப் பாதையில் 'பஸ்தரிப்பு நிலையமாக' ஹொங்கொங் விளங்குகிறது. இத்தகைய நவீன 'தரிப்பிடங்களின்' தொகை 420. இவற்றை அமைக்கச் செலவான பணம் 5 மில்லியன் டொலர். மழை, புயல் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்புறுதி பெற்றிருப்பதோடு, அணுக்குண்டுத் தாக்குக் காப்புறுதியும் இவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொலைபேசி, மணிக்கூடு, வீடியோத் திரைகள் என்பன இவற்றின் மையத்தானத்தில் கணனியோடு இணைந்துள்ளன. வெளிநாட்டு நாணய மதிப்பீடு வரும் வரை 13 ஆம் இலக்கக் கடுகதி வாகனத்திற்காகப் பொறுமையோடு காத்திருக்க வேண்டிய அவலம் நிறைவேற்றதிகாரி ஒருவருக்கு ஏற்படாது. அவர் உடனுக்குடன் அறிந்துகொள்ள வாய்ப்பு உண்டு. அடுத்த பஸ் எப்பொழுது வரும் என்று வீடியோத் திரையைப் பார்த்தவுடன் தெரிந்து கொள்ளலாம். அடுத்து என்ன சாதனை இடம் பெறுமோ ?

ஏசியாவீக்,
நவம்பர் 10, 1993

# உயிரின் ஆரம்பம்?

**நீர்க்குமிழிகளாகவா? வால் நட்சத்திரத்தாலா? சமுத்திரத்தின் வெளியேறும் வழிகளாலா? அண்டத்தின் இந்தப் பாரிய இரகசியத்திற்கு, விஞ்ஞானிகள் காணும் அதிசயிக்கத்தக்க ஒரு சில விடைகள்.**

லொ ஜொல்லாவில்
— ஜே. மடெலின் நாஷ் —

மரபுவழிக் கருத்திற் கூட மூலக்கூறு உயிருடையதாக இருக்கவில்லை. ஆச்சரியப்படத்தக்க விதத்தில் அதன் நடைமுறைகள் உயிர்வாழ்வனவற்றின் சாயலிலேயே காணப்பட்டன. சென்ற ஏப்ரல் மாதம் கலிபோர்னியாவில் உள்ள லாஜொல்லா ஸ்கிறிப்ஸ் ஆய்வு கூடத்தில் அது தோன்றியபோது தமது பரிசோதனைகளை அது பாழடித்து விட்டதாக நினைத்தார்கள். விஞ்ஞானிகள் செயற்கை ஆர் என் ஏயின் இந்த வெட்டுத்துண்டுகள்-எல்லாக் கலங்களினதும் உட்கருக்களிலுள்ள அதி முக்கிய மூலக்கூறுகளிலொன்று-அசாதாரணத் திறமையுள்ளனவாக இருந்தன. அது உருவாக ஒரு மணித்தியாலத்தினுள் சிறிய அளவிலான பரிசோதனைக் குழாயில் உள்ள சேதனப் பொருட்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து தன்னைத்தானே பிரதிபண்ண ஆரம்பித்துவிட்டது. பிரதிகள் திரும்பவும் பிரதியாக்கத் தொடங்கிவிட்டன. அதிக நேரம் போவதற்கு முன்னர் பிரதிகள் விருத்தியடையவும் ஆரம்பித்து விட்டன. எதிர்பாராதவிதமான இரசாயனத் தந்திரங்களையும், செய்கின்ற திறமைகளையும் ஈட்டிக்




நட்சத்திரக் கற்களில் உயிரினப் பொருள்கள இருப்பதாகக் கண்டுள்ளார் விலங்கியல் நிபுணரான டீமர்

கொள்ளத் தொடங்கின. இதைக் கண்ணுற்ற விஞ்ஞானிகள் அதிசயித்தார்கள். உணர்ச்சிவசப்பட்டார்கள். ஆச்சரியம் அவர்களை ஆட்கொண்டது. இவ்வாறு தான் உயிரினம் ஆரம்பித்ததா?

விஞ்ஞான உலகத்தின் மத்தியில் இந்தக் குறிப்பிடத்தக்க மூலக்கூறுகளைப் பற்றிய செய்தி பரவத் தொடங்கியதும். திரும்பத் திரும்பக் கேட்கப்படும் வினா இதுவாகும். ஆய்வு கூடங்களின் சிருஷ்டிகள் முன்னெப்போதும் உயிர்வாழ்வனவற்றை உயிரில்லாதவைகளிலிருந்தும், இறந்து போனவற்றை விரைவுப்பொருட்களிலிருந்தும் பிரிக்கும் கதவுநிலையைத் தாண்டுவதற்கு, இவ்வளவு அண்மையில் வந்தது கிடையாது. நாம் யார்? நாம் எப்படி இங்கு வந்தோம்? இவ்வாறான அடிப்படை வினாக்கள் வடிகட்டப்பட்டுத் தூசியில் ஒரு புள்ளியிலும் பார்க்கச் சிறியதான நூல் போன்ற பொருட்களாக்கப் பட்டுள்ளன. இப்போது இடம் பெற்றுக்கொண்டிருக்கும் ஆய்வுகளின் உணர்ச்சிமேலீட்டால் இதைத் தொடர்ந்து தத்துவவியல் விவாதங்கள் இடம் பெறுவது திண்ணம். -விஞ்ஞானிகளைப் பூவுலகின் மிக மிகத் தொன்மையான, அறிவுக்கெட்டாத இரகசியம் ஒன்று புதிதாக எதிர்கொள்ளப்போகிறது. உயிர் என்றால் என்ன? அது எவ்வாறு ஆரம்பித்தது ?

இதற்கான விஞ்ஞானத்தின் விடைகள் மாறுபடுகின்றன. அதுவும் மிக விரைவாக மாறுவதைப் பார்க்கிறோம். சமுத்திரவியல், மூலக்கூற்றுயிரியல், புவியியல், இரசாயனம், வானவியல் என வேறுபாடுகளுள்ள பல சாட்சியங்கள் ஊற்றெடுத்துக்கொண்டேயிருக்கின்றன.

இந்தக் கோடைகாலத்தில்திடுக்கிடும் சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இன்னமும் வரைவடிவிலேயே இருந்தாலும் ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனாவில் கூடிய உயிரின ஆரம்பகாலம் பற்றிய ஆய்வாளர்களின் ஒன்றுகூடலால் தோற்றப்பட்டுள்ள தொகுப்புக்கள் புதிய எண்ணங்களுக்கு வழிவகுத்துள்ளன. உயிர் என்பது தோற்றப்பொழுதில் சோம்பேறித்தன்மையோடு ஆரம்பிக்கவில்லையென்பதும், பாய்ச்சல் வேகத்தில் உருப்பெற்றுள்ளதென்பதும் இப்போது தெரியவந்துள்ளது. செழிப்புற்றிருந்த நுண்ணிய நோய்க்கிருமிகளின் சமூகமொன்று 350 கோடி ஆண்டுகளுக்கு முந்தியதாகக் கருதப்படும் இரண்டு கற்பாறைகளுக்கிடையில் நசுங்கிய மிகத்




1. பூமியும் சந்திரனும் தோற்றமெடுக்கின்றன.

2. அண்டவெளியின் அதிசயக் கூறுகள் புவியைத் தாக்கியதால் 450 கோடி ஆண்டுகளிலிருந்து 380 கோடி ஆண்டுகள் வரை தப்பிய சிலவற்றை விட ஏனைய ஆதி உயிர்கள் கொல்லப்பட்டு விட்டன.

3, 440 கோடி ஆண்டுகளுக்கும், 330, கோடி ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் உயிர் முதலில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

4. 380 கோடி வயதுடைய கிறீன்லாந்திலிருந்து பெறப்பட்ட வண்டற் கற்களிலிருந்து உயிர் பற்றிய சாட்சியங்கள் பெறப்பட்டுள்ளன.

5. கருவோடு கூடிய ஒரு கல அங்கஜீவிகள்

6. முதலாவது ஒரு கல பாலியல் அங்கஜீவிகள்

7. 200 கோடி ஆண்டுகள் பிராணவாயு நிறைந்த அண்டவெளி

8, முதலாவது பல்கலங்கள் கொண்ட கடற்பூண்டுகள்

9, அவுஸ்திரேலியாவில் காணப்படும் நீல-பச்சைக் கடற்பூண்டுகள் ஏறத்தாழத் தொன்மையான கற்பொருள்களைப் போலவேயுள்ளன.

10. பிராணவாயுவை உருவாக்கும் ஒளித்தொகுப்பு உயிரினங்கள் இவ்வளவு சீக்கிரத்தில் தோன்யிருக்கலாம்.

11, முதலாவது மிருகங்கள்.

12 $22\frac{1}{2}$ க்கோடி ஆண்டிலிருந்து $6\frac{1}{2}$ கோடி ஆண்டுவரை டைனோசர்கள் பூமியில் உலாவியிருக்கலாம்,

13. 20 இலட்சத்திலிருந்து 30 இலட்சம் ஆண்டுகளுக்கு முந்திய மனிதர்கள்.

தொன்மையான அழிவுற்ற வடுக்களாகத் தென்படுவதாக லொஸ் ஏஞ்சல்சிலுள்ள கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தின் தொல்லுயிரியல் நிபுணரான வில்லியம் ஷொப் தெரிவிக்கிறார். இதையும், ஏனைய சான்றுகளையும் ஒன்றிணைத்துப்பார்க்கும் போது இந்தப் பூவுலகம் தோன்றி 100 கோடிவருடத்தினுள்ளே உயிரினமும் தோன்றிவிட்டதென்பதும், முன்னர் எண்ணப்பட்டதைவிடப் பரிணாம வளர்ச்சி துரிதகதியில் இயங்கியுள்ளதென்பதும் பெறப்படுகிறது. முன்னொருகாலத்தில் நம்பப்பட்டதுபோல உயிரென்பது மிகவும் அமைதியான இரக்கமுள்ள சூழ்நிலையில் தோன்றவில்லையென்பதும், அது எரிமலை வெடிப்பால் அசைந்துகொடுக்கும் கோளொன்றின் தாங்கொணாத வான் பரப்பில் வால் நட்சத்திரங்களினதும் சிறு கோள்களினதும் அபாயங்களுக்கிடையிலே தோற்றமெடுத்ததென்பதும் தெரியவருகிறது. உயிருக்கவசியமான மூலப்பொருட்களை விண்வெளியில் இருந்து ஊடுருவல் செய்யும் சக்திகள் வழங்கியிருக்கக் கூடும். முதலாவது உயிரினத் தோற்றத்திற்கு வழியமைத்த சக்திகள் மிகவும் ஆரோக்கியமானவையாக இருப்பதால் அது இறுதியாக உருவெடுத்து இந்தக் கோளில் குடியேறுவதற்கு முன்னதாக உயிர் ஒரு முறையில்லாமல் பலமுறைகளில் தோன்றியிருக்க வேண்டும் என்றே ஆய்வாளர்கள் நம்புகிறார்கள்.

உயிர் மிகவிரைவாகவும், இலகுவாகவும் தோன்றியுள்ளது என்ற நம்பிக்கை விஞ்ஞானிகளை ஓர் உண்மை நம்பிக்கையோடமைந்த செயற்பாட்டிற்குத் தூண்டியுள்ளது. ஆய்வு கூடத்தில் உயிரை- உண்மையான உயிரை- உருவாக்க அவர்கள் இப்போது முயலுகிறார்கள். இடிகளோடும், முழக்கங்களோடும் தோன்றிய கூறுகள் ஒன்றிணைந்து உருவாகி உணரும் சக்திபெற்று படைத்தவனுக்கே சவாலாகும் விகாரத் தோற்றம் கொண்ட பயங்கர மிருகமல்ல. அவர்கள் எண்ணத்தில் தோன்றியிருப்பது, ஸ்கிறிப்ஸ் ஆய்வு நிறுவனத்திலுள்ள பரிசோதனைக் குழாயில் இருப்பது போன்ற மூலக்கூறே அவர்கள் உருவாக்க எண்ணுவதாகும். காலத்தின் கரங்களை ஆதிகால ஆரம்பத்திற்குத் திருப்பி மிகப் புராதனகாலத்து உயிர்ப்பொருளைப் போன்றதொரு பொருளை உருவாக்கவே அவர்கள் முயலுகிறார்கள். இந்தப்பழைமை வாய்ந்த மூதாதை ஒரு மிகவும் எளிய வலிமைமிக்க நவீன ஆர் என் ஏ யின் முன்னோடியாக இருந்திருக்க வேண்டும் என்று நம்புகிறார் ஸ்கிறிப்ஸ். மூலக்கூற்றோடு தனது ஆய்வு கூடத்தை இணைத்துக் கொண்ட ஜெனரல்ட் ஜோய்ஸ் இது அதன் உடற்பிறவாச் சகோதரன் என்று கூறத்தக்க உட்கரு அமில டீ என் ஏ யுடன் சகல பாரிய சிறிய உயிரினங்களின் பிறப்புரிமையியற் தொகுப்புக்களைக் கொண்டு செல்கிறது.

இந்த மூலக்கூறுகள் உயிருள்ளனவும், உயிரில்லாதனவற்றிற்குமான வேறுபாட்டின் தெளிவில்லாதநிலை தோன்றி மறைந்துவிடும் நிழல்வடிவானநட்டநடுநிசிமண்டலத்திலேயே தோன்றியிருக்க வேண்டும் என்றே ஜோய்சும், ஏனைய விஞ்ஞானிகளும் நம்புகிறார்கள். இந்த இரசாயன மந்திரத் தன்மைதான் அவற்றை ஒருபக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்துக்கு மாறச் செய்தது. ஆனால், அது எது என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை, அதன் பிரதியை உருவாக்குவதற்கு உலகெங்கிலுமுள்ள விஞ்ஞானிகள் காய்ச்சல் தன்மையோடு பகீரதப் பிரயத்தனம் செய்துவருகின்றார்கள். இந்த விஞ்ஞானிகளில் ஒருவர் இருவராவது இந்த நூற்றாண்டின் இறுதிக்கு முன்னர் ஓர் ‘‘ உயிர் ’’ மூலக்கூற்றை இறுதியாக உருவாக்கி விடுவார்கள் என்று ஜோய்ஸ் ஆரூடம் கூறுகிறார். அவர்கள் உருவாக்கிவிடும் போது எல்லாவற்றுள்ளும் மிகவும் முடிவுகாணமுடியாத கேள்விகளுக்கு விடை கிடைத்து விமோசனமும் கிட்டிவிடும். உயிர் என்பது ஒரு முறைமட்டும் நிகழ்ந்த நடக்க முடியாத ஓர் அதிசயமா? அல்லது தவிர்க்க முடியாததும், சாதாரணமானதுமான ஓர் இரசாயன முறையின் அகில உலக அளவில் தொடர்ச்சியாகத் தோற்றமெடுக்கும் ஒன்றா?

மனிதக் கற்பனையின் தூண்டுதலுக்கு வழி வகுக்கும் இந்தச் சிக்கல்கள் காவியச் சிந்தனைகளைத் தூண்டவில்லை. அவை சமய வழியிலான பக்திக்கு வழிவகுக்கவில்லை. அதிகவாதப் பிரதி வாதங்களையும் அவை தோற்றுவிக்கவில்லை. இந்தப் புவி தோற்றுவிக்கப்பட்ட போது எழுந்த பேரொலியைப் புறத்தே ஒதுக்கி விட்டால், உயிர் தோன்றிய போது ஏற்பட்ட இயற்கை நிகழ்வைப் புரிந்து கொள்வதற்கான மையம் புவியியலின் வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்பட்டிருக்க முடியாது. இந்த விடயம் தொடர்பான ‘‘விஞ்ஞானக்’’ கோட்பாடுகள் நாகரிகத்தினளவு தொண்மை யானவையாகும். நைல் நதி வெள்ளப் பெருக்கெடுத்த போது ஒதுக்கிவிட்ட வண்டல் மண்ணில் இருந்தே தவளையும், தேரையும், தோன்றியதாக நம்பினார்கள் பண்டைக்கால எகிப்தியர்கள், கிரேக்க நாட்டின் புகழ் பூத்த தத்துவஞானியான அரிஸ்டோட்டல் பனித்துளிகளிலிருந்தும், குழைந்த சேற்றிலிருந்துமே பூச்சிகளும், புழுக்களும், உருவெடுத்தன என்று கற்றுக் கொடுத்துள்ளார். அது மட்டுமல்ல அழுக்குப் படிந்த மண்ணிலிருந்தே சுண்டெலிகள் உண்டாகின என்பதும், மணலிலிருந்தே மீனும், விலாங்கும் தோற்றமெடுத்தன என்பதும் அவர் தம் கருத்தாகும். இவற்றுக்கு சேறு, அழுகிய கடற்பூண்டுகள், என்பனவும் துணையாகினவாம். உயிரற்ற பொருட்களை விரைவுபடுத்துவதில் மின்சாரம், கதிர்வீச்சு, காந்தம் என்பன திறமையோடு பங்கேற்றதாக 19 ஆம் நூற்றாண்டிலே நம்பப்பட்டது. உயிர்த்தோற்றத்திற்கான காட்சி விநியோகம் தொடர்பான உயிரியற் போலித் தோற்றக் கற்பனைக்குச் சாள்ஸ் டாவினின் சிந்திக்கும் அதீதத்துவம் தேவையாக இருந்தது.

## உயிர் எங்கே ஆரம்பாமாகியது?

**(அ) குழம்பில்:**

சாள்ஸ் டாவினின் கற்பாறையில் உயிர் தோன்றிய இடமாகக் கருதப்பட்ட சிறு முட்டை, உயிரின இரசாயனங்களின் குழம்பைக் கொண்டிருந்தது. கணக்கிட முடியாத காலங்களுக்கு அப்படியே இருந்து படிப்படியாக ஒன்றிணைந்து ஆதிகால உயிரினமாக உருப்பெற்றது.

**(ஆ) நீர் வெப்பக் குதங்கள்:**

டாவினின் சூரிய ஒளியைப் பெறும் குட்டைகளுக்குச் சரியான மாற்றீடாகக் கடலடியில் வாழும் பழைய ஜெந்துக்களின் அற்புதமான சூழலை எடுத்துக் கொள்ளலாம். நீராவியை வெளிவிடும் இந்த இடங்களில் பூமியின் மிகத் தொன்மையான ஜெந்துக்களைக் காணலாம்.

**(இ) குமிழிகள்:**

பெரிய சமுத்திரங்களில் தோன்றும் நுரைகளும் உயிரினத் தோற்றத்திற்கான இடங்களாயிருந்திருக்கலாம். உயிருக்கு மிகவும் அவசியமான பல பொருள்களை இந்தக் குமிழிகள் சேர்த்து ஒருமிக்க வைத்துவிடும் இயல்புடையவை. கலங்கள் போன்ற சவ்வுகளை உருவாக்கும் உயிர்க்கூறுகளும் இவற்றுள் அடங்கும்.

அடிக்கடி மேற்கோளாகக் காட்டப்படும் டாவினின் 1871 ஆம் ஆண்டுக் கடிதம் ஒன்றில் உயிர் ''சூடான சிறிய குட்டை ஒன்றிலேயே ஆரம்பமாகியிருக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளார். குட்டையிலே தோன்றிய சேதன இரசாயனங்களின் செழிப்பான சாரம் ஆண்டாண்டு காலமாக இருந்து வந்து, காலப்போக்கில் முதலாவது எளிய அங்கிக்கு வழிகோலியிருக்க வேண்டும் என்பது அவரது கூற்று. டாவினின் ஏற்றுக் கொள்ளத்தக்க இந்த அனுமானம் அடுத்த நூற்றாண்டில் விஞ்ஞான தத்துவ வாதிகள் இந்த விடயம் தொடர்பான சிந்தனை விரிவாக்கத்திற்கு உதவியாக இருந்த தெனலாம். இந்தக் '' குட்டை '' சமுத்திரத்தையே குறிக்கிற தென்று கொண்டு உயிரின் நிர்மாணக் கற்கள் எவ்விடத்தில் தோன்றின என்பதைக் கண்டு கொள்ள ஆய்வாளர்கள் தீர்மானித்தனர்.

1953 ஆம் ஆண்டிலே சிக்காகோ பல்கலைக்கழக பட்டதாரி மாணவரான ஸ்டான்லி மில்லர் பரந்த அளவில் ஏற்றுக் கொள்ளத்தக்க பரிசோதனைச் சான்றுகளை முன்வைத்தார். தொன்மைக்காலப் பூவுலகின் விகடமான துண்டமைப் பொன்றை ஒரு கண்ணாடியிலான சாடி யொன்றில் அவர் உருவாக்கினார். சமுத்திர நீருக்காக மெத்தேன் வாயுவும், சுற்றுப்புறச் சூழலுக்கு அமோனியாவும், ஜனவாயு (ஹைதரஜன்) வும் உபயோகிக்கப்பட்டது. மின்னலுக்காய் தீப்பொறிகளும் வேறு மின்சார வெளிப்பாடுகளும் உட்புகுத்தப்பட்டன. இருவார காலத்தின் பின் தனது சாடியில் பசைத் தன்மை கொண்ட அளவிலதிகமான அமினோ அமிலங்களுட்பட சேதன இரசாயனத் துகள்கள் தென்பட்டன. கலங்களின் ஆக்கத்திற்கான புரதங்களுக்குத் தேவையான லெகோ (Lego) துண்டுகளும் காணப்பட்டன. இந்த விடயம் முடிவுற்று விட்டதாகப் பல விஞ்ஞானிகளும் கருதினார்கள்.

உயிர் எவ்வாறு ஆரம்பமாயிற்று என்ற ஒரு சந்ததிக்கு முந்திய மாணவர்களுக்கான பழக்கப்பட்ட பாடநூற்படங்கள் இப்பொது கடுமையான கண்டனங்களுக்குள்ளாகியிருக்கிறன. கிரகங்களின் அமைப்புப்பற்றிய புதிய கண்டுபிடிப்புகள் மெதேன், அமோனியா மேகங்கள் தொல்லுலகத்தின் சூழலை ஒருபோதாவது தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனவா என்பது பற்றி மேலதிக சந்தேகம் கொள்ளத் தூண்டுகின்றது. மில்லரின் புகழ்பெற்ற பரிசோதனை புரதத்தின் உட் பொருள்களை உற்பத்தி செய்த போதும் மேலும் மேலும் ஆய்வாளர்கள் அநேகமாக ஆர். என். ஏ. போன்றதோர் முன்னணிப் பிறப்புரிமையுள்ள மூலக்கூறு புரதத்திற்கு முன்னரே தோன்றியிருக்க வேண்டுமென்றே நம்புகிறார்கள்.

டாவின் காட்டியது போன்று உயிர் மிக ஆறுதலாகத் தோன்றியதென்பதை மிகவும் பழைய உயிர்ச் சுவடுகள் மறுதலிக்கின்றன. சமுத்திர வென்னீரூற்றுக்களில் வாழும் அங்கிகளின் கண்டுபிடிப்பு டாவினின் அமைதிவழி உயிர்த்தோற்றத்திற்கெதிரான ஸ்ரீஜியன் மாற்றுப் படம் ஒன்றைக் கொண்டுவந்துள்ளது. ஜேர்மனியிலுள்ள ரீஜென்ஸ்பேக் பல்கலைக் கழகத்தின் நுண்ணுயிரியல் விஞ்ஞானியான காரல் ஸ்செற்றரின் கூற்றுப்படி உயிர் நல்லதோர் சூடான, குட்டையிலல்லாமல் மிகச் சூடான அமுக்க அடுப்பிலேயே தோன்றியிருக்க வேண்டும்.

விஞ்ஞானிகள் பழைய கருத்துக்களை ஒரேயடியாக ஒதுக்கித் தள்ளி விட்டபோதும் புதிய கருத்துக்களில் உடன்பாடு காணவும் தவறி விட்டனர். உயிரின் கதை பற்றிய புதிய பெயர்ப்பு மிக்க காத்திரமான விடயங்களையும், அதிக துவாரங்களையும், இல்லாதிருக்கும் துண்டுகளை எவ்வாறு நிரவல் செய்வது என்பதில், போட்டிக் கோட்பாடுகளுக்கு எவ்வித பற்றாக்குறையுமில்லாத தன்மையையும் கொண்ட ஒரு சிக்கல் நிறைந்த கதையாகும்.

முன்னொரு காலத்திலே ஏறத்தாழ 450 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வாயுவும், தூசுவும் இணைந்த கருக் கூட்டுக்குள் சூரிய ஒளிக் கீற்றுக்களின் அமைப்பு உருவெடுக்கத் தொடங்கியது. முதலில் சிறிய பொருட்கள் தோற்றமெடுத்தன. அவை பின்னர் ஒன்றோடொன்று

### அ) வால் நட்சத்திரங்கள்:

சூரியஒளி அமைப்பின் புறஎல்லையிலுள்ள பனிக்கட்டித் தூதுவர்கள் உயிருக்குத் தேவையான சேதன உயிர்க்கூறுகளைக் கொண்டுவந்து சேர்த்திருக்கக் கூடும். பாரிய நட்சத்திரம் போன்ற கிரகங்களும் நட்சத்திரக் கற்களும், 100 கோடி ஆண்டுகளுக்குப் புவியைத் தாக்கிக் கொண்டேயிருந்திருக்கின்றன. இவைகளும். அண்டவெளி பஞ்சுப் பொதி போன்று இன்றைக்கும் பூமியில் வந்து விழும் கிரகங்களுக்கிடையிலான தூசிகளும் இவற்றுக்குதவிய காரணிகளாக இருந்திருக்கலாம்.




1976ல் மேற்கு வால் நட்சத்திரம்

### ஆ) சுற்றுப்புறம்:

சிக்காகோ பல்கலைக்கழகத்தின் பட்டதாரி மாணவரான ஸ்டான்லி மில்லர் 40 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொண்ட ஒரு பரிசோதனையில் உயிருக்குத் தேவையான கூட்டுப் பொருட்களைத் தொல்லுலகத்தில் எப்படிச் சிருஷ்டித்திருக்க முடியும் என்று காட்டினார். ஆனால் அந்தப் பரிசோதனை பண்டைய அண்டவெளிச் சுற்றுப்புறம் இப்போது நம்பப்படுவது போல கரியமில வாயுவால் சூழப்பட்டல்லாமல் மெத்தேனாலும், அமோனியாவாலும் சூழப்பட்டிருந்ததாகக் காட்டுகிறது.

மோதிக் கொண்டன. இதன் பின் கிரகங்கள் தோற்றம் பெற்றன. ஆரம்பத்தில் பலாத்காரம் நிறைந்த இவ்வகை மோதல்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட சக்தி முறை நிலையிலிருந்த புவியை ஓர் உருக்கி வார்த்த பந்தாக மாற்றியது. அதிலிருந்து 108 கோடி ஆண்டுகளுக்கு இந்த இளம் கிரகத்தின் ஈர்ப்புச் சக்தி வானத்தின் பல திறப்பட்ட கழிவுப் பொருள்களையும் தன்பால் அரவணைத்துக் கொண்டது. சூரியக் கதிர் ஒழுங்கின் வெளிப்புறத்திலிருந்து பனிக்கட்டி வால் நட்சத்திரங்கள் வீறிட்டு வெளியே வந்தன. நட்சத்திரம் போன்ற கிரகங்களும், வான் வெளிக்கற்களும் சுழன்று, சுழன்று மெகட்டன் குண்டுகளைப் போலக் கீழ் நோக்கி வந்தன.

இந்த நட்சத்திரம் போன்ற கிரகங்கள் ஒவ்வொன்றும் இக்காலத்தைய கண்டங்களொவ்வொன்றினதும் அளவினதாக இருந்திருக்க வேண்டும் என்பது கிரகநிலை விஞ்ஞானியும், வெள்ளைமாளிகையின் விஞ்ஞானப் பிரமுகருமான கிறிஸ்தோபர் சீபாவின் கருத்து. பாறைகளை ஆவி நிலைக்குக் கொண்டு வரவும், சமுத்திரங்களுக்கு வெப்பமூட்டவும், சூடேற்றிய நீராவிப் போர்வைகளை அண்டவெளியில் தள்ளிவிடவும் இந்த நட்சத்திரக் கிரகங்களால் முடிந்ததாம். இவ்வகையான ஒரு பிரளயத்தினால் அனைத்து உயிருள்ளனவும் அழிக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறிருந்தும் 100 கோடி ஆண்டுகளின் பின்னர் சூரிய ஒழுங்குமுறை முற்றாக அகற்றப்பட்ட பின் தொடக்க கால வெடிகுண்டுத் தாக்குதல்கள் முடிவுக்குவந்தன. மேற்குஅவுஸ்திரேலியாவிலுள்ள 350 கோடி ஆண்டு காலத்தைய குன்றுகளில் 11 வகையான நுண்ணிய உயிரினங்களின் சுவடுகளைக் கண்டு பிடித்துள்ளார் லொஸ் ஏஞ்சல்சிலுள்ள கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானியான ஷொப். பல கல்லாகிவிட்ட தொல் பொருள்கள் இக்காலத்தில் உலகம் முழுவதிலும் காணப்படும் பச்சை- நிலக் கடற்பூண்டைப் போன்றே தோற்றமளிக்கின்றன. கிறீன்லண்டில் காணப்படும், மேலும் தொன்மையான குன்றுகள் சில நூறு கோடி ஆண்டுகள் முன்னதாகவே அதாவது 380 கோடி ஆண்டுகளுக்கு முன்பாகவே பல உயிர்கள் தோன்றியிருக்க வேண்டுமென்பதைக் கோடிட்டுக் காட்டுவதாயுள்ளன.

அப்போது உயிரைக் கொண்டு வருவதற்கான அச்சுறுத்தலை ஏற்படுத்திக் கொண்டிருந்த நட்சத்திரக் கிரகங்கள் இன்னமும் காலத்துக்குக் காலம் கிரகங்களைத் தாக்கிக் கொண்டேயிருந்திருக்கின்றன என்றுவிஞ்ஞானிகள்நம்புகிறார்கள். உயிர் அடைகாக்கப்படுவதற்கான மிக ஆறுதலான இடைவெளி- மிகக் குறுகிய கால இடைவெளி- முக்கிய மோதல்களுக்கிடையிலான கால வெளி 30 இலட்சத்திலிருந்து 60 இலட்சம் ஆண்டுகளாக இருக்க வேண்டும் என்பது அமெரிக்கத் தேசிய வானியல் நிர்வாகத்தின் ஆமெஸ் ஆய்வு நிலையத்தைச் சேர்ந்த வேண் ஒபர்பெக்கினதும் அவரது சக விஞ்ஞானிகளினதும், கணிப்பீடாகும். பூவுலகைப் பசுமை பெறச் செய்யத் தேவையான இர

சாயனம் வெகு விரைவாகவும், அதே வேளை எளிதாகவும் தோன்றியிருக்க வேண்டும் என்பது இதனால் பெறப்படுகிறது என்கிறார் ஒபர் பெக். அதுதான் நிலை என்றால் உயிர் ஏன் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் தோற்றம் பெற்றிருக்க முடியாது என்ற வினாவை மேலும் அவர் முன்வைக்கிறார்

## ஆரம்பத்தின் புள்ளி

உயிர் எங்கே முளைவிட்டிருக்கும்? நட்சத்திரமாதிரியிலான கிரகங்களிலிருந்து எப்படி அது தப்பிப் பிழைக்க முடிந்தது? சமுத்திரங்களின் அடியில் காணப்படும் அதிசயமான விளக்குச் சிமினி போன்ற பொருட்களை இவ் வினாவுக்கு விடைகாண நாடுகிறார்கள் ஆய்வாளர்கள். இவைகள் ஆழ்கடலின் அடித்தளத்திலுள்ள வெடிப்புகளின் மேல் இருக்கின்றன. இவைகள் நீர் வெப்பக் குதம் எனப்படும் இறுகிய கற்பாறைகளின் தரைத்தோற்ற அறைகளுக்கு இட்டுச்செல்லப் படுகின்றன. தொன்மையான ஜந்துக்கள் இதனால் உருவாகின்றன. சில வெடிப்புகளினால் குளிர்ந்த நீர் பிரவாகித்துப் புறப்படுகிறது. வேறு வழிகளால் வெப்ப நீர் வெளியேறுகிறது. இவற்றைக் கண்டுபிடிப்பதற்காக, 15 ஆண்டுகளுக்கு முன்னர் விஞ்ஞானிகள் நீர் மூழ்கிக் கப்பல்களை உபயோகப்படுத்தியபோது அந்த ஆபத்தான சூழலில் ஆச்சரியப்படத்தக்க உயிர்க் கிருமிகளைக் கொண்ட பரந்த அளவிலான அமைப்புக்களைக் கண்டுபிடிக்க முடிந்தது. அங்கே இராட்சதக் குழாய்ப் புழுக்களையும், ஷிம்ப் எனப்படும் குருட்டுப் பிராணியையும் காணமுடிந்ததாம். அவற்றின் ஆர்என் ஏயை ஆராய்ந்த பகுப்பாய்வாளர்கள் கெந்தகப்பொருள்களை உண்ணும் நுண்ணுயிர்க் கிருமிகள் குதங்களைச் சுற்றியுள்ள உணவுச் சங்கிலித் தொடரைச் சுற்றி நங்கூரமிட்டிருப்பதைக் கண்டு இரசித்திருக்கிறார்கள். இவைகளே பூவுலகின் ஆதியுயிரினத்தோடு நேரடித் தொடர்புள்ள ஜந்துக்களாகும். இவற்றைத் தவிர வேறு நுண்ணிய பழைமை உயிரினங்களாவன அமெரிக்க யெல்லோஸ்ரோன் தேசியப்பூங்காவிலுள்ள ஒக்ரோபஸ் ஸ்பிறிங் மட்டுமேயாகும். இவை மேற்பரப்பின் ஆவிக் குளியலில் காணப்படுபவையாகும்.

இந்த அதிகப்படியான வெப்ப நிலைகளில் தான் உயிர் தோற்றமெடுத்திருக்குமா? இந்த ''வெப்ப உலக'' அனுமானம் பலரைக் கொள்கைமாறச் செய்துள்ளது. தொல்லுலகின் மிக நுண்ணிய மேற்பட்டை, முட்டை ஓடு போல உடையக்கூடியதென்றும் நீர் வெப்பக் குதங்களை இப்போதுள்ளதிலும் பார்க்க மிகவும் சாதாரணமானதாக வைத்திருந்திருக்கும் என்றகருத்தையும்முன்வைக்கிறார். இந்தியானாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நுண்ணுயிரியல் விஞ்ஞானியான நோர்மன் போல், போஷாக்கிலிருந்து மேலதிகச் சக்தியை உயிரினங்கள் மிக உயர்ந்த, சூடான நிலையில் பெற்றுக் கொள்ள முடியும் என்கிறார் வோஷிங்ரன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த புவியியல் இரசாயன விஞ்ஞானியான எவ்றட் ஷொக். ''எந்த அளவிற்குச் சூடு அதிகரிக்கிறதோ உயிருக்கு அது அவ்வளவிற்கு இலகுவாக இருக்கும்'' என மேலும் கூறுகிறார். ஒருமுக்கிய விடயம் 112 பாகை சூட்டிற்கு மேலுள்ள நிலையில் நுண்ணுயிர்கள் வாழ்வதாக யாரும் இன்னமும் கண்டுகொள்ளவில்லை.

அப்படியிருந்தும் ஒரு வினா தொக்கி நிற்கிறது. உயிர்க் குதங்களில் உருவாகியதா? அல்லது அங்கே குடியேறியதா? குதங்கள் எப்போதுமே தொட்டில்களாக இருந்திருக்க முடியாது. கடல் மட்டத்தில் ஆரம்பித்த நுண்ணுயிர்களுக்கு வான் தாக்குதல்களிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் ஒரு பதுங்கு குழியாகவே அது இருந்திருக்க வேண்டும். அதன் பின் அது கடலின் அடிக்கு இழுக்கப்பட்டிருக்க வேண்டும். அங்கே ஆயிரக்கணக்கான மீற்றர் ஆழமான தண்ணீரால் அவை பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும். மேலதிகமான புவியின் தொடர்த் தாக்கங்களிலிருந்து இந்த அதிர்ஷ்டவசமான எதிரிகள் தப்பிப் பிழைத்திருக்க வேண்டும். சூரிய ஒளி பெறும் தரைமட்டத்தில் இவற்றின் உறவினர் பலர் தாக்கத்துக்குப் பலியாகியிருப்பர்.

## கலவைப் பொருட்கள்

40 ஆண்டுகளுக்கு முந்திய ஸ்ரான்லி மில்லரின் கண்ணாடிக் கொள்கலன் பரிசோதனை உயிருக்கான கலவைப் பொருட்கள் சுற்றுப் புறத்திலுள்ள வாயுக்களிலிருந்து மிகவும் இலகுவாக உற்பத்தி செய்யப்பட்டது எனக் காட்டுகிறது. அவரது ஆய்வு கூடத்தில் அவர் மீளுருவாக்கிய நிலைகள் இக் காலத்தைய புத்திசாதுரியத்தை மிகவும் உண்மை நிலையில் பிரதிபலித்தன. ஈர்ப்புச் சக்தியின் உந்துதலோடு படிப்படியாக மிக அமைதியாகக் கற்பாறைகளும், தூசிகளின் கூட்டுக்களும் இணைந்தே புவி தோன்றியது என அது தெளிவாக்குகிறது. இந்த மாதிரியமைப்பின்படி புவி குளிரோடு தோன்றியுள்ளது. நீண்ட காலம் வரைக்கும் அதன் ஆழமான பாளங்களில் தீப்பிடிக்கவில்லை. வெப்பக் கதிர்வீச்சுக் கூறுகள் உள்ளகத்தில் வெப்பத்தை ஏற்றியபின் கரைந்து போயிற்று. எனவே இரும்பு போன்ற மூலப் பொருள்கள் உடனடியாக உருகி உள்ளகத்துள் அமிழ்ந்திடவில்லை என்பதோடு அவை தரைமட்டத்தில் கோடானு கோடி ஆண்டுகளாக அப்படியே இருந்து வந்துள்ளன.

இது ஏன் முக்கியத்துவம் பெறுகிறது? இரும்பு பிராணவாயுவை ஊறச்செய்து கரிப் பொருளுடன் இணையவிடுவதில்லை, இதனால் கரியமிலவாயு உருவாவது தடுக்கப்படுகிறது. பதிலாக கரிப்பொருளும், நைதரசன் அல்லது சடவாயுவும் தொன்மை மிக்களிமலைகள் காரணமாகச் சுற்றுப்புறத்துள் கக்கப்பட்டுநைதரசன் அல்லது சடவாயுவோடு இணைந்து செயற்பட ஆரம்பித்தன. இதனால் ஏற்பட்ட விளைவுகள் மில்லரின் பரிசோதனை தொடர்வ

தற்கு வாய்ப்பான மெதேன் அமோனியா வாயுக்கள் தோற்ற மெடுத்தன.

''அது ஓர் அழகிய ஓவியம்'' என்பது சீபாவின் கூற்று. துரதிஷ்டவசமாக அது தவறானதாக அமைந்து விட்டது என்றும் கூறுகிறார் அவர். புவியின் பிறப்பின்போது ஏற்பட்ட மோதல்கள் இரும்பை உருகச் செய்து சூழத்திற்கு உள்ளே தள்ளியிருக்கவேண்டும். இதனால் ஆதிச் சுற்றுப்புறச் சூழல் பெரும்பாலும் கரியமிலவாயுவால் நிரம்பப் பெற்றிருந்திருக்கவேண்டும். கரியமிலவாயு இருந்த இடத்தில் உயிர்த்திரட்டுக்கள் இலகுவாக உண்டாக்கப்பட்டிருக்க முடியாது.

அப்படியானால் உயிரின் கட்டுமானத் துண்டுகள் எங்கிருந்து தோன்றின? உயிரை மிகவும் சிரமத்துக்குள்ளாக்கிய வால் நட்சத்திரங்கள், நட்சத்திர வடிவிலான கோள்கள், கோள்களின் மோதலினால் வெடித்துச் சிதறிவிழும் கோள் (கிரகம்) துண்டுகள் என்பனவே உயிர்த் திரட்டுக்களை இங்கே கொண்டுவந்து சேர்த்திருக்கவேண்டும் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். டேவிசில் அமைந்துள்ள கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தின் விலங்கியல் நிபுணரான டேவிட் டீமர் கோள் துண்டுகளிலிருந்து கலம் போன்ற சவ்வுகளை உருவாக்கும் சேதனப் பொருட்களைப் பிரித்தெடுத்துள்ளார். ஒளியிலிருந்து சக்தியை உறிஞ்சும் மங்கலான மஞ்சள் வர்ணப் பசையையும் அவர் அதிலிருந்து தனிமைப்படுத்தியுள்ளார். இது பச்சையத்தின் முன்னோடியாக இருக்க வேண்டும் என்பது டீமரின் கருத்தாகும்,

கோள்களிலிருந்து விழும் துண்டுகள் கொண்டு செல்லக்கூடிய சேதனப் பொருட்கள் மிக மிகச் சொற்பமாகும். அதனால் அவை உயிரைத் தொடக்கியிருக்க முடியாது என்பது விஞ்ஞானிகளின் நம்பிக்கையாகும். புவி உருப்பெறத் தொடங்கிய காலத்தில் அதைச் சுற்றி மிதந்த கோள்களின் துகள்களே உயிரின் ஆரம்பத்திற்கான மிக முக்கிய காரணியாக இருந்திருக்க வேண்டும் என்பது சீபாவின் வாதமாகும். இன்றைக்கும் சேதனக் கூட்டுப் பொருட்களைப் போதிய அளவு கொண்டு செல்லும் கோட்துண்டுகள், பனிப் பளிங்குத் துகள்கள் போல பூமியில் விழுகின்றன. அவற்றின் கூட்டுத் திணிவு பாறைத் தன்மை கொண்ட மென்பந்தின் அளவிலான கோட் துண்டுகளிலும் பார்க்க 100,000 இற்கு ஒன்று ஏற்ற அளவில் பெரியவையாகும். அமிலம் போன்று கறுப்பு நிறம் கொண்ட வால் நட்சத்திரங்களும் மூலப்பொருள்கள் சிலவற்றைக் கொண்டுவந்து சேர்த்திருக்கலாம், வால்நட்சத்திரங்களின் இரசாயனக் கூட்டு ஒரு பெரிய மர்மமாக இருப்பதால் இது உயிர் உருவாக உதவியதா என்பது கண்டுபிடிக்க முடியாத ஒன்றாகவேயுள்ளது.

இன்னும் ஒரு சாத்தியக் கூறுமுள்ளது. புவியை நோக்கி வேகமாக வந்த பெரிய பொருள்களும் சுற்றுப்புற அமைப்பைப் பல வழிகளில் மாற்றியிருக்கக்கூடும். ''இரும்பாலான நட்சத்திர வடிவுக் கோள் ஒன்றை புவிக்குள் அனுப்பினால் அது தாக்கும் பொருள்களனைத்தும் எதிர்த் தாக்கத்தை ஏற்படுத்தும்போது பல ரசனையான நிகழ்வுகள் ஏற்படும்'' என்கிறார் நாசா ஏமெஸ். ஆய்வு நிறுவனத்

## சேதனப் பொருட்கள் எவ்வாறு உயிர் பெற்றன?

### 1) ஊக்கிகள் :-

களி ........ உலோகங்கள்

### 2) ஆரம்பக்கலவை முறை:

*1953 ஆம் ஆண்டிலே ஸ்டான்லி மில்லர் செய்த பரிசோதனை அபரிமிதமாக அமினோ அமிலங்களை உற்பத்தி செய்தது. அவை புரதத்துக்கான கட்டுமானக் கற்துண்டுகளாகும். அக்காலத்தில் புரதங்களே உயிரின் ஊட்டப் பொருள்களாகக் கொள்ளப்பட்டது. புரதங்களை விடப் பிறப்புரிமையியல் மூலக் கூறுகளே குறிப்பாக ஆர் என் ஏ தான் – உயிராக்கத்தின் முன்னோடிகள் என விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.*

### 3) களி:

*ஆர்என் ஏ யை உருவாக்கிய இரசாயன எதிர்த்தாக்கங்களுக்குக் களிச் சிதறல்களே ஊக்கிகளாய் அமைந்திருக்க வேண்டும். கற்பனையான ''பளிங்குப் பரம்பரையலகுகள்'' - களியினுள் உள்ள மூலக்கூறுகளின் முறையான ஒழுங்கமைப்பு- ஆர் என் ஏயின் முன்னோடிகளாயிருக்க வேண்டும் என்றே இப்போது விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.*

### 4) உலோகம்:

*மாற்றீடாக மூலக்கூறுகளின் குடியேற்றம் ஒன்று மூடனின் தங்கம் எனப்படும் உலோகத்தில் இடம் தேடியிருக்கலாம். அதனால் ஒளித்தொகுப்புப் போன்றதொரு சக்தியை உற்பத்தி செய்யும் எதிர்த் தாக்கம் ஏற்பட்டிருக்கலாம். அங்கிருந்து அந்தக் குடியேற்றம் ஒரு சவ்வால் மூடப்படும் நிலைக்குப் போய், ஆர் என் ஏ, டீ என் ஏ மூலக் கூறுகளைக் கண்டுபிடித்திருக்கலாம்.*

தைச் சேர்ந்த கெவின் சான்லே மில்லர் தன் பரிசோதனையில் காண விழைந்த மெதேன் நிரம்பிய சுற்றுச் சூழலை இந்த நிலைகள் உருவாக்கியிருக்கலாம் என நினைக்கிறார்.

## ஆரம்ப இரசாயன ஆய்வு கூடம்

உயிர் ஆரம்பித்த போது அதற்கு மில்லரின் கண்ணாடிப் போத்தல்களும், பரிசோதனைக் குழாய்களும், குப்பிகளும், உதவிக்கு வரவில்லை. அவ்வாறாயின் உயிர்த் தோற்றத்திற்கான சரியான கலவைப் பொருள்களை இயற்கை எவ்வாறு கொண்டு வந்தது? சமுத்திரத்தில் தோன்றும் குமிழிகள் மிகச் சிறிய இரசாயன எதிர்த்தாக்கிகளாக இருக்கக் கூடும் என்கிறார் லோறன்ஸ் பேக்லி ஆய்வு கூடத்தைச் சேர்ந்த லூயியேர்மன் என்ற ஆய்வாளர். குமிழிகள் எங்கும் நிறைந்த ஒன்றாகும். எந்த நேரத்திலும் சமுத்திரத்தின் மேல் மட்டத்தின் 5 வீதம் நுரையால் நிரவப்பட்டேயிருக்கும். இதனோடு கூடவே உயிருக்குத் தேவையான அனேக பொருள்களைக் குமிழிகள் சேர்த்து வைத்திருக்கும். அவற்றுள் செப்பு, துத்த நாகம், கெந்தக உப்பு என்பனவும் அடங்கும். குமிழிகள் வெடிக்கும் போது தன்னிடம் தேங்கியுள்ள மூலக்கூறுகள் அனைத்தையும் அது சுற்றுப்புறத்துக்குள் வெளியேற்றிவிடுகிறது. இந்தப் பொழுதில் தான் மிக முக்கிய இரசாயனம் தோன்றுவதாகப் பல விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

வெடிக்கும் குமிழியிலும் பார்க்கத் தோன்றிமறையும் நிறைகுறைந்த இரசாயன கூடத்திலேயே உயிர் பிறந்திருக்க வேண்டும் என்பது வேஜீனியாவின் பெயர் பக்கிலுள்ள ஜோர்ஜ் மேகன் பல்கலைக்கழகத்தின் உயிரியல் விஞ்ஞானியான ஹரோல்ட் மொறோவிற்சின் கருத்தாகும். அம்பிபியெஸ் எனப்படும் இயற்கையில் காணப்படும் தலையின் இருபக்கமும்கொண்ட ஜானுஸ் போன்ற உருவ அமைப்புள்ள மூலக்கூறுகளை அவர் உதாரணமாகக் காட்டுகிறார்: இந்த மூலக் கூறுகளின் ஒருபுறம் தண்ணீரை விரும்பி நிற்கிறது. மறுபுறத்தை தண்ணீர் ஒதுக்கி விடுகிறது. தொன்மை மிக்க சமுத்திரங்களிலிருந்த மூலக் கூறுகள் நீரை வெறுக்கும் தமது பக்கங்களை மிகச் சிறிய கோளங்களுக்குள் சுருட்டி விட்டிருக்க வேண்டும். புடகம் எனப்படும் இந்தக் கோளங்கள் இரசாயன மாற்றங்களுக்குத் தக்கதோர் தளமமைத்துக் கொடுத்திருக்க வேண்டும். முதலாவது கலங்களுக்கு இவையே முன்னோடிகளாக இருந்திருக்கவேண்டும். ''இந்தச் சிறிய புடகங்கள் கிடைத்து விட்டால் உயிருக்கான பாதை துலங்கிவிடும்'' என்கிறார் மொறோவிற்ஸ்.

முதல் வந்தது எது? மென்தோலா அல்லது அனுசேபமா? நான் உயிரென்றழைப்பது அதிமுக்கிய சேதன மூலக் கூறுகளுக்கிடையிலான தொடர் இரசாயன எதிர்த்தாக்குதல்களால் உருவானதாகும் என்பது மியூனிச்சைச் சேர்ந்த சட்டத்தரணியும், கோட்பாட்டு இரசாயன வியலாளருமான கண்டர் வாச்ரசோகர் என்பவரின் நம்பிக்கையாகும். ஒரு மென்தோலுக்குள் மூடப்பட்டிருக்காமல் சிறு பஞ்சுக்கட்டிலில் ஊசிகளைக்குத்தி வைத்தது போன்று தம்மை ஏற்றுக் கொண்ட ஒரு பொருளின் மேல் மட்டத்தில் அவை தங்கியிருக்கக் கூடும் என்கிறார் அவர். அதிமுக்கியமான இந்த விடயத்திற்கு வாச்ரசோசரின் வேட்பாளர் இரண்டு உலோகங்கள் கலந்த பைறைற் அல்லது மூடனின் தங்கம். ஒளிவிடும், பளிங்குத் தன்மை வாய்ந்த இவை தம்மோடு மின் தாக்கத்தைக் கொண்டிருப்பனவாகும். அதனால் மாறான தாக்கத்தைக் கொண்ட இரசாயன மூலக்கூறுகளை இது தன்பால் ஈர்த்திருக்கும் ஒன்றோடொன்று மோதக்கூடிய விதத்தில் அவை நெருக்கமாக்கப் பட்டிருக்கலாம். இவ்வகையான எதிர்த்தாக்கங்கள் ஒளித்தொகுப்புப் போன்றதொரு அபிவிருத்திக்கு இட்டுச் சென்றிருக்கலாம் என்றும் கருதுகிறார் வாச்ரசோசர்.

எவ்வாறு இந்த மூலக்கூறுகள் மீளுற்பத்தியிலிறங்கின என்பது இன்னமும் கண்டு பிடிக்கப்படாததோர் புதிராகும். கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தின் இரசாயனவியலாளரான ஏ. ஜீ. கயிரன்–ஸ்மித் இதற்கான விடை மின்னுகின்ற மூடனின் தங்கத்திலல்லாமல் சாதாரண களி மண்ணில் கிடைக்கும் என்று சொல்லுகிறார். சில களிமண்ணின் அமைப்பு திரும்பத் திரும்ப ஒரேவிதமான படிகத் தன்மைக்கு மாறும் இயல்புடையது. ஏதாவது தவறு ஏற்படும் போது அதில் ஆரம்பித்துத் திரும்பவும் டீ என் ஏ யில் உள்ள விகாரமாகிவிட்ட இழை போன்றாகிவிடும். அவ்வகையான அசேதனப் பொருள்கள் உயிருள்ளவை எனச் சில விஞ்ஞானிகள் நம்புகின்ற அதேவேளை வேறு பலர் மண்களி அல்லது தாதுப்பளிங்குகள் மூலக் கூறுகளுக்கான அச்சாக அமைந்து உயிர்க் கட்டக் கற்றுண்டுகளாகப் பயன்பட்டுச் சரியான வடிவமைப்புக்கும் உதவியாயிருக்கவேண்டும் என்றும் கருதுகின்றனர்.

## மூலக்கூற்று முதாதையர்கள்

சேதன மூலக்கூறுகள் தாமே இயற்கையாக ஒழுங்குபடுத்தக் கூடியன என்றும் அதே மூலக் கூறுகள் இயற்கையாகவே மீளுற்பத்தி செய்யக்கூடியன என்றும் ஏற்றுக்கொண்டாலுங் கூட அடிப்படையில் குஞ்சு-முட்டைப் பிரச்சினை எழத்தான் செய்கிறது. நவீன கலங்கள் புரதத்தால் ஆக்கப்பட்டவையாகும். இந்தப் புரதத்திற்கான மாதிரிவடிவம் டீ என் ஏ யின் நீளமான இழைகளிலே காணப்படுகிறது. ஆர் என் ஏ யிலும் இதனைக் காணலாம். போதிய அளவு புரத விநியோகம் இல்லாதிருந்தால் டீ என் ஏ யையும், ஆர் என் ஏ யையும் உற்பத்தி செய்ய முடியாது. இந்தக் கட்டுமானப்பணியில் புரதம் ஊக்கிகளாகப் பணிசெய்கிறது. ஆகவே புரதம் இல்லாமல் கரு அமிலம் எவ்வாறு தோன்றமுடியும்? அதே

போன்று கரு அமிலம் இல்லாமல் புரதம் எப்படி வந்திருக்க முடியும்?

சில ஆர் என் ஏ மூலக் கூறுகள், மாதிரி வடிவங்களாகவும், ஊக்கிகளாகவும் பணி செய்யக் கூடியன. தமக்கிடையிலும், வேறு மூலக்கூறுகளிடையேயும் பிரதித்தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியவை, அவை என்று ஆய்வாளர்கள் 10 ஆண்டுகளுக்கு முன்னர் கண்டுபிடித்தபோது ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டது. அதுவரை டீ என் ஏ க்களிடமிருந்து கலங்களின் புரதத் தொழிற்சாலைகளுக்குப் பிறப்புரிமையியற் கட்டளைகளை எடுத்துச் செல்லும் மூலக்கூற்றுத் தூதர்களாகவே விஞ்ஞானிகள் ஆர் என் ஏ யைக் கணித்து வந்தனர். ஆர் என் ஏ பிரதித்தாக்கத்தை ஊக்குவிக்ககூடியதாயின் கடந்தகாலத்தின் ஏதாவது ஒரு கட்டத்திலாவது அது அவ்வாறு செய்திருக்குமாயின் தனது பெருக்கத்தை அதுவே ஊக்குவித்திருக்கும். அப்படியாயின் டீ என் ஏக்கு இடைநடுவராக இருப்பதைவிட உயர்வானதாகவே இருந்திருக்கும். அது டீ என் ஏ யின் மூதாதையராகவும் இருந்திருக்கலாம். இந்தக் காரணிகளை மையமாக வைத்துக் கணித்தால் முதல் உயிரினங்கள் ''ஆர் என் ஏ உலகத்'' திலேயே வாழ்ந்திருக்கவேண்டும் பரிமாண வளர்ச்சிப்பாதையிலே உயிர் வேகம் கொள்ளும் வரையிலும் டீ என் ஏ அபிவிருத்தியடைந்திருக்கவில்லை.

சென்ற ஏப்ரலில் உயிரின் ஆதிகால முன்னோடியைத் தேடிக் கொண்டிருக்கும் போதே ஸ்கிறிப்ஸ் ஆய்வுக்கழகத்தைச் சேர்ந்த ஜோய்ஸ் தன்னை ஆசைகாட்டி ஏமாற்றிய மூலக்கூற்றில் இடறி விழுந்தார். மிகச்சிறிய அளவிலான செயற்கை ஆர் என் ஏ ஒரு பரிசோதனைக்குழாயில் சுழன்று கொண்டிருந்தது. சடுதியாக அது ஒரு புரதத் துண்டோடு இணைந்து கொண்டு எந்த நிறுத்தமுமில்லாமல் பெருக்கத்தை ஆரம்பித்தது. ஒரு சில நேரங்களுக்கு ஜோய்ஸ் எதிர்பார்த்த மூலக் கூற்றாரம்பச் செயற்பாடு வெற்றிகரமாக நடந்து கொண்டிருந்தது.

மூலக்கூறு உயிருடையதல்ல என ஏற்றுக் கொள்கிறார் அவர். தந்திரோபாயம் நிறைந்ததுபோல் காணப்படும் அது முற்கூட்டியே வடிவமைக்கப்பட்ட புரதத்தின் துணையில்லாமல் செயற்படமுடியாதது. மூலக்கூறு உயிருடையது என்ற அந்தஸ்தைப் பெறுவதற்கு வெளியுதவியின்றிப் பெருகும் திறனைப் பெற்றிருக்கவேண்டும். இந்தத்துறையில் மிகவும் முக்கியமான ஒரு முயற்சியை ஹொவேட்டிலுள்ள மூலக்கூற்று உயிரியல் விஞ்ஞானியான ஜக் ஹோஸ்ராக்கும் அவரது படப்பிடிப்பு மாணவனான டேவிட் பாட்டெல்லும் மேற்கொண்டனர். டேவிட் விகடமான விதத்தில் ஆர் என் ஏ யின் கோடிக்கணக்கான இழைகளைக் கொண்டு தொல்லுலகின் செழிப்பான இரசாயனத் தோற்றத்தை அமைத்தார் இறுதியாக நல்ல நிலையில் இருந்த 80 இழைகள் பரிசோதனைக்குழாயில் இடைநிறுத்தப்பட்டிருந்த போது இழைகளோடு சேர்ந்து கொண்டதை அந்த விஞ்ஞானிகள் காணக் கூடியதாக இருந்தது. சாதாரண கட்டுமானத்துண்டுகளிலிருந்து சிக்கலான மூலக்கூறுகளை உருவாக்குவதற்கு இந்த இணைப்பு முறை அவ்வளவு இலகுவானதல்ல எனக் கூறும் ஷொஸ்ராக் ஆச்சரியப்படத்தக்கது எதுவெனில் முன்னரளவு உயிரின் ஆரம்பவிடயம் அவ்வளவு பயப்படக்கூடியதாக இல்லை என்கிறார்.

சரியான பொருள்களைக் கொண்டு யாராவது பரிசோதனைக் குழாயை நிரப்ப முடிந்தால் தானாகவே பெருக்கம் செய்யும் மூலக்கூறு தோன்றும் என்றே ஜோய்சும், ஷொஸ்ராக்கும் நம்புகிறார்கள். அது நடந்தால் விடயம் தலைகீழாவதோடு வியப்பூட்டுவதாயும் அமையும். காரணம் உயிரைப்பற்றிய அடிப்படை நம்பிக்கைகளிலேயே மாற்றமேற்படும். உயிர் என்பது பலருக்கு மிருகங்கள், மரஞ்செடிகொடிகள், கிருமிகளையே குறிக்கும். மற்றவை தொற்றுநோய்க் கிருமிகள். அவை புரதத்திற்குள் அடைபட்ட அமில இழைகளே தவிர வேறெதுவுமல்ல. ஓர் உயிர்க் கலத்திற்கு வெளியே இனப்பெருக்கம் செய்ய முடியாதவை அவை.

உயிரின் ஆரம்பவிடயத்தை விஞ்ஞானிகள் முடிவிற்குக் கொண்டுவரும் போது உயிர் பற்றிய செயற்பாட்டு வியாக்கியானம் சிந்தனையைத் தூண்டும் விவாதத்தைக்கிளப்பும் விரிவாகும். முற்றுமுழுதாகச் செயற்படக்கூடிய ஆர் என் ஏ யில் உள்ள வெள்ளிப் பரிசோதனைக்குழாயில் எழுந்து தனது சொந்தப் புரதத்தைக் கட்டுமானால் ஒரு கலத்துக்குள் ஆர் என் ஏ யின் இழை செய்யும் வேலையை அது செய்யவில்லை என்று யாரால் சொல்ல முடியும்?

அது ஒரு தெய்வீகப் பொறியென்றும், திறமை மிக்க இரசாயனச் சேர்க்கையல்லவென்றும் உயிர்த்தோற்றம் பற்றி வாதிடும் மக்கள் இல்லாமற் போகமாட்டார்கள் இந்த அடிப்படை நம்பிக்கையை அடியோடு மாற்றும் விதத்தில் பரிசோதனைக் குழாயிலான கண்டுபிடிப்புக்களை விஞ்ஞானிகள் இனிமேல்தான் செய்தாக வேண்டும். ஜோய்சின் ஆய்வுகூடத்தில் உள்ள மூலக்கூறு ஒரு தொற்றுநோய்க் கிருமியளவிற்கு அதிதீவிரத் தன்மைவாய்ந்ததல்ல. ஒரு நுண்கிருமியை விடச் சிக்கல்கள் குறைந்ததுமாகும். எந்த அளவு அதிகமாக விஞ்ஞானிகள் அதைப்பற்றித் தெரிந்து கொள்ளப்போகிறார்களோ அந்த அளவிற்கு உயிர் அசாதாரணமாக இருக்கப்போகிறது. பெரிய ஓசை எவ்வாறு இப்பூவுலகை அளவமைப்பிற்குக் கொண்டு வரவில்லையோ அது போலவே உயிரின் ஆரம்பத்தை விளங்கிக் கொள்ளும் முன்னேற்றமும் இறுதியில் அதன் அதிசயத்தை விரிவடையச் செய்யுமேயன்றி குன்றிப் போகச் செய்யாது என்று நிச்சயமாக நம்பலாம்.

நியூயோர்க்கிலிருந்து டேவிட் பேக்லி லண்டனிலிருந்து பரீ ஹிலன் பிறாண்ட் கொட்டிங்கனிலிருந்து ஜேம்ஸ் ஓ ஜக்சன்.

டைம், ஒக்ரோபர் 11, 1993


# கடினமான ஒரு மேலாளரோடு
# எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

டொனா பிறவுண் ஒகாட்டி

தனது மேலதிகாரி அகங்காரம் படைத்தவரென்பதை ஹார்வே கிட்லர் நன்கு அறிவார். அவர்கள் இருவரும் தொழிற்சாலையின் அடித்தளத்தில் ஒன்றாகப் பணியாற்றியவர்கள். இயந்திரப் பிரிவின் முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்றுவந்த பின்னர், முன்னைய தன் சகபாடியின் பதவிக்கான குணமாற்றத்தைச் சமாளிக்க, கிட்லர் தயாராக இருக்கவில்லை.

சரியாக, இரண்டு நாட்களின் பின்னர், ஒரு கட்டளையைப் பார்ப்பதற்காகத் தொழிலாளி ஒருவர் சாய்ந்து நின்றார் என்ற காரணங் காட்டி அங்கே நிற்கும் மேசை ஒன்றை அகற்றி விடும்படி கோபாவேசத்துடன் உத்தரவிட்டார் அதிகாரி. இப்போதோ, அல்லது, வேறு ஒரு நேரத்திலோ பணியாளர்கள் அனைவரையுமே வேலைநீக்கம் செய்துவிடப்போவதாகவும் பயமுறுத்தினார். தொழிலாளர் அனைவரும் வீடு சென்ற பின்னர், சதிமுயற்சிக்கான ஆதாரங்கள் ஏதும் இருக்கின்றனவோ என்று, குப்பை வாளியையும் கிண்டிப்பார்த்திருக்கிறார்.

கிட்லரின் இந்த அனுபவம், பல தொழிலாளருக்கு அச்சத்தோடு பழக்கப்பட்ட ஒன்றாகும். ''உண்மையைச் சொல்வதானால், எல்லா அதிகாரிகளுமே பிரச்சனைக்குரியவர்கள் தான்'' என்கிறார். சரியான பயிற்சியின்மையே இதற்குக் காரணம் என்று மார்டிகுறோத் கூறுகிறார். அனேகமான மேலதிகாரிகள் தமது முந்திய பதவிகளில் திறம்படச் செயலாற்றினார்கள்




என்ற ஒரே காரணத்திற்காகவே நிர்வாக மட்டத்திற்குப் பதவி உயர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஏனையவர்களை வழி நடாத்திய அனுபவம் அவர்களுக்கு உண்டு என்பதற்காகப் பதவியுயர்வு வழங்கப்படவில்லை.

நிச்சயமற்ற பொருளாதார நேரங்களும், தமக்குக் கீழுள்ளவர்களைத் துன்புறுத்தும் அதிகாரத்துவ வியாதியைச் சிலருக்கு ஏற்படுத்துகிறது. ''எந்த விலை கொடுத்தும் பலனைப் பெறும் ஒரு வழி ஏற்கப்பட்டுள்ளது'' என்று கூறும் வர்த்தக நிர்வாகியும், ''வெறி படைத்த அதிகாரிகள் — நிர்வாகிகள்'' என்ற நூலின் ஆசிரியருமான டான்லிபிங், ''அதனால் கூட்டுத்தாபனங்கள் தெரிவு செய்யும் நிர்வாகிகள் பிடிவாதப் போக்குடையவர்களாகவும் வேலை வாங்குவதையே இலக்காகக் கொண்டவர்களாகவுமே இருக்கிறார்களே யன்றிச் சிரமமான சந்தர்ப்பங்களுக்கேற்ற விதத்தில் தம்மை மாற்றிக் கொள்ளும் திறமையுடையவர்களாயில்லை'' என்றும் எழுதுகிறார்.

அமெரிக்க நிர்வாக உளவியலாளரான ஹரிலெவின்சன் பிரச்சினைக்குரிய நிர்வாகிகளை மூன்று வகையினராகத் தரப்படுத்தியுள்ளார். கொடுமையானவர்கள், தீர்க்கமான முடிவை மேற்கொள்ளாத இழுதுமீன் போன்றவர்கள். எதையும் அனுமதிக்க மறுக்கும் பூரணத்துவ மனோபாவம் உடையவர்கள். இவ்வாறான ஒரு கூடாத அதிகாரியிடம் நீங்கள் துன்புறுகிறீர்களா? அப்படியானால் அந்த நபரிடம் மேற்சொன்ன குணங்கள் ஒன்றிணைந்திருக்க வேண்டும் என்பது

நிச்சயம். சரியான மூலோபாயத்தைப் பிரயோகிப்பதன் மூலம் இவர்களைச் சமாளிக்கலாம்.

## கொடுமையானவர்கள்

ஒரு புதிய நிர்வாகி, தான் பதவியேற்ற முதல்வாரத்தில் தனது சிறிய விளம்பர முகவரகத்தில், ஒரு வாடிக்கையாளரிடம் சில பொருட்களைத் திருப்பித் தருவதாகக் கூறியிருக்கிறார். இதை அவர், முகவரகப் பணியாளர்களின் கூட்டமொன்றிற் குறிப்பிட்டபோது, மேலதிகாரி உடல் சிவக்கும் அளவிற்கு ஆவேசம் கொண்டிருக்கிறார். அவரது உதடுகள் நடுங்க, உரத்த குரலில் சத்தமிட்டுப், புதிய கணக்கியலாளர் உடனடியாக அந்த வாடிக்கையாளரை அழைத்துத் தனக்கு விளம்பரத் தொழிலில் எதுவுமே தெரியாது என்று பாவமன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும், குறிப்பிட்ட பொருள்களைத் திருப்பித் தர முடியாது என்றும் சொல்லிவிடுமாறு பணித்திருக்கிறார்.

அடுத்த சில மாதங்களில், நிறுவனத்தின் பணிப்பாளர்களனை வரும் இந்த அதிகாரியின் அடக்குமுறைக்கு அஞ்சி நடுங்குவதைக் கண்ட கணக்கியல் நிர்வாகி, கொடுங்கோலன் ஏனையவர்களின் அச்சத்திலேயே பசியாறுகிறார் என்பதைப் புரிந்து கொண்டார். மேலதிகாரியின் சினத்துக்கஞ்சி, அதனைத் தவிர்த்துக் கொள்ள முயன்ற பணியாளர்களே, அனேகமாக அகப்பட்டுத் தவித்தார்கள். ''கொடுமையானவர்கள், நாம் எதிர்கொண்டால் பின்வாங்கிவிடுவார்கள் என்பதை, என் சிறுவயதிலிருந்தே தெரிந்து வைத்திருக்கிறேன்'' என்றும் தெரிவித்தார்.

புதிதாகப் பெற்றுக்கொண்ட நம்பிக்கையையும், விளம்பர வர்த்தகத்தில் தனக்கு ஏற்பட்ட அறிவு வளர்ச்சியையும் ஆயுதமாகக் கொண்டு, அவரது மேலதிகாரியின் நடத்தைக்கு முகம் கொடுத்தார். ''அவர் தொனியை உயர்த்தினால், நானும் என் தொனியை உயர்த்துவேன்'' என்றார் அவர். இதுவே அவர்களின் பழக்கம் என்பது போல, மேலதிகாரி மனவிருப்பின்றியே தனது நிர்வாகியை மதிக்க ஆரம்பித்தார். காலப்போக்கில், அந்த இளைய நிர்வாகி பதவியேற்றங்களையும் பெறமுடிந்தது.

கொடுமையானவர்களை எதிர்த்து நிற்பதென்பது சிற்சில வேளைகளில் பலனைத்தந்தாலும், சில சமயங்களில் எதிர்மாறான விளைவுகளையும் அளிக்கக்கூடும். வேறோர் மூலோபாயத்தை முன்வைக்கிறார் மார்டி குறோத். கோபாவேசக்காரர் தணிந்திருக்கிறபோது நியாயத்தைத் தெரிவிக்கும் முறையே அதுவாகும்.

அவருடைய ஆத்திரம் உங்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதை, மேலதிகாரிக்கு விளக்க வேண்டும் என்பது மார்டிகுறோத்தின் ஆலோசனையாகும். உதாரணமாக, '' எனது செயற்றிறனை அதிகரிக்கச் செய்யவே முயலுகிறீர்கள் என்பதை நான் அறிவேன். ஆனால், நீங்கள் போடுகின்ற சத்தம் என்னைக் குழப்புவதாற் பலன் இல்லாமற் போகிறது '' என்று நீங்கள் சொல்லலாம்.

'' அதிகாரமுள்ள — பணிவு நிறைந்த ஓர் உறவு நிலைப்படுத்தப்பட்டு விட்டால், அந்தத் தளையை அகற்றுவது மிகக் கடினம் '' என்பதால், எந்தத் தந்திரோபாயத்தைத் தெரிவு செய்கின்றபோதும், அதைக் கொடுமையாளருடன் செயற்படுத்துவதைக் காலதாமதமில்லாமற் செய்து விட வேண்டும் என்பது, கைத்தொழில் உளவியலாளர் ஜேம்ஸ் பிஷரின் எச்சரிக்கையாகும். சுயமரியாதையை ஏற்படுத்தாமலிருப்பதற்காக மேலாளரை எதிர்க்கும் வேளையில், எப்போதுமே நான்கு சுவர்களுக்குள் அது நடக்கப் பார்த்துக்கொள்ளல் அவசியம் என்பதும் பிஷரின் ஆலோசனையாகும். இவை எவற்றுக்கும் கட்டுப்படாதவராக மேலாளர் இருப்பாரேயாகில், கீழ்க்காணும் தந்திரோபாயங்களை மேற்கொள்ளுங்கள்.

* மேலாளர் உரத்த குரலில் கூச்சலிடும் வேளையில், உங்கள் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கு வழி, ''கோபத்தை உதாசீனம் செய்; அது உன்னுடையதல்ல '' என்ற அமைதிச் சொற்றொடரைத் திரும்பத் திரும்ப மனத்திலே நினைத்துக் கொள்ள வேண்டும்.

* மேலாளரின் உருவத் தோற்றத்தில் உள்ள நகைப்புக்கிடமான பகுதியிற் கவனத்தைத் திருப்புக. அவருக்கு இரட்டை நாடி இருந்தால், அவர் குறைப்பட்டுக் கொள்ளும் போது அவரது தசைகள் ஆடுவதைப் பாருங்கள்.

* உங்கள் மேலாளர் மூச்சு விடும் வரை காத்திருந்து, அவரைத் திரும்பக் கொண்டுவரும் வகையில், '' நீங்கள் சொல்வது என்ன என்று புரிந்து கொள்ள விரும்புகிறேன். சிறிது மெதுவாகச் சொல்லுங்கள் '' என்று கூறுங்கள்,

இறுதியாக, ஒரு போதும் எக்காரணம் கொண்டும், வசைமாரி பொழியும் மேலாளருடன் ஓய்வெடுத்துக் கொள்ளக் கூடாது. அவர் எத்தகைய கவர்ச்சியுடையவராக இருந்தாலும், அது நல்லதல்ல என்கிறார் ஸ்டான்லி பிங். '' கொடுமையான பேர்வழி உங்கள் இருதயத்துக்குள்ளே எவ்வாறோ ஊடுருவி, உங்கள் முகத்தைத் தன் காலடியின் கீழ் போட்டுவிடுவார். ''

## வேலை வெறி

'' சில மேலதிகாரிகளுக்கு வேலைக்கும், விளையாட்டுக்குமுள்ள வேறுபாடு புரிவதில்லை. அந்த மேலாளர் உங்கள் ஒவ்வொரு விழித்திருக்கும் மணித்தியாலத்தையும் தனதாக்கி, வீட்டு வாழ்க்கையையும், செயலகத்தையும் வெவ்வேறாக்க முடியாத நிலைக்கு உங்களைத் தள்ளி விடுவார்.

உங்கள் சேவை அவருக்குக் கிடைக்கக் கூடிய சந்தர்ப்பங்களை மட்டுப்படுத்த வேண்டும். எந்த வேலையையும் காலையில் முதற் பணியாக முடிப்பீர்கள் என்று மீளுறுதி செய்துவிடுங்கள். முதன்மைப் பணிகளை அவர் தீர்மானிக்கட்டும். காத்திருக்கக் கூடியவை எவை என்பதை நீங்கள் முடிவு செய்யுங்கள்.

## இழுது மீன்

''எனது மேலாளர் ஆட்களைப் பணிக்குச் சேர்க்கும் போது, அவர்களுக்குத் தமது தொழிலில் பாண்டித்தியம் உண்டு என்று கருதியே சேர்க்கிறார். துரதிஷ்டவசமாக, முரண்பாடுகளை அவர் வெறுக்கிறார். யாராவது தவறிழைத்து விட்டால், அதைச் சரிசெய்யாது, அதைச் சுற்றி எங்கள் பணியைச் செய்து கொண்டேயிருக்க வேண்டும். ஆகவே நாங்கள் யார் மனதையும் துன்புறுத்துவதில்லை''. ஒரு சிறிய நிறுவனத்தில் பணிபுரியும் பெண் இவ்வாறு கூறினார்.

அந்தப் பெண்ணின் மேலாளரை ஓர் இழுதுமீன் என்றே கூறல் வேண்டும். அவர் தனது பணியறையில் ஓர் அடிப்படைக் கட்டளையைத் தானும் பிறப்பிக்க மறுத்துள்ளார். அதனால் முக்கிய கடிதப் போக்குவரத்துத் தொடர்பாக, அவரது செயலர் ஒருமாத காலத்தைச் செலவிட வேண்டியுள்ளது. இதன் காரணமாக, ஒரு வாடிக்கையாளரின் வரி விலக்கல் ஆபத்திற்குள்ளாகிறது. நிறுவனத்தின் துறைப்பணியாளர்களை யாருமே மேற்பார்வை செய்வதில்லை. செயலாளர் ஒருபோதும் கண்டிக்கப்படுவதில்லை. ஆகவே அங்கு நடக்கும் தவறுகளைத் தடுத்து நிறுத்த யாருமே இல்லை. முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதில் அச்சம் இருப்பதால், இழுதுமீன் பொறுப்புக்களை ஏற்பதில்லை.

நிர்வாக ஆலோசகரான வீ கொல்பி ''பொறுப்பை எப்போதும் ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்கிறார். ''நான் இதைத்தான் செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று இழுது மீனுக்குச் சொல்ல வேண்டும். முன்முயற்சியை நீங்கள் எடுக்கிறீர்கள்-மேலாளரின் விடயத்தில் தலையிடாமல், அவ்வளவு தான்.

முடிவுக்கு வரமுடியாத மேலதிகாரியின் நம்பிக்கையைப் பெறுவதென்பதும் இன்னோர் மூலோபாயமாகும்.

## பூரணத்துவ விருப்புடையவர்

நன்சி அஸ்லிச் அப்போது தான் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறியிருந்தார். அவருக்குக் கிடைத்த முதல் முழுநேர வேலை, சிறிய நகரமொன்றில் இருந்துவெளியாகும் புதினத்தாள் ஒன்றின் விளம்பர வரைவு, ஏற்பாடு என்பனவற்றை மேற்பார்வை செய்வதாகும். குறிப்பிட்ட தவணை நாளன்று, அனுபவம் குறைந்த பத்திரிகை அலுவலகப் பொது முகாமையாளர் திடீரென்று நன்சியிடம் வருகிறார். தவறுகள் இழைக்கப்பட்டிருக்கின்றனவா என்று பரிசோதிக்கிறார். வினாக்களைத் தொடுக்கிறார் அஸ்லிச்சை அதிகமாகவே அச்சமுறச் செய்த வினா இது தான். ''தவணைகளுக்குள் உம்மால் விடயங்களை ஒப்பேற்றிவிட முடியுமா?''

''நான் எப்போதுமே தவணை தப்புவதில்லை. அப்படியிருந்தும் ஒவ்வொரு வாரமும் இதே கேள்வியை அவர் என்னிடம் கேட்டு வந்தார். என்மீது அவர் கொண்ட அவநம்பிக்கை காரணமாக, நான் சிறுமைப்படுத்தப் பட்டதாக உணர்ந்தேன்'' என்று அஸ்லிச் கூறினார்.

இதிலே நகைப்புக்கிடமானது எதுவென்றால், பொதுமுகாமையாளர் தனது இத்தகைய செயற்பாட்டினால் ஆளணியின் உற்பத்தித் திறனைக் குறைத்துக் கொண்டிருக்கிறார். பிரான்சின் தத்துவஞானி வோல்ட் டயரின் வாசகத்தை வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ''பூரணமென்பது நல்லனவற்றுக்கு எதிரியாகும்''. ''அதிக பூரணத்துவம்: கட்டுப்பாட்டுக்குள் கட்டுப்பாடு கட்டுக்கடங்காது போகிறது'' என்ற நூலை, ஜனெற் டீவைஸ் என்பவரோடு இணைந்து ஆக்கிய உளவியலாளரான அலன் மரிங்கர்; ''பூரணத்துவத்தை விரும்புபவரின் திறமைக்கான அதிக அக்கறை, எல்லோருடைய வேலையளவையும் குறைத்துவிடும். எல்லாப் பணியும் திறம்பட இருக்க வேண்டும் என்கின்றபோது, செய்யவேண்டிய வேலை பெரிதாகிவிடும்'' என்கிறார்.

''பூரணத்துவத்தை நாடிநிற்கும் மேலாளரோடு உங்கள் உறவை மேம்படுத்திக் கொள்ள வேண்டுமானால், அவரைப் பாரிய பணிகளில் கவனத்தைத் திருப்பச் செய்ய வேண்டும். இப்போது தான் நீங்கள் செய்து முடித்த ஒரு வேலையைத் திரும்பவும் செய்யுமாறு அவர் பணித்தால், உங்கள் வேறு பணிகளையும் குறிப்பிட்டு முதன்மைப் பணிகளைப் பட்டியலிட்டுத் தருமாறு கோரவேண்டும். இன்னொரு கருத்திட்டம் முடிய வேண்டும் என்று விரும்புகிற மேலாளர், நீங்கள் முடித்த பணி அப்படியே இருக்கட்டும் என்று விரும்புவார். ஒரு குறிப்பிட்ட கருத்திட்டம் பற்றி உங்கள் மேலாளர் கலவரமடைந்து காணப்படும்போது, ஒழுங்காக விபரங்களைச் சமர்ப்பியுங்கள், பூரணத்துவவாதியை அடிக்கடி சந்தித்து விபரங்களைக் கொடுத்து வரும் போது, அடிக்கொரு தடவையான மேற்பார்வையைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

இறுதியாக, உங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளல் அவசியம். ''பூரணத்துவவாதியிடமிருந்து ஊக்குவிப்பெதனையும் எதிர்பார்க்கவே முடியாது. உங்கள் வேலைகள் பற்றிய மேலதிக கருத்துக்களை வேறுயாரிடமாவது பெற்றுக்கொள்ள வேண்டும்'' என்று கூறுகிறார் மயிங்கர்.

## எட்ட நிற்கும் மேலாளர்

மிகவும் நுண்ணிய வழிகளிற் கூட, சில பணியாளர்கள் தத்தமது மேலாளர்களால் விறைக்கச் செய்யப்படுவதாக உணருகிறார்கள். முக்கியமான கூட்டங்களுக்கு மேலாளர் உதவியாளர்களை அழைப்பதில்லை. அல்லது கருத்திட்டங்களைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கு அவர் கிடைக்கமாட்டார். ''எதிர்பார்ப்புக்களைத் தெளிவாக எட்டச் செய்யும் திறமை சகல நல்ல மேலாளருக்கும் உண்டு. மேலாளரின் மனதிலுள்ளதை அறிவதற்குப் பணியாளர்கள் சிரமப்படத் தேவையிராது''. நிர்வாகத் தேடல் நிறுவனம் ஒன்றின் தலைவரான ஜெரி றோச்சின் கருத்து இது.

உங்களை நெறிப்படுத்த மேலாளர் தவறினால், ''நீங்கள் செய்யக்கூடிய, ஆகக்கூடிய, கூடாத செயல் எதுவுமே செய்யாமல் இருப்பதேயாகும். நீங்கள் செய்யப் போவது எது என்பதைத் திட்டவட்டமாகத் தீர்மானியுங்கள். ''வேறுவிதமான வழிகாட்டல் எதுவும் இல்லையென்றால், நான் செய்யப்போவது இது தான்'' என்று கூறுங்கள் என்றும் றோச் கூறுகிறார்.

தொடர்பேற்படுத்தும் விடயத்தில் மேலாளருக்குள்ள ஆற்றாமையைப் புரிந்து கொள்வதற்கு அவரது பணி முறையைப் பரிசோதிப்பது அவசியமாகும். ''ஒரு சிலர், தர்க்க ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்டு, எழுதப்பட்ட கடினமான புள்ளி விபரங்களை விரும்புவார்கள். வேறு சிலர், நேருக்கு நேர் சந்திப்பதை விரும்புவார்கள். எவரெவர் எந்தப் பட்டியலில் உள்ளவர் என்பதையறிந்து அவரவருடைய மொழியிலேயே பேசுங்கள்'' இதுவும் கொல்பியின் கூற்றுத்தான்.

எந்த நடவடிக்கையிலிறங்கு முன்பும், நீங்கள் ஒரு சுய பகுப்பாய்வில் ஈடுபட வேண்டும். உங்கள் மேலாளர் எத்தகையவராக இருந்தாலும் நாமும் சில வேளைகளில் முரண்பாடுகளுக்குப் பங்காளியாக இருக்கக்கூடும். ''உங்கள் இருவரையும் நன்கு தெரிந்தவர்களிடம் பேசி நேர்மையான தகவல்களைச் சேகரிக்க வேண்டும். நீங்கள் எந்த வகையில் சிக்கலில் பங்காளியாகிறீர்கள் என்பதையறிந்து அதற்கு ஒரு முடிவு கண்டால் உங்கள் மேலாளரின் வழிகளை மாற்ற முடியும் என்பது மார்ட்டி குறோத்தின் கருத்தாகும். உங்களால் முடியாது போனாலுங் கூட ஒளிமயமான வாய்ப்பு உண்டு. கூடாத மேலாளர்களே, உங்களுக்குக் கற்றுத் தருவதற்கு அதிகமாக வைத்திருப்பார்கள். கொடுமையானவர்கள் இலக்கையடைவதில் விற்பன்னர்களாக இருப்பார்கள். பூரணத்துவவாதிகள் உங்கள் எதிர்பார்ப்புக்களை விட அதிகமாகவே உங்களைத் துன்புறுத்த முயலுவார்கள்.

கடினமான மேலாளரோடு பணி செய்கின்றபோது முதன்மையானவையைத் தெரிந்து செய்யப் பழகிக் கொள்ளுகிறீர்கள். அச்சம் தவிர்க்கிறீர்கள். அழுத்தத்தின் போதும் அமைதியைக் கடைப்பிடிக்கக் கற்றுக்கொள்கிறீர்கள். சாதகமான வேலை நிபந்தனைகளைப் பேசிப் பெற்றுக்கொள்கிறீர்கள். மோசமான உறவைத் தணிப்பதற்கு நீங்கள் உங்கள் திறமையைக் கூர்மைப்படுத்துவதால், உங்கள் பணிக்காலம் முழுவதற்கும் அது தக்க பலனளிக்கத் தவறுவதில்லை. ''கொடுமைப் போக்குள்ள மேலாளரிடம் பணியாற்றலைத் தொடர்ந்து செய்யக்கூடிய ஒருவர் எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்க வல்லவர் என்ற நல்ல பெயரை ஏனைய மேலதிகாரிகளிடம் சம்பாதித்துக் கொள்ள முடிகிறது. கடினமான மேலாளர் அடிக்கடி தன் போக்கை மாற்றுபவராக இருப்பார் என்பதால் அவரோடு தொடர்ந்து பணிபுரியும் ஒருவர் சீக்கிரம் மேலுயர்ந்து செல்ல முடியும்'' லெவின்சனின் கருத்து இது.

கூடாத மேலாளர் செய்யும் நன்மைகளுலொன்று, நீங்கள் உயர் பதவிகளை எட்டிப் பிடிக்கும் போது, உங்களுக்குக் கீழுள்ளவர்களைத் துன்புறுத்தக்கூடாது என்ற படிப்பினையைத் தருவதாகும். ஒரு நாள் உங்களை நல்லதோர் மேலாளராக்கவும் அவர் உதவுகிறார் என்பது உண்மையே

ரீடேர்ஸ் டைஜஸ்ட்,
செப்ரெம்பர்-1993

### கெரில்லாச் சண்டைகள்

கமரூச் போராளிகள் வட கம்போடியாவில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மாவட்டங்களில் பல கடும் தாக்குதல்கள் நடத்தியுள்ளனர் என்றும், அதனால் பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் உள்ளூர்ப் பத்திரிகைகள் சென்ற நவம்பர் 22 ஆம் திகதி செய்தி வெளியிட்டன. அரசாங்கப் படையினர் 10 கமரூச் போராளிகளைக் கொன்றதாகவும், 8 பேரைக் காயப்படுத்தியதாகவும், இரண்டு பேரைக் கைது செய்ததாகவும் மேலும் கூறப்பட்டது. அத்துடன் சில ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாக றியாஸ்மி கம்பூச்சியா என்ற நாளிதழ் கூறியது. மேலும் 20 கெரில்லாக்கள் சரணடைந்துள்ளதாகக் கூறப்பட்டது. எனினும் அரச படைகளுக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றி ஏதும் கூறப்படவில்லை.

## ★ ஊர் உலா வருகுது உலக உலா ★

தங்களால் வெளியிடப் பட்டு வரும் உலக உலா சஞ்சிகையைத் தொடர்ந்து படித்து வருவதோடு பாதுகாத்தும் வருகின்றேன். நான் படித்தது 10 ஆம் வகுப்பு வரையில் தான். ஆங்கிலம் தெரியாது. ஆனாலும் தங்களால் தற்போது வெளியிடப்பட்டு வரும் சர்வதேச, இராணுவ, அரசியல், பொருளாதார, மருத்துவ, விண்வெளி சம்பந்தமான சமகால நிகழ்வுகளை அறிய ஆர்வம் கொண்டிருந்தேன். இவ் ஆர்வத்தை எப்போதாவது பத்திரிகைகளில் வரும் ஓரிரு கட்டுரைகளால் முற்றாக நிவர்த்தி செய்ய முடிவதில்லை. இப்பொழுது தங்களால் வெளியிடப்படும் உலக உலா என்னைப் போன்ற ஆங்கிலம் தெரியாத பல பேரின் ஆர்வத்தை உண்மையாகவே பூர்த்தி செய்கிறது. இதற்காக எமது தேசியத் தலைவருக்கும், தங்களுக்கும் இச் சஞ்சிகையின் ஆக்கத்திற்காக உழைக்கும் அனைவருக்கும் என்னைப் போன்றவர்களின் சார்பில் வலுவான நன்றிகள்.

இதேவேளை எனது சிந்தனையில் தோன்றிய ஒரு கருத்தையும் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். விவசாயத்திலும், மீன்பிடியிலும் ஈடுபடுவோரையும், அல்லது இத்துறைசார் ஆர்வமுடையோரையும் இவை சம்பந்தமான நவீன தொழில்நுட்ப விடயங்கள் நேரடியாக விளங்கக்கூடிய முறையில் போய்ச்சேரவேண்டும். எனவே, நவீனஉற்பத்தி முறைகள், இவை சம்பந்தமான ஆராய்ச்சி முடிவுகள் போன்ற விபரங்களைத் தங்கள் சஞ்சிகையில் நிச்சயமாகச் சேர்க்க வேண்டுமெனப் பணிவுடன் வலியுறுத்துகிறேன்.

பொ. மலரவன்

திட்டக்கிளை,
முதன்மைச் செயலகம்,
த. பொ. மே. நிறுவனம்,
தாவடி.

# நேசப் பூக்கள்

எம் சிந்தனைகளுக்குச் சிறகமைத்து உலகெல்லாம் உலாவ வைக்கும் உலக உலா போராட்டச் சூழலில் வெளிவர ஆரம்பித்திருப்பது மகிழ்வானதே. அகதியாகி அதிபதியான இஸ்ரேலின் ''ஈசன் பெக்'' தாயகத்தை மறவாத அவர் பண்பு அகதியாகி நிதி தேடும் எம்மவர்க்கும் சாலப்பொருத்தமே. அழிவுகளுக்கு மத்தியில் கண்டிப்போடு தன் பிரதேசத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லும் ஆப்கானின் 'இஸ்மெயில் கானின்'' மனஉறுதி, கட்டுப்பாடு எம்மண்ணின் அனைவருக்கும் வேண்டியதே, கடின உழைப்பில் மேற்குலகை சாராது வளரும் வடகொரியாவினது அற்புதமான ஆய்வுரைகள் அனைத்துமே எமக்கு பெரும்பாடமே; பெரும் இடர்களுக்கு மத்தியில் அழகு தமிழில் வெளிவரும் உலக உலா, சிங்கள அரசால் சீரழிக்கப்படும் மாணவ உலகின் அறிவியலுக்கு அரசியல், வாணிபம், விஞ்ஞானம் என்பன பல விடயங்களில் சிறந்த மருந்தே. மொத்தத்தில் மலரும் தமிழீழ தேசத்தின் வளர்வின் அற்புத ஆயுதமே உலக உலா.

''உலக உலாவின் விரைந்த வளர்வு
அறிவியலில் எம் உயர்வு''.

உலக உலாவில் வலம் வரும்

பருத்தித்துறை. வை. ரஜனி

காலத்தின் ஒளிக் கண்ணாடி
கல்விக் களத்தின் முன்னோடி
ஞாலத் திசையின் நாள்காட்டி
நவயுகப் பார்வைத் தொலைபேசி

o o o

அறிவியல் உலகின் திருக்கூத்து
ஆடிக் காட்டும் புதுமேடை
பொறியியல், மருத்துவம், தொழில், வணிகம்
புரட்சிகள் பொழியும் கலை மேகம்

o o o

விழிகளின் இயற்கை விருந்தாளி
விற்பன வித்தக விளை நெல்லு
அறிவினில் தமிழினம் அழியாதே
அறிவொளி காலும் முழு நிலவு

o o o

எண்ணம் எழுத்தில் அரசியலில்
ஏற்றி நிறுக்கும் துலாக்கிண்ணம்
கண்ணிற் கருத்தில் அமுதூட்டும்
கருந்தனம் உலக உலா வாழ்க!

யாழ்ப்பாணம். எம்வி. இராசா

"உலக உலா" வாசகர்களிற்கு ஓர் இனிய செய்தி!

உலகெங்கும் நிகழும் அறிவியல் மாற்றங்களையும்
உலகையே உலுப்பும் விஞ்ஞானப் புரட்சிகளையும்
இன்னும் பல உயரிய படைப்புக்களையும்
தமிழீழத்தில் இருந்துகொண்டே
பார்க்க . . . படிக்க . . . வழிசமைத்த

"உலக உலா" வை நீங்கள் வாங்க விரும்புகிறீர்களா?

உங்கள் விருப்பத்தை நிறைவேற்றத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

"உலக உலா" செயலகம்
144, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.
தமிழீழம்

---

சர்வதேச அச்சுக்கலைக்கு நிகராக - எம்மால்
பல வர்ணத்தில் அச்சுப்பதிக்க முடியும் என்பதை நிரூபித்த
தனிப் பெரும் நிறுவனம்

# இராசன் அச்சகம்

உலக உலாவின் வர்ணப் பதிப்பிற்கும்,
உயரிய சிறப்பிற்கும் வித்திட்ட
முன்னணிப் பதிப்பாளர்கள்

இராசன் அச்சகம்
144, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம், தமிழீழம்